[29.6.2017–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம் III–பிரிவு 1 (a), பக்கங்கள் 1–291–ல் SRO A-32(b)/2017–ஆம் எண் அறிவிக்கையாக வெளியிடப்பட்டது.]

**அறிவிக்கை எண். SRO A-32(b)/2017, நாள் 29.6.2017**

2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) பிரிவு 164ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், பின்வரும் விதிகளை உருவாக்குகிறார், அதாவது:–

## அத்தியாயம் – I
## முன்னுரை

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் .–** (1) இந்த விதிகள் 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் என அழைக்கப்படலாம்.

(2) அவை 29.06.2017 முதல் நடைமுறைக்கு வர வேண்டும்.

**2. பொருள் வரையறைகள்.–** இவ்விதிகளில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,–

(a) ‘‘சட்டம்’’ என்பது 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், (தமிழ்நாடு சட்டம் 19/2017) என பொருள்படும்;

(b) ‘‘படிவம்’’ என்பது இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு படிவம் என பொருள்படும்;

(c) ‘‘பிரிவு’’ என்பது சட்டத்தின் பிரிவு என பொருள்படும்;

(d) ‘‘சிறப்பு பொருளாதார மண்டலம்’’ என்பது 2005 ஆம் ஆண்டு சிறப்பு பொருளாதார மண்டலங்களின் சட்டத்தின், 2005 (மைய சட்டம் 28/2005) ன் பிரிவு 2ன் உட்கூறு **(za)** ல் கொடுக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டதாயிருக்கும்

(e) இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள ஆனால் சட்டத்தில் வரையறைக்கப்படாத மற்றும் வரையறுக்கப்பட்டுள்ள சொற்கள், சொற்றொடர்கள், சட்டத்தில் அவைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிய பொருளை உடையதாயிருக்கும்.

## அத்தியாயம் –II
## இணக்கவரி விதிகள்

**3. இணக்க வரி விதிப்பிற்கான தகவல்.–**

(1) சட்டப்பிரிவு 10ன் கீழ் வரி செலுத்த விருப்பமுள்ள, பதிவு விதி 17ன் துணைவிதி(1)ன்கீழ் தற்காலிக பதிவு வழங்கப்பெற்ற எந்த ஒரு நபரும், அத்தகவலை **படிவம் GST CMP-01**ல் மின்னணு முறையில், நியமிக்கப்பட்ட நாளுக்கு முன்போ ஆனால் அத்தகைய நாளுக்கு முப்பது நாட்களுக்கு பிந்தைய காலத்திற்கு மிகாமல், அல்லது ஆணையரால் இது தொடர்பாக மேலும் நீட்டிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள், பொது வலைப்பக்கத்தில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ, முறையான கையொப்பத்துடன் அல்லது மின்னணுமுறை சரிபார்ப்பு குறியீடு மூலமாக சரிபார்க்கப்பட்டு தாக்கல் செய்ய வேண்டும்.

வரம்புரை: இருப்பினும், நியமிக்கப்பட்ட நாளுக்கு பின்னர் **படிவம் GST CMP-01**ல் தகவல் தாக்கல் செய்யப்படுமிடத்து, பதிவு பெற்ற நபர், நியமிக்கப்பட்ட நாள்முதற்கொண்டு வரியேதும்

வசூல் செய்யக்கூடாது. ஆனால், அத்தகைய நாளுக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் வழங்குகளுக்கு வழங்குகை சீட்டு வழங்க வேண்டும்.

(2) பதிவு விதி 1ன் கீழ் பதிவிற்காக விண்ணப்பிக்கும் எந்தவொரு நபரும், சட்டப்பிரிவு 10ன் கீழ் வரி செலுத்தும் விருப்பத்தினை, பகுதி ஆ–ன் கீழ் படிவம் GST REG-01ல் வழங்கலாம். அது அந்த பிரிவின் கீழ் வரி செலுத்த தகவல் தெரிவிக்கப்பட்டதாக கருதப்படும்.

(3) சட்டப்பிரிவு 10ன் கீழ் வரி செலுத்த விருப்பமுள்ள, எந்த ஒரு பதிவு பெற்ற நபரும், அத்தகவலை **படிவம் GST CMP-02**ல் மின்னனு முறையில், எந்த நிதியாண்டிற்கு மேற்சொன்ன பிரிவின்கீழ் வரி செலுத்த விருப்பம் தெரிவிக்கப்படுகிறதோ அந்த நிதியாண்டின் தொடக்கத்திற்கு முன்பு , பொது வலைப்பக்கத்தில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ, மின்னணுமுறை சரிபார்ப்பு குறியீடு மூலமாக சரிபார்க்கப்பட்ட அல்லது முறையாக கையொப்பமிடப்பட்டு தாக்கல் செய்ய வேண்டும். மற்றும் தொடர்புடைய நிதியாண்டு தொடங்கிய அறுபது நாட்களுக்குள் உள்ளீட்டு வரி வரவு விதி 9ன் துணை விதி (4)ல் வகுத்துரைக்கப்பட்டவாறு படிவம் **FORM GST ITC-3ல்** அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

(4) சட்டப்பிரிவு 10ன் கீழ் வரி செலுத்துவதற்கான விருப்பத்தினை துணை விதி (1)ன் தகவல் தெரிவித்த எந்த ஒரு நபரும், இணக்க வரி செலுத்துவதற்கான விருப்பம் தெரிவிக்கிற அறுபது நாட்களுக்குள் அல்லது ஆணையரால் இது தொடர்பாக மேலும் நீட்டிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள், அத்தகைய பிரிவின் கீழ் வரி செலுத்த விருப்பம் தெரிவித்த நாளுக்கு முந்தைய நாளில் அவரிடம் பதிவு பெறாத நபர்களிடமிருந்து பெறப்பட்ட உட்புற வழங்கு சரக்குகள் உள்ளடக்கிய இருப்பு விவரங்களை, மின்னணு முறையில் **படிவம் GST CMP-03**ல், பொது வலைப்பக்கத்தில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ, சமர்ப்பிக்க வேண்டும்.

(5) எந்தவொரு மாநிலத்தில் அல்லது யூனியன் பிரதேசத்தில் வியாபார இடத்திற்கான துணை விதி (1) அல்லது (3)ன் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவிப்பு, அதே நிரந்தர கணக்கு எண் படி பதிவு செய்யப்பட்ட மற்ற எல்லா வியாபார இடத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட அறிவிப்பாக கருதப்படும்.

**4. இணக்க வரி விதிப்பிற்கான செல்லத்தக்க தேதி.–**

(1) சட்டப்பிரிவு 10ன் கீழ் வரி செலுத்துவதற்கான விருப்பத் தகவலை விதி 1ன் துணை விதி(3)ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டவைகளில் நிதியாண்டின் தொடக்க நாளும், அந்த விதியின் துணை விதி (1)ன்கீழ் தகவல் தாக்கல் செய்யப்பட்டவைகளில் நியமிக்கப்பட்ட நாள் முதலும் செல்லத்தக்க நாட்களாகக் கொள்ள வேண்டும்.

(2) விதி 1 ன் துணை விதி(2)ன்கீழ் விருப்பத் தகவலளிக்கப்பட்டவை, விண்ணப்பதாரருக்கு பதிவு வழங்கப்பட்ட காலத்திற்குப் பின்னரே பரிசீலிக்கப்பட வேண்டும். மற்றும் பிரிவு 10ன்கீழ் வரிசெலுத்த தகவல் வழங்கப்பட்ட அவரது விருப்பம் பதிவு விதி 3ன் துணை விதி (2) அல்லது (3)ன்கீழ் உறுதி செய்யப்பட்ட நாள் முதற்கொண்டே, செல்லத்தக்க நாளாகக் கொள்ளப்படும்.

**5. இணக்க வரி விதிப்பிற்கான நிபந்தனைகள் மற்றும் தடைக்கட்டுகள்.–**

(1) 10ன்கீழ் வரிசெலுத்த விருப்பம் தெரிவிக்கிற நபர் கீழ்க்கண்ட நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும், அதாவது:-

(a) அவர் இயல்பாக வரிவிதிக்கத்தக்க நபராகவோ அல்லது இருப்பிடமற்ற, வரிவிதிக்கத்தக்க நபராகவோ இருத்தல் கூடாது;

(b) விதி 1 ன் துணை விதி(1)ன்கீழ் விருப்பத் தகவலளிக்கப்பட்டவைகளில், நியமன நாளன்று அவரிடம் இருப்பிலுள்ள சரக்குகள் மாநிலங்களக்கிடைப்பட்ட தொழில் அல்லது வணிகத்தில் கொள்முதல் செய்யப்பட்டனவற்றையோஅல்லது இந்தியாவிற்கு வெளியேயுள்ள இடங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டனற்றையோ அல்லது மாநிலத்திற்கு வெளியே நிறுவப்பட்டுள்ள கிளைகளிலிருந்து அல்லது மாநிலத்திற்கு வெளியேயுள்ள முதல்வர் அல்லது முகவரிடமிருந்து பெறப்பட்டனற்றையோ உள்ளடக்கியிருத்தல் கூடாது;

(c) அவரிடம் இருப்பிலுள்ள சரக்குகள் பதிவு பெறாத வழங்குநரிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டதாக இருக்கக்கூடாது மற்றும் அப்படியிருப்பின், பிரிவு 9ன் உட்பிரிவு (4)ன் கீழ் அவர் வரி செலுத்த வேண்டும்;

(d) உட்புற சரக்கு அல்லது சேவை அல்லது இரண்டின் வழங்குகைகளின்மீது அவர் பிரிவு 9ன் உட்பிரிவு (3) அல்லது (4)ன் கீழ் அவர் வரி செலுத்த வேண்டும்;

(e) முந்தைய நிதியாண்டில், பிரிவு 10, உட்பிரிவு (4)ன் (e) உட்கூறின் கீழ் அறிவிக்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் பணியில் அவர் ஈடுபட்டிருக்கக்கூடாது;

(f) இணக்க வரிவிதிக்கத்தக்க நபர்அவரால் வழங்கப்பெறும் வழங்குகை சீட்டின் தொடக்க உயரத்தில் ''வழங்குகைளின்மீது வரி வசூலிக்க தகுதியற்றவர்,'' என்ற சொற்களை அவர் குறிப்பிட வேண்டும்; மற்றும்

(g) ''இணக்க வரிவிதிக்கத்தக்க நபர்'' என்ற சொற்களை அவருடைய ஒவ்வொரு அறிக்கையிலும் அல்லது முதன்மை வணிக இடத்தின் முதன்மையான இடம் மற்றும் அவருடைய ஒவ்வொரு கூடுதல் இடங்கள் அல்லது வணிக இடங்களில் பார்வையில் வைக்கப்படும் பெயர்ப்பலகைகளிலும் குறிக்க வேண்டும்.

(2) பிரிவு 10ன்கீழ் வரிசெலுத்துகிற பதிவு செய்த நபர், ஒவ்வொரு ஆண்டும் மீண்டும் தகவல் சமர்ப்பிக்க தேவையில்லை மற்றும் சட்டத்தின் விதித்துறைகளுக்கும் இந்த விதிகளுக்கும் உட்பட்டு மேற்சொன்ன பிரிவின்கீழ் வரி செலுத்துதலைத் தொடரலாம்.

**6. இணக்க வரிவிதிப்பு செல்லத்தக்க நிலை.–**

(1) வரிவிதிக்கத்தக்க நபர் பிரிவு 10ன்கீழ் வரிசெலுத்துவதற்கு தெரிவித்துள்ள தேர்வு மேற்சொன்ன பிரிவு மற்றும் இந்த விதிகளில் குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யும் காலம்வரையிலும் செல்லத்தக்கது,

(2) துணைவிதி(1)ல் குறிக்கப்பட்ட நபர், பிரிவு 10 மற்றும் இந்த அத்தியாயத்திலுள்ள விதிகளில் குறிக்கப்பட்டுள்ள எந்த ஒரு நிபந்தனையையும் நிறைவு செய்வதிலிருந்து அவர் நிறுத்திக்கொள்ளும் நாளிலிருந்து, அவர் பிரிவு 9ன் உட்பிரிவு(1)ன் கீழ் வரிசெலுத்த கடப்பாடுடையவராவார். மற்றும் அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு வரிவிதிக்கத்தக்க வழங்குகைக்கும் அவர் வரி விலைப்பட்டி வழங்கவேண்டுவதோடு, அத்தகைய நிகழ்வு நேர்ந்த ஏழு நாட்களுக்குள் படிவம் **GST CMP-04**ல் இந்த ஏற்பாட்டிலிருந்து திரும்ப பெறுவதற்கான ஒரு தகவலையும் சமர்ப்பிக்க வேண்டும்.

(3) இணக்க வரி ஏற்பாட்டிலிருந்து திரும்ப பெறுவதற்கு நோக்கமுடைய பதிவு பெற்ற நபர், அத்தகைய திரும்ப பெறும் தேதிக்கு முன்பாக, ஒரு விண்ணபத்தினை, மின்னணு முறையில், பொது வலைப்பக்கத்தில், மின்னணுமுறை சரிபார்ப்பு குறியீடு மூலமாக சரிபார்க்கப்பட்ட அல்லது முறையாக கையொப்பமிடப்பட்ட ஒரு படிவத்தை **GST CMP-04**–ல் தாக்கல் செய்ய வேண்டும்.

(4) பதிவு பெற்ற நபர், பிரிவு 10ன் கீழ் வரி செலுத்த தகுதியற்றவரெனவோ அல்லது மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகளுக்கு அல்லது இந்த அத்தியாயத்தின் விதிகளுக்கு /முரணாக செயல்பட்டிருக்கிறார் என நம்பத்தகுந்த காரணங்களை உரிய அலுவலர் கொண்டிருப்பின், அவர் அத்தகைய நபருக்கு பிரிவு 10ன்கீழ் வரி செலுத்துவதற்கான தேர்வினை ஏன் மறுக்கக்கூடாது என்பதற்கான அறிவிப்பினை பெற்ற பதினைந்து தினங்களுக்குள் ஒரு அறிவிப்பை, படிவம் **GST CMP-05**–ல் வழங்கலாம்.

(5) துணை விதி (4)ன் வழங்கப்பட்ட விளக்க காரணம் கோரும் அறிவிப்பிற்கான பதிலை, படிவம் **GST CMP-06**–ல், பதிவு பெற்ற நபரிடமிருந்து பெற்ற முப்பது நாட்களுக்குள், பதிலை ஏற்றுக் கொண்டோ அல்லது பிரிவு 10ன்கீழ் வரி செலுத்தலுக்கான தேர்வினை மறுத்தோ அத்தகைய தேர்வுத்தேதியிலிருந்தோ அல்லது அத்தகைய முரணாக

செயல்பட்ட நிகழ்வு நாளிலிருந்தோ ஏற்பதற்கு மறுத்தோ ஆணையினை படிவம் **GST CMP-07**–ல் பிறப்பிக்க வேண்டும்.

(6) உட் பிரிவு (2) ன் தகவல் தெரிவித்த அல்லது உட்பிரிவு (3)ன்கீழ் திரும்பப்பெறுதலுக்காக விண்ணப்பமளித்த அல்லது உட்பிரிவு (5)ன்கீழ் படிவம் **GST CMP-07**–ல் தேர்வுசெய்தலை திரும்ப பெறும் ஆணை பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு நபரும், மின்னணுமுறை முறையில், பொது வலைப்பக்கத்தில் நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ, அவருடைய தேர்வினை ஏற்க மறுத்த நாள் அல்லது திரும்ப பெறப்பட்ட நாளில் அவரிடமுள்ள உள்ளீட்டுப் பொருட்கள் மற்றும் பகுதி முடிக்கப்பட்ட அல்லது முழுவதும் முடிக்கப்பட்ட சரக்குகள் கொண்ட சரக்கிருப்பு விவரங்களை படிவம் **GST ITC-01** ல் அவருடைய தேர்வினை ஏற்க திரும்ப பெறப்பட்ட அல்லது படிவம் **GST CMP-07**–ல் ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும்.

(7) துணை விதி (2) அல்லது (3)ன் கீழ் அளிக்கப்படும் தகவல் அல்லது திரும்பப் பெறும் விண்ணப்பம் அல்லது துணை விதி (5)ன்படி பிரிவு 10ல் கீழ் வரி செலுத்துதலுக்கான விருப்பத்தினை மறுத்தல், அதே நிரந்தர கணக்கு எண் கொண்ட பதிவு செய்யப்பட்ட ஏனைய அனைத்து வணிக இடங்களுக்குமான தகவலாக கருத வேண்டும்.

**7. இணக்க வரிவிதிப்பின்கீழ் வரிவிகிதம்.–**

கீழ்க்கண்ட அட்டவணையின் நிரல் (2)ல் குறித்துரைக்கப்பட்டுள்ள வகைப்படுத்தப்பட்ட பதிவு பெற்ற நபர்கள் பிரிவு 10 மற்றும் இதன் விதிகளின்கீழ் , மேற்சொன்ன அட்டவணையின் கலம் (3)ல் குறித்துரைக்கப்பட்ட விரிவிகிதித்தில் இணக்க வரி செலுத்த தகுதியுள்ளவர் ஆவர்:–

| வரிசை எண் | பதிவு செய்த நபர்களின் வகைகள் | வரிவிகிதம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அரசால் அறிவிக்கப்படலாகும் அத்தகை சரக்குகளின் உற்பத்தியாளர்கள் தவிர்த்து ஏனைய உற்பத்தியாளர்கள் | ஒரு சதவிகிதம் |
| 2 | அட்டவணைII, பத்தி 6ன் கூறு (b)ல் குறிக்கப்பட்ட சரக்குகளை வழங்கும் வழங்குபவர்கள் | இரண்டரை சதவிகிதம் |
| 3 | பிரிவு 10 மற்றும் இந்த அத்தியாயத்திலுள்ள விதிகளில் இணக்க வரி விதிப்பிற்கு தகுதியுள்ள எந்த ஒரு வழங்குநரும். | அரை சதவிகிதம் |

## அத்தியாயம் III
## பதிவு செய்தல்

**8. பதிவு செய்தலுக்கான விண்ணப்பம்.–**

(1) 25–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்ய விரும்பும் ஒவ்வொரு நபரும் (இந்த அத்தியாயத்தில் இதன்பிறகு ''விண்ணப்பதாரர்'' என்று சுட்டப்படும்) மற்றும் 25–ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்ய கடப்பாடுடைய ஒவ்வொரு நபரும் வசிப்பிடமற்ற வரிவிதிக்கத்தக்க நபர், 51–ஆம் பிரிவின் கீழ் நிதி ஆதாரத்தில் வரி பிடித்தம் செய்ய கோரப்படும் நபர், 52–ஆம் பிரிவின் கீழ் நிதி ஆதாரத்தில் வரி வசூல் செய்ய கோரப்படும் நபர், இந்தியாவிற்கு வெளியிலிருக்கும் இடத்திலிருந்து 2017–ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகள் வரி சட்டத்தின் (மத்தியச்சட்டம் 13/2017) 14–ஆம் பிரிவில் சுட்டப்பட்ட வரிவிதிக்கத்தகாத, மின்னணு மூலம் பெறுநருக்கு

மின்னணு தகவல்கள் வழங்குகை மற்றும் தரவு தள நுழைவு அல்லது மீட்பு சேவைகள் நீங்கலாக) பதிவு பெறுவதற்கு விண்ணப்பத்திற்கு முன்பு, அவருடைய "நிரந்தர கணக்கு எண்(PAN), கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி, மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் ஆகியவைகளை, பொது நுழைவாயிலில் நேரிடையாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கை செய்யப்படும் உதவி மையம் மூலமாக GST REG–01 படிவத்தில் பகுதி அ–வில் தாக்கல் செய்ய வேண்டும்."

**வரம்புரை:** இருப்பினும் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் அலகுகள் வைத்திருக்கும் நபர் அல்லது சிறப்பு பொருளாதார மண்டல மேம்பாட்டாளர், சிறப்பு பொருளாதார மண்டலத்துக்கு வெளியே அமைந்திருக்கும் பிற அலகுகள் வேறுபட்டது என்பதால், செங்குத்து வணிகமாக பதிவு செய்வதற்கு தனி மனு ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**மேலும் வரம்புரை:** உள்ளீடு சேவை விநியோகிப்பவராக இருக்கும், ஒவ்வொரு நபரும் அவ்வாறான உள்ளீடு சேவை விநியோகிப்பவராக பதிவு செய்து கொள்வதற்கு தனி மனு ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) (a) நேர்முக வரியின் மத்திய வாரியத்தால் பேணப்பட்டுவரும் தரவுத் தளத்திலிருந்து பொது வலைப்பக்கத்தின் மூலம் நிரந்தர கணக்கு எண் செல்லத்தக்கதா என்று சரி பார்க்கப்படும்;

(b) துணை விதி (1)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கைப்பேசி எண்ணை சொல்லப்பட்ட அந்த கைப்பேசி எண்ணிற்கு ஒரு முறை கடவுச் சொல்(OTP) அனுப்பப்படுவதன் மூலம் சரிபார்க்கப்பட வேண்டும்; மற்றும்

(c) துணை விதி (1)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியை சொல்லப்பட்ட அந்த மின்னஞ்சல் முகவரிக்கு தனிப்பட்ட ஒரு முறை கடவுச் சொல்(OTP) அனுப்பப்படுவதன் மூலம் சரிபார்க்கப்பட வேண்டும்.

(3) நிரந்தர கணக்கு எண், கைப்பேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவைகளை வெற்றிகரமாக சரிபார்த்தவுடன், ஒரு தற்காலிக கடித எண் உருவாக்கப்பட்டு சொல்லப்பட்ட கைப்பேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பதாரருக்கு அனுப்பப்பட வேண்டும்.

(4) துணை விதி (3)–ன் கீழ் உருவாக்கப்பட்ட கடித எண்ணை பயன்படுத்தி, விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தின் பகுதி–B-யை GST REG–01 படிவத்தில், சரியாக ஒப்பமிட்டு அல்லது மின்னணு சரிபார்த்தல் குறியீடு (EVC) மூலம் சரிபார்த்து, சொல்லப்பட்ட படிவத்தில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன், பொது வலைப்பக்கத்தில் நேரிடையாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்பட்ட உதவி மையத்தின் மூலமாகவோ மின்னணு முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(5) துணை விதி (4)–ன் கீழ் மனு பெறப்பட்ட உடன், விண்ணப்பதாரருக்கு மின்னணுவில் ஒப்புதலினை GST REG–02 படிவத்தில் வழங்கப்பட வேண்டும்.

(6) தற்காலிக வரிவிதிக்கத்தக்க நபராக பதிவு பெற விண்ணப்பிக்கும் நபருக்கு, 27–ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, வரியினை முன்வைப்புத் தொகையாக செலுத்துவதற்கு பொது வலைப்பக்க வாயிலாக தற்காலிக கடித எண் ஒன்று கொடுக்கப்பட வேண்டும் மற்றும் துணை விதி (5) –ன் கீழான ஒப்புதலை சொல்லப்பட்ட முன் வைப்புத் தொகை செலுத்திய பிறகே மின்னணு முறையில் வழங்கப்பட வேண்டும்.

## 9. விண்ணப்பத்தினை சரிபார்த்தல் மற்றும் ஒப்புதல் அளித்தல்.-

(1) விண்ணப்பத்தினை உரிய அலுவலருக்கு அனுப்புதல் வேண்டும். அவர் விண்ணப்பத்தையும் அதனுடன் சேர்ந்துள்ள ஆவணங்களையும் ஆய்வு செய்து அது சரியாக இருக்கிறதென்று அறிந்தால், விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 3 வேலை நாட்களுக்குள் விண்ணப்பதாரருக்கு பதிவினை வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

(2) விதி 8–ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில், தகவலிலோ அல்லது சொல்லப்பட்ட விதியின் கீழ் சமர்ப்பிக்க வேண்டுறுத்தக்கூடிய ஆவணத்திலோ குறைகள் இருப்பது

கண்டறியப்பட்டால் அல்லது விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் தொடர்பாக அல்லது அதனுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக உரிய அலுவலருக்கு தெளிவுரை ஏதும் தேவைப்பட்டால், விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குள், விண்ணப்பதாரருக்கு மின்னணுவில் GST REG–03 படிவத்தில் ஒரு அறிவிப்பினை அவர் வழங்கலாம் மற்றும் விண்ணப்பதாரர் அறிவிப்பு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஏழு வேலை நாட்களுக்குள் அவ்வாறான தெளிவுரை, தகவல் அல்லது ஆவணங்களை மின்னணு முறையில் GST REG–04 படிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**விளக்கம்:** தெளிவுரை என்பது பதிவுக்கான விண்ணப்பத்தில் அறிவித்திருந்த விவரங்களில் திருத்தங்கள் அல்லது மாற்றங்களை உள்ளடக்கியதாகும். GST REG–01 படிவத்தில் பகுதி A–வில் அறிவித்திருந்த நிரந்தர கணக்கு எண், மாநிலம், கைப்பேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி நீங்கலாக.

(3) விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தெளிவுரை, தகவல் அல்லது ஆவணங்களுடன் உரிய அலுவலர் மனநிறை அடைவாராயின், அவ்வாறான தெளிவுரை, தகவல் அல்லது ஆவணங்கள் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஏழு வேலை நாட்களுக்குள், விண்ணப்பதாரரின் பதிவு வழங்கப்படுவதற்கு அவர் ஒப்புதலளிக்கலாம்.

(4) துணை விதி (2)–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டதற்கான மறுமொழியாக வகுத்துரைக்கப்பட்ட காலத்திற்குள் விண்ணப்பதாரர் எந்தவொரு பதிலையும் சமர்ப்பிக்கவில்லையெனில் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட தெளிவுரை, தகவல் அல்லது ஆவணங்களில், உரிய அலுவலர் மன நிறைவு அடையவில்லையெனில், அவர் எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, அந்த விண்ணப்பத்தினை தள்ளுபடி செய்து மற்றும் விண்ணப்பதாருக்கு அதனை மின்னணுவில் GST REG–05 படிவத்தில் தெரிவிக்கப்பட வேண்டும்.

(5) உரிய அலுவலர் –

(a) விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குள் அல்லது

(b) துணை விதி (2)–ன் கீழ் விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தெளிவுரை, தகவல் அல்லது ஆவணங்கள் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஏழு வேலை நாட்களுக்குள் எந்த நடவடிக்கையும் எடுக்க தவறினால், பதிவு செய்யப்படுவதற்கான விண்ணப்பம் ஏற்கப்பட்டதாக கருதப்படும்.

**10. பதிவு சான்றிதழ் வழங்குதல்.–**

(1) 25–ஆம் பிரிவின் (12)–ஆம் உட்பிரிவின் வரையறைகளுக்கு உட்பட்டு, விதி 2–ன் கீழ் பதிவு வழங்குவதற்கான விண்ணப்பம் ஏற்கப்பட்டிருந்தால், ஒரு பதிவு சான்றிதழினை GST REG–06 படிவத்தில், முதன்மை வணிக இடத்தை மற்றும் கூடுதல் வணிக இடங்களை காண்பிக்கப்பட்டு பொது வலைப்பக்கம் வாயிலாக விண்ணப்பதாரருக்கு கிடைக்க செய்ய வேண்டும் மற்றும் சரக்கு மற்றும் சேவைகள் வரி அடையாள எண் (இதன் பிறகு இந்த விதிகளில் "GSTIN" என்று சுட்டப்படும்) அன்னாருக்கு பின்வரும் வடிவத்தில் ஒதுக்கப்பட வேண்டும்.

(a) மாநில குறியீட்டிற்காக இரண்டு குறி;

(b) நிரந்தர கணக்கு எண் அல்லது வரி பிடித்தம் மற்றும் வசூலிப்புக் கணக்கு

எண்ணுக்காக பத்து குறி;

(c) நிறுவனத்தின் குறியீட்டிற்காக இரண்டு குறி; மற்றும்

(d) தணிக்கை கணக்குக்காக ஒரு குறி.

(2) பதிவு செய்வதற்கு கடப்பாடாக நிர்ணயிக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், அந்த தேதியிலிருந்து பதிவு நடைமுறைக்கு வரும்.

(3) பதிவு செய்வதற்கு கடப்பாடாக நிர்ணயிக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்கள் கழித்து பதிவுக்கான ஒரு விண்ணப்பத்தினை விண்ணப்பதாரர் சமர்ப்பித்திருந்தால், விதி 2–ன் துணை விதி (1) அல்லது துணை விதி (3) அல்லது துணை விதி (5)–ன் கீழ் பதிவு வழங்கப்பட்ட தேதியே பதிவு நடைமுறைக்கு வந்த தேதியாகும்.

(4) ஒவ்வொரு பதிவுச் சான்றிதழும், இச்சட்டத்தின் கீழுள்ள உரிய அலுவலரால் முறையாக கையொப்பமிடப்பட்டிருக்கப்பட வேண்டும் அல்லது மேற்சொன்ன சட்டத்தின் கீழ் உரிய அலுவலரால் மின்னணுச் சோதனை குறியீடு மூலம் சோதனை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(5) விதி 9–ன் துணை விதி(5)–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட பதிவினை துணை விதி(1)–ன் கீழ் பதிவு எண் மற்றும் பதிவு சான்றிதழை விண்ணப்பதாரருக்கு அனுப்பப்பட வேண்டும். விதி 2–ன் துணை விதி(5)–ல் குறிப்பிடப்பட்ட கால அளவு முடிவடைந்த பின்பு மூன்று நாட்களுக்குள் பொது நுழைவாயிலில் உரிய ஒப்பமிடப்பட்டு அவருக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

**11. மாநிலம் அல்லது மத்திய ஆட்சிப்பகுதிக்குள்ளே பல்அடுக்கு வணிகத்திற்கான தனி பதிவு.–**

(1) 25–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின் கீழ் மாநிலத்திற்குள்ளேயே பல்அடுக்கு வணிகம் செய்து வரும் நபர் அதனுடைய ஏதாவது ஒரு வகைப்பிரிவு வணிகத்திற்கு தனி பதிவு வேண்டுறுத்தினால், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் தனி பதிவு வழங்கப்பட வேண்டும், அதாவது:-

(a) 2–ஆம் பிரிவின் (18)–ஆம் கூறில் வரையறுக்கப்பட்டவாறு அந்நபர் ஒன்றுக்கு மேற்பட்ட தொடரிணைப்பு வணிகம் வைத்திருத்தல் வேண்டும் ;

(b) அதே நபரின் ஏனைய தொடரிணைப்பு வணிகத்தில் 9–ஆம் பிரிவின் கீழ் வரி செலுத்தினால், வரிவிதிக்கத்தக்க நபரின் எந்தவொரு தொடரிணைப்பு வணிகத்திற்கு 10–ஆம் பிரிவின் கீழ் வரி செலுத்த பதிவு, வழங்கப்படக்கூடாது;

(c) தனியாக பதிவு பெற்ற அனைத்து தொடரிணைப்பு வணிகமும் அந்நபரின் பிற பதிவு பெற்ற தொடரிணைப்பு வணிகத்திற்கு இச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் சரக்கு அல்லது சேவை அல்லது இவை இரண்டின் செயல்களுக்கும் வரி செலுத்தப்பட வேண்டும் மற்றும் அவ்வணிகங்களுக்கு வரி விலைப்பட்டியல் வழங்கப்பட வேண்டும்.

**விளக்கம்:** பதிவு பெற்ற நபரின் ஏதாவது தொடரிணைப்பு வணிகத்திற்கு தனிப் பதிவு வழங்கப்பட்டிருந்து, 10–ஆம் பிரிவின் கீழ் வரி செலுத்தும் தகுதியினை இழக்கும் நேர்வில், சொல்லப்பட்ட நபரின் மற்ற எல்லா தொடரிணைப்பு வணிகமும் சொல்லப்பட்ட பிரிவின் கீழ் வரி செலுத்தும் தகுதியினை இழக்கும்.

(2) தொடரிணைப்பு வணிகத்திற்கு தனியாக பதிவு பெற தகுதியுள்ள ஒரு பதிவு பெற்ற நபர், அவ்வாறான ஒவ்வொரு தொடரிணைப்பு வணிகத்திற்கும் தனி விண்ணப்பத்தினை GST REG–01 படிவத்தில் சமர்ப்பிக்கலாம்.

(3) சரிபார்த்தல் மற்றும் பதிவு வழங்குதல் தொடர்பான விதி 9 மற்றும் விதி 10–ன் ஏற்பாடுகள், தேவையான மாறுதல்களுடன், இந்த விதியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திற்கும் பொருந்தும்.

**12. ஆதாரத்தில் வரி பிடிக்க அல்லது ஆதாரத்தில் வரி வசூலிக்க வேண்டுறுத்தும் நபர்களுக்கும் பதிவு வழங்குதல்.–**

(1) 51–ஆம் பிரிவின் விதித்துறைகளுக்கிணங்க வரி பிடிக்க வேண்டுறுத்தும் நபர் அல்லது 52–ஆம் பிரிவின் விதித்துறைகளுக்கிணங்க ஆதாரத்தில் வரி வசூலிக்க வேண்டுறுத்தும் நபர், பொது வலைப்பக்கத்தின் வாயிலாக நேரிடையாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கை செய்யப்பட்ட உதவி மையத்திலிருந்தோ, பதிவு வழங்குவதற்கான விண்ணபத்தினை உரிய ஒப்பமிட்டு அல்லது மின்னணு சரிபார்ப்பு குறியீடு (EVC) மூலம் சரிபார்க்கப்பட்ட விண்ணப்பத்தினை GST REG–07 படிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) விண்ணபம் சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குள், உரிய அலுவலர், உரிய சரிபார்த்தலுக்கு பிறகு பதிவினை வழங்கி மற்றும் பதிவு சான்றிதழினை, GST REG–06 படிவத்தில் வழங்கலாம்.

(3) ஒரு விசாரணையினை அல்லது இந்தச் சட்டத்தின் கீழான பிற நடவடிக்கையினை தொடர்ந்து, ஒரு நபருக்கு, GST REG–06 படிவத்தில் வழங்கப்பட்ட பதிவு சான்று, 51–ஆம் பிரிவின் கீழ் ஆதாரத்தில் வரி பிடிக்க அல்லது 52–ஆம் பிரிவின் கீழ் ஆதாரத்தில் வரி வசூலிக்க இனிமேல் கடப்பாடில்லை என்று உரிய அலுவலர் மனநிறைவு அடைந்தால், துணை விதி (2)–ன் கீழ் வழங்கப்பட்ட பதிவினை, மேற்சொன்ன அலுவலர் ரத்து செய்யலாம் மற்றும் அவ்வாறு ரத்து செய்யப்பட்டதை பதிவு செய்திருந்த நபருக்கு மின்னணுவில் GST REG–08 படிவத்தில் அனுப்பப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், பதிவினை ரத்து செய்வதற்கு விதி 22–ல் வரையறுக்கப்பட்ட செய்முறையினை, உரிய அலுவலர் பின்பற்ற வேண்டும்.

**13. இந்தியாவில் வசிக்காத வரிவிதிக்கத்தக்க நபருக்கு பதிவு வழங்குதல்.–**

(1) ஒரு வசிக்காத வரிவிதிக்கத்தக்க நபர், பதிவிற்கான விண்ணபத்தினை சுய சான்றொப்பமிட்ட செல்லத்தக்க கடவுச் சீட்டு நகலுடன், உரிய ஒப்பமிடப்பட்டு அல்லது மின்னணு சரிபார்ப்பு குறியீடு (EVC) மூலம் சரிபார்க்கப்பட்டு, வணிகம் தொடங்குவதற்கு குறைந்தது 5 நாட்களுக்கு முன்னர் பொது வலைப்பக்கத்தில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கை செய்யப்பட்ட உதவி மையத்தின் மூலமாகவோ மின்னணுவில் GST REG–09 படிவத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

**வரம்புரை:** இருப்பினும், வணிக நிறுவனம் இந்தியாவிற்கு வெளியே நிறுவப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட நேர்வில், பதிவிற்கான விண்ணப்பத்தினை, அதன் வரி அடையாள எண் (TIN) அல்லது தனித்துவ எண்ணுடன், அதனடிப்படையில் அந்த நாட்டின் அரசாங்கம் நிறுவனத்தினை அடையாளம் காணும் வகையில் அல்லது அதன் நிரந்தர கணக்கு எண்ணுடன் இருக்கும் நேர்வில், சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) வசிக்காத வரிவிதிக்கத்தக்க நபராக பதிவுக்கு விண்ணப்பிக்கும் நபருக்கு, 27–ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வரியினை முன் வைப்புத் தொகையாக, செலுத்துவதற்காக பொது நுழைவாயில் மூலம் தற்காலிக கடித எண் ஒன்று கொடுக்கப்பட வேண்டும் மற்றும் சொல்லப்பட்ட வைப்புத்தொகையை அவருடைய மின்னணு ரொக்கப்பேரேட்டில் வரவு வைத்த பிறகே விதி 1–ன் துணை விதி (5)–ன் கீழ் ஒப்புதலினை மின்னணுவில் வழங்கப்பட வேண்டும்.

(3) சரிபார்த்தல் மற்றும் பதிவு வழங்கல் தொடர்பாக விதி 9 மற்றும் விதி 10–லிலுள்ள ஏற்பாடுகள், தேவையான மாறுதல்களுடன் இவ்விதியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திற்கும் பொருந்தும்.

(4) இந்தியாவில் வசிக்காத, வரிவிதிக்கத்தக்க நபரால் சமர்ப்பிக்கப்பட்ட பதவிற்கான விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பக்காரரால் ஒப்பமிடப்பட்டிருக்க வேண்டும். அவர் இந்தியாவை வசிப்பிடமாக கொண்ட செல்லத்தக்க நிரந்தர கணக்கு எண் கொண்ட நபராக இருக்க வேண்டும்.

**14. வரிவிதிக்கத்தக்கதல்லாத மின்னணு முறையில் பெறுபவருக்கு இந்தியாவிற்கு வெளியிலிருந்து, மின்னணு தகவல் மற்றும் தரவுத் தள நுழைவுரிமை அல்லது மீட்பதற்கான சேவையை, வழங்கக்கூடிய நபருக்கு பதிவு சான்று வழங்குதல்.–**

(1) இந்தியாவிற்கு வெளியிலிருந்து, மின்னணு தகவல் மற்றும் தரவுத் தள நுழைவுரிமை அல்லது மீட்பு சேவையை, வரிவிதிக்கத்தக்கதல்லாத, மின்னணு முறையில் பெறக்கூடிய ஒருவருக்கு வழங்கக்கூடிய நபர், பதிவுக்கான விண்ணப்பத்தினை, உரிய ஒப்பமிட்டு அல்லது மின்னணு சரிபார்ப்பு குறியீடு மூலம் சரிபார்க்கப்பட்டு, பொது வலைப்பக்கம் வாயிலாக நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கை செய்யப்பட்ட உதவி மையம் மூலமாகவோ, GST REG–10 படிவத்தில் மின்னணுவில் சமர்ப்பிக்க வேண்டும்.

(2) மன்றத்தின் பரிந்துரையின் பேரில், மாநில அரசால் அறிவிக்கை செய்யப்படும் அலுவலரால், மற்றும் அவ்வாறான நிபந்தனைகளுக்கு மற்றும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு, துணை விதி(1)–ல் சுட்டப்பட்டுள்ள விண்ணப்பதாரருக்கு, GST REG–06 படிவத்தில் பதிவுச் சான்று வழங்கப்பட வேண்டும்.

**15. வழக்கமான வரிவிதிக்கத்தக்க நபர் மற்றும் இந்தியாவில் வசிக்காத வரிவிதிக்கத்தக்க நபரின் இயங்கும் காலத்தை நீட்டித்தல்.–**

(1) பதிவு பெறாத, வழக்கமான வரிவிதிக்கத்தக்க நபர் அல்லது இந்தியாவில் வசிக்காத வரிவிதிக்கத்தக்க நபர் அவருடைய பதிவு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பதிவு காலத்தை நீட்டிக்க உத்தேசித்தால், அவருக்கு வழங்கப்பட்ட பதிவின் செல்லுகாலம் முடிவதற்கு முன்பு, அந்நபரால் GST REG–11 படிவத்திலான ஒரு விண்ணப்பத்தினை பொது வலைப்பக்கம் வாயிலாக நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கை செய்யப்பட்ட உதவி மையம் மூலமாகவோ மின்னணு முறையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) 27–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தொகையினை செலுத்தினால் மட்டுமே துணை விதி (1)–ன் கீழான விண்ணப்பத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**16. தானாக முன்வந்து பதிவு செய்தல்.–**

(1) இச்சட்டத்தின் கீழ் ஏதாவது ஆய்வினை, விசாரணையை, தணிக்கையை, தேடுதல் அல்லது இச்சட்டத்தின் கீழான வேறு ஏதேனும் நடைமுறையினை பின் பற்றி, இச்சட்த்தின் கீழ் பதிவு செய்ய கடப்பாடுடைய நபர் அவ்வாறான பதிவிற்கு விண்ணப்பிக்க தவறியுள்ளதை உரிய அலுவலர் கண்டுபிடித்தால், மேற்சொன்ன நபரை தற்காலிக அடிப்படையில்அந்த அலுவலர் பதிவு செய்யலாம் மற்றும் GST REG–12 படிவத்தில் ஒரு ஆணையினை வழங்கலாம்.

(2) துணை விதி (1) –ன் கீழ் வழங்கப்பட்ட பதிவினை, பதிவு வழங்கப்பட்ட ஆணை தேதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

(3) துணை விதி (1)–ன் கீழ் தற்காலிக பதிவு வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரும், அவ்வாறான பதிவு வழங்கப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள், பதிவிற்கான விண்ணப்பத்தினை விதி 8 அல்லது விதி 12–ல் வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வரம்புரை: இருப்பினும், தற்காலிகப் பதிவு வழங்கியதற்கு எதிராக மேற்சொன்ன அந்நபர் மேல்முறையீடு செய்திருந்தால் அத்தகைய நேர்வில், மேல்முறையீட்டு அதிகாரி பதிவுக்கான கடப்பாட்டினை உறுதி செய்து ஆணை வழங்கிய நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் பதிவிற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவேண்டும்.

(4) சரிபார்த்தல் மற்றும் பதிவுச் சான்றிதழ் வழங்குதல் தொடர்பான விதி 9 மற்றும் விதி 10–ன் ஏற்பாடுகள், தேவையான மாறுதல்களுடன், துணை விதி (3) –ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திற்கும் பொருந்தும்.

(5) துணை விதி (4) –ன் கீழ் சரிபார்த்தலை பின் தொடர்ந்து ஒதுக்கப்பட்ட GSTIN துணை விதி (1)–ன் கீழ் பதிவு வழங்கப்பட்ட ஆணை தேதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

**17. சில சிறப்பு நிறுவனங்களுக்கு தனித்துவ அடையாள எண் ஒதுக்குதல்**

(1) 25–ஆம் பிரிவின் (9)–ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க தனித்துவ அடையாள எண் வழங்கப்பட வேண்டுறுத்தும் ஒவ்வொரு நபரும், ஒரு விண்ணப்பத்தினை, உரிய ஒப்பமிடப்பட்டு அல்லது மின்னணு சரிபார்த்தல் குறியீடு (EVC) மூலம் சரிபார்க்கப்பட்டு விதி 1–ல்

குறிப்பிடப்பட்ட முறையில் பொது வலைப்பக்கத்தில், நேரடியாகவோ அல்லது ஆணையர் அல்லது வாரியத்தால் அறிவிக்கை செய்யப்பட்ட உதவி மையத்தின் மூலமாகவோ GST REG–13 படிவத்தில் மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம்.

(2) GST REG–13 படிவத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணபத்தின் மேல் அல்லது சொல்லப்பட்ட படிவத்தினை தாக்கல் செய்த பிறகு, உரிய அலுவலர், மேற்சொன்ன நபருக்கு தனித்துவ அடையாள எண் ஒதுக்கி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குள் GST REG–06 படிவத்தில் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

**18. பெயர் பலகையில் பதிவுச் சான்றிதழ் மற்றும் GSTIN ஐ காட்சிப்படுத்துதல்.–**

(1) ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும், அவருடைய பதிவுச் சான்றிதழை முதன்மை வணிக இடத்திலும் மற்றும் ஒவ்வொரு கூடுதல் வணிக இடத்திலும் அல்லது இடங்களிலும் முதன்மையான அமைவிடத்தில் காட்சிப்படுத்த வேண்டும்.

(2) ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும், அவருடைய GSTIN–ஐ, அவருடைய முதன்மை வணிக இடத்திலும் மற்றும் ஒவ்வொரு கூடுதல் வணிக இடத்திலும் அல்லது இடங்களிலும் நுழைவாயிலில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் பெயர் பலகையில் காட்சிப்படுத்த வேண்டும்.

**19. பதிவில் திருத்தங்கள்.–**

(1) பதிவிற்கான விண்ணப்பத்தின், GST REG–01 படிவத்தில் அல்லது GST REG–07 படிவத்தில் அல்லது GST REG–09 படிவத்தில் அல்லது GST REG–10 படிவத்தில் அல்லது தனித்துவ அடையாள எண்ணிற்காக GST REG–13 படிவத்தில், கொடுக்கப்பட்ட தகவல்களில் மாற்றங்கள் ஏதேனும் இருந்தால், பதிவு பெறும் அல்லது தனித்துவ அடையாள எண் பெறும் நேரத்திலோ அல்லது அவ்வப்போது திருத்தப்பட்டிருந்தால், பதிவு பெற்ற நபர், அவ்வாறான மாற்றத்திற்கான 15 நாட்களுக்குள், ஒரு விண்ணபத்தினை, உரிய ஒப்பமிடப்பட்டு அல்லது மின்னணு சரிபார்த்தல் குறியீடு (EVC) மூலம் சரிபார்க்கப்பட்டு, GST REG–14 படிவத்தில், அவ்வாறான மாற்றங்கள் தொடர்பான ஆவணங்களுடன் பொது வலைப்பக்கத்தின் வாயிலாக, நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கை செய்யப்பட்ட உதவி மையத்தின் மூலமாக மின்னணுவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வரம்புரை: இருப்பினும்,

(a) 29–ஆம் பிரிவின் கிழ் பதிவினை ரத்து செய்ய தேவைப்படாத பின்வரும் மாற்றங்கள் தொடர்பாக,

(i) வணிகத்தின் சட்ட பெயர்

(ii) முதன்மை வணிக இடத்தின் அல்லது ஏதாவது கூடுதல் வணிக இடத்தின் முகவரி; அல்லது

(iii) சேர்த்தல், நீக்கல் அல்லது பங்குதாரர் அல்லது இயக்குநர்கள், கர்த்தா(இயக்குநர்), நிர்வாக குழு, அரங்காவலர் குழு, முதன்மை செயல் அலுவலர் அல்லது சமமான வணிகத்தின் அன்றாட நிகழ்வுகளுக்கு பொறுப்பானவர்களின் ஓய்வு பெறும் நிகழ்வு.

உரிய அலுவலர், GST REG–14 படிவத்தில் படிவத்திலான விண்ணபத்தினை பெற்ற நாளிலிருந்து 15 வேலை நாட்களுக்குள், உரிய சரிபார்த்தலுக்கு பிறகு மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் மற்றும் ஒரு ஆணையினை GST REG–15 படிவத்தில் மின்னணுவில் வழங்க வேண்டும் மற்றும் அவ்வாறான மாற்றம், மாற்றத்திற்கு தேவைப்படுகின்ற நிகழ்வு நிகழ்ந்த நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) ஏதாவது மாநிலத்தில் அல்லது யூனியன் பிரதேசத்தில், கூறு (a)–வின் உட்கூறு (i) மற்றும் உட்கூறு(iii) –களுக்கு தொடர்புடைய மாற்றம் அதே நிரந்தர கணக்கு எண்ணின் மேல் இந்த விதிகளின் கீழ் பெறப்பட்ட பதிவு பெற்ற நபர்களின் அனைத்து பதிவுகளுக்கும் பொருந்தும்;

(c) கூறு (a)–இல் குறிப்பிடப்பட்டவைகளை தவிர உள்ள எந்த விவரங்கள் தொடர்பான மாற்றத்திற்கு, பொது வலைப்பக்கம் வாயிலாக GST REG–14 படிவத்திலான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டவுடன் பதிவு சான்றிதழ் திருத்தப்பட்ட நிலையாகிவிடும்;

(d) நிறுவனத்தின் அமைப்பில் மாற்றம் ஏதுமிருந்து அதன் விளைவாக பதிவு பெற்ற நபரின் நிரந்தர கணக்கு எண்ணில் மாற்றம் ஏற்பட்டால், சொல்லப்பட்ட நபர் புதிய பதிவிற்காக GST REG–01 படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்:

**வரம்புரை:** மேலும் விதி 1–ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பக்காரரின் மின்னஞ்சல் முகவரியில் அல்லது கைப்பேசி எண்ணில் மாற்றம் ஏதும் இருந்தால், அவ்வப்போது மேற்கொண்ட திருத்தங்களால், சொல்லப்பட்ட விதியின் கீழ் வரையறுக்கப்பட்ட முறையில் பொது வலைப்பக்கம் வாயிலாக மின்னணுவில் சரிபார்க்கப்பட்ட பிறகே செய்யப்படுதல் வேண்டும்.

(2) திருத்தங்கள் கோரப்பட்டது தேவையில்லை என்றோ அல்லது அத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் முடிவுபெறாமல் அல்லது தவறாக இருப்பதாக உரிய அலுவலர் கருதினால், அவர், GST REG–14 படிவத்தினாலான விண்ணப்பத்தினை பெற்ற நாளிலிருந்து 15 வேலை நாட்களுக்குள்(GST REG–03 படிவத்தில் ஒரு அறிவிப்பினை வழங்கி) துணை விதி (1)–ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினை ஏன் நிராகரிக்கக்கூடாது என்பதற்கான காரணத்தை, மேற்சொன்ன அறிவிப்பினை சேர்ப்பிக்கப்பட்ட ஏழு வேலை நாட்களுக்குள், தெரிவிக்குமாறு பதிவு செய்த நபரிடம் அறிவிக்க வேண்டும்.

(3) துணை விதி 2–ன் கீழ் வழங்கப்பட்ட காரணம் கேட்கும் குறிப்பாணைக்கான பதிலினை பதிவு செய்த நபர், மேற்சொன்ன அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 7 வேலை நாட்களுக்குள் GST REG–04 படிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(4) துணை விதி 2–ன் கீழ் வழங்கப்பட்ட அறிவிப்புக்கு மறுமொழியாக, துணை விதி (3)–ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட பதில் மனநிறைவளிக்கவில்லை என்றால் அல்லது துணை விதி (3)–ல் வகுத்துரைக்கப்பட்ட காலத்திற்குள் ஒரு பதிலும் சமர்ப்பிக்கவில்லையென்றால், உரிய அலுவலரால் துணை விதி (1)–ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினை நிராகரிக்கப்பட வேண்டும் மற்றும் GST REG–05 படிவத்தில் ஒரு ஆணை வழங்க வேண்டும்.

(5) உரிய அலுவலர்–

(a) விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 15 வேலை நாட்களுக்குள், அல்லது

(b) துணை விதி (3)–ன் கீழ் காரணம் கேட்கும் அறிவிப்பு வழங்கப்பட்டதற்கான பதிலினை பெற்ற நாளிலிருந்து 7 வேலை நாட்களுக்குள்,

நடவடிக்கை எடுக்க தவறினால், விண்ணப்பிக்கப்பட்ட அளவிற்கு பதிவுச் சான்றிதழ் திருத்தப்பட்ட நிலையாகிவிடும் மற்றும் திருத்தப்பட்ட சான்றிதழினை பொது வலைப்பக்கம் வாயிலாக பதிவு செய்த நபருக்கு கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

## 20. பதிவை ரத்து செய்வதற்கான விண்ணப்பம்

விதி 12–ன் கீழ் பதிவு வழங்கப்பட்ட நபர் அல்லது விதி 17–ன் கீழ் தனித்துவ அடையாள எண் வழங்கப்பட்ட நபர் நீங்கலாக, 29–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் கீழ் தனது பதிவினை ரத்து செய்ய கோரும் ஒரு பதிவு பெற்ற நபர், இருப்பிலிருக்கும் சரக்கின் உள்ளீடு விவரங்கள் அல்லது பதிவு ரத்தினை நாடுகின்ற தேதியிலிருந்து இருப்பிலுள்ள சரக்கு ஆக்கப்பெற்ற சரக்கு அல்லது பாதி ஆக்கப்பெற்ற சரக்கிலுள்ள மற்றும் சரக்கு இருப்பிலுள்ள முதலீட்டு சரக்கிலும் உள்ள உள்ளீடு, அதிலுள்ள கடப்பாடுகள் அதற்காக செலுத்தப்பட்ட விவரங்கள், ஏதேனும் உள்ளடங்களாக மற்றும் அதற்கு தொடர்பான ஆவணங்களை விண்ணப்பதாரர் பொது நுழைவாயிலில், ரத்து செய்வது தேவைப்படுகிற நிகழ்வு நிகழ்ந்த 30 நாட்களுக்குள், நேரிடையாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கை செய்யப்பட்ட உதவி மையத்தின் மூலமாக GST REG–16 படிவத்தினை மின்னணு முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், பதிவு நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து ஒரு வருட காலம் முடிவதற்கு முன்பு தம் விருப்பமாக பதிவு எடுத்திருக்கிற வரிவிதிக்கத்தக்க நபராக இருக்கும் நேர்வில், பதிவு ரத்திற்கான ஒரு விண்ணப்பத்தினையும் கருதுதல் கூடாது.

**21. சில குறிப்பிட்ட நேர்வுகளில் பதிவினை ரத்து செய்தல்.–**

ஒரு நபருக்கு வழங்கப்பட்ட பதிவினை, சொல்லப்பட்ட அந்நபர்–

(a) அறிவிக்கப்பட்ட வணிக இடத்திலிருந்து ஒரு வணிகமும் நடத்தப்படவில்லையெனில்; அல்லது

(b) இச்சட்டத்தின் கீழுள்ள ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளை மீறி சரக்குகள் அல்லது சேவைகளை வழங்காமல் விலைப்பட்டியல் அல்லது பட்டியலை வழங்கியிருந்தால், ரத்து செய்ய கடப்பாடுடையதாகிறது; அல்லது

(c) பிரிவு 171ன் வரையறைகள் அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளை மீறுதல்.

**22. பதிவினை இரத்து செய்தல்.–**

(1) 29–ஆம் பிரிவின் கீழ், ஒரு நபரின் பதிவு ரத்து செய்ய கடப்பாடுடையது என உரிய அலுவலர் காரணத்தோடு நம்பினால், அவர் அந்நபருக்கு, GST REG–17 படிவத்தில், அவருடைய பதிவினை ஏன் ரத்து செய்யக்கூடாது என்ற அறிவிப்பினை, அவ்வறிவிப்பு சேர்க்கப்பட்ட தேதியிலிருந்து 7 வேலை நாட்களுக்குள்ளாக காரணம் காட்ட வேண்டுறுத்தி ஒரு அறிவிப்பினை வழங்கப்பட வேண்டும்.

(2) துணை விதி (1)–ன் கீழ் வழங்கப்பட்ட காரணம் கேட்கும் அறிவிப்பிறகான பதிலினை REG–18 படிவத்தில் சொல்லப்பட்ட துணை விதியில் வகுத்துரைக்கப்பட்ட காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) பதிவு செய்ய இனிமேல் கடப்பாடில்லாத அல்லது அவரின் பதிவு ரத்து செய்ய கடப்பாடுடைய நபரால் சமர்ப்பிக்கப்பட்ட பதிவு ரத்திற்கான விண்ணப்பத்தினை, உரிய அலுவலர் 20–ஆம் விதியின் கீழ் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், அல்லது துணை விதி (1)–ன் கீழ் வழங்கப்பட்ட காரணம் கேட்கும் அறிவிப்பிற்கான பதில் தேதி நேர்விற்கேற்ப, அவரால் தீர்மானம் செய்யும் தேதியிலிருந்து பதிவினை ரத்து செய்து GST REG–19 படிவத்தில் ஒரு ஆணையினை வழங்கப்பட வேண்டும் மற்றும் வரிவிதிக்கத்தக்க நபருக்கு அறிவித்து, 29–ஆம் பிரிவின் (5)–ஆம் உட்பிரிவின் கீழ் செலுத்த கடப்பாடுடைய தொகையினை உள்ளடக்கிய வரி, வட்டி அல்லது தண்டத் தொகை நிலுவைகளை செலுத்த கட்டளையிட வேண்டும்.

(4) துணை விதி (2)–ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட பதில் திருப்தியாக இருந்தால், உரிய அலுவலர், செயல்முறையினை கைவிட வேண்டும் மற்றும் GST REG–20 படிவத்தில் ஒரு ஆணை வழங்கப்பட வேண்டும்.

(5) துணை விதி (3)–ன் ஏற்பாடுகள் தேவையான மாற்றங்களுடன் இறந்த உரிமையாளரின் வாரிசுகளுக்கும் பொருந்தும், விண்ணபத்தினை உரிமையாளரே சமர்ப்பிக்கப்பட்டதாக கொள்ளப்படும்.

**23. பதிவு ரத்தினை திரும்ப பெறுதல்.–**

(1) ஒரு பதிவு பெற்ற நபர், அவருடைய பதிவினை உரிய அலுவலரால் தன்னிச்சையாக ரத்து செய்யப்பட்டால், பதிவு ரத்தினை திரும்ப பெறுவதற்கான விண்ணப்பத்தினை, GST REG–21 படிவத்தில் உரிய அலுவலருக்கு பதிவு ரத்து ஆணையை சேர்க்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பொது வலைப்பக்கம் வாயிலாக நேரிடையாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கை செய்யப்பட்ட உதவி மையத்தின் மூலமாகவோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**வரம்புரை:** ஆனால், பதிவு பெற்ற நபர் அறிக்கை சமர்ப்பிக்க தவறியதற்காக பதிவு ரத்து செய்யப்பட்டிருந்தால், அவ்வாறான அறிக்கையை சமர்ப்பித்து மற்றும் அவ்வறிக்கை தொடர்பான, வரியாக செலுத்த வேண்டிய தொகையுடன், வட்டியாக செலுத்த வேண்டிய தொகை, தண்டத் தொகை, அல்லது தாமத கட்டணம் செலுத்தப்பட்டாலொழிய, திரும்ப பெறுவதற்கான விண்ணப்பத்தினை தாக்கல் செய்ய இயலாது.

(2) (a) உரிய அலுவலர், பதிவு ரத்தினை திரும்ப பெறுவதற்கான போதிய காரணங்கள் இருக்கின்றது எழுத்துப்பூர்வமான காரணங்களினால் மன நிறைவு அடைந்தால், அவர், பதிவு ரத்தினை பெறுவதற்கான ஆணையினை GST REG–22 படிவத்தில் விண்ணப்பத்தினை பெறப்பட்ட நாளிலிருந்து 30 தினங்களுக்குள் வழங்க வேண்டும் மற்றும் அதனை விண்ணப்பதாரருக்கு அனுப்ப வேண்டும்.

(b) உரிய அலுவலர் கூறு (a)–வில் குறிப்பிட்டவைகளை தவிர்த்து ஏனைய சூழல்களில், பதிவு ரத்தினை திரும்ப பெறும் விண்ணப்பத்தினை தள்ளுபடி செய்து GST REG–05 படிவத்தில் ஆணை வழங்கலாம் மற்றும் அந்த ஆணையை விண்ணப்பதாருக்கு அனுப்பி தகவல் தெரிவிக்க வேண்டும்.

(3) உரிய அலுவலர், துணை விதி (2)–ன் கூறு (b)–ல் சுட்டப்பட்ட ஆணையினை வழங்குவதற்கு முன்பு துணை விதி (1)–ன் கீழ் திரும்ப பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினை ஏன் தள்ளுபடி செய்யக்கூடாது என்பதற்கான காரணத்தை காட்ட விண்ணப்பதாரரை வேண்டுறுத்தி ஒரு அறிவிப்பினை GST REG–23 படிவத்தில், வழங்க வேண்டும் மற்றும் அறிவிப்பு சேர்ப்பித்த நாளிலிருந்து 7 வேலை நாட்களுக்குள் பதிலினை GST REG–24 படிவத்தில் விண்ணப்பதாரர் சமர்ப்பிக்கவேண்டும்.

(4) GST REG–24 படிவத்தில் தகவல் அல்லது தெளிவுரை பெற்றவுடன், உரிய அலுவலர், அவ்வாறான தகவல் அல்லது தெளிவுரை விண்ணப்பதாரரிடமிருந்து பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் துணை விதி (2)–ல் குறிப்பிட்ட முறையில் விண்ணப்பம் குறித்து முடிவு செய்யவேண்டும்.

**24. நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற நபர்கள் புலம் பெயர்தல்.–**

(1) (a) நிதி ஆதாரத்தில் வரி பிடித்தம் செய்யும் நபர் அல்லது உள்ளீட்டு சேவை விநியோகிப்பவர் தவிர, நடைமுறையிலுள்ள சட்டத்தில் பதிவு பெற்றவர் மற்றும் 1961–ஆம் ஆண்டு வருமான வரி சட்டம், (சட்டம் 43 / 1961) கீழ் வழங்கப்பட்ட ஒரு நிரந்தர கணக்கு எண் வைத்திருப்பவர் தவிர ஒவ்வொரு நபரும்,பொது வலைப்பக்கத்தில் அவருடைய மின்னஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி எண் ஆகியவைகளை சரிபார்த்து, நேரிடையாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்பட்ட உதவி மையம் மூலமாகவோ பதிவு செய்யப்பட வேண்டும்.

(b) கூறு (a)–ன் கீழ் பதிவு செய்யப்பட்டவுடன், மேற்சொன்ன நபருக்கு தற்காலிக அடிப்படையில் பதிவு வழங்கப்பட வேண்டும் மற்றும் GST REG–25 படிவத்தில் GSTIN சேர்க்கப்பட்ட ஒரு பதிவுச் சான்றிதழினை, பொது வலைப்பக்கம் வாயிலாக அவருக்கு கிடைக்குமாறு செய்ய வேண்டும்:

**வரம்புரை:** இருப்பினும், ஒரு வரிவிதிக்கத்தக்க நபருக்கு, ஒரு நிரந்தர கணக்கு எண் அடிப்படையில் நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் பல பதிவுகள் வழங்கப்பட்டிருந்தாலும், இச்சட்டத்தின் கீழ் ஒரே ஒரு தற்காலிக பதிவு வழங்கப்பட வேண்டும்.

(2) (a) துணை விதி (1)–ன் கீழ் தற்காலிக பதிவு வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரும், ஒரு விண்ணப்பத்தினை, GST REG–26 படிவத்தில், உரிய ஒப்பமிடப்பட்டு அல்லது மின்னணு சரிபார்த்தல் குறியீடு (EVC) மூலம் சரிபார்க்கப்பட்டு, சொல்லப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் மற்றும் ஆவணங்களுடன், பொது வலைப்பக்கம் வாயிலாக நேரிடையாகவோ

அல்லது ஆணையரால் அறிவிக்கப்பட்ட உதவி மையம் மூலமாகவோ மின்னணுவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(b) கூறு (a)–ல் கேட்கப்பட்ட தகவலை மூன்று மாதத்திற்குள் அல்லது இதற்காக நீட்டிக்கப்படும் அத்தகைய கூடுதலான காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(c) விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் மற்றும் விவரங்கள், உரிய அலுவலரால், சரியானது மற்றும் முழுமையானது என்று கண்டறியப்பட்டால், GST REG–06 படிவத்திலுள்ள ஒரு சான்றிதழினை பொது வலைப்பக்கம் வாயிலாக மின்னணு முறையில் பதிவு பெற்ற நபருக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

(3) துணை விதி (2)–ல் குறிப்பிடப்பட்ட விவரங்கள் அல்லது தகவல்கள் சமர்ப்பிக்கவில்லையென்றாலோ அல்லது சரியானதாக அல்லது முழுமையானதாக இல்லை என்று கண்டறிந்தாலோ, உரிய அலுவலர் காரணம் கேட்கும் ஒரு அறிவிப்பினை GST REG–27 படிவத்தில் சேர்ப்பித்த பிறகு மற்றும் நியாயமான கேட்டு அறியும் வாய்ப்பினை சம்மந்தப்பட்ட நபருக்கு அளித்த பிறகு, துணை விதி (1)–ன் கீழ் வழங்கப்பட்ட தற்காலிக பதிவினை ரத்து செய்து மற்றும் ஒரு ஆணையை GST REG–28 படிவத்தில் வழங்கப்பட வேண்டும்:

**வரம்புரை:** ஆயினும், கேட்டறியும் வாய்ப்பினை நபருக்கு வழங்கிய பிறகு, அறிவிப்பு வழங்கப்பட்டதற்கான அவ்வாறான காரணம் எதுவும் இல்லை என்று கண்டறியப்பட்டால் GST REG–27 படிவத்தில் வழங்கப்பட்ட காரணம் கேட்கும் அறிவிப்பினை, GST REG–20 படிவத்தில் ஒரு ஆணை வழங்குவதன் மூலம் நீக்கலாம்.

(3A) துணை விதி (2) கூறு (c)ல் சுட்டப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள், விண்ணப்பதாரருக்கு பொது வலைப்பக்கம் வாயிலாக பதிவு சான்றிதழ் கிடைக்கப்பெறவில்லையென்றால் அல்லது அந்த காலத்திற்குள் துணை விதி (3)ன் கீழ் அறிவிப்பு ஏதும் வழங்கப்படவில்லையெனில் பதிவு வழங்கப்பட்டதாக கருதப்படும் மற்றும் பதிவுச் சான்றிதழ், உரிய ஒப்பமிடப்பட்டு அல்லது மின்னணு, சரிபார்ப்பு குறியீடு மூலம் சரிபார்க்கப்பட்டு, பொது வலைப்பக்கம் வாயிலாக, பதிவு பெற்ற நபருக்கு கிடைக்கப்பெற செய்ய வேண்டும்.

(4) இச்சட்டத்தின் கீழ் பதிவு பெற கடப்பாடில்லாத, நடைமுறையிலுள்ள ஏதாவது ஒரு சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற ஒவ்வொரு நபரும், நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், அவருடைய விருப்பத்தின் பேரில், அவருக்கு வழங்கப்பட்ட அப்பதிவினை ரத்து செய்ய பொது வலைப்பக்கம் வாயிலாக, GST REG–29 படிவத்தில் ஒரு விண்ணப்பத்தினை மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம் மற்றும் உரிய அலுவலர், உரிய விசாரணை நடத்திய பிறகு, சரியென கருதினால், மேற்கூறப்பட்ட பதிவினை ரத்து செய்யலாம்.

**25. சில நேர்வுகளில் வணிக இடத்தை நேரடியாக சென்று சரிபார்த்தல்.–**

பதிவு வழங்கப்பட்ட பிறகு, பதிவு பெற்ற நபரின் வணிக இடத்தை நேரடியாக சென்று சரிபார்ப்பது அவசியம் என உரிய அலுவலர் கருதினால், அவர், அவ்வாறான ஆய்வு சரிபார்ப்பினை நிறைவு செய்து அவ்வாறான சரிபார்ப்பு தேதியினை அடுத்த 15 வேலை நாட்களுக்குள் பொது வலைப்பக்கம் வாயிலாக பிற ஆவணங்களுடன், புகைப்படத்தையும் சேர்த்து, உரிய ஆவணங்கள் மற்றும் புகைப்படத்துடன் சரிபார்ப்பு அறிக்கையினை GST REG–30 படிவத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

**26. உண்மையென சான்றுரைக்கும் முறைகள்.–**

(1) அனைத்து விண்ணப்பங்கள், அறிவிப்புக்கான பதில், ஏதேனுமிருந்தால் அவை உட்பட அனைத்துப் பதில்கள் உள்ளே ஏற்றுகொண்டு வெளியே அனுப்பிய சரக்குகளின் விவரங்கள் உள்ளடக்கிய விவர அறிக்கை, மேல்முறையீடு அல்லது இவ்விதியின் கீழ் சமர்ப்பிக்க வேண்டுறுத்தும் வேறு ஏதாவது ஆவணம் ஆகியவைகளை இலக்கமுறை ஒப்ப சான்றிதழ் அல்லது 2000–ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்ப சட்டம் (21/2000)–கீழ் குறிப்பிடப்பட்ட மின்

ஒப்பம் மூலம் அல்லது ஆதார் அடிப்படையிலான மின்னணு சரிபார்த்தல் குறியீடு மூலம் சரிபார்த்தல் அல்லது வேறு ஏதாவது ஒப்பமுறை அல்லது இது தொடர்பாக ஆணையரால் அறிவிக்கப்பட்ட சரிபார்ப்பு:

**வரம்புரை:** இருப்பினும், **2013–**ஆம் ஆண்டு நிறுவன் சட்டத்தின், **(18/2013)–**ன் கீழ் பதிவு செய்த ஒரு நபர், ஆவணங்கள் அல்லது விண்ணப்பத்தினை இலக்கமுறை ஒப்ப சான்றிதழ் மூலம் மட்டுமே சரிபார்க்கப்படுவதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**(2)** மின்னணு முறையில் சமர்ப்பிக்கப்பட்டஅறிக்கை உட்பட ஒவ்வொரு ஆவணமும் ஒப்பமிடப்பட வேண்டும் அல்லது மின்னணு சரிபார்த்தல் குறியீடு (EVC) மூலம் சரிபார்க்கப்பட வேண்டும்.

(a) தனியொருவராக இருக்கும் நேர்வில், தனியரால் அல்லது அவர் இந்தியாவில் இல்லையென்றால், இதற்காக அரசால் உரிய அதிகாரமளிக்கப்பட்ட வேறொரு நபரால், மற்றும் ஒரு தனியர் தன்னுடைய வேலைகளை செய்வதற்கு மனதால் இயலாதவராக இருக்கும் நேர்வில், அவருடைய பாதுகாவலரால், அல்லது அவர் சார்பாக செயல்படக்கூடிய தகுதியுள்ள வேறொரு நபரால்;

(b) பிரிவினையற்ற இந்து குடும்பமாக இருக்கும் நேர்வில், கர்த்தாவால் மற்றும் கர்த்தா இந்தியாவில் இல்லையென்றால் அல்லது அவர் தன்னுடைய வேலைகளை செய்வதற்கு மனதால் இயலாதவராக இருக்கும் நேர்வில், அந்த குடும்பத்திலுள்ள வேறொரு முதிர்ந்த உறுப்பினர் அல்லது அந்த கர்த்தாவால் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்;

(c) நிறுவனமாக இருக்கும் நேர்வில், முதன்மை செயல் அலுவலர் அல்லது அதனின் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்;

(d) அரசாங்கம் அல்லது ஏதாவது அரசாங்க முகவர் அல்லது உள்ளாட்சி அதிகாரக் குழுவாக இருக்கும் நேர்வில், இதற்காக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலரால்;

(e) கூட்டு வணிக நிலையமாக இருக்கும் நேர்வில், அதனின் இளவரல்லாத பங்குதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்;

(f) வேறு ஏதாவது சங்கமாக இருக்கும் நேர்வில், சங்கத்தின் ஏதாவது உறுப்பினர் அல்லது நபர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்;

(g) பொறுப்பாட்சியாக இருக்கும் நேர்வில், பொறுப்பாட்சியரால் அல்லது ஏதாவது பொறுப்பாட்சியரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்; அல்லது

(h) வேறு ஏதாவது நபராக இருக்கும் நேர்வில், அவர் சார்பாக செயற்பட தகுதியான சில நபரால் அல்லது **48–**ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட நபரால்.

**(3)** இந்த விதிகளின் கீழுள்ள அனைத்து அறிவிப்புகள், சான்றிதழ்கள் மற்றும் ஆணைகள் உரிய அலுவலரால் அல்லது அவ்வாறான அறிவிப்புகள் அல்லது சான்றிதழ்கள் அல்லது ஆணைகளை வழங்க அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஏதாவது அலுவலரால், **2000–**ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் **(21 / 2000)** கீழ் குறிப்பிடப்பட்ட இலக்கமுறை ஒப்ப சான்றிதழ் மூலம் மின்னணுவில் வழங்கப்பட வேண்டும்.

## அத்தியாயம் IV
## வழங்குகிற சரக்குகளின் மதிப்பினை தீர்மானித்தல்

**27. மறுபயன் முழுவதுமாக பணமாக இல்லாத சரக்குகள் அல்லது வழங்கப்படும் சேவைகளுக்கான மதிப்பு.–**

எங்கு சரக்குகள் அல்லது வழங்கப்படும் சேவைகள் மறுபயன் முழுவதுமாக பணமாக இல்லாத நிகழ்வுகளில், அவற்றின் மதிப்பு –

(a) அத்தகைய சரக்குகள்/சேவைகளின் வெளிச் சந்தை மதிப்பாகும்;

(b) கூறு (a)ன் கீழ் வெளிச் சந்தை மதிப்பு கிடைக்கப் பெறாத நிலையில், மறுபயனின் பண மதிப்பு மற்றும் சரக்கு மற்றும் சேவை வழங்கலின் போது பணம் தவிர்த்து பெற்ற மறுபயனுக்கான கண்டறிய இயலக் கூடிய மேலுமொரு பண மதிப்பின் கூட்டுத் தொகை;

(c) கூறு (a) அல்லது (b)ன்படி தீர்மானிக்க இயலாதவற்றை வழங்குகையில் அவற்றின் மதிப்பு, அத்தகைய ஒத்த வகை மற்றும் தரம்கொண்ட சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் சரக்கு மற்றும் சேவை வழங்கலின் மதிப்பு;

(d) கூறு (a) அல்லது (b) அல்லது (c) ன்படி தீர்மானிக்க இயலாத மதிப்பு, விதி 30 அல்லது 31ஐ பயன்படுத்தி தீர்மானிக்கப்பட்ட மறுபயனுக்கான பண மதிப்பின் மற்றும் வழங்குகையின்போது பணம் தவிர்த்து பெற்ற மறுபயனுக்கான கண்டறிய இயலக் கூடிய மேலுமொரு பண மதிப்பின் கூட்டுத் தொகை என்ற வரிசையில் இருத்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டு:

(1) ஒரு பழைய தொலைபேசியின் பரிமாற்றத்தின் பேரில் ரூபாய் 20,000க்கு வழங்குகை செய்யப்பட்ட ஒரு புதிய தொலைபேசி, அது பரிமாற்றமின்றி வழங்கப்படுமிடத்து அதன் விலை ரூ,24.000 எனில், அந்த புதிய தொலைபேசியின் சந்தை மதிப்பு ரூ.24,000 ஆகும்.

(2) ஒரு பெறுநர் உற்பத்தி செய்த அச்சுப்பொறியோடு ஒரு மடிக்கணினி ரூ40,000–க்கு பெறுநரால் விற்பனை செய்யப்படும் நேர்வில், அந்த நேர்வின் போது அந்த அச்சுப்பொறியின் மதிப்பு ரூ.4000 என்பது தெரியும் போது மடிக்கணினியின் சந்தைமதிப்பு தெரியாத நிலையில், மடிக்கணினியை வழங்குதலின் பண மதிப்பு ரூ.44,000 எனக் கொள்ள வேண்டும்.

**28. முகவர் தவிர்த்த நபர்களின் மூலமாக தனிப்பட்ட அல்லது உறவினர்களுக்கிடையேயான சரக்குகள் அல்லது சேவைகள் வழங்குகைகளின் மதிப்பு:-**

பிரிவு 25ன் உட்பிரிவு (4) அல்லது (5)ல் குறிக்கப்பட்ட தனிப்பட்ட நபர்களுக்கிடையே சரக்குகளை அல்லது சேவைகளை வழங்குகையில் அவற்றின் தனித்தனி மதிப்பு அல்லது மொத்த மதிப்பு அல்லது வழங்குநர் மற்றும் பெற்றுக் கொள்பவர் உறவினராயிருப்பின், முகவர் மூலமாக வழங்கப்பட்ட வழங்குகள் தவிர்த்த, வழங்குகளின் மதிப்பு –

(a) அத்தகைய வழங்குகளின் வெளிச் சந்தை மதிப்பாகும் ;

(b) வெளிச் சந்தை மதிப்பு கிடைக்கப் பெறாத நிலையில், அத்தகைய ஒத்த வகை மற்றும் தரம்கொண்ட சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வழங்குகள் மதிப்பு ;

(c) கூறு (a) அல்லது (b)ன்படி தீர்மானிக்க இயலாத வழங்குகளின் மதிப்பு, விதி 30 அல்லது 31ஐ பயன்படுத்தி தீர்மானிக்கப்பட்ட மதிப்பு என்ற வரிசையில் இருக்க வேண்டும்;

**வரம்புரை:** ஆயினும் பெற்றுக் கொள்பவர் வழங்கப்பட்ட சரக்குகளை மேலுமொரு தடைவ வழங்குகைக்காக பெற்றிருப்பாராயின், வழங்குநரின் இசைவின்பேரில், பெற்றுக்கொள்பவர் உறவினராயிராத அவருடைய நுகர்வோருக்கு அத்தகைய ஒத்த வகை மற்றும் தரம்கொண்ட சரக்குகள் அல்லது சேவைகளை வழங்குகையிற்கான விலையில் 90 சதவிகிதத்திற்கு சமமான மதிப்பாக இருத்தல் வேண்டும்.

**மேலும் வரம்புரை:** ஆனால், முழு உள்ளீட்டு வரி வரவுக்கு, பெறுநர் தகுதியுடையவராக இருக்கும் நேர்வில், விலைப்பட்டியலில் கொடுக்கப்பட்ட மதிப்பு சரக்கு அல்லது சேவைகளின் வெளி சந்தை மதிப்பாக கருதப்படும்.

**29. முகவர் மூலமாக வழங்கப்பட்ட செய்யப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட சரக்குகளின் மதிப்பு:-**

முதல்வர் மற்றும் அவரது முகவருக்கிடையே வழங்கப்படும் சரக்குகளின் மதிப்பு பின்வருமாறு—

(a) சரக்கு மற்றும் சேவைகள் வழங்குதலின் வெளிச் சந்தை மதிப்பு அல்லது அதை வழங்குபவரின் இசைவின்பேரில், பெற்றுக் கொள்பவர் அச்சரக்குகளை மேலுமொரு வழங்குதலுக்காக பெற்றிருப்பாராயின், பெற்றுக்கொள்பவர் உறவினராயிராத அவருடைய நுகர்வோருக்கு அத்தகைய ஒத்த வகை மற்றும் தரம்கொண்ட சரக்குகள் அல்லது சேவைகளை வழங்குதலுக்கான விலையில் 90 சதவிகிதத்திற்கு சமமான மதிப்பாக இருத்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டு: முதல்வர் தம்முடைய முகவருக்கு நிலக்கடலை வழங்குகை செய்யும் நேர்வில், வழங்கும் நாளன்று முகவர் அத்தகைய ஒத்த வகை மற்றும் தரம்கொண்ட நிலக்கடலையினை ஒரு குவிண்டாலுக்கு ரூ.5000 வீதம் அதனைத் தொடர்ந்து அச்சரக்குகளை வழங்குகிறார். வேறொரு தனிப்பட்ட வழங்குநர் அத்தகைய ஒத்த வகை மற்றும் தரம்கொண்ட நிலக்கடலையினை ஒரு குவிண்டாலுக்கு ரூ.4550 வீதம் வழங்குகிறார். முதல்வரால் வழங்கப்பட்ட சரக்கின் மதிப்பு ஒரு குவிண்டாலுக்கு ரூ.4550 ஆகவோ அல்லது அவர் விருப்பத்தினை தேர்வு செய்யும் நேர்வில் ரூ.5000ன் 90 சதவிகிதம், அஃதாவது, ஒரு குவிண்டாலுக்கு ரூ.4500 ஆக இருத்தல் வேண்டும்.

(b) கூறு (a)ன்படி தீர்மானிக்க இயலாத வழங்குகளின் மதிப்பு, விதி 30 அல்லது 31ஐ பயன்படுத்தி தீர்மானிக்கப்பட்ட மதிப்பு என்ற வரிசையில் இருக்க வேண்டும்.

**30. செலவு அடிப்படையில் சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வழங்குகைகளின் மதிப்பு**

முந்தைய விதிகள் எதன்கீழும் தீர்மானிக்க இயலாத சரக்குகள் அல்லது சேவைகளை வழங்குகைகளில் அவற்றின் மதிப்பினை, உற்பத்தி அல்லது தயாரிப்பிற்கான செலவு, அவற்றினை பெறுவதற்கான செலவு, அல்லது அத்தகைய சேவைகளை வழங்குதற்கான செலவு ஆகியவற்றின் நூற்றுப் பத்து சதவிகிதமாக இருத்தல் வேண்டும்.

**31. சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் வழங்குகையில் அவற்றின் மதிப்பினை பிறவகையில் தீர்மானித்தல்.—**

விதி 27 முதல் 30 வரையிலான விதிகளின்கீழ் தீர்மானிக்க இயலாத சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வழங்குகைகளின் மதிப்பினை, பிரிவு 15 மற்றும் இந்த விதிகளில் கூறப்பட்டுள்ள கோட்பாடுகள் மற்றும் பொது வரம்புரைகளுக்கு ஏற்றவாறு முறையான காரணிகளைக் கொண்டு தீர்மானித்தல் வேண்டும்.

**வரம்புரை**: இருப்பினும் வழங்கப்படும் சேவைகளைப் பொறுத்தவரை, வழங்குநர் விதி 30ஐப் புறக்கணித்து, இந்த விதியினை விருப்பத் தெரிவாக தேர்வு செய்யலாம்.

**32. சிலவகை வழங்குகளைப் பொறுத்து அவற்றின் மதிப்பினை தீர்மானித்தல்.—**

(1) இந்த விதிகளில் எவ்வாறு கூறப்பட்டிருப்பினும், வழங்குநரின் விருப்பத்தின்பேரில், கீழ்க்கண்டவற்றினை வழங்குகையில் அவற்றின் மதிப்பினை பிற்பாடு வகுத்துரைக்கப்படும் முறையில் தீர்மானிக்க வேண்டும்.

(2) நாணய மாற்றம் உள்ளிட்ட அந்நியச் செலாவணியை வாங்குதல் அல்லது விற்பனை செய்தல் ஆகியவை தொடர்பான வழங்குகளுக்கான மதிப்பை, சேவை வழங்குபவர் பின்வரும் முறையில் தீர்மானிக்க வேண்டும்.

(a) இந்திய ரூபாயினைப் பொறுத்தவரை, அதனை மாற்றுவது உள்ளிட்ட பணமாக வாங்குவது அல்லது பெறுவதோஆகிய வழங்குகளுக்கான மதிப்பு, அதற்கான விற்பனை விலை அல்லது கொள்முதல் விலை மற்றும் அந்த நேரத்தில் இந்திய ரிசர்வ் வங்கி குறிக்கும் ரூபாய்க்கான விலை ஆகியவற்றிற்கிடையோன வித்தியாசத்திற்கு சமமான மதிப்பை, பரிமாற்ற நாணயங்களின் மொத்த அலகினால் பெருக்கி வரும் மதிப்பாகும்:

**வரம்புரை:** இருப்பினும், ரூபாய்க்கான, இந்திய ரிசர்வ் வங்கி குறிக்கும் விலை குறிக்கப்பெறாத நேர்வுகளில், பணப் பரிமாற்றத்தினை செய்யும் நபரால் கொடுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட இந்திய ரூபாயின் மொத்த மதிப்பில் ஒரு சதவிகித மதிப்பாக இருக்க வேண்டும்;

**மேலும் வரம்புரை:** இந்திய ரூபாயில் மாற்றப்படாத நேர்வுகளில், நபரால் பணமாக மாற்றப்பட்ட இரு தொகைகளின் மதிப்பு, மாற்றப்பட்ட எந்த இரு பரிமாற்ற நாணயத்தின் மதிப்பினை அந்த நாளில் இந்திய ரிசர்வ் வங்கி குறிக்கும் ரூபாய்க்கான மதிப்பிற்கு சமமாக, அவர் பெற்றிருப்பாரோ, அதில் ஒரு சதவிகிதத்திற்கு குறைவான மதிப்பிற்கு சமமாக இருக்க வேண்டும்:

**மேலும் வரம்புரை:** சேவைகள் வழங்கும் ஒரு நபர், உட்கூறு (b)ன் வரையறைகளின்படி மதிப்பை உறுதிப்படுத்த ஒரு நிதியாண்டிற்கு விருப்பத்தினை துய்க்கலாம் மற்றும் அவ்வாறு துய்க்கப்பட்ட விருப்பத்தினை நிதியாண்டின் எஞ்சியுள்ள காலத்தில் திரும்பப் பெறலாகாது.

(b) சேவைகள் வழங்குநரின் விருப்பத்தின்பேரில், நாணய பரிமாற்றம் உள்ளிட்ட அந்நிய செலாவணி வழங்குகைளின் மதிப்பை பின்வருமாறு கருதுதல் வேண்டும்.–

(i) நாணய பரிமாற்றத்தின் மொத்த தொகை ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகாமலிருப்பின், குறைந்தபட்ச தொகையாக ரூபாய் இருநூற்று ஐம்பது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு, ஒரு சதவிகிதம் ;

(ii) நாணய பரிமாற்றத்தின் மொத்த தொகை ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேல் மற்றும் ரூபாய் பத்து இலட்சத்திற்கு மிகாமலிருப்பின், ரூபாய் ஒரு ஆயிரம் மற்றும் அரை சதவிகிதம் ; மற்றும்

(iii) நாணய பரிமாற்றத்தின் மொத்த தொகை ரூபாய் ஒரு பத்து இலட்சத்திற்கு மேல் , ரூபாய் ஐந்து ஆயிரத்து ஐநூறு மற்றும் 1/10 சதவிகிதம்.

(3) வானூர்தி பயண முகவர்கள் வழங்கும் வானூர்தி பயணச்சீட்டு பதிவு சேவைகள் தொடர்பான மதிப்பைப் பொறுத்தவரையில், உள்நாட்டு பதிவுகளில், அடிப்படைக் கட்டணத்தில் ஐந்து சதவிகிதத்தில் கணக்கிடப்படும் தொகையும், அயல்நாட்டு பதிவுகளில் அடிப்படைக் கட்டணத்தில் பத்து சதவிகித தொகையுமாகக் கருதுதல் வேண்டும்.

**விளக்கம்.–** இந்த துணைவிதிகளின் நோக்கத்திற்காக, "அடிப்படைக் கட்டணம்" என்ற சொற்றொடர், வானூர்தி நிறுவனங்களால், வானூர்தி பயண முகவர்களுக்கு வழக்கமாக வானூர்திக் கட்டணத்தின் ஒரு பகுதிக்கு வழங்கப்படும் தரகு என பொருள்படும்.

(4) ஆயுள் காப்பீடு வணிகத்தைப் பொறுத்தமட்டில், சேவைகள் வழங்குகைகளின் மதிப்பு பின்வருமாறு .–

(a) முதலீட்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகையைக் குறைத்த ஈட்டுறுதியாளரிடமிருந்து பெறப்பட்ட மொத்த தவணைத் தொகை அல்லது ஈட்டுறுதியாளருக்கு சேவைகள் வழங்கும்போது அத்தகைய தொகை தெரிவிக்கப்பட்ட நேர்வுகளில் ஈட்டுறுதியாளரின் சார்பான சேமிப்பு.

(b) ஒரே தவணைத் தொகையில் பெறப்பட்ட (a) தவிர்த்த ஆண்டு காப்புறுதிகளைப் பொறுத்தமட்டில், ஈட்டுறுதியாளரிடமிருந்து ஒரே தவணைத் தொகையாக பெறப்பட்ட தொகையில் 10 சதவிகிதம்.

(C) பிற இனங்களில், ஈட்டுறுதியாளரிடமிருந்து முதலாமாண்டு பெறப்பட்ட தவணைத் தொகையில் 25 சதவிகிதமும், அடுத்தடுத்த ஆண்டுகளில் பெறப்பட்ட தவணைத் தொகைகளில் 12 1/2 சதவிகிதமும்.

**வரம்புரை:** ஆனால் ஆயுள் காப்பீடு முழுமைக்கும் ஈட்டுறுதியாளரால் செலுத்தப்பட்ட மொத்த தவணைத் தொகையினங்களில் இந்த துணைவிதியில் காணப்பட்ட எதுவும் பொருந்தாது.

**(5)** பயன்படுத்தப்பட்ட பொருட்களை வாங்கி விற்கும் நபரால், அப்பொருட்களின் தன்மை மாறாவண்ணம் அதனில் மிகச் சிறு பணி செய்யப்பட்டு வழங்கப்படும் மற்றும் அத்தகைய பொருட்களின் கொள்முதலில் உள்ளீட்டு வரி வரவு பயன்படுத்தப்படாத, கொள்முதல் விலை மற்றும் விற்பனை விலை இவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடுகளுக்குட்படுத்தப்படும் அளவாக அமையும். இவ்வேறுபாடு எதிர்மறையாயிருப்பின் அதனை புறக்கணிக்க வேண்டும்.

**வரம்புரை:** இருப்பினும் தவணைதவறிய, பதிவு பெற்றிராத கடனாளிடயிடமிருந்து கடன் அல்லது கடப்பாட்டிற்காக மறு உரிமை பெற்ற சரக்குகளின் கொள்முதல் மதிப்பு, தவணைதவறிய கடனாளி அதனைக் கொள்முதல் செய்த நாளிலிருந்து அதனை மறுஉரிமை பெற்ற நபர் தீர்வு செய்யும் நாள்வரையிலான இடைப்பட்ட காலத்திற்கு, தவணைதவறிய கடனாளி அதனைக் கொள்முதல் செய்த விலையில் ஒவ்வொரு காலாண்டு அல்லது அதன் பகுதிக்கு ஐந்து சதவிகித புள்ளிகள் குறைக்கப்பட்ட மதிப்பாகக் கருத வேண்டும்.

**(6)** சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவை இரண்டையும் வழங்குவதின்பேரில், விடுவிக்கக் கூடிய ஒரு அடையாள வில்லை அல்லது ஒரு செலவுச் சீட்டு அல்லது ஒரு உரிமைச் சீட்டு அல்லது ஒரு முத்திரைவில்லை (அஞ்சல் வில்லை அல்லாத) யின் மதிப்பு அத்தகைய அடையாள வில்லை, செலவுச் சீட்டு, உரிமைச் சீட்டு அல்லது முத்திரைவில்லையின்பேரில் விடுவிக்கப்படக்கூடிய சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவை இரண்டையும் வழங்கல்களின் மதிப்புக்கு சமமானதாக இருக்கும்

(7) மேற்சொன்ன சட்டத்தின் உள்ளீட்டு வரிவரவு இருக்குமெனில் பிரிவு 25ல் குறிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட நபர்களிடையே, மன்றத்தின்பேரில் அரசால் அட்டவணை ஒன்றின் பத்தி 2ல் குறித்துரைக்கப்படும் அவ்வகையான சேவைகளை வழங்குபவர்களின் சேவைகளுடைய மதிப்பு, ஏதுமில்லை எனக் கொள்ள வேண்டும்.

**33. தனிப்பட்ட முகவர் தொடர்பான நேர்வுகளில், சேவை வழங்குகைகளின் மதிப்பு.–**

இந்த விதிகளில் எவ்வாறு கூறப்பட்டிருப்பினும், கீழ்க்கண்ட நிபந்தனைகளை மனநிறைவுறும்வண்ணம் பூர்த்தி செய்யும் நேர்வுகளில், வழங்கல்களின் மதிப்பு, வழங்குகையைப் பெறும் எந்த ஒரு தனிப்பட்ட முகவரும் முகவர் என்ற அடிப்படையில் அவர்க்கு ஏற்பட்ட செலவு அல்லது செலவினங்களை நீக்க வேண்டும், அதாவது:-

(i) வழங்குதலைப் பெற்றுக் கொள்பவரின் தனிப்பட்ட முகவராக நடந்து கொள்ளும் வழங்குநர், அத்தகைய பெற்றுக் கொள்பவர் அளிக்கும் அதிகாரத்தின்பேரில் மூன்றாம் தரப்பினருக்கு தொகை செலுத்துகையில்;

(ii) வழங்குதலைப் பெற்றுக் கொள்பவரின் தனிப்பட்ட முகவர் வழங்குதலை பெற்றுக் கொள்பவருக்கு வழங்கும் விலைப்பட்டியலில், வழங்குதலை பெற்றுக் கொள்பவருக்காக செலுத்தப்பட்ட தொகையினை தனியாக் கழித்துக் கொள்கையில்; மற்றும்

(iii) அவருடைய சொந்த கணக்கின் வழங்குதல்களோடு, வழங்குதலைப் பெற்றுக் கொள்பவரின் தனிப்பட்ட முகவரால், மூன்றாம் தரப்பினரிடமிருந்து வழங்குதலைப் பெற்றுக் கொள்பவரின் தனிப்பட்ட முகவராக பெற்ற வழங்குதல்கள்.

**விளக்கம்.–** இந்த விதியின் நோக்கங்களுக்காக, ''தனிப்பட்ட முகவர்'' என்பவர் –

(a) வழங்குகை பெற்றுக் கொள்பவர் சார்பாக, சரக்கு அல்லது சேவை அல்லது இரண்டின் வழங்குகையின்போது ஏற்படக் கூடிய செலவினங்கள் அல்லது செலவுகளைச் செலுத்த அவருடைய முழு முகவராக செயல்பட ஒரு ஒப்பந்த உடன்படிக்கையில் ஈடுபட்டவர்.

(b) வழங்குகை பெற்றுக் கொள்பவர் சார்பாக அவ்வாறு முழு முகவராக பெறப்பட்ட அல்லது வழங்கப்பட்ட சரக்கு அல்லது சேவை அல்லது இரண்டின் வழங்குகையின்மீது எவ்வித உரிமையோ அல்லது உரிமை கோரும் எண்ணமோ கொண்டிராதவர்

(c) அவ்வாறு பெறப்பட்ட சரக்கு அல்லது சேவையினை தமது சொந்த நலனுக்காக பயன்படுத்தாதவர் மற்றும்

(d) தம்முடைய சொந்தக் கணக்கில் அவர் வழங்குகிற வழங்குகைகளுக்கான தொகையினை பெறுவதுடன், அவ்வாறு கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்ட பெறப்பட்ட சரக்கு அல்லது சேவைக்கான தொகையினை பெறுகிறவர்

**எடுத்துக்காட்டு:** "A" எனும் ஒரு கூட்டாண்மை சேவை நிறுவம் "B" என்னும் நிறுவனத்தை பதிவு செய்வதற்கான சட்ட நடவடிக்கைகளை கையாளும் பணியை மேற்கொள்கிறது. "B" நிறுவனத்திடமிருந்து "A" நிறுவனம், தமது சேவைக் கட்டணத்தோடு, பதிவுக் கட்டணம் மற்றும் நிறுவன பெயருக்கான ஏற்புக் கட்டணத்தையும் வசூலித்து, நிறுவனங்களின் பதிவாளரிடம் செலுத்துகிறது. நிறுவனங்களின் பதிவாளரால் பெயர் ஏற்பிற்காகவும், பதிவிற்காகவும் "b"–வின் மீது கட்டாயமாக விதிக்கப்படுகிறது. இதில் "A" மேற்படி கட்டணங்களை செலுத்துவதில் வெறும் தனிப்பட்ட முகவராக மட்டுமே செயல்படுகிறது. "A" வசூலித்த தொகை வழங்குவதற்காகவே பெறப்பட்டது மற்றும் இது "A" , "B"–விற்கு அளித்த வழங்குகைக்கான மதிப்பின் ஒரு பகுதியாக இராது.

**34. இந்திய ரூபாயல்லாத நாணய மாற்று விலையின் மதிப்பினை தீர்மானித்தல்.–**

சட்டத்தின் பிரிவு 12 அல்லது 13ன் வரையறைகளுக்குட்பட்டு, நேர்வுக்கேற்ப, வரிவிதிக்கத்தக்க சரக்கு அல்லது சேவை அல்லது இரண்டின் நாணய மாற்று மதிப்பு அத்தகைய வழங்குகையின் நாளன்று பாரத ரிசர்வ் வங்கியால் அந்த பணத்திற்கு குறிக்கப்படும் பொருத்தமான தொகையாக இருத்தல் வேண்டும்.

**35. வழங்குகையின் மதிப்பு ஒருங்கிணைக்கப்பட்ட வரி, மத்திய வரி, மாநில வரி மற்றும் மத்திய ஆட்சிப் பகுதிக்கான வரி ஆகியவற்றினை உள்ளடக்கியது.–**

எங்கெல்லாம் வழங்குகையின் மதிப்பு ஒருங்கிணைக்கப்பட்ட வரியினை அல்லது நேர்வுக்கேற்ப, மத்திய வரியினை, மாநில வரியினை, மத்திய ஆட்சிப்பகுதி வரியினை உள்ளடக்கியிருக்கிறதோ, அங்க கீழ்க்கண்ட விகிதத்தில் வரித்தொகை தீர்மானித்தல் வேண்டும்.

$$\text{வரித் தொகை} = \frac{\text{வரிகளை உள்ளடக்கிய மதிப்பு} \times \text{ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவிகிதம் அல்லது நேர்வுக்கேற்ப மத்திய வரி, மாநில வரி அல்லது யூனியன் பிரதேச வரிவிகிதம்}}{(100 + \text{பொருந்துகிற வரிவிகிதங்களின் கூட்டுத்தொகை, சதவிகிதத்தில்})}$$

**விளக்கம் – இந்த அத்தியாத்திலுள்ள வரித்துறையின் நோக்கங்களுக்காக.–**

(a) சரக்கு அல்லது சேவை அல்லது இரண்டையும் வழங்குகையில் " வெளிச் சந்தை மதிப்பு" என்பதன் பொருள், ஒரு நபரின் ஒரு வணிக நடவடிக்கையின்அவரால் செலுத்தப்பட வேண்டிய ஒருங்கிணைக்கப்பட்ட வரி, மத்திய வரி, மாநில வரி யூனியன் பிரதேச வரி மற்றும் மேல்வரி ஆகியவை நீக்கப்பட்ட மொத்த பண மதிப்பு என பொருள்படும்.

(b) ஒரேமாதிரியான சூழ்நிலைகளில் செய்யப்பட்ட எந்தவொரு ஏனைய சரக்கு அல்லது சேவை அல்லது இரண்டையும் வழங்குதலின் தனிச்சிறப்புகள், தரம், அளவு, செயற்பாட்டு பகுதிகள், பொருட்கள், மற்றும் முதலாவதாகக் கூறப்பட்ட சரக்கு அல்லது சேவை அல்லது இரண்டின் நற்பெயர் ஆகியவற்றைக் கொண்டிருக்கிறதோ, அல்லது மிக நெருக்கமாக அல்லது பெருமளவு தோற்றமளிக்கிறதோ, அத்தகைய சரக்கு அல்லது சேவை அல்லது இரண்டினையும் " ஒத்த வகை மற்றும் ஒத்த தரம் கொண்ட சரக்கு அல்லது சேவை அல்லது இரண்டின் வழங்குதல்" எனக் குறிக்கும்.

## அத்தியாயம் V
## உள்ளீட்டு வரி வரவு

### 36. உள்ளீட்டு வரி வரவுக் கோரிக்கைக்கான ஆவணத்தேவைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

(1) உள்ளீட்டு வரி வரவினை, உள்ளீட்டு சேவை பகிர்வாளர் உட்பட ஒரு பதிவு பெற்ற நபர், கீழ்கண்ட ஆவணங்களின் அடிப்படையில், துய்த்துக் கொள்ள வேண்டும்.

(a) சட்டப்பிரிவு 31–ன் வகைமுறைகளுக்கு இணங்க சேவைகள் அல்லது இவை இரண்டின் வழங்குநரால் வழங்கப்பட்ட ஒரு விலைப்பட்டியல்;

(b) வரிச் செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதற்குட்பட்டு, சட்டப்பிரிவு 31 உட்பிரிவு (3) உட்கூறு (f)–ன் வகைமுறைகளுக்கிணங்க, வழங்கப்படும் ஒரு விலைப்பட்டியல்

(c) சட்டப்பிரிவு 34–ன் வகைமுறைகளுக்கிணங்க வழங்குநரால் வழங்கப்படும் ஒரு பற்றுச்சீட்டு

(d) இறக்குமதியின் மீதான ஒருங்கிணைந்த வரி தொடர்பான வரிவிதிப்பிற்காக, 1962–ஆம் ஆண்டு சுங்க வரிச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட ஒரு ''சரக்கு இறக்குமதி பட்டி'' (Bill of Entry) அல்லது அதைப்போன்ற ஏதாவது ஒரு ஆவணம்

(e) விலைப்பட்டி விதி 54–ன் துணை விதி (1)–ன் விதிமுறைகளுக்கு இணங்க, ஒரு உள்ளீட்டு சேவை பகிர்வாளரால் வழங்கப்பட்ட ஒரு உள்ளீட்டு சேவை பகிர்மான விலைப்பட்டி, அல்லது உள்ளீட்டு சேவை பகிர்மான வரவுச்சீட்டு அல்லது ஏதாவதொரு ஆவணம்.

(2) அத்தியாயம் VI வகுத்துரைக்கப்பட்டவாறு, தொடர்புடைய அனைத்து விவரங்கள், தகவல்களை உள்ளடக்கியதாக இருக்கக் கூடிய மேலே கூறப்பட்ட ஆவணங்களை, GSTR–2 படிவத்தில் அளித்தால் மட்டுமே, ஒரு பதிவு பெற்ற நபர், உள்ளீட்டு வரி வரவினைப் பெற இயலும்.

(3) மோசடி, வேண்டுமென்றே திரித்துகூறுதல் அல்லது உண்மைகளை மூடி மறைத்தல் போன்றவைகளுக்காக கேட்புறுதி செய்யப்பட்ட எந்தவொரு வரி தொடர்பான உள்ளீட்டு வரி வரவினையும் ஒரு பதிவு பெற்ற நபர் துய்க்க இயலாது.

### 37. மறுபயன் செலுத்தப்படாத இனங்களில் உள்ளீட்டு வரி வரவின் எதிரிடை மாற்றம்,–

(1) சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவையிரண்டின், எந்தவொரு சரக்கையும் உள்வரு வழங்கலின் மீதான உள்ளீட்டு வரி வரவினை துய்த்த ஒரு பதிவு பெற்ற நபர், அவ்வகை வழங்கலுக்கான வழங்கல் மதிப்புடன் செலுத்தத்தக்க வரித்தொகையையும், சட்டப்பிரிவு 16 உட்பிரிவு (2)–ன் இரண்டாம் வரம்புரையில் குறித்திட்ட கால அளவிற்குள், வழங்குநருக்கு செலுத்த தவறும் நேர்வுகளில், வழங்குநருக்கு அவ்வகை வழங்கலின் விவரங்கள், செலுத்தப்படாத ''வழங்கலின் மதிப்புத் தொகை மற்றும் செலுத்தப்படாத'' வழங்கல் மதிப்புத்தொகையின் மீது துய்க்கப்பட்ட உள்ளீட்டு வரிவரவு போன்ற விவரங்களை, வரிவிலைப்பட்டியல் அளிக்கப்பட்ட நாளில் இருந்து 180 நாட்கள்

நிறைவடைந்த காலத்தினை தொடர்ந்து அடுத்து வரும் மாதத்திற்கான படிவம் GSTR–2ல் அளித்திட வேண்டும்.

**வரம்புரை:** ஆயினும், சட்டப்பிரிவு 16 உட்பிரிவு (2)ன் இரண்டாம் வரம்புரையின் நோக்கத்திற்காக, அட்டவணை–1ல் குறித்துரைக்கப்பட்ட மறுபயன் இல்லாமல் செய்யப்பட்ட வழங்கலின் மதிப்பு, செலுத்தப்பட்டதாகக் கருதப்படும்.

(2) துணை விதி (1)–ல் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளீட்டு வரிவரவு, அவ்விவரங்கள் அளிக்கப்பட்ட மாதத்திற்கான, பதிவுபெற்ற நபரின் வெளிப்புற வரி கடப்பாட்டுடன் சேர்த்துக் கொள்ளப்படும்.

(3) பதிவு பெற்ற நபர், அவ்வகை வழங்கலுக்கான வரவினை துய்த்த நாளில் இருந்து, அந்தத் தொகை துணை விதி (2) –ல் குறிப்பிட்டவாறு வரிக் கடப்பாட்டுடன் சேர்க்கப்பட்டு, செலுத்தப்பட்ட நாள் வரை, சட்டப்பிரிவு 50 உட்பிரிவு (1)–ல் அறிவிக்கப்பட்டுள்ள விகிதாச்சாரப்படியான வட்டியினை செலுத்த கடப்பாடுடையவர் ஆவார்.

(4) சட்டப்பிரிவு 16 உட்பிரிவு(4)–ல் குறித்துரைக்கப்பட்ட கால அளவு, முன்னரே எதிரிடை மாற்றம் செய்யப்பட்ட எந்தவொரு வரவின் மீதான, சட்டத்தின் அல்லது இவ்விதிகளின் வகைகளுக்கு இணங்கிய, மறு–துய்த்தலுக்கான கோரிக்கைக்கு பொருந்தாது.

**38. ஒரு வங்கி நிறுவனம் அல்லது ஒரு நிதிக் குழுமம் இவற்றின் வரி வரவுக் கோரல்.–**

வைப்புத்தொகை ஏற்றுக்கொள்ளுதல், அல்லது கடன்கள் அல்லது முன்பணம் வழங்குதல் போன்ற சேவைகள் வழங்குதலில் ஈடுபட்டுள்ள ஒரு வங்கி நிறுவனம் அல்லது ஒரு வங்கிசாரா நிதி நிறுவனம் உள்ளிட்ட ஒரு நிதிக்குழுமம், சட்டப்பிரிவு 17 உட்பிரிவு (2)ன் வரையறைகளுக்கு இணங்காமலிருப்பதை தேர்ந்தெடுத்து அதே சட்டப்பிரிவு, உட்பிரிவு (4)–ற்கிணங்க விருப்புரிமையை அனுமதித்த நேர்வுகளில் கீழ் குறித்திட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும், அதாவது :-

(a) (i) மேலே சொல்லப்பட்ட நிறுவனம் அல்லலு குழுமம், வணிகம் சாரா நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட, உள்ளீடு மற்றும் உள்ளீட்டு சேவை ஆகியவற்றின் மீது செலுத்திய வரிக்கான உள்ளீட்டு வரி வரவு; மற்றும்

(ii)சட்டப்பிரிவு 17 உட்பிரிவு (5)–ல் குறிப்பிட்ட வழங்கல் சார்ந்த உள்ளீட்டு வரி வரவு ஆகியவற்றை படிவம் GSTR–2ல் துய்க்க இயலாது;

(b) மேலே சொல்லப்பட்ட நிறுவனம் அல்லது குழுமம், சட்டப்பிரிவு 17 உட்பிரிவு (4)–ன் இரண்டாம் வரம்புரையில் சுட்டப்பட்ட, உள்ளீடுகள் மற்றும் உள்ளீட்டு சேவைகளின் மீது செலுத்தப்பட்ட வரிக்கான வரவினை மற்றும் கூறு (a)–ல் வராதவைகளை துய்த்துக் கொள்ள வேண்டும்;

(c) எஞ்சியிருக்கும் 50 சதவீத உள்ளீட்டு வரித் தொகையானது, அந்நிறுவனம் அல்லது குழுமத்திற்கு அனுமதிக்கப்பட்டதாகவும் படிவம் GSTR–2ல் கொடுக்கப்பட்டதாகவும் உள்ள உள்ளீட்டு வரி வரவாக இருக்க வேண்டும்;

(d) கூறு (b) மற்றும் கூறு (c) –ல் குறிப்பிடப்பட்ட தொகை, சட்டப்பிரிவு 41,42 மற்றும் 43–ன் வகைமுறைகளுக்கு உட்பட்டு, மேற்சொன்ன நிறுவனம் அல்லது குழுமம் ஆகியவற்றின் மின்னணு வரவுப் பேரேட்டினில் வரவு வைக்கப்பட வேண்டும்.

**39. உள்ளீட்டு சேவை விநியோகஸ்தரால், உள்ளீட்டு வரி வரவினை பகிர்ந்தளிப்பதற்கான நடைமுறைகள்.–**

(1) ஒரு உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர், கீழ் குறித்திட்ட முறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, உள்ளீட்டு வரி வரவினை பகிர்ந்தளிக்க வேண்டும்.

(a) ஒரு மாதத்தில் பகிர்ந்தளிப்பதற்காக எஞ்சியுள்ள உள்ளீட்டு வரி வரவு அதே மாதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் மற்றும் அதன் விவரங்களை,

அத்தியாயம்–VIII (Return Rules)–ன் வரையறைகளுக்கு இணங்க படிவம் GSTR–6ல் அளித்திட வேண்டும்.

(b) ஒரு உள்ளீட்டு சேவை பகிர்வாளர், கூறு(d)–ன் வகைமுறைகளுக்கு இணங்கி, சட்டப்பிரிவு 17 உட்பிரிவு (5)–ன் வகைமுறைகளின் கீழ் அல்லது பிறவாறாக தகுதியில்லா உள்ளீட்டு வரி வரவினையும், தகுதியுள்ள உள்ளீட்டு வரி வரவினையும் தனித்தனியே பகிர்ந்தளிக்க வேண்டும்.

(c) உள்ளீட்டு வரி வரவு, கூறு (d)–ன் வகைமுறைகளுகிணங்க, மத்திய வரி, மாநில வரி, ஒன்றிய ஆட்சிப்பகுதி வரி, மற்றும் ஒருங்கிணைந்த வரி என்ற வகைப்பாட்டின் படி, தனித்தனியே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

(d) சட்டப்பிரிவு 20 உட்பிரிவு (2) உட்கூறு (d) மற்றும் (e)–ன் வகைமுறைகளுக்கிணங்க, ஒரு பெறுநருக்கு (R1) பகிர்ந்தளிக்க தேவையாயிருக்கின்ற உள்ளீட்டு வரி வரவுத் தொகையானது (C1),உள்ளீட்டு வரி வரவு உரித்தாகுகின்ற, வரி விலக்கிற்குட்பட்ட வழங்கலை செய்கின்ற பெறுநர்கள் அல்லது எந்தவொரு காரணங்களுக்காகவும் பதிவு பெறாத வழங்கலை பெறுகின்ற பெறுநர்கள் உள்ளிட்ட அனைத்து பெறுநர்களுக்குள் கீழ்க்கண்ட சூத்திரத்தை பயன்படுத்தி கணக்கிடப்பட வேண்டும்.

$$C1 = (t1 \div T) \times C$$

C – என்பது பகிர்ந்தளிக்க உள்ள வரவுத்தொகை

t1- என்பது தொடர்புடை காலத்தில், நபர் R1 என்பவரின் சட்டப்பிரிவு 20–ல் சுட்டப்பட்டவாறான மொத்த வழங்கல் தொகை, மற்றும்

T- என்பது, தொடர்புடைய காலத்தில், சட்டப்பிரிவு 20–ன் வகைமுறைகளுக்கிணங்க, உள்ளீட்டு சேவைக்கு உரித்தாகுகின்ற அனைத்து (வழங்கலை) பெறுநர்களின் ஒட்டுமொத்த வழங்கல் தொகை;

(e) ஒருங்கிணைந்த வரிக் கணக்கின் கீழான உள்ளீட்டு வரி வரவு, ஒருங்கிணைந்த வரிக்கான உள்ளீட்டு வரிவரவாக ஒவ்வொரு பெறுநருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்;

(f) மத்திய வரி மற்றும் மாநில வரி அல்லது ஒன்றிய ஆட்சிப்பகுதி வரி – இவற்றின் கணக்கீட்டின் மீதான உள்ளீட்டு வரி வரவு,

(i) பெறுபவருக்கு, அவர் உள்ளீட்டு சேவை பகிர்வாளர் இருக்கின்ற அதே மாநிலம் அல்லது ஒன்றிய ஆட்சிப் பகுதியில் இருப்பவராக இருக்கும் நேர்வுகளில், மத்திய வரிக்கான உள்ளீட்டு வரி வரவு மற்றும் மாநில வரிக்கான உள்ளீட்டு வரி வரவு அல்லது உரியவராக ஒன்றிய ஆட்சிப்பகுதி வரிக்கான உள்ளீட்டு வரி வரவாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்;

(ii) பெறுபவர், உள்ளீட்டு சேவை பகிர்வாளர் இருக்கின்ற மாநிலம் அல்லது ஒன்றிய ஆட்சிப் பகுதியினை தவிர்த்த பிற மாநிலம் அல்லது ஒன்றிய ஆட்சிப் பகுதியில் இருப்பவராக இருந்தால், உள்ளீட்டு வரி வரவு ஒருங்கிணைந்த வரியாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் மற்றும் அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட இருக்கும் தொகையானது, அவ்வகை பெறுநருக்கு, கூறு (d)ன் படி பகிர்ந்தளிப்பதற்கு தகுதியான, மத்திய வரி மற்றும் மாநில வரி அல்லது யூனியன் பிரதேச வரி ஆகியவற்றிற்கான ஒட்டுமொத்த உள்ளீட்டு வரி வரவுத் தொகைக்கு ஈடானதாக இருக்க வேண்டும்;

(g) விலைப்பட்டி விதி –54 துணை விதி (1)ல் வகுத்துரைக்கப்பட்டவாறு, ஒரு உள்ளீட்டு சேவை பகிர்மான விலைப்பட்டியலை, உள்ளீட்டு சேவை பகிர்வாளர் அளித்திட வேண்டும். அவ்வகை விலைப்பட்டியலில், அது உள்ளீட்டு வரி வரவு பகிர்மானத்திற்காக மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது என தெளிவாக குறித்திடல் வேண்டும்;

(h) முன்னரே பகிர்ந்தளிக்கப்பட்ட உள்ளீட்டு வரிவரவினை, ஏதாவதொரு காரணத்திற்காக குறைத்திட வேண்டிய இனங்களில், வரவினை குறைப்பதற்காக, விலைப்பட்டி விதி **–54** துணைவிதி **(1)–**ல் வகுத்துரைத்தவாறு ஒரு உள்ளீட்டு சேவை பகிர்மான வரவு பட்டியினை உள்ளீட்டு சேவை பகிர்வாளர் அளித்திட வேண்டும்;

(i) வழங்குநரால், உள்ளீட்டு சேவை பகிர்வாளருக்கு, அளிக்கப்படும் பற்றுச் சீட்டின் விழைவாக, உள்ளீட்டு வரி வரவினில் ஏற்படும், எந்தவொரு கூடுதல் தொகையையும், கூறு (a) முதல் (f) வரையில் குறித்திட்ட வழிமுறைகளில் மற்றும் அவற்றின் நிபந்தனைகளுக்குட்பட்டு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் மற்றும் எந்தவொரு பெறுநருக்காகவும் உரியதான அத்தொகை மேலே சொல்லப்பட்ட கூறு **(d)** ன் வகைமுறையிலான வழி முறைகளின்படி கணக்கிடப்பட்டு அவ்வகை வரவினை பற்றுச்சீட்டு படிவம் GSTR**–6**ல் உள்கொணரப்பட்ட அதே மாதத்தில், பகிர்ந்தளித்திட வேண்டும்.

(j) வழங்குநரால், உள்ளீட்டு சேவை பகிர்வாளருக்கு, அளிக்கப்பட்ட வரவுச்சீட்டின் விளைவாக உள்ளீட்டு வரிவரவு குறைத்திட தேவையாயிருக்கும் நேர்வுகளில், குறைத்திடும் தொகையினை முதன்மை விலைப்பட்டியலில் உள்ளடங்கியிருந்த உள்ளீட்டு வரி வரவு, மேலே சொல்லப்பட்ட கூறு (d) ன்படி, எந்த விகிதாச்சாரத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டதோ, அதே விகிதாச்சாரத்தில் ஒவ்வொரு, பெறுநுருக்கும் ஒதுக்கீடு செய்ய வேண்டும். மற்றும் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையானது.–

(i) வரவுச்சீட்டு, விவர அறிக்கையின் படிவம் GSTR**–6**ல் எந்த மாதத்தில் உட்கொணரப்பட்டதோ அந்த மாதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய தொகையில் இருந்து குறைத்துக் கொள்ளப்பட வேண்டும்; அல்லது

(ii) அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையானது பகிர்மானத்திற்கான வரவுத் தொகை சரிக்கட்டலுக்கான தொகையை விட குறைவாக காரணத்தினால், எதிர்மறையாக இருக்கும் நேர்வுகளில், வழங்குநரின் வெளிப்புறத்திற்கான வரிக் கடப்பாட்டுடன் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

**(2)** உள்ளீட்டு சேவை பகிர்வாளரால், பகிர்ந்தளிக்கப்பட்ட உள்ளீட்டு வரவு, தவறான பெறுநருக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட காரணம் உள்ளிட்ட எந்த ஒரு பிற காரணங்களுக்காகவும், எந்தவொரு பெறுநருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவு, பிந்தைய நாளில் குறைக்கப்பட வேண்டியதாயிருப்பின், அவ்வாறான வரவு குறைப்பிற்காக, துணைவிதி **(1)** கூறு (j) ன் வகைமுறையின்படியான நடைமுறைகள், உரிய மாற்றங்களுடன் முற்றாகப் பொருந்தும்.

**(3)** துணை விதி **(2)**க்கு உட்பட்டு, உள்ளீட்டு சேவை பகிர்வாளர், துணை விதி **(1)** கூறு (h)**–**ல் குறித்திட்டபடியான உள்ளீட்டு சேவை பகிர்மான (ISD Credit Note) வரவு பட்டியலின் அடிப்படையில், ஒரு உள்ளீட்டு சேவை பகிர்மான விலைப்பட்டியலை, அவ்வாகை வரவிற்கு உரிமையுள்ள பெறுநருக்கு வழங்க வேண்டும், மற்றும் அவ்வகையான வரவுச் சீட்டு மற்றும் விலைப்பட்டி எந்த மாதத்தில் அளிக்கப்பட்டதோ அந்த மாதத்தின் விவர அறிக்கை படிவம் GSTR**–6**ல் அந்த உள்ளீட்டு சேவை பகிர்மான வரவு பட்டியல் மற்றும் உள்ளீட்டு சேவை பகிர்மான விலைப்பட்டியல் இவற்றைச் சேர்க்க வேண்டும்.

**40. சிறப்பு சூழ்நிலைகளில் வரவு கோருவதற்கான வழிமுறைகள்.–**

**(1)** இருப்புச்சரக்கினுள் இருக்கும் உள்ளீடுகள், அல்லது இருப்பு சரக்கினுள் இருக்கும் முழுமையடைந்த அல்லது பகுதி முழுமையடைந்த உற்பத்தி சரக்குகளினுள் இருக்கும் உள்ளீடுகள், இவற்றின் மீதான சட்டப்பிரிவு **18** உட்பிரிவு **(1)**ன் வகைமுறைகளுக்கு இணங்கிய உள்ளீட்டு வரி வரவின் கோரிக்கை அல்லது அதே சட்ட உட்பிரிவின் கூறு **(c)**

மற்றும் (d) ன் வகைமுறைகளுக்கு இணங்க மூலதனப் பொருட்களின் மீதான உள்ளீட்டு வரி வரவு கோரிக்கை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

a) வரிவிதிக்கத்தக்க நபரால் பெறப்பட்ட மூலதனப் பொருட்களின் மீது செலுத்தப்பட்ட வரித்தொகையில் இருந்து, அம்மூலதனப் பொருட்களுக்கான விலைப்பட்டியல் அல்லது அவ்வகையான பிற ஆவணங்களில் உள்ள நாளில் இருந்து ஒருவருடத்தின் ஒவ்வொரு காலாண்டு அல்லது அதன் பகுதியான காலத்திற்கு, காலாண்டிற்கு 5 சதவீத புள்ளி அளவிலான தொகையினை குறைத்துக் கொண்டபின்னர் சட்டப்பிரிவு 18 உட்பிரிவு (1) கூறு (c) மற்றும் (d) ன் நிபந்தனைகளின்படியான மூலதனப் பொருட்கள் மீது உள்ளீட்டு வரிவரவு கோரப்படும்.

b) சட்டப்பிரிவு 18 உட்பிரிவு (1)ன் கீழ் உள்ளீட்டு வரி வரவினை துய்த்துக் கொள்ள தகுதிபெற்ற பதிவு பெற்ற நபர், அவ்வாறு தகுதிபெற்ற நாளில் இருந்து முப்பது நாட்களுக்குள், அவர் அவ்வாறு உள்ளீட்டு வரி வரவினை துய்த்துக்கொள்ள தகுதிபெற்றுள்ளார் என்பதற்கான மின்னணு வழியாக உறுதிமொழி ஒன்றினை, பொது மின்னணு வலைப்பக்கத்தில் படிவம் GST ITC–01 ன் வாயிலாக வழங்கிட வேண்டும்.

c) கூறு (b) –ன் கீழான உறுதிமொழியில் இருப்பு சரக்கின் உள்ளீடுகள் அல்லது இருப்பு சரக்கில் உள்ள முழுமையடைந்த அல்லது பகுதி முழுமையடைந்த உற்பத்தி பொருட்களின் உள்ளீடுகள், அல்லது நேர்வுக்கேற்றவாறு மூலதனப் பொருட்கள் ஆகியவை தொடர்பான பின்வரும் விவரங்கள் தெளிவாக குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

i. சட்டப்பிரிவு 18 உட்பிரிவு (1) கூறு (a)ன் கீழ் வரவு கோரும் இனங்களில், அந்நபர், சட்டத்தின் வகைமுறைகளின் கீழ், வரிசெலுத்த வேண்டிய கடப்பாட்டினை எட்டிய நாளுக்கு உடனடியான முந்தைய நாள்

ii. சட்டப்பிரிவு 18 உட்பிரிவு (1) கூறு (b)ன் கீழ் வரவு கோரும் இனங்களில், பதிவுகள் வழங்கப்பட்ட நாளுக்கு உடனடி முந்தைய நாள்.

iii. சட்டப்பிரிவு 18 உட்பிரிவு (1) கூறு (c)ன் கீழ் வரவு கோரும் இனங்களில், அந்நபர் சட்டப்பிரிவு 9–ன் கீழ் வரிச் செலுத்தும் கடப்பாட்டினை எட்டிய நாளுக்கு உடனடி முந்தைய நாள்;

iv. சட்டப்பிரிவு 18 உட்பிரிவு (1) கூறு (d)ன் கீழ் வரவு கோரும் இனங்களில், பதிவு பெற்ற நபரால் செய்யப்பட்ட வழங்குகை வரிவிதிக்கத்தக்கதாக உருவாகும் நாளுக்கு உடனடி முந்தைய நாள்.

(d) மத்திய வரி, மாநில வரி, யூனியன் பிரதேச வரி, மற்றும் ஒருங்கிணைந்த வரி ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் உள்ளீட்டுவரி வரவின் ஒட்டுமொத்த கோரிக்கை தொகை ரூபாய் இரண்டு லட்சத்திற்கு மிகும் இனங்களில் கூறு (b)ன் கீழ் அளிக்கப்படும் உறுதி மொழியின் விவரங்கள், அவ்வாறு தொழில்புரியும் பட்டய கணக்கர் அல்லது விலைமதிப்பீட்டு கணக்கரால் சான்றளிக்கப்பட வேண்டும்;

(e) சட்டப்பிரிவு 18 உட்பிரிவு (1) கூறு (c) மற்றும் (d)ன் வகைமுறைகளுக்கிணங்க கோரப்படும் உள்ளீட்டு வரி வரவு தொடர்புடைய வழங்குநரால், பொது மின்னணு நழைவாயில் மூலம், படிவம் GSTR–1 அல்லது நேர்வுக்கேற்றவாறு படிவம் GSTR–4 ல் அளிப்படும் தொடர்புடைய விவரங்களோடு சரிபார்க்கப்பட வேண்டும்.

(2) சட்டப்பிரிவு 18 உட்பிரிவு (6) ன் காரணங்களுக்காக, மூலதனப் பொருட்கள் அல்லது தளவாடம் மற்றும் இயந்திரப் பொருட்களின் வழங்குகை இனங்களில், வரவுத் தொகை சொல்லப்பட்ட பொருட்களின் விலைப்பட்டியல் அளிக்கப்பட்ட தேதியில் இருந்து, ஒவ்வொரு காலாண்டு அல்லது அதன் பகுதியான காலாண்டிற்கு, காலாண்டிற்கு ஐந்து சதவீதப்புள்ளி

என்ற கணக்கீட்டின் படியான தொகையினை உள்ளீட்டு வரி வரவுத் தொகையினில் குறைத்துக் கொண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

**41. வணிக விற்பனை, இணைத்தல், ஒன்றிணைதல், குத்தகை அல்லது ஒரு வணிகமாற்றம் – இவற்றின் மீதான வரவின் மாற்றம்.–**

**(1)** ஒரு பதிவுபெற்ற நபர், வணிக விற்பனை, இணைத்தல், பிரித்தல், ஒன்றிணைதல், குத்தகை அல்லது மாற்றம் செய்தல் அல்லது எந்தவொரு காரணங்களுக்காகவும் வணிக உரிமை மாற்றம் போன்ற நிகழ்வுகளில், அந்நபரின் மின்னணு வரவுப் பேரேட்டினில் இருக்கும் துய்யப்படாத உள்ளீட்டு வரி வரவினை, வணிக மாற்றம் செய்யப்படுபவருக்கு மாற்றம் செய்திடும் கோரிக்கையுடன், செய்யப்பட்ட வணிக விற்பனை, இணைத்தல், பிரித்தல், ஒன்றிணைதல், குத்தகை அல்லது வணிக மாற்றம் ஆகியவற்றின் விவரங்களை மின்னணு மூலம், பொரு மின்னணு வாயில் வழியாக படிவம் GST ITC–2ல் அளித்திட வேண்டும்;

**வரம்புரை:** இருப்பினும், வணிகப்பிரித்தல் இனங்களில், பிரித்தல் திட்ட வரைவினில் குறித்திட்டவாறு, புதிய வணிக கூறுகுளுக்கு சொத்துக்கள் பிரித்தளிக்கப்பட்ட அதே விகிதாச்சாரத்தில், உள்ளீட்டு வரி வரவும் பிரித்தளிக்கப்பட வேண்டும்.

**(2)** வணிகத்தை மாற்றித் தருகிறவர், அந்த வணிக விற்பனை, இணைத்தல், பிரித்தல், ஒன்றிணைதல், குத்தகை அல்லது வணிக மாற்றம் ஆகியவைகள், கடப்பாடுகள் (கடன்கள்) மாற்றம் தொடர்பான குறிப்பிட்ட வகைமுறைகளுடன் செய்யப்பட்டுள்ளது என்பதற்கான, தொழில்முறை பட்டயக் கணக்கர் அல்லது விலைமதிப்பீட்டு கணக்கரால், வழங்கப்பட்ட சான்றிதழின் நகலையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**(3)** வணிகத்தை மாற்றி பெறுபவர், வணிகத்தை மாற்றி தருகிறவரால் அளிக்கப்படும் அவ்வாறான விவரங்களை, பொது மின்னணு நுழைவு வாயிலில், ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறான ஏற்பினைத் தொடர்ந்து, படிவம் GST ITC–2ல் குறித்திட்ட துய்க்கப்படாத வரவு, வணிகத்தை மாற்றி பெறுபவரின் மின்னணு வரவுப் பேரேட்டினில் வரவு வைக்கப்படும்.

**(4)** அவ்வாறு மாற்றம் செய்யப்படும், உள்ளீடுகள் மற்றும் மூலதனப் பொருட்கள், வணிக மாற்றம் பெறுபவரால், அவருடைய கணக்குப் புத்தகங்களில் முறைப்படி வரவு வைக்கப்பட வேண்டும்.

**42. உள்ளீடுகள் அல்லது உள்ளீட்டு சேவைகள் மற்றும் அவைகளின் எதிரிடை நிகழ்வுகள் தொடர்பான உள்ளீட்டு வரி வரவினை தீர்மாணிக்கும் வழிமுறைகள்.–**

**(1)** சட்டப்பிரிவு 17 உட்பிரிவு **(1)** அல்லது உட்பிரிவு **(2)**ன் வகைமுறைகளின் வரம்பிற்குள்ளான உள்ளீடுகள் அல்லது உள்ளீட்டு சேவைகளில், வணிக நோக்கங்களுக்காக பகுதியும், அல்லது பூஜ்ய வரி விதிப்பிற்குட்பட்ட சரக்குகள் வழங்குதலை உள்ளடக்கிய வரிவிதிப்பிற்குட்பட்ட வழங்கலை செய்வதற்காக ஒரு பகுதியும், மற்றும் வரிவிதிப்பிற்குட்படாத வழங்கலை செய்வதற்காக மற்ற பகுதியும் பயன்படுத்தப்படுமேயானால், அவ்வுள்ளீடுகள் அல்லது உள்ளீட்டு சேவைகள் தொடர்பான உள்ளீட்டு வரிவரவு, வணிக நோக்கத்திற்காக அல்லது வரிவிதிக்கத்தக்க வழங்கலை செய்வதற்காக, கீழ்க்கண்ட வழிமுறைகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டும். அவையாவன,

(a) ஒரு வரிக்காலத்தின், உள்ளீடுகள் மற்றும் உள்ளீட்டுச் சேவைகளில் உள்ளடங்கியிருக்கும் மொத்த உள்ளீட்டு வரி – ‘T’ எனவும்;

(b) 'T' –யினுள், வணிக நோக்கத்திற்காக அல்லாமல் பிற நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் உள்ளீடுகள் மற்றும் உள்ளீட்டு சேவைகளின் காரணமான உள்ளீட்டு வரித்தொகை 'T1' எனவும்;

(c) 'T'–யினுள், வரிவிலக்கிற்குட்பட்டட வழங்குகைகளுக்காக மட்டுமே, பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் உள்ளீடுகள் மற்றும் உள்ளீட்டு சேவைகளின் காரணமான உள்ளீட்டு வரித்தொகை 'T2' எனவும்;

(d) 'T'–யினுள், சட்டப்பிரிவு 17 உட்பிரிவு (5)ன் கீழ், வரவு கிடைக்கப்பபெறாத உள்ளீடுகள் மற்றும் உள்ளீட்டு சேவைகளின் காரணமான உள்ளீட்டு வரித்தொகை 'T3' எனவும்;

(e) பதிவுபெற்ற நபரின் மின்னணு வரவுப் பேரேட்டினில், வரவு வைக்கப்பட்ட உள்ளீட்டு வரிவரவுத் தொகை 'C1' எனவும் கொண்டு கீழ்க்கண்ட கணக்கீட்டினை செய்திட வேண்டும்.

$$C1 = T-(T1+T2+T3);$$

(f) வரிவிலக்கிற்குட்பட்ட வழங்குகைகள் தவிர்த்த, ஆனால் 'பூஜ்ய வரி' வழங்குகளைகளை உள்ளடக்கிய பிற வழங்குககைகளுக்காக மட்டுமே பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளீடுகள் மற்றும் உள்ளீட்டு சேவைகளின் மீதான உள்ளீட்டு வரிவரவுத் தொகை 'T4' எனவும்

(g) 'T1', 'T2', 'T3' மற்றும் 'T4' ஆகியவைகள் பதிவுபெற்ற நபரால் தீர்மானிக்கப்பட்டு, படிவம் GSTR–2ல் விலைப்பட்டியல் நிலையிலேயே, அறிவிக்கப்பட வேண்டும்;

(h) கூறு (g) ன் கீழ் உள்ளீட்டு வரி வரவுகளின் ஒதுக்கீட்டிறக்குப் பின் மிகுந்திருக்கும் உள்ளீட்டு வரி வரவு பொது வரவு என அழைக்கப்படும், அது 'C2' என குறிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படும் –

$$C2 = C1-T4;$$

(i) வரிவிலக்கிற்குட்பட்ட பொருட்களை வழங்குவதற்கு உரிய உள்ளீட்டு வரி வரவுத்தொகை 'D1' என குறிக்கப்படும், மற்றும் அது கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்படும்–

$$D1 = (E \div F)xC2$$

இங்கு,

'E' என்பது அந்த வரிக்காலத்தில் வழங்கப்படும் வரிவிலக்கிற்குட்பட்ட பொருட்களின் ஒட்டுமொத்த மதிப்பாகும், மற்றும்

'F' என்பது அவ்வரிக்காலத்தில், அந்நபரால் மாநிலத்திற்குள் வழங்கப்ட்ட பொருட்களின் மொத்த தொகை:.

வரம்புரை: இருப்பினும், மேல் சொல்லப்பட்ட வரிக்காலத்தில் பதிவுபெற்ற நபருக்கு வழங்கப்பட்ட பொருட்களுக்கான தொகை இல்லாமல் இருந்தாலோ அல்லது மேலே சொல்லப்பட்ட விவரங்கள் கிடைக்கப் பெறாமல் இருந்தாலோ, அவ்வரிக்காலத்திற்கு முந்தைய காலத்தில் இறுதியாக எவ்வரிக் காலத்தில் 'E' மற்றும் 'F'- க்கான விவரங்கள் இருந்தனவோ, அவ்விவரங்களைக் கொண்டு 'E' மற்றும் 'F'- ன் மதிப்பீடு,கணக்கிடப்பட வேண்டும்;

விளக்கம்: இந்த கூற்றின் காரணங்களுக்காக, வரி விலக்கிற்குட்பட்ட வழங்கலின் ஒட்டுமொத்த மதிப்பு மற்றும் மொத்த வழங்கல் தொகை, என்பது, இந்திய அரசியலமைப்புச் சட்டம் – ஏழாவது அட்டவணை I ன் 84ம் வரிசை எண் மற்றும் அதே அட்டவணை II- ன் 51 மற்றும் 54ம் வரிசை எண்ணின் கீழ் விதிக்கப்பட்ட எந்தவொரு கலால் வரி அல்லது வரித் தொகை நீங்கலானது ஆகும்;

(j) பொதுவான உள்ளீடுகள் மற்றும் உள்ளீட்டுச் சேவைகளில் ஒரு பகுதி வணிகத்திற்காகவும், மறு பகுதி வணிகம் சார பிற நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படும் இனங்களில், வணிகம் சாரா பிற நோக்கங்களுக்கானவைகளின் சார்புடைய வரவுத் தொகை 'D2'-என குறிக்கப்படும் மற்றும் அது 'C2'-தொகையினை 5 விழுக்காடுகளுக்கு சமமானதாக இருக்கும்; மற்றும்

(k) பொது வரவுத் தொகையில் எஞ்சியதுதான், வணிக நோக்கங்களுக்காக மற்றும் வரி விலக்கிற்குட்பட்ட பொருட்களை வழங்குவது தவிர்த்த, ஆனால் பூஜ்ய வரிவிதிப்பினை கொண்ட பொருட்களை வழங்களுக்கு தகுதிவாய்ந்த உள்ளீட்டு வரி வரவாகும். அது 'C3'- என குறிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்படும்.

$$C3 = C2-(D1+D2);$$

(l) மேலே சொல்லப்பட்ட 'C3'- என்பது மத்தியவரி, மாநில வரி, ஒன்றிய ஆட்சிப் பகுதிவரி மற்றும் ஒருங்கிணைந்த வரி என தனித்தனியே கணக்கீடு செய்யப்பட வேண்டும்;

(m) D1 மற்றும் D2 ன் ஒட்டுமொத்தத் தொகைக்கு இணையான தொகையினை பதிவுபெற்ற நபரின் வெளிப்புற கடப்பாட்டுடன் சேர்க்கப்பட வேண்டும்.

வரம்புரை: இருப்பினும், வணிகம் சாரா நோக்கங்களுக்காக ஒரு பகுதியும், வரி விலக்கிற்குட்பட்ட பொருட்களை வழங்குவதற்காக மறு பகுதியும் பயன்படுத்தப்படும் – உள்ளீடுகள் மற்றும் உள்ளீட்டு சேவைகளின் தொடர்புடைய உள்ளீட்டு வரித்தொகையானது பதிவுசெய்துள்ள நபரால் அடையாளம் காணப்பட்டு, விலைப்பட்டியல் நிலையிலேயே தனித்தனியாக பிரிக்கப்பட்டிருந்தால், அத்தொகைகள் முறையே T1 மற்றும் T2 உடன் சேர்க்கப்பட வேண்டும். அவ்வகை உள்ளீடுகள் மற்றும் உள்ளீட்டு சேவைகளின் மீது எஞ்சியிருக்கும் வரவுத்தொகை T4 உடன் சேர்க்கப்பட வேண்டும்.

(2) துணைவிதி (1)ன் கீழ் தீர்மானிக்கப்படும் உள்ளீட்டு வரி வரவு, அந்த வரவு தொடர்புடைய நிதியாண்டினை தொடர்ந்து வரும் நிதியாண்டின் செப்டம்பர் மாத விவர அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய உரிய நாளுக்கு முன்பாக, அத்துணைவிதியில் வகுத்துறைக்கப்பட்ட வழிமுறைகளில், இறுதியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(a) இறுதிக் கணக்கீட்டின்படியான D1 மற்றும் D2 க்கு உரிய ஒட்டுமொத்த தொகையானது, துணை விதி (1)ன் கீழ் தீர்மானிக்கப்பட்ட D1 மற்றும் D2 க்கு உரிய ஒட்டுமொத்த தொகையினை விட கூடுதலாக இருந்தால், கூடுதலான அத்தொகை, அவ்வகை வரவின் தொடர்புடைய நிதியாண்டினை தொடர்ந்து வரும் நிதியாண்டின் செப்டம்பர் மாதம் அல்லது அதற்கு முந்தைய ஒரு மாதத்தின் மாதாந்திர விவர அறிக்கையில், பதிவு செய்துள்ள அந்த நபரின், வெளிப்புற வரிக்கடப்பாடாக சேர்க்கப்பட வேண்டும் மற்றும் தொடர்ந்து வந்த நிதியாண்டின் ஏப்ரல் மாத முதல் தேதியில் இருந்த, கூடுதலான அத்தொகை, செலுத்தப்படும் நாள்வரை சட்டப்பிரிவு 50 உட்பிரிவு (1)ல் குறித்திட்ட விகிதாச்சாரத்தின்படி, கூடுதலான அத்தொகைக்கு வட்டியையும் செலுத்திட கடப்பாடுடையவர் ஆகிறார்;

(b) துணைவிதி (1)ன் கீழ் தீர்மானிக்கப்பட்ட D1 மற்றும் D2 க்கு உரிய ஒட்டுமொத்த தொகையானது, இறுதி கணக்கீட்டின்படியான D1 மற்றும் D2 க்கு உரிய ஒட்டுமொத்த தொகையினைவிட கூடுதலாக இருந்தால், அவ்வகை கூடுதல் தொகை அவ்வகை வரவு தொடர்புடைய நிதியாண்டினை

தொடர்ந்து வரும் நிதியாண்டின் செப்டம்பர் மாதம் அல்லது அதற்கு முந்தைய மாதங்களின் மாதாந்திர விவர அறிக்கையில், பதிவுபெற்ற நபரால் வரவாக கோரப்படும்.

**43. சில இனங்களில், மூலதனப் பொருட்கள் மீதான உள்ளீட்டு வரி வரவு மற்றும் அதனை மீட்டல் இவைகளை தீர்மானிக்கும் முறைகள்.–**

**(1)** ஒரு பகுதி வணிக நோக்கத்திற்காக, மறுபகுதி பிற நோக்கத்திற்காக, அல்லது ஒரு பகுதி பூஜ்ய வரி வழங்கலையும் உள்ளடக்கிய பிற வரிவிதிப்பிற்குட்பட்ட வழங்கலை செய்வதற்காக மற்றும் மறுபாதி வரிவிதிப்பிற்குட்பட்ட வழங்கலை செய்வதற்காக பயன்படுத்தப்படும், சட்டப்பிரிவு 17 உட்பிரிவு **(1)** மற்றும் **(2)**ன் வரைமுறைகளுக்கு உட்பட்ட மூலதனப் பொருட்கள் தொடர்பான உள்ளீட்டு வரி வரவு சட்டப்பிரிவு **16** உட்பிரிவு **(3)**ன் வரையரைகளுக்கு உட்பட்டு, வணிக நோக்கத்திற்காக அல்லது வரிவிதிப்பிற்குட்பட்ட வழங்கலைச் செய்வதற்காக கீழ்க்கண்ட முறைகளில் உரித்ததாக்கப்பட வேண்டும், அதாவது:-

(a) முற்றிலும் வணிகம்சாரா நோக்கத்திற்காக அல்லது முற்றிலும் வரி விலக்கிற்குட்பட்ட வழங்கலை செய்வதற்காக, பயன்படுத்தப்பட்ட அல்லது பயன் படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் மூலதனப் பொருட்களின் மீதான உள்ளீட்டு வரி வரவு தொகை படிவம் GSTR–2ல் சுட்டிக்காட்டப்பட வேண்டும் மற்றும் அது அந்த நபருடைய மின்னணு வரவுப்பதிவேட்டினில் வரவு வைக்கப்படமாட்டாது;

(b) முற்றிலும் வரி விலக்களிக்கப்பட்ட வழங்கல் தவிர்த்த ஆனால் பூஜ்யவரி வழங்கலை உள்ளடக்கிய பிற வழங்கலை செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மூலதனப் பொருட்கள் மீதான உள்ளீட்டு வரி வரவுத் தொகை படிவம் GSTR–2ல் சுட்டிக்காட்டப்பட வேண்டும் மற்றும் மின்னணு வரவுப்பதிவேட்டினில் வரவு வைக்கப்பட வேண்டும்;

(c) மேற்படி கூறு (a) மற்றும் (b) ன் கீழ் வராத மூலதனப் பொருட்கள் மீதான உள்ளீட்டு வரிவரவு 'A' என குறிக்கப்பட்டு மின்னணு வரவு பதிவேட்டில் வரவு வைக்கப்பட வேண்டும் மற்றும் அவ்வகைப் பொருட்களின் பயன்பாட்டுக்காலம் அவ்வகைப் பொருட்களின் விலைப்பட்டியலின் நாளில் இருந்து **5** வருடங்கள் என எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்;

**வரம்புரை:** எந்தவொரு மூலதனப் பொருட்களும், மூன்னர் உட்கூறு (a) ன் வரம்பிற்குட்பட்டும், பின்னர் இவ்வுட்கூறுவின் வரம்பிற்குட்பட்டும் இருக்குமேயானால், உள்ளீட்டு வரி வரவினில் இருந்து, காலாண்டு அல்லது அதன் பகுதி காலத்திற்கு ஒரு காலாண்டிற்கு **5** சதவிகிதப் புள்ளி என்ற விகிதத்தில் கழித்துக்கொண்டு 'A' ன் மதிப்பினை கணக்கீடு செய்ய வேண்டும். அம்மதிப்பு மின்னணு வரவுப் பதிவேட்டினில் வரவு வைக்கப்பட வேண்டும்;

**விளக்கம்:** உட்கொணரப்படும் மூலதனப் பொருட்களில் ஒரு இனம் கூறு (a) ன் கீழ் வருவதாக அறிவிக்கப்பட்டு பின்னர் இக்கூறின் வரம்பின் கீழ் வருவமானால் அது சட்டப்பிரிவு **18** உட்பிரிவு **(4)**ன் ஈர்ப்பிற்கு உட்படாது.

(d) கூறு (c)-ன் கீழ் மின்னணு வரவுப் பதிவேட்டினில் வரவு வைக்கப்படும் 'A' என்பதன் ஒட்டுமொத்த தொகை, ஒரு வரிக்காலத்தின் மூலதனப் பொருட்கள் தொடர்பான பொது வரவாக இருக்கும் அது 'Tc' எனக் குறிப்பிடப்படும்:

**வரம்புரை:** எந்தவொரு மூலதனப் பொருளும், முன்னர் கூறு (b)-ன் வரம்பிற்குட்பட்டும் பின்னர் (c)-ன் வரம்பிற்குள் வருமேயானால், உள்ளீட்டு வரி வரவோரு, காலாண்டு அல்லது அதன் பகுதி காலத்திற்கு, ஒரு காலாண்டிற்கு **5** சதவிகிதப் புள்ளி என்ற விகிதாச்சாரப்படியான தொகையினை சேர்த்துக் கொண்டு 'A' ன் மதிப்பினை கணக்கிட வேண்டும். அவ்வாறான தொகை 'Tc' ன் ஒட்டுமொத்த தொகையோடு சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்;

(e) பொதுவான மூலதனப் பொருட்களின் பயன்பாட்டு காலத்தில் அம்மூலதன பொருட்கள் மீதான, ஒரு வரிக்காலத்தை சார்ந்திருக்கும், உள்ளீட்டு வரிவரவுத் தொகை ‘Tm’ என குறிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

$$Tm = Tc \div 60;$$

(f) ஒரு வரிக்காலத்தின் துவக்கத்தில், அனைத்து பொதுவான மூலதனப் பொருட்களின் மீதான உள்ளீட்டு வரிவரவுத் தொகை, அம்மூலதனப் பொருட்களின் பயன்பாட்டு காலம் அவ்வரிக் காலத்திற்கும் தொடரும் நேர்வுகளில், ‘Tr’ என குறிக்கப்பட வேண்டும் மற்றும் அது அனைத்து அவ்வகையான மூலதனப் பொருட்களின் ஒட்டுமொத்த ‘Tm’ ஆக இருக்கும்;

(g) வரிவிலக்களிக்கப்பட்ட வழங்கலைச் சார்திருக்கும் பொதுவரவுத் தொகையானது தொகை ‘Tc’ என குறிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

$$Tc = (E \div F) \times Tr$$

‘E’ என்பது ஒருவரிக்காலத்தில் செய்யப்பட்ட வரி விலக்கிற்குட்பட்ட வழங்கலின் ஒட்டுமொத்த மதிப்பாகும், மற்றும்

‘F’ என்பது அவ்வரிக்காலத்தில், பதிவுபெற்ற நபரின் உள்மாநில மொத்த வழங்கல் தொகையாகும்:

**வரம்புரை:** இருப்பினும், மேல் சொல்லப்பட்ட வரிக்காலத்தில் பதிவுபெற்ற நபருக்கு வழங்குகதை தொகை இல்லாமல் இருந்தாலோ அல்லது மேலே சொல்லப்பட்ட விவரங்கள் கிடைக்கப் பெறாமல் இருந்தாலோ, ‘E’ மற்றும் ‘F’- ன் மதிப்பீடு, அவ்வரிக்காலத்திற்கு முந்தைய காலத்தில் இறுதியாக எவ்வரிக் காலத்தில் ‘E’ மற்றும் ‘F’- க்கான விவரங்கள் இருந்தனவோ, அவ்விவரங்களைக் கொண்டு கணக்கிடப்பட வேண்டும்;

**விளக்கம்:** இந்த கூறின் காரணங்களுக்காக, வரி விலக்கிற்குட்பட்ட வழங்கலின் ஒட்டுமொத்த மதிப்பு மற்றும் மொத்த வழங்கல் தொகை, என்பது, இந்திய அரசியலமைப்புச் சட்டம் – ஏழாவது அட்டவணை I ன் 84ம் வரிசை எண் மற்றும் அதே அட்டவணை II- ன் 51 மற்றும் 54ம் வரிசை எண்ணின் கீழ் விதிக்கப்பட்ட எந்தவொரு கலால் வரி அல்லது வரித் தொகை நீங்கலானது ஆகும்;

(h) சம்பந்தப்பட்ட மூலதனப் பொருட்களின் பயன்பாட்டு காலத்தின் ஒவ்வொரு வரிக்காலத்திலும், Tc–யின் தொகை மற்றும் அதற்குரிய வட்டி ஆகியவை அவ்வகை வரவினை கோருகின்ற நபரின் வெளிப்புற வரிக் கடப்பாடுடன் சேர்க்கப்பட வேண்டும்.

(2) Tc–யின் தொகையானது, மத்திய வரி, மாநில வரி, யூனியன் பிரதேச வரி மற்றும் ஒருங்கிணைந்த வரி ஆகியவற்றிற்காக தனித்தனியே கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

**44. சிறப்புச் சூழலில் வரவு மீட்புக்கான வகைமுறைகள்.–**

(1) சட்டப்பிரிவு 18 உட்பிரிவு (4) அல்லது சட்டப்பிரிவு 29 உட்பிரிவு (5)–ன் நோக்கங்களுக்காக இருப்புச்சரக்கின் உள்ளீடுகள், பகுதி முடிவுற்ற மற்றும் முற்றிலும் முடிவுற்ற நிலையில் இருப்பில் இருக்கும் உற்பத்தி சரக்குகளின் உள்ளீடுகள் மற்றும் இருப்பில் இருக்கும் மூலதனப் பொருட்களின் உள்ளீடுகள் தொடர்பான உள்ளீட்டு வரிவரவுத் தொகை கீழ்க்கண்ட வழிமுறைகளில் தீர்மானிக்கப்பட வேண்டும், அதாவது

(a) இருப்புச் சரக்கின் உள்ளீடுகள், மற்றும் பகுதி முடிவுற்ற மற்றும் முற்றிலும் முடிவுற்ற உற்பத்தி சரக்குகளின் உள்ளீடுகள் தொடர்பாக உள்ளீட்டு வரி வரவு, தொடர்புடைய வரி விலைப்பட்டியலின் அடிப்படையில், அப்பட்டியலின்படியான உள்ளீட்டு வரி வரவில் இருந்து, பதிவு

பெற்ற நபர், எவ்வளவு வரிவரவினை துய்த்துள்ளார் என்ற விகிதாச்சாரத்தின்படி கணக்கீடு செய்யப்பட வேண்டும்;

(b) இருப்பில் இருக்கும் மூலதனப் பொருட்கள் தொடர்பாக அம்மூலதனப் பொருட்களின் பயன்பாட்டுக் காலம் ஐந்து ஆண்டுகள் எனக் கொண்டு எஞ்சியுள்ள பயன்பாட்டு காலத்திற்கான உள்ளீட்டு வரி வரவினை, அதற்கான விதாச்சார அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

**உதாரணம்:** மூலதனப் பொருள் 4 வருடம், 6 மாதம் 15 நாட்களுக்கு உபயோகத்தில் உள்ளது எனில் எஞ்சியுள்ள பயன்பாட்டு காலம் 5 மாதம் (மாதத்தின் பகுதி தவிர்க்க) அம்மூலதனப் பொருட்களின் உள்ளீட்டு வரி வரவு =C

எஞ்சியுள்ள பயன்பாட்டு காலம் சார்ந்த உள்ளீட்டு வரிவரவு = C X 5/60.

(2) துணைவிதி (1)ல் குறித்துரைத்த தொகையானது, ஒருங்கிணைந்த வரிக்கான உள்ளீட்டு வரி வரவு மற்றும் மத்திய வரிக்கான உள்ளீட்டு வரி வரவு என தனித்தனியே தீர்மானம் செய்யப்பட வேண்டும்.

(3) இருப்புச் சரக்கின் உள்ளீடுகள் தொடர்புடைய வரிவிலைப்பட்டியல் கிடைக்கபெறவில்லை எனில், பதிவுபெற்ற நபர் துணைவிதி (1)ன் கீழான தொகையினை, சட்டப்பிரிவு 18 உட்பிரிவு (4) அல்லது நேர்வுக்கிணங்க சட்டப்பிரிவு 29 உட்பிரிவு (5)—ல் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வுகள் நடந்தேறி நடைமுறைக்கு வரும் நாளில், நிலவிவரும் சந்தை மதிப்பினை அடிப்படையாகக் கொண்டு, மதிப்பீடு செய்ய வேண்டும்.

(4) துணைவிதி (1)—ன் கீழ் தீர்மானிக்கப்பட்ட தொகை பதிவுபெற்ற நபரின் வெளிப்புற வரிக் கடப்பாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் மற்றும் அத்ததொகையின் விவரங்கள், அவ்வகையான தொகை சட்டப்பிரிவு 18 உட்பிரிவு (4)—ன் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏதாவதொரு நிகழ்வு தொடர்புடையதாக இருப்பின், படிவம் GST ITC—03—லும், அவ்வகையான தொகை பதிவுகள் ரத்து செய்ததன் தொடர்புடையதாக இருப்பின் படிவம் GSTR—10—லும், அளிக்கப்பட வேண்டும்.

(5) துணைவிதி (3)—ன்படி அளிக்கப்படும் விவரங்கள் அவ்வாறே பணியாற்றிக் கொண்டிருக்கும் பட்டயக் கணக்கர் அல்லது விலைமதிப்பீட்டு கணக்கரால் முறையாக சான்றளிக்கப்பட வேண்டும்.

(6) சட்டப்பிரிவு 18 உட்பிரிவு (6)—ன் நோக்கங்களுக்காக, மூலதனப் பொருட்கள் தொடர்புடைய உள்ளீட்டு வரி வரவுத்தொகை, துணைவிதி (1) கூறு (b)—ல் வகுத்துரைக்கப்பட்ட அதே வழிமுறைகளின்படி தீர்மானிக்கப்பட வேண்டும் மற்றும் ஒருங்கிணைந்த வரி மற்றும் மத்திய வரி இவற்றிற்கான உள்ளீட்டு வரி வரவு தனித்தனியே தீர்மானிக்கப்பட வேண்டும்.

**வரம்புரை:** அவ்வாறு தீர்மானிக்கப்படும் தொகை, அம்மூலதனப் பொருட்களின் பரிவர்த்தனை மதிப்பின் மீது தீர்மானம் செய்யப்படும் தொகையைவிட கூடுதலாக இருக்கும் நிலையில், அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட தொகை வெளிப்புற வரி சடப்பாடாக கொள்ளப்பட்டு அதன் விவரங்கள் படிவம் GSTR—1—ல் அளிக்கப்பட வேண்டும்.

**45. கூலித் தொழிலுக்கு அனுப்பப்பட்ட உள்ளீடுகள் மற்றும் மூலதனப் பொருட்கள் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள்.—**

(1) உள்ளீடுகள், பகுதி முடிவுற்ற உற்பத்திச் சரக்குகள் அல்லது மூலதனப் பொருட்கள் கூலித் தொழில் முனைவோருக்கு, அவ்வகை சரக்குகளை நேரடியாக கூலித் தொழில் முனைவோருக்கு அனுப்புதல், உள்ளீட்டு, முதன்மை வழங்குநரால் அளிக்கப்படும் ஒரு செலுத்துச் சீட்டின் அடிப்படையில் அனுப்பப்பட வேண்டும்.

**(2)** முதன்மை வழங்குநரால், கூலித் தொழில் முனைவோருக்கு அளிக்கப்படும் செலுத்துச்சீட்டு, விலைப்பட்டியல் விதி **55–**ல் குறித்துரைக்கப்பட்ட விவரங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

**(3)** ஒரு காலாண்டின் கூலித் தொழில் முனைவோருக்கு அனுப்பப்பட்ட அல்லது கூலித் தொழில் முனைவோரிடமிருந்த திருப்பப்பட்ட அல்லது ஒரு கூலி தொழில் முனைவோரிடமிருந்து மற்றொருவருக்கு அனுப்பப்பட்ட சரக்குகள் தொடர்பான செலுத்துச் சீட்டின் விவரங்கள் அந்த காலத்தின் காலாண்டு முடிந்து வரும் அடுத்த மாதம் **25**ம் தேதி அல்லது அதற்கு முன்னதாக அளிக்கப்பட வேண்டிய படிவம் GST ITC–**04–**ல் சேர்க்கப்பட வேண்டும்.

**(4)** உள்ளீடுகள் அல்லது மூலதனப் பொருட்கள் சட்டப்பிரிவு **143–**ல் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் முதன்மை வழங்குநருக்கு திருப்பப்படவில்லை என்றால், அந்த உள்ளீடுகள் அல்லது மூலதனப் பொருட்கள் எந்த தேதியில் வெளியில் அனுப்பப்பட்டதோ அந்த தேதி முதல் அந்த உள்ளீடுகள் அல்லது மூலதனப் பொருட்கள் முதன்மை வழங்குநரால் கூலித் தொழில் முனைவோருக்கு அனுப்பப்பட்டதாக கருதப்படும். மற்றும் அந்த வழங்கலை படிவம் GSTR–**1–**ல் தெரிவிக்கப்பட்டு மற்றும் அதற்குண்டான வரி உரிய வட்டியுடன் செலுத்துவதற்கு முதல்வல் கடப்பாடுடையவராகிறார்.

**விளக்கம்:** இந்த அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக.–

**(1)** ‘மூலதனப் பொருட்கள்’ என்பது சட்டப்பிரிவு **17**ன் விளக்கத்தில் வரையறுக்கப்பட்ட ‘தளவாடம் மற்றும் இயந்திரம்’ என்பதையும் உள்ளடக்கியதாகும்;

**(2)** சட்டப்பிரிவு **17** உட்பிரிவு **(3)**ல் சுட்டப்பட்டுள்ள வரிவிலக்கிற்குட்பட்ட வழங்கலின் மதிப்பினை தீர்மானிக்க–

(a) முத்திரைத்தாள் கட்டணம் செலுத்துவதற்காக ஏற்கப்பட்ட நிலம் மற்றும் கட்டிடத்தின் மதிப்பினையே நிலம் மற்றும் கட்டிடத்தின் மதிப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும்; மற்றும்

(b) பாதுகாப்பு ஆவணத்தின் மதிப்பு என்பது அப்பாதுகாப்பு ஆவணத்தின் விற்பனை மதிப்பில் ஒரு சதவிகிதம் என எடுத்துக் கொள்ள வேண்டும்.

## அத்தியாயம் VI

## வரி விலைப் பட்டியல், பற்று மற்றும் வரவுக் குறிப்புகள்

**46. வரி விலைப்பட்டியல் .–**

விதி–**54–**க்கு கட்டுப்பட்டு, சட்டப்பிரிவு **31–**ல் சுட்டப்பட்டுள்ள வரிவிலைப்பட்டியல் பதிவு பெற்ற நபரால் வழங்கப்பட வேண்டும். அது கீழ்க்கண்ட விவரங்களை உள்ளடக்கியதாக இருக்கும், அதாவது:-

(a) வழங்குநரின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண் (GSTIN);

(b) ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வரிசையிலான **16** பாத்திர அமைப்புகளுக்கு மிகைப்படாத தொடர் வரிசை எண், அவ்வரிசை எண் ஒவ்வொரு நிதியாண்டினையும் தனித்துக் காட்டும் வகையில், எழுத்துக்கள் அல்லது எண்கள் அல்லது சிறப்பு குறியீடு

அமைப்புகளான குறுகோடு அல்லது சிறு கோடு மற்றும் சாய்கோடு, ‘‘–’’ மற்றும் ‘‘/’’ போன்ற அடையாளங்கள் மற்றும் இவைகளின் எந்த ஒரு இணைந்த வடிவத்தை கொண்டதாக இருக்கும்;

(c) அவ்வரிவிலைப்பட்டியல் வழங்கப்பட்ட நாள்;

(d) பெறுநரின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண்(GSTIN)அல்லது பதிவு பெற்றவராயின் தனித்துவ அடையாள எண் UIN;

(e) பெறுநர் ஒரு பதிவு பெறாத நபராக இருப்பின் மற்றும் வரிவிதிக்கத்தக்க வழங்கலின் மதிப்பு ரூபாய் ஐம்பதாயிரம் அல்லது அதற்கு மிகையாக இருப்பின், அப்பெறுநரின் பெயர், மற்றும் முகவரி மற்றும் சரக்கின் இறங்குமிட முகவரியோடு அந்த மாநிலத்தின் பெயர் மற்றும் மாநில அடையாள எண்;

(f) பெறுநர் ஒரு பதிவு பெறாத நபராக இருப்பின் மற்றும் வரிவிதிக்கத்தக்க வழங்கலின் மதிப்பு ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு குறைவாக மற்றும் பெறுநர் அத்தகைய விவரங்கள் வரிவிலைப்பட்டியலில் பதிவு செய்ய வேண்டியிருப்பின், அந்த மாநிலத்தின் பெயர் மற்றும் மாநில அடையாள சான்றுடன் பெறுநரின் பெயர், மற்றும் முகவரி மற்றும் சரக்கின் இறங்குமிட முகவரி ;

(g) சரக்குகளின் HSN குறியீடு அல்லது சேவைகளின் கணக்கீடு இலக்கம்;

(h) சரக்குகள் அல்லது சேவைகளின் விவரங்கள்;

(i) சரக்கினை வழங்கிடும் நேர்வில், சரக்குகளின் அளவு மற்றும் அலகு அல்லது சிறப்பு அளவு குறியீடு ஏதாவதிருப்பின்;

(j) சரக்கு அல்லது சேவை அல்லது இவையிரண்டின் வழங்கலின் மொத்த மதிப்பு;

(k) தள்ளுபடி மற்றும் கழிவு ஏதாவதிருப்பின் இவைகளை கணக்கினில் எடுத்துக் கொண்ட நிலையில், சரக்கு அல்லது சேவை அல்லது இவையிரண்டின் வழங்கலுக்கான வரி விதிக்கத்தக்க மதிப்பு;

(l) வரி விகிதம் (மத்தியவரி, மாநில வரி, ஒருங்கிணைந்த வரி, யூனியன் பிரதேச வரி அல்லது மேல்வரி);

(m) வரிவிதிக்கத்தக்க சரக்கு மற்றும் சேவைகளின் மீது விதிக்கப்பட்ட வரித்தொகை (மத்தியவரி, மாநில வரி, ஒருங்கிணைந்த வரி , யூனியன் பிரதேச வரி அல்லது மேல்வரி);

(n) மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகம் தொடர்பான வழங்கலாக இருப்பின், வழங்கலின் இடம் மற்றும் அம்மாநிலத்தின் பெயர்;

(o) வழங்கல் சேருமிடம், வழங்கல் இடத்தை தவிர்த்த பிற இடமாக இருப்பின், வழங்கல் சேருமிடத்தின் முகவரி;

(p) எதிரிடை வரிவிதிப்பு அடிப்படையில் வரி செலுத்த வேண்டுமெனில் அதன் விவரம்; மற்றும்

(q) வழங்குநர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியின் கையொப்பம் அல்லது மின்னணு இலக்கமுறை கையொப்பம்:

வரம்புரை: ஆனால், ஆணையர், மன்றத்தின் பரிந்துரையின்படி, அறிக்கை மூலம் கீழ்க்கண்டவைகளை நிர்ணயிக்கலாம்–

(i) அறிவிக்கையில் குறிப்பிடப்படும் அவ்வகை காலத்திற்கு பதிவுபெற்ற நபர்களின் ஒரு பகுதியினர் பயன்படுத்திட தேவையான வகையில், சரக்குகளுக்கான HSN குயியீட்டு இலக்கங்களின் எண்ணிக்கை அல்லது சேவைகளுக்கான கணக்கீட்டு குறியீடு இவைகளின் நிர்ணயம்; மற்றும்

(ii) அறிவிக்கையில் குறிப்பிடப்படும் அவ்வகை காலத்திற்கு, சரக்குகளுக்கான HSN குறியீட்டு எண்ணையோ அல்லது சேவைகளுக்கான கணக்கீட்டு குறியீட்டினையோ, பயன்படுத்திட தேவையில்லாத, பதிவு பெற்ற நபர்களின் ஒரு பகுதியினரை நிர்ணயித்தல்:

மேலும் வரம்புரை: பிரிவு **31** உட்பிரிவு **(3)** கூறு (f)ன் படி 'விற்பனை பட்டியல்' வழங்கப்பட வேண்டிய இனங்களில், ஒரு பதிவு பெற்ற நபர் மாத இறுதியில் பிரிவு **9**ன் உட்பிரிவு **(4)**ன் கீழ் அடங்கும் வழங்கலுக்கு அனைத்து வழங்குநர் அல்லது ஏதாவது விவரங்களின் வழங்களின் மொத்த மதிப்பு ரூ.**5000**–ஐ தாண்டினால் ஒட்டுமொத்த விலைப்பட்டியல் வழங்கலாம்:

மேலும் வரம்புரை: சரக்குகள் மற்றும் சேவைகள் இவைகள் ஏற்றுமதியாகும் நேர்வுகளில், விலைப்பட்டியலில் கீழ்க்கண்ட ஒப்புகை குறிப்பு இனத்திற்கேற்ப இடம் பெற்றிருக்க வேண்டும்–

'ஒருங்கிணைந்த வரி செலுத்தப்பட்டதின் பேரில் ஏற்றுமதிக்கான வழங்கல்'

அல்லது

'ஒருங்கிணைந்த வரி செலுத்தப்படாமல், உறுதி ஆவணம் அல்லது ஒப்புகை உறுதி கடிதத்தின்பேரில் ஏற்றுமதிக்கான வழங்கல்', சூழ்நிலைக்கேற்ப,

மற்றும்

கூறு (e)ல் குறித்திட்ட விவரங்களுக்கு மாற்றாக கீழ்க்கண்ட விவரங்கள் விலைப்பட்டியலில் இடம்பெற்றிருக்க வேண்டும், அதாவது:–

(i) வழங்கலைப் பெறுபவரின் பெயர் மற்றும் முகவரி;

(ii) சரக்கு இறங்குமிட முகவரி; மற்றும்

(iii) வழங்கலைப் பெறும் நாட்டின் பெயர்:

மேலும் வரம்புரை: சட்டப்பிரிவு **31** உட்பிரிவு **(3)** கூறு (b)–ன் வரையறைகளின்படி, கீழ்க்கண்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, ஒரு பதிவு பெற்ற நபர், வரி விலைப்பட்டியல் வழங்க வேண்டியதில்லை, அதாவது:–

(a) வழங்கலைப் பெறுபவர் பதிவு பெற்ற நபராக இல்லாதிருக்கும் இனங்களில்; மற்றும்

(b) வழங்கலைப் பெறுபவர் அவ்வகை வரி விலைப் பட்டியலின் தேவை இல்லாதிருக்கும் இனங்கள் மற்றும் ஒவ்வொரு நாளின் முடிவிலும் அவ்வகையான வழங்கலுக்கான ஒருங்கிணைந்த வரி விலைப்பட்டியல் வழங்கப்பட வேண்டிய இனங்கள்.

**47. வரி விலைப்பட்டியல் வழங்குவதற்கான கால அளவு.–**
விதி **46**–ல் சுட்டப்பட்டுள்ள விலைப்பட்டியல், வரி விதிக்கத்தக்க சேவைகள் வழங்கல் தொடர்புடையதான இருப்பின், சேவைகள் வழங்கப்பட்ட நாளில் இருந்து **30** நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும்.

வரம்புரை: ஆனால், சேவைகள் வழங்குபவர், ஒரு காப்பீட்டாளராகவோ அல்லது ஒரு வங்கி நிறுவனமாகவோ அல்லது ஒரு வங்கிசார நிதி நிறுவனம் உட்பட ஒரு நிதி குழுமமாக இருக்குமானால், விலைப்பட்டியல் அல்லது அதற்கு மாற்றான எந்தவொரு ஆவணமும், சேவைகள் வழங்கப்பட்ட நாளில் இருந்து 45 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும்:

மேலும் வரம்புரை: ஒரு காப்பீட்டாளர் அல்லது ஒரு வங்கி நிறுவனம் அல்லது ஒரு வங்கிசார நிதி நிறுவனம் உட்பட ஒரு நிதி குழுமம் அல்லது ஒரு தொலைத்தொடர்பு அமைப்பாளர் அல்லது மன்றத்தின் பரிந்துரையின்படி அரசின் அறிவிக்கையில் குறிப்பிடப்படும் சேவைகள் வழங்குநரின் எந்த ஒரு பகுதியினர், இவர்களால், சட்டப் பிரிவு 25–ன் படி குறிப்பிடப்பட்ட தனித்துவ நபர்களுக்கு இடையில், செய்யப்படும், வரிவிதிக்கத்தக்க சேவைகள் வழங்கலுக்கான விலைப்பட்டியலை அவ்வகை வழங்குநர், அவ்வழங்களின் பதிவுகளை தமது கணக்குப் புத்தகங்களில் பதிவேற்றம் மேற்கொள்ளும் அந்த நாளிலோ அல்லது அதற்கு முன்பாகவோ அல்லது அவ்வழங்கல் செய்யப்பட்ட காலாண்டு முடிவதற்கு முன்பாகவோ வழங்கிட வேண்டும்.

**48. விலைப்பட்டியல் வழங்கப்படும் முறைகள்.–**

(1) சரக்குகள் வழங்கல் இனங்களில், விலைப்பட்டியல், கீழ்கண்ட முறைகளில், முப்படிகளில் தயார் செய்யப்பட வேண்டும், அதாவது:-

(a) முதன்மை நகலில் "பெறுபவருக்கான முதன்மை நகல்" என குறிக்கப்பட்டிருக்க வேண்டும்;

(b) இரண்டாம் நகலில் "எடுத்துச் செல்பவருக்கான இரண்டாம் படி " என குறிக்கப்பட்டிருக்க வேண்டும்;

(c) மூன்றாம் நகலில் "வழங்குபவருக்கான மூன்றாம் படி " என குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(2) சேவைகள் வழங்கல் இனங்களில், விலைப்பட்டியல், கீழ்கண்ட முறைகளில், இரட்டை படிவங்களில் தயார் செய்யப்பட வேண்டும், அதாவது:-

(a) முதன்மை நகலில், "பெறுபவருக்கான முதன்மை நகல்" என குறிக்கப்பட்டிருக்க வேண்டும்; மற்றும்

(b) இரண்டாம் நகலில் "வழங்குபவருக்கான இரண்டாம் படி " என குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(3) ஒரு வரிக்காலத்தில் வழங்கப்படும் விலைப்பட்டியல்களின் வரிசை எண், மின்னணு முறையில் பொது நுழைவாயில் (Common Portal) மூலம் படிவம் GSTR-1-ன் வழியாக தெரிவிக்கப்பட வேண்டும்.

**49. வழங்கலின் பட்டியல்**

சட்டப்பிரிவு 31 உட்பிரிவு (3) கூறு (c)–ல் சுட்டப்பட்டுள்ள வழங்கலின் பட்டியல், கீழ்கண்ட விவரங்களை உள்ளடக்கிய வகையில், வழங்குனரால் வழங்கப்பட வேண்டும்.

(a) வழங்குனரின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண் (GSTIN);

(b) ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வரிசையிலான 16 பாத்திர அமைப்புகளுக்கு மிகைப்படாத தொடர் வரிசை எண். அவ்வரிசை எண் ஒவ்வொரு நிதியாண்டினையும் தனித்துக் காட்டும் வகையில், எழுத்துக்கள் அல்லது எண்கள் அல்லது சிறப்பு குறியீடு அமைப்புகளான குறுகோடு அல்லது சிறு கோடு மற்றும் சாய்கோடு, "–" மற்றும் "/" போன்ற அடையாளங்கள் மற்றும் இவைகளின் எந்த ஒரு இணைந்த வடிவத்தை கொண்டதாக இருக்கும்;

(c) பட்டியல் வழங்கப்பட்ட நாள்;

(d) பெறுநரின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண்(GSTIN)அல்லது சிறப்பு அடையாள எண் UIN (பதிவு பெற்றிருப்பின்);

(e) சரக்குகளின் HSN குறியீடு அல்லது சேவைகளின் கணக்கீட்டு குறியீடு;

(f) சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவையிரண்டின் விவரங்கள்;

(g) தள்ளுபடி அல்லது கழிவு ஏதாவதிருப்பின் அவைகளை கணக்கில் எடுத்துக்கொண்ட நிலையில், சரக்கு அல்லது சேவை அல்லது இவையிரண்டின் வழங்கலுக்கான மதிப்பு;

(h) வழங்குநர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியின் கையொப்பம் அல்லது மின்னணு இலக்கமுறை கையொப்பம்:

வரம்புரை: ஆனால், விதி–46–ன் வரையறைகள், இவ்விதியின் கீழான வழங்கல் பட்டியலுக்கு, தேவையான மாற்றங்களுடன் முற்றாகப் பொருந்தும்.

மேலும் வரம்புரை: எந்த ஒரு வரி விலைப்பட்டியலும், அல்லது தற்போது நடைமுறையில் உள்ள எந்த ஒரு பிற சட்டங்களின் கீழ், வரியில்லா வழங்கலுக்காக கொடுக்கப்படும், எந்த ஒரு இணை ஆவணமும், இச்சட்டத்தின் நோக்கத்திற்காக, வழங்கல் பட்டியல் என்றே கருதப்படும்.

**50. வரவு சீட்டு,–**

சட்டப்பிரிவு 31 உட்பிரிவு (3) கூறு (d) –ல் சுட்டப்பட்டுள்ள வரவுச் சீட்டு கீழ்கண்ட விவரங்களை கொண்டதாக இருக்க வேண்டும், அதாவது:-

(a) வழங்குநரின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண் (GSTIN);

(b) ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வரிசையிலான 16 பாத்திர அமைப்புகளுக்கு மிகைப்படாத தொடர் வரிசை எண். அவ்வரிசை எண் ஒவ்வொரு நிதியாண்டினையும் தனித்துக் காட்டும் வகையில், எழுத்துக்கள் அல்லது எண்கள் அல்லது சிறப்பு குறியீடு அமைப்புகளான குறுகோடு அல்லது சிறு கோடு மற்றும் சாய்கோடு, “–” மற்றும் “/” போன்ற அடையாளங்கள் மற்றும் இவைகளின் எந்த ஒரு இணைந்த வடிவத்தை கொண்டதாக இருக்கும்;

(c) அவ்வரி விலைப்பட்டியல் வழங்கப்பட்ட நாள்;

(d) பெறுநரின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண்(GSTIN)அல்லது சிறப்பு அடையாள எண் UIN (பதிவு பெற்றிருப்பின்);

(e) சரக்குகள் மற்றும் சேவைகளின் விவரங்கள்;

(f) எடுக்கப்பட்ட முன் பணத்தொகை;

(g) வரி விகிதம் (மத்தியவரி, மாநில வரி, ஒருங்கிணைந்த வரி, யூனியன் பிரதேச வரி அல்லது மேல்வரி);

(h) வரிவிதிக்கத்தக்க சரக்கு மற்றும் சேவைகளின் மீது விதிக்கப்பட்ட வரித்தொகை (மத்தியவரி, மாநில வரி, ஒருங்கிணைந்த வரி, யூனியன் பிரதேச வரி அல்லது மேல்வரி);

(i) மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகம் தொடர்பான வழங்கலாக இருப்பின், வழங்கலின் இடம் மற்றும் அம்மாநிலத்தின் பெயர் மற்றும் குறியீட்டு எண்;

(j) எதிரிடை வரிவிதிப்பு அடிப்படையில் வரி செலுத்த வேண்டுமெனில் அதன் விவரம்; மற்றும்

(k) வழங்குநர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் கையொப்பம் அல்லது மின்னணு இலக்கமுறை கையொப்பம்:

வரம்புரை: ஆனால், முன்பணத்தொகை பெறப்படும் நேரத்தில்,–

(i) வரி விகிதம் தீர்மானிக்க இயலாத நிலையில், 18 சதவீதம் வரி செலுத்தப்பட வேண்டும்;
(ii) வழங்கலின் வகையினை தீர்மானிக்க இயலாத நிலையில், அது இடைமாநில வழங்கலாக கருதப்பட வேண்டும்.

**51. திருப்புத்தொகை சீட்டு.–**

சட்டப்பிரிவு 31 உட்பிரிவு (3) கூறு (e) –ல் சுட்டப்பட்டுள்ள திருப்புத்தொகைச் சீட்டு கீழ்கண்ட விவரங்களை கொண்டிருக்க வேண்டும், அதாவது:-

(a) பதிவுபெற்றிருப்பின் வழங்குநரின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண் (GSTIN);

(b) ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வரிசையிலான 16 பாத்திர அமைப்புகளுக்கு மிகைப்படாத தொடர் வரிசை எண். அவ்வரிசை எண் ஒவ்வொரு நிதியாண்டினையும் தனித்துக் காட்டும் வகையில், எழுத்துக்கள் அல்லது எண்கள் அல்லது சிறப்பு குறியீடு அமைப்புகளான குறுகோடு அல்லது சிறு கோடு மற்றும் சாய்கோடு, ‘‘–’’ மற்றும் ‘‘/’’ போன்ற அடையாளங்கள் மற்றும் இவைகளின் எந்த ஒரு இணைந்த வடிவத்தை கொண்டதாக இருக்கும்;

(c) திருப்புத்தொகை சீட்டு வழங்கப்பட்ட நாள்;

(d) பெறுநரின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண்(GSTIN)அல்லது சிறப்பு அடையாள எண் UIN (பதிவு பெற்றிருப்பின்);

(e) விதி (50)–ன் வரையரைகளின்படி வழங்கப்பட்ட வரவுச் சீட்டின் வரிசை எண் மற்றும் நாள்;

(f) திருப்புத்தொகை வழங்கல் சம்பந்தப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகளின் விவரங்கள்;

(g) வழங்கப்பட்ட திருப்புத்தொகை;

(h) வரி விகிதம் (மத்தியவரி, மாநில வரி, ஒருங்கிணைந்த வரி, யூனியன் பிரதேச வரி அல்லது மேல்வரி );

(i) அவ்வகை சரக்குகள் அல்லது சேவைகள் தொடர்பாக செலுத்தப்பட்ட வரித்தொகை (மத்திய வரி, மாநில வரி, ஒருங்கிணைந்தவரி, யூனியன் பிரதேச வரி அல்லது மேல்வரி);

(j) எதிரிடை வரிவிதிப்பு அடிப்படையில் வரி செலுத்த வேண்டுமெனில் அதன் விவரம்; மற்றும்

(k) வழங்குநர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் கையொப்பம் அல்லது மின்னணு இலக்கமுறை கையொப்பம்.

**52. செலுத்துச்சீட்டு.–**

பிரிவு 31 உட்பிரிவு (3) கூறு (g)–ல் சுட்டப்பட்டுள்ள செலுத்துச்சீட்டு என்பது கீழ்கண்ட விவரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும், அதாவது:-

(a) பதிவுபெற்றிருப்பின் வழங்குநரின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண் (GSTIN);

(b) ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வரிசையிலான 16 பாத்திர அமைப்புகளுக்கு மிகைப்படாத தொடர் வரிசை எண். அவ்வரிசை எண் ஒவ்வொரு நிதியாண்டினையும் தனித்துக் காட்டும் வகையில், எழுத்துக்கள் அல்லது எண்கள் அல்லது சிறப்பு குறியீடு அமைப்புகளான குறுகோடு அல்லது சிறு கோடு மற்றும் சாய்கோடு, ‘‘–’’ மற்றும் ‘‘/’’ போன்ற அடையாளங்கள் மற்றும் இவைகளின் எந்த ஒரு இணைந்த வடிவத்தை கொண்டதாக இருக்கும்;

(c) செலுத்துச்சீட்டு வழங்கப்பட்ட நாள்;

(d) பெறுநரின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண்(GSTIN);

(e) சரக்குகள் மற்றும் சேவைகள் குறித்த விவரங்கள்;

(f) செலுத்தப்பட்ட தொகை;

(g) வரி விகிதம் (மத்தியவரி, மாநில வரி, ஒருங்கிணைந்த வரி, யூனியன் பிரதேச வரி அல்லது மேல்வரி );

(h) வரிவிதிக்கத்தக்க சரக்குகள் அல்லது சேவைகள் தொடர்பாக செலுத்ததப்பட வேண்டிய வரித்தொகை (மத்தியவரி, மாநில வரி, ஒருங்கிணைந்த வரி, யூனியன் பிரதேச வரி அல்லது மேல்வரி );

(i) மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகம் தொடர்பான வழங்கலாக இருப்பின், வழங்கலின் இடம் மற்றும் அம்மாநிலத்தின் பெயர் மற்றும் குறியீட்டு எண்;

(j) வழங்குநர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் கையொப்பம் அல்லது மின்னணு இலக்கமுறை கையொப்பம்.

**53. திருத்தப்பட்ட வரி விலைப்பட்டியல் மற்றும் வரவு அல்லது பற்று சீட்டு.–**

(1) சட்டப்பிரிவு 31–ல் சுட்டப்பட்ட திருத்தப்பட்ட வரிவிலைப்பட்டியல், சட்டப்பிரிவு 34–ல் சுட்டப்பட்ட வரவு அல்லது பற்று சீட்டு – கீழ்க்கண்ட விவரங்களை கொண்டதாக இருக்க வேண்டும், அதாவது:-

(a) பொருந்துகிறவிடத்து ‘‘திருத்திய வரிவிலைப்பட்டியல்’’ என்ற வார்த்தை முதன்மையான வகையில் சுட்டப்பட்டிருக்க வேண்டும்;

(b) வழங்குநரின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண் (GSTIN);

(c) ஆவணத்தின் தன்மை;

(d) ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வரிசையிலான 16 பாத்திர அமைப்புகளுக்கு மிகைப்படாத தொடர் வரிசை எண். அவ்வரிசை எண் ஒவ்வொரு நிதியாண்டினையும் தனித்துக் காட்டும் வகையில், எழுத்துக்கள் அல்லது எண்கள் அல்லது சிறப்பு குறியீடு அமைப்புகளான குறுகோடு அல்லது சிறு கோடு மற்றும் சாய்கோடு, ‘‘–’’ மற்றும் ‘‘/’’ போன்ற அடையாளங்கள் மற்றும் இவைகளின் எந்த ஒரு இணைந்த வடிவத்தை கொண்டதாக இருக்கும்;

(e) ஆவணம் அளிக்கப்பட்ட நாள்;

(f) பெறுநரின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண்(GSTIN)அல்லது சிறப்பு அடையாள எண் UIN (பதிவு பெற்றிருப்பின்);

(g) பெறுநரின் பெயர் மற்றும் முகவரி மற்றும் பெறுநர் பதிவுபெறாதவராக இருப்பின் வழங்குமிட முகவரியுடன் மாநிலத்தின் பெயர் மற்றும் மாநில குறியீட்டு எண்;

(h) சம்பந்தப்பட்ட வரி விலைப்பட்டியல் அல்லது நேர்வுகளுக்கிணங்கியவாறு, வழங்கலின் பட்டியலின் வரிசை எண் மற்றும் தேதி;

(i) சரக்குகள் அல்லது சேவைகளின் வரி விதிக்கத்தக்க வழங்கலின் மதிப்பு, வரிவிகிதம், மற்றும் பெறுநருக்கு வரவு வைக்கப்பட்ட வரித்தொகை அல்லது நேர்வுகளுக்கிணங்கியவாறு பற்று வைக்கப்பட்ட வரித்தொகை;

(j) வழங்குநர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் கையொப்பம் அல்லது மின்னணு இலக்கமுறை கையொப்பம்.

(2) ஒரு பதிவுபெற்ற நபருக்கு வழங்கப்பட்டிருக்கும் பதிவுச்சான்றின் பயன்பாடு அமலுக்கு வரும் தேதி, அச்சான்று வழங்கப்பட்ட தேதிக்கு முந்தைய தேதியாக இருக்குமானால் அத்தகைய பதிவு பெற்ற நபர் சான்றிதழின் அமலாக்க தேதியில் இருந்து சான்றிதழ் வழங்கப்பட்ட நாள் வரையில் மேற்கொள்ளப்பட்ட வரிவிதிக்கத்தக்க வழங்கலுக்கு திருத்திய வரிவிலைப்பட்டியல் வழங்கலாம்:

வரம்புரை:– ஆனால், வழங்கலைப் பெறுபவர் அத்தகைய வழங்கல் காலத்தில் பதிவு பெறாத நபராக இருப்பாரேயானால் அத்தகைய பெறுநருக்கு வழங்கப்பட்ட அனைத்து வரி விதிக்கத்தக்க வழங்கலுக்கும் பதிவுபெற்ற நபர் ஒட்டுமொத்தமாக ஒரே ஒரு ஒருங்கிணைந்த திருத்திய வரி விலைப்பட்டியல் வழங்கலாம்:

மேலும் வரம்புரை:– இடைமாநில வழங்கல் இனங்களில், வழங்கலை பெறுபவர் பதிவு பெறாத நபராக இருக்கும் நிலையில், வழங்கலின் மதிப்பு இரண்டரை லட்சம் ரூபாய்க்கு மிகையாகாத நேர்வுகளில், ஒரு மாநிலத்தில் இருக்கும் அவ்வகை வழங்கலை பெறுநர்கள் அனைவரின் தொடர்புடைய அனைத்து வழங்கலுக்கும் ஒரே ஒரு ஒருங்கிணைந்த திருத்திய வரி விலைப்பட்டியலை பதிவு பெற்ற நபர் வழங்கலாம்.

(3) சட்டப்பிரிவு 74 அல்லது 129 அல்லது 130ன் வரையறைகளின்படி வரி செலுத்த வேண்டிய இனங்களுக்கு வழங்கப்படும் எந்தஒரு விலைப்பட்டியல் அல்லது பற்றுச்சீட்டு இவைகளில் ‘‘உள்ளீட்டு வரி வரவிற்கு அனுமதியில்லை’’ என்ற வார்த்தை பிரதானமானதாக குறிக்கப்பட வேண்டும்.

**54. சிறப்பு இனங்களில் வரிவிலைப்பட்டியல்.-**

(1) ஒரு உள்ளீட்டு சேவை விநியோகஸ்தரால் வழங்கப்படும் ஒரு உள்ளீட்டு சேவை விநியோக விலைப்பட்டியல் அல்லது, நேர்வுகளுக்கிணங்க ஒரு உள்ளீட்டு சேவை விநியோக வரவுச் சீட்டு ஆகியவைகள் கீழ்க்கண்ட விவரங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்:–

(a) உள்ளீட்டு சேவை பகிர்வாளரின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண் (GSTIN);

(b) ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வரிசையிலான 16 பாத்திர அமைப்புகளுக்கு மிகைப்படாத தொடர் வரிசை எண். அவ்வரிசை எண் ஒவ்வொரு நிதியாண்டினையும் தனித்துக் காட்டும் வகையில், எழுத்துக்கள் அல்லது எண்கள் அல்லது சிறப்பு குறியீடு அமைப்புகளான குறுகோடு அல்லது சிறு கோடு மற்றும் சாய்கோடு, ‘‘–’’ மற்றும் ‘‘/’’ போன்ற அடையாளங்கள் மற்றும் இவைகளின் எந்த ஒரு இணைந்த வடிவத்தை கொண்டதாக இருக்கும்;

(c) வழங்கப்பட்ட நாள்;

(d) வரவு பகிர்மானத்தை யார் பெறுகிறார்களோ, அப்பெறுநரின் பெயர், முகவரி மற்றும் அவரது பதிவு எண் (GSTIN);

(e) பகிர்ந்தளிக்கப்பட்ட வரவின் தொகை; மற்றும்

(f) உள்ளீட்டு சேவை விநியோகஸ்தரின் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் கையொப்பம் அல்லது மின்னணு இலக்கமுறை கையொப்பம்:

வரம்புரை: ஆனால், உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர் ஒரு வங்கி நிறுவன அலுவலகமாகவோ அல்லது நிதி நிறுவனமாகவோ அல்லது ஒரு வங்கிசாரா நிதி நிறுவனம் உள்ளிட்ட ஒரு நிதிக் குழுமமாகவோ இருப்பாரேயானால், ஒரு வரிவிலைப்பட்டியல் என்பது, அதற்கு மாற்றாக வழங்கப்படும், எந்த ஒரு ஆவணத்தையும் அது எப்பெயரில் அழைக்கப்பட்டாலும், வரிசை எண் வழங்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், மேலே வகுத்துரைக்கப்பட்ட விவரங்களை கொண்டிருக்குமானால், அவ்வாவணத்தையும் உள்ளடக்கியதாகும்.

(2) வரி விதிக்கத்தக்க சேவையை வழங்குபவர் ஒரு காப்பீட்டாளராகவோ அல்லது ஒரு வங்கி நிறுவனமாகவோ அல்லது நிதி நிறுவனமாகவோ அல்லது ஒரு வங்கிசாரா நிதி நிறுவனம் உள்ளிட்ட ஒரு நிதிக் குழுமமாகவோ இருந்தால், சம்பந்தப்பட்ட வழங்குநர் ஒரு வரி விலைப்பட்டியலை அல்லது அவ்வரி விலைப்பட்டியலுக்கு மாற்றாக எந்தஒரு பிற ஆவணத்தை, அவை எப்பெயரிட்டு அழைக்கப்பட்டாலும், மனித தொடர்பாகவோ அல்லது மின்னணு அஞ்சலாகவோ வழங்கவேண்டும் அல்லது கிடைக்கப்பெற செய்யவேண்டும். அவ்வகையான மாற்று ஆவணம் வரிசை எண் வழங்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், வரி விதிக்கத்தக்க சேவையை பெறுபவரின் முகவரியை கொண்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் விதி 46–ன் கீழ் குறிக்கப்பட்ட பிற விவரங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

(3) வரி விதிக்கத்தக்க சேவையை வழங்கும் வழங்குநர், சரக்குகளை வாகனங்களின் மூலம் தரைவழியாக இடம் பெயர்த்துதல் தொடர்புடைய சேவைகளை வழங்கும் ஒரு சரக்குகள் போக்குவரத்து முகவரமைப்பாக இருப்பாரேயானால், சொல்லப்பட்ட வழங்குநர், ஒரு வரி விலைப்பட்டியல் அல்லது அதற்கு மாற்றாக ஏதாவது ஒரு ஆவணம் அது எப்பெயரிட்டு அழைக்கப்பட்டாலும், வழங்க வேண்டும்.

அம்மாற்று ஆவணம், அனுப்பப்படும் சரக்கின் மொத்த எடை, சரக்கு அனுப்புபவர் மற்றும் பெறுநரின் பெயர், சரக்குகளை இடம் பெயர்த்தும் சரக்கு வாகனத்தின் பதிவு எண், இடம் பெயர்த்தப்படும் சரக்குகளின் விவரங்கள், மூல இடம் மற்றும் முடிவிடத்தின் விவரங்கள், வரிச் செலுத்த கடப்பாடுடைய நபர் அவர் சரக்கு அனுப்புபவராகவோ, சரக்கினை பெறுபவராகவோ அல்லது சரக்குகளை இடம் பெயர்த்தும் முகவரமைப்பாகவோ இருந்தாலும், அவரின் பதிவு எண் (GSTIN) மற்றும் விதி 46–ல் வகுத்துரைக்கப்பட்ட விவரங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

(4) பயணிகள் போக்குவரத்து சேவையை வழங்குகின்ற வரிவிதிக்கத்தக்க சேவை வழங்குனரால் வழங்கப்படும் வரிவிலைப் பட்டியல் என்பது, எவ்வகை படிவமானாலும், எவ்வாறான பெயரில் அழைக்கப்பட்டாலும், வரிசை எண் இடப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், சேவை பெறுபவரின் முகவரி இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஆனால் விதி 46–ல் வகுத்துரைக்கப்பட்ட பிற விவரங்கள் அடங்கியதாக இருக்கும் பயணச்சீட்டினையும் உள்ளடக்கியதாகும்.

(5) துணை விதி (2) அல்லது துணைவிதி (4)ன் வரையறைகள், விதி –49 அல்லது விதி 50 அல்லது விதி 51 அல்லது விதி 52 அல்லது விதி 53–ன் கீழ் வழங்கப்படும் ஆவணங்களுக்கு தேவையான மாற்றங்களுடன் முற்றாகப் பொறுந்தும்.

**55. விலைப்பட்டியல் வழங்கப்படாத சரக்குகளின் இடம் பெயர்வு.-**

(1) (a) ‘‘நீர்மநிலை வாயு’’—வின் வழங்கலில், அதனை வழங்குநரின் வணிக இடத்தில் இருந்து இடம் பெயர்வுக்காக அகற்றப்படும்போது, அதன் அளவீட்டினை அறிந்து கொள்ள இயலாத நேர்வு,

(b) கூலி தொழில் மேற்கொள்ளும் பொருட்டு, சரக்குகளின் இடம்பெயர்வு,

(c) வழங்கலைத் தவிர்த்து பிற காரணங்களுக்காக சரக்குகளின் இடம்பெயர்வு, அல்லது

(d) ஆணையரால் அறிவிக்கை செய்யப்படும் அவ்வகையான இதர வழங்கல்கள்,

ஆகியவைகளின் நோக்கங்களுக்காக, சரக்குகளை அனுப்புபவர், இடம் பெயர்வுக்காக சரக்குகளை அகற்றும் போது, வரிவிலைப் பட்டியலுக்கு மாற்றாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வரிசைகளில் 16 இலக்க தொடர் வரிசை எண் கொண்ட கீழ்க்கண்ட விவரங்களை உள்ளடக்கிய ஒரு ஒப்படைவு செலுத்துச் சீட்டினை வழங்கலாம், அதாவது:-

(i) ஒப்படைவு செலுத்துச் சீட்டின் வரிசை எண் மற்றும் தேதி;
(ii) சரக்கனுப்புபவர் பதிவு பெற்றவராயிருப்பின் பெயர், முகவரி மற்றும் பதிவு எண் (GSTIN);
(iii) சரக்கு பெறுபவர் பதிவு பெற்றவராயிருப்பின் பெயர், முகவரி, மற்றும் பதிவு எண் (GSTIN) அல்லது சிறப்பு அடையாள எண் (UIN);
(iv) சரக்குகளின் விவரம் மற்றும் HSN குறியீட்டெண்;
(v) அளவீடு (வழங்கலின் சரியான அளவீடு தெரியாத இனங்களில் உத்தேச அளவீடு);
(vi) வரிவிதிப்பிற்கான மதிப்பீடு;
(vii) சரக்கினைப்பெறுபவருக்கான வழங்கலுக்காக சரக்குகளின் இடம் பெயர்வு இனங்களில் வரி விகிதம் மற்றும் வரித் தொகை – மத்திய வரி, மாநில வரி, ஒருங்கிணைந்த வரி, யூனியன் பிரதேச வரி அல்லது மேல் வரி;
(viii) இடைமாநில நகர்வு இனங்களில் வழங்கலின் இடம்; மற்றும்
(ix) கையொப்பம்.

(2) சரக்குகளின் வழங்கல் இனங்களில், ஒப்படைவு செலுத்துச் சீட்டு முப்படிகளில் கீழ்க்கண்ட முறைகளில் தயார் செய்யப்பட வேண்டும், அதாவது:-

(a) முதன்மை படியில் ‘‘சரக்கு பெறுபவருக்கான முதல்படி’’ என குறிக்கப்பட்டிருக்க வேண்டும்;
(b) இரண்டாம் படியில் ‘‘இடம் பெயர்த்துநருக்கான இரண்டாம்படி’’ என குறிக்கப்பட்டிருக்க வேண்டும்; மற்றும்
(c) மூன்றாம் படியில் ‘‘சரக்கினை அனுப்புவருக்கான மூன்றாம்படி’’.

(3) விலைப்பட்டியலுக்கு மாற்றாக ஒப்படைவு செலுத்துச்சீட்டின் வாயிலாக சரக்குகள் இடம் பெயர்த்தப்படும் இனங்களில் அதனை விதி 138ல் குறிக்கப்பட்டவாறு அறிவிக்கப்பட வேண்டும்.

(4) பெறுநருக்கு வழங்கும் நோக்கத்திற்காக சரக்குகள் இடம் பெயர்த்தப்படும் இனங்களில் வழங்கல் நோக்கத்திற்காக சரக்குகள் அகற்றப்படும் பொழுது, வரிவிலைப்பட்டியல் வழங்க இயலாத நிலையில், வழங்குநர் சரக்குகளின் ஒப்படைவுக்குப் பின்பு வரிவிலைப்பட்டியலை வழங்க வேண்டும்.

(5) முழுவதுமாக பிரிக்கப்பட்ட அல்லது பகுதி பிரிக்கப்பட்ட நிலையிலான சரக்குகளின் இடம்பெயர்வு நேர்வுகளில்-

(a) வழங்குநர், சரக்குகளின் முதல் தொகுப்பு அனுப்புகைக்கு முன்னதாகவே, முழுமையான விலைப்பட்டியலை வழங்க வேண்டும்;

(b) வழங்குநர் சரக்குகளின் ஒவ்வொரு தொடர் அனுப்புகையின் போதும் விலைப்பட்டியலின் விவரக்குறிப்புகள் அடங்கிய ஒப்படைவு செலுத்துச் சீட்டினை வழங்க வேண்டும்;

(c) அனுப்பப்படும் சரக்கு தொகுப்பு ஒவ்வொன்றும் சம்பந்தப்பட்ட ஒப்படைவு செலுத்துச் சீட்டின் நகலுடன் முறையாக சான்றளிக்கப்பட்ட விலைப்பட்டியலின் நகலையும் இணைத்தனுப்ப வேண்டும்;

(d) விலைப்பட்டியலின் முதன்மை நகலினை இறுதியான சரக்கு தொகுப்பு அனுப்புகையோடு இணைத்தனுப்ப வேண்டும்.

## அத்தியாயம் VII
## கணக்குகளும் பிற பதிவுருக்களும்

**56. பதிவு பெற்ற நபரால் பேணி வரவேண்டிய கணக்குகள்.-**

(1) ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும், 35 பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள விவரங்களோடு கூட, இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகளுக்கான அல்லது எதிரிடை கட்டணமாக வரி செலுத்தக்கூடிய வழங்குகைக்கான ஓர் உண்மையானதும் மற்றும் சரியானதுமான கணக்கினை தகுந்த ஆவணங்களுடன், விலைப்பட்டியல் உள்ளடக்கிய, வழங்குகை பட்டியல், ஒப்படைப்பு சீட்டு வரவுக் குறிப்பு, பற்றுக் குறிப்பு, வரவுப் பற்றுச் சீட்டு, செலவு பற்றுச் சீட்டு மற்றும் திருப்பு கொடுப்புகை சீட்டு ஆகியவைகள் வைத்து வருதலும் பேணி வருதலும் வேண்டும்.

(2) ஒவ்வொரு பதிவுபெற்ற நபரும், பிரிவு 10–ன் கீழ் வரி செலுத்தும் நபர்கள் நீங்கலாக, அவரால் பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட ஒவ்வொரு பொருளுக்கும் சரக்கு இருப்பிற்கான கணக்கினை பேணி வருதல் வேண்டும். அந்த கணக்கு ஆரம்ப இருப்பு பெறுதல், வழங்குதல், சரக்கு இழந்தது, திருடு போனது, அழிந்தது, கழித்து கட்டியது அல்லது பரிசு அல்லது இலவச மாதிரியாக முடிவு கட்டியது மற்றும் சரக்கு இருப்பின் மீதம். இதில் மூலப் பொருள்கள், ஆக்கப்பெற்ற பொருள்கள், கழிவுப் பொருள் மற்றும் பாழானவை உள்ளடக்கியதாகும்.

(3) ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும், முன்பணம் பெறப்பட்டது, செலுத்தப்பட்டது மற்றும் சரிகட்டப்பட்டது ஆகியவைகளுக்கு ஒரு தனி கணக்கினை வைத்து வருதலும் பேணி வருதலும் வேண்டும்.

(4) ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும், பிரிவு 10–ன் கீழ் வரி செலுத்தும் நபர் நீங்களாக, வரி செலுத்தக்கூடிய (இச்சட்டத்தின் 9–ஆம் பிரிவின் உட்பிரிவு (3) மற்றும் (4) –ற்கிணங்க வரி செலுத்தக்கூடியவைகள் உள்ளடக்கிய), வரி வசூலித்த மற்றும் செலுத்திய, உள்ளீட்டு வரி, உள்ளீட்டு வரி வரவு கோரியது ஆகிய விவரங்களுடன் வரி விலைப்பட்டியல், வரவு குறிப்பு, பற்று குறிப்பு, ஒப்படைப்பு சீட்டு ஏதாவது வரி காலத்திற்கு கொடுக்கப்பட்டது அல்லது பெறப்பட்டவைகளுக்கான பதிவேட்டுடன் ஒரு கணக்கினை வைத்து வருதலும் பேணி வருதலும் வேண்டும்.

(5) ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும்–

(a) எவரிடமிருந்து சரக்குகள் அல்லது சேவைகளை அவர் பெற்றாரோ அவ்வழங்குநரின் பெயர் மற்றும் முழு முகவரி;

(b) எவருக்கு சரக்குகள் அல்லது சேவைகளை அவர் வழங்கினாரோ அந்நபரின் பெயர் மற்றும் முழு முகவரி; இந்த அத்தியாயத்தின் வரையரைகளின் கீழ் வேண்டுறுத்தும் இடங்களில்,

(c) அவரால் சரக்குகள் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் வளாகத்தின் முழு முகவரி. இது போக்குவரத்தின் போது சரக்குகள் சேமிக்கப்பட்டதும் அதன் சரக்கு இருப்பு உள்ளடக்கிய விவரங்களை வைத்திருத்தல் வேண்டும்.

(6) துணை விதி (5)–ல் அறிவித்த இடங்களை தவிர வேறு இடங்களில் வரிவிதிக்கத்தக்க சரக்குகள் ஏதும் செல்லத்தக்க ஆவணங்கள் ஏதும் இல்லாமல் சேமித்து வைக்கப்பட்டது

கண்டுபிடிக்கப்பட்டால், உரிய அலுவலர், அவ்வாறான சரக்குகள், பதிவு பெற்ற நபரால் வழங்கப்பட்டதாக கருதி அச்சரக்குகள் மீது வரி செலுத்தக்கூடிய தொகையினை நிர்ணயிக்கலாம்.

(7) ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும், அவருடைய பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான வணிக இடத்திலும் மற்றும் ஒவ்வொரு கூடுதல் வணிக இடங்களிலும் தொடர்புள்ள கணக்கு புத்தகங்களை வைத்து வருதல் வேண்டும். அவ்வாறான கணக்கு புத்தகம், ஏதேனும் மின்னணு கருவியில் சேமிக்கப்பட்ட மின்னணு வடிவிலான விவரக் குறிப்பினையும் உள்ளடக்கும்.

(8) பதிவேடுகளில், கணக்குகளில் மற்றும் ஆவணங்களிலுள்ள பதிவுகள் எதையும் அழிக்கவோ, மறைக்கவோ அல்லது மேலெழுதவோ கூடாது மற்றும் அனைத்து தவறான பதிவுகளும் கோடிடப்பட்டு சான்றொப்பமிடப்பட்டு அதன்பிறகு சரியான பதிவு பதியப்பட வேண்டும். பதிவேடுகளையும் மற்றும் பிற ஆவணங்களையும் மின்னணுவில் பேணப்பட்டிருக்கும் நேர்வில், திருத்தப்பட்ட அல்லது நீக்கப்பட்ட ஒவ்வொரு பதிவிற்கும், ஒரு பதில் பதிவினை பேணி வருதல் வேண்டும்.

(9) பதிவு பெற்ற நபரால் கைமுறையால் பேணப்படும் கணக்கு புத்தகத்தின் ஒவ்வொரு தொகுதியும் தொடர் வரிசை எண் கொண்டதாக இருக்க வேண்டும்.

(10) இல்லையென்று நிரூபிக்கப்படும் வரை பதிவு பெற்ற நபருக்கு சொந்தமான ஏதாவது ஆவணங்கள், பதிவேடுகள் அல்லது ஏதாவது கணக்கு புத்தகங்கள் பதிவு சான்றிதழில் குறிப்பிடப்பட்ட இடங்களை தவிர பிற இடங்களில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவைகள் பதிவு பெற்ற நபரால் பேணப்பட்டவையாக யூகிக்கப்படும்.

(11) இச்சட்டத்தின் பிரிவு 2—ன் கூறு (5)—ல் சுட்டப்பட்டுள்ள ஒவ்வொரு முகவரமைப்பும் கணக்குகளை பின்வருவனவற்றை சித்தரிக்கும் வகையில் பேண வேண்டும்.

(a) முதன்மையானவர் சார்பாக சரக்குகள் அல்லது சேவைகள் பெறுவதற்கும் அல்லது வழங்குவதற்கும் ஒவ்வொரு முதன்மையானவரிடமிருந்தும் பெறப்பட்ட அதிகாரமளிக்கும் விவரங்களை தனித்தனியாக;

(b) ஒவ்வொரு முதன்மையானவரின் சார்பில் பெறப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகளின் விளக்கம், மதிப்பு மற்றும் அளவு (பொருந்தக்கூடிய இடத்தெல்லாம்) உள்ளடக்கிய விவரங்கள்;

(c) ஒவ்வொரு முதன்மையானவரின் சார்பில் அனுப்பப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகளின் விளக்கம், மதிப்பு மற்றும் அளவு (பொருந்தக்கூடிய இடத்தெல்லாம்) உள்ளடக்கிய விவரங்கள்;

(d) ஒவ்வொரு முதன்மையானவருக்கும் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் விவரங்கள்; மற்றும்

(e) ஒவ்வொரு முதன்மையானவரின் சார்பாக மேற்கொள்ளப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகள் வழங்குகை மீது அல்லது பெறுதலின் மீது செலுத்தப்பட்ட வரி.

(12) சரக்குகளை உற்பத்தி செய்யும் ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும், மாதாந்திர உற்பத்தி கணக்கினை, உற்பத்தியில் பயன்படுத்திய மூலப் பொருள்களின் அளவு திறன் விவரங்கள் அல்லது சேவைகள் மற்றும் அதன் கழிவு அல்லது துணை பொருள்கள் உள்ளடக்கிய அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளின் அளவு திறன் விவரங்கள் காண்பிக்கும் வகையில் மாதாந்திர உற்பத்தி கணக்கினை பேண வேண்டும்.

(13) சேவைகளை வழங்கும் ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும், ஒவ்வொரு சேவை வழங்குதலில் பயன்படுத்தப்பட்ட சரக்குகளின் அளவு திறன் விவரங்கள், பயன்படுத்தப்பட்ட சேவைகளின் உள்ளீடு விவரங்கள் மற்றும் சேவைகள் வழங்கப்பட்டதை காண்பிக்கும் வகையில் கணக்கினை பேண வேண்டும்.

(14) பணி ஒப்பந்தம் நிறைவேற்றும் ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும் ஒவ்வொரு பணி ஒப்பந்தத்திற்கும் தனித்தனி கணக்குகளை பின்வரும் விவரங்கள் காண்பிக்கும் வகையில் வைத்திருக்க வேண்டும்—

(a) பணி ஒப்பந்தம் எவரின் சார்பாக நிறைவேற்றப்பட்டதோ அவரின் பெயர் மற்றும் முகவரி;

(b) பணி ஒப்பந்தம் நிறைவேற்றுவதற்காக பெறப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகளின் விளக்கம், மதிப்பு மற்றும் அளவு (பொருந்தக்கூடிய இடத்தெல்லாம்);

(c) ஒவ்வொரு பணி ஒப்பந்தம் நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகளின் விளக்கம், மதிப்பு மற்றும் அளவு (பொருந்தக்கூடிய இடத்தெல்லாம்);

(d) ஒவ்வொரு பணி ஒப்பந்தத்திற்கும் பெறப்பட்ட செலுத்துகை விவரங்கள்; மற்றும்

(e) எந்த வழங்குநரிடமிருந்து அவர் சரக்குகள் அல்லது சேவைகள் பெற்றாரோ அவரின் பெயர் மற்றும் முகவரி.

(15) இந்த அத்தியாயத்தின்விதிகளின் படி பதிவுகள் மின்னணு வடிவத்தில் பேணப்பட வேண்டும் மற்றும் அவ்வாறு பேணப்பட்ட பதிவுகள் இலக்க முறை ஒப்பம் மூலம் உண்மையென சான்றுரைக்கப்பட வேண்டும்.

(16) பதிவு பெற்ற நபரால் பேணப்பட்ட கணக்குகளுடன் சேர்ந்து அனைத்து விலைப்பட்டியல், வழங்குகைக்கான பட்டியல், வரவு மற்றும் பற்று குறிப்பு மற்றும் சரக்கு இருப்பு, ஒப்படைப்புகள், உட்புற வழங்கல் மற்றும் வெளிநோக்கி வழங்கல் தொடர்பான ஒப்படைப்பு சீட்டு ஆகியவைகள் இச்சட்டத்தின் 36–ஆம் பிரிவில் வகுத்துரைக்கப்பட்ட காலத்திற்கு பாதுகாக்கப்பட வேண்டும் மற்றும் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய ஒவ்வொரு வணிக இடத்திலும் வைக்கப்பட வேண்டும்.

(17) எந்த ஒரு பதிவு பெற்ற நபரின் சார்பாக பெறுநருக்கு அனுப்ப வேண்டி அல்லது ஒப்படைக்க வேண்டி சரக்கேற்றுபவர் அல்லது தீர்வு மற்றும் அனுப்புகை முகவர் என்ற திறனிலுள்ள எந்த ஒரு நபரின் காப்பிலுள்ள சரக்குகளுக்கு, அவ்வாறான பதிவு பெற்ற நபரின் சார்பாக கையாளப்படும் அவ்வாறான சரக்குகளுக்கு உண்மையானதொரு மற்றும் சரியானதொரு பதிவுகளை பேண வேண்டும் மற்றும் உரிய அலுவலர் வேண்டுறுத்தும் பொழுது அதன் விவரங்களை தாக்கல் செய்ய வேண்டும்.

(18) ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும், நடைமுறையிலுள்ள எந்த சட்டத்தின் படியும், அவரால் பேணுவதற்கு வேண்டுறுத்தும் கணக்கு புத்தகங்களை, கேட்கும் போது தாக்கல் செய்யப்பட வேண்டும்.

**57. மின்னணு பதிவுகள் உண்டாக்குதல் மற்றும் பராமரித்தல்:-**

(1) சரியான மின்னணு பதில் பதிவுகள் உரிய முறையில் பேணப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். அதனால், விபத்து அல்லது இயற்கை காரணங்கள் காரணமாக பதிவுகள் அழிக்கப்பட்டால், தகவல்களை நியாயமான கால அளவிற்குள் புதிதாக்க முடியும்.

(2) மின்னணு பதிவுகள் பேணும் பதிவு பெற்ற நபர், தகுந்த பதிவுகள் அல்லது ஆவணங்களை, அவரால் உண்மையென சான்றுரைக்கப்பட்டு, கடின நகலாகவோ அல்லது வேறு மின்னணு வாயிலாக படிக்கக்கூடிய படிவத்திலோ, கேட்கும் போது அளிக்க வேண்டும்.

(3) பதிவு பெற்ற நபர், தணிக்கை விசாரணையின் கணக்கு மற்றும் மூல ஆவணங்களை உள்ளடக்கிய இடை இணைப்புகள், காகிதமாகவோ அல்லது மின்னணுவிலோ மற்றும் நிதி கணக்குகள், பதிவுருக்கள் பிரிவு, தரவு அகராதி மற்றும் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளுக்கான விளக்கங்கள் மற்றும் ஒவ்வொரு துறையிலுள்ள மொத்த பதிவுகளின் எண்ணிக்கையுடன் ஆவண நகல்களின் மாதிரியுடன் கேட்கும் போது அளிக்க வேண்டும்.

**58. சரக்குகளை சேகரித்து வைப்பதற்காகப் பயன்படும் பண்டகசாலை அல்லது கிடங்கு மற்றும் ஏற்றிச் செல்பவர் எதனின் உரிமையாளர் அல்லது இயக்குபவர் பேணிவரப்பட வேண்டிய பதிவுகள்**

(1) 35–ஆம் பிரிவின் உட்பிரிவு (2)–ன் ஏற்பாடுகளுக்கிணங்க, ஒவ்வொரு நபரும் வேண்டுறுத்திய பதிவுகள் மற்றும் கணக்குகளை பேணி வர வேண்டும். இச்சட்டத்தின்படி ஏற்கனவே பதிவு பெறவில்லை எனில், அவருடைய வணிகம் தொடர்பான விவரங்களை பொது நுழைவாயில் மின்னணு மூலம் GST ENR–01 படிவத்தை நேரிடையாகவோ அல்லது

ஆணையரால் அறிவிக்கை செய்யப்படும் வசதி மையம் மூலமாக சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்கள் சரிபார்க்கப்பட்ட பின், ஒரு தனித்துவ பதிவு எண் உருவாக்கப்பட்டு சொல்லப்பட்ட நபருக்கு அனுப்பப்படும்.

(2) துணை விதி (1)–ல் மேற்சொன்னபடி வேறு ஏதாவது ஒரு மாநிலத்தில் அல்லது யூனியன் பிரதேசத்தில் பதிவு செய்த நபர் இம்மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டவராகவே கருதப்படுவார்.

(3) துணை விதி (1)–ன் படி பதிவு செய்யப்பட்ட நபர், பொது நுழைவாயில் மின்னணு மூலம் நேரிடையாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கை செய்யப்படும் வசதி மையம் மூலமாக GST ENR–01 படிவத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களை, தேவைப்படும் இடத்தில், திருத்தங்கள் செய்யலாம்.

(4) விதி 56–ன் வகைமுறைகளுக்கு உட்பட்டு, (a) சரக்குகள் போக்குவரத்து வணிகத்தில் ஈடுபட்டிருக்கும் நபர் அவரது ஒவ்வொரு கிளைக்கும் பதிவு செய்யப்பட்ட சரக்கு வழங்குநர் மற்ற்ம் பெறுநரின் GSTIN–உடன், போக்குவரத்து செய்யப்பட்ட, ஒப்படைக்கப்பட்ட மற்ற அவரால் இடைவழியில் சேகரிக்கப்பட்ட சரக்குகளின் பதிவுகளையும் பேணி வர வேண்டும்.

(b) சேமிப்பு கிடங்கு அல்லது கிடங்கு எதனின் ஒவ்வொரு உரிமையாளர் அல்லது இயக்குபவர், ஒரு குறிப்பிட்ட சரக்கு சேமிப்பு கிடங்கில் வைக்கப்பட்டிருந்த காலம் தொடர்பான பதிவுகளுடன் கணக்குப் புத்தகங்கள் பேணி வருதல் வேண்டும். இதில், அத்தகைய சரக்குகள் அனுப்பப்பட்ட, நகர்த்தப்பட்ட, பெறப்பட்ட மற்றும் அகற்றப்பட்டது தொடர்பான விவரங்களையும் உள்ளடக்கும்.

(5) கிடங்கின் உரிமையாளர் அல்லது இயக்குபவர், பொருள்வாரியாக மற்றும் உரிமையாளர் வாரியாக அடையாளம் காணும் வகையில் உரிய முறையில் சரக்குகளை சேகரித்து வைக்க வேண்டும் மற்றும் தேவைப்படும் போது உரிய அலுவலரால் பொருள்களை நேரடி சரிபார்ப்பு அல்லது தணிக்கை மேற்கொள்ள எளிதாக்கப்பட வேண்டும்.

## அத்தியாயம் VIII
## அறிக்கைகள்

### 59. வெளிநோக்கிய வழங்குகைகள் தொடர்பான விவரங்களை சமர்ப்பிப்பதற்கான படிவம் மற்றும் முறை:-

(1) ஒவ்வொரு பதிவுபெற்ற நபரும் (ஒருங்கிணைக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம், 2017ன் பிரிவு 14ல் குறிப்பிடப்பட்டுள்ள நபர் நீங்கலாக), பிரிவு 37ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட சரக்கு மற்றும் சேவை அல்லது இரண்டின் வெளிநோக்கிய வழங்குகைகள் தொடர்பான விவரங்களை, படிவம் **GSTR-01**–ல் பொது நுழைவாயிலில் மின்னணு முறையில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ தாக்கல் செய்ய வேண்டும்.

(2) படிவம் **GSTR-01**–ல் சமர்ப்பிக்கப்படும் சரக்கு மற்றும் சேவை அல்லது இரண்டின் வெளிநோக்கிய வழங்குகைகள் தொடர்பான விவரங்கள் மற்றவற்றுடன் சேர்த்து பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் –

(a) அனைத்து விலைப்பட்டிவாரியான விவரங்கள் –

(i) பதிவு பெற்ற நபர்களுக்கு செய்யப்பட்ட மாநிலங்களுக்கிடையேயான மற்றும் உள்மாநில வழங்குகைகள்; மற்றும்

(ii) பதிவு பெறாத நபர்களுக்கு விலைப்பட்டியில் ரூபாய் இரண்டரை இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்பில் செய்யப்பட்ட மாநிலங்களுக்கிடையேயான வழங்குகைகள்;

(b) அனைத்து தொகுக்கப்பட்ட விவரங்கள் –

(i) ஒவ்வொரு வரிவிகித வாரியான, பதிவு பெறாத நபர்களுக்கு செய்யப்பட்ட உள்மாநில வழங்குகைகள்; மற்றும்

(ii) ஒவ்வொரு வரிவிகித வாரியான, பதிவு பெறாத நபர்களுக்கு விலைப்பட்டியில் ரூபாய் இரண்டரை இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்பில் செய்யப்பட்ட மாநிலங்களுக்கிடையேயான மாநிலவாரியான வழங்குகைகள்;

(c) முன்பு வழங்கப்பட்ட விலைப்பட்டியல் தொடர்பாக நடப்பு மாதத்தில் பற்று அல்லது வரவுக் குறிப்புகள் வழங்கிய விவரங்கள்.

(3) படிவம் **GSTR-01–**ஐ தாக்கல் செய்வதற்கு உரிய நாளுக்கு பின்னர், பொதுநுழைவாயில் மூலமாக, வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட வெளிநோக்கிய வழங்குகைகளுக்கான விவரங்களை, தொடர்புடைய பதிவு பெற்ற நபர்களுக்கு (பெற்றுக் கொள்பவர்கள்), மின்னணு முறையில் படிவம் **GSTR-02Aன்** பகுதி அ–வில், படிவம் GSTR-4Aல் மற்றும் படிவம் GSTR-6Aல் கிடைக்கச் செய்திட வேண்டும்.

(4) பிரிவு 38ன் கீழ் படிவம் **GSTR-2**ல் பெற்றுக் கொள்பவரால் சேர்க்கப்பட்ட, திருத்தப்பட்ட அல்லது நீக்கப்பட்ட உட்புற வழங்குகைகளுக்கான விவரங்களோ அல்லது பிரிவு 39 கீழ் படிவம் **GSTR-4**ல் அல்லது படிவம் **GSTR-6**ல் விவரங்களை, மின்னணு முறையில் படிவம் **GSTR-1Aல்** வழங்குநருக்கு பொதுநுழைவாயில் மூலமாக, கிடைக்கச் செய்திட வேண்டும். மற்றும் அத்தகைய வழங்குநர், பெற்றுக் கொள்பவரால் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களை ஏற்கவோ அல்லது மறுக்கவோ, செய்யலாம். மற்றும் வழங்குநரால் முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட **GSTR-1** அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்றங்கள்வரை திருத்தப்பட்டிருக்கும்.

**60. உட்புற வழங்குகைகள் தொடர்பான விவரங்களை சமர்ப்பிப்பதற்கான படிவம் மற்றும் முறை.-**

(1) ஒவ்வொரு பதிவுபெற்ற நபரும் (ஒருங்கிணைக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம், 2017ன் பிரிவு 14ல் குறிப்பிடப்பட்டுள்ள நபர் நீங்கலாக), வரிக்காலத்தில் பெறப்பட்ட சரக்கு மற்றும் சேவை அல்லது இரண்டின் உட்புற வழங்குகைகள் தொடர்பான விவரங்களை பிரிவு 38ன் உட்பிரிவு (2)ன் கீழ் படிவம் **GSTR-02A**–ன் பகுதி அ, பகுதி ஆ மற்றும் பகுதி இ–ல் கண்டுள்ள விவரங்கள் அடிப்படையில் அத்தகைய விவரங்களை அப்பிரிவின் உட்பிரிவு (1)ல் குறிக்கப்பட்டவாறு தயாரித்து, அதனை படிவம் **GSTR-02**ல், பிரிவு 38ன் உட்பிரிவு (2)ன் கீழ் சமர்ப்பிக்க வேண்டிய அத்தகை மற்ற உட்புற வழங்குகைகளின் விவரங்களை உள்ளடக்கியதுடன் சேர்த்து, பொது நுழைவாயிலில் மின்னணு முறையில், நேரடியாகவோ அல்லது அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ தாக்கல் செய்ய வேண்டும்.

(2) ஒவ்வொரு பதிவுபெற்ற நபரும் பிரிவு 38ன் உட்பிரிவு (5)ல் வேண்டுறுத்தப்படுகிற விவரங்கள் ஏதாவதிருப்பின், அதனை படிவம் GSTR-02ல் சமர்ப்பிக்க வேண்டும்.

(3) பதிவு பெற்ற நபர் படிவம் GSTR-02ல் அவருக்கு முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ தகுதியிராத உட்புற வழங்குகை தொடர்பான விவரங்களை விலைப்பட்டி மட்டத்திலேயே அதன் தகுதியுடையமையை தீர்மானிக்க இயலக்கூடியவற்றை குறிப்பிட வேண்டும்.

(4) பதிவு பெற்ற நபர் படிவம் GSTR-02ல் வரிவிதிக்கத்தகாத வழங்குகைகள் தொடர்பான அல்லது வணிக நோக்கத்திற்கு தொடர்பில்லாத உட்புற வழங்குகைகளின் தகுதியற்ற உள்ளீட்டு வரி வரவு அளவினை அதன் தகுதியுடையமையை விலைப்பட்டி மட்டத்திலேயே தீர்மானிக்க இயலாத நிலையில் குறிப்பிட வேண்டும்.

(4A) குடியிராத வரிவிதிக்கத்தக்க நபர், விதி 63ன் கீழ் அவரால் படிவம் **GSTR-5ல் சமர்ப்பிக்கப்படும் விலைப்பட்டியல் விவரங்களை** மின்னணு முறையில் பொதுநுழைவாயில் மூலமாக படிவம் **GSTR-02A**–ன் பகுதி அ–ல், பெற்றுக் கொள்பவருக்கு கிடைக்கச் செய்திட வேண்டும். மற்றும் மேற்சொன்ன பெற்றுக் கொள்பவர் அவற்றை படிவம் **GSTR-**02ல் உள்ளடக்க வேண்டும்.

(5) விதி 65ன் கீழ், உள்ளீடு சேவை விநியோகிப்பவரால், படிவம் **GSTR-6ல் சமர்ப்பிக்கப்படும் விலைப்பட்டியல் விவரங்களை** மின்னணு முறையில் பொதுநுழைவாயில் மூலமாக படிவம் **GSTR-**

**02A–**ன் பகுதி ஆ–ல், பெற்றுக் கொள்பவருக்கு கிடைக்கச் செய்திட வேண்டும். மற்றும் மேற்சொன்ன பெற்றுக் கொள்பவர் அவற்றை படிவம் **GSTR-**02ல் உள்ளடக்க வேண்டும்.

**(6)** **ஆதாரத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட வரி விவரங்களை**, பிடித்தம் செய்பவரால், பிரிவு **39**ன் உட்பிரிவு **(3)**ன் கீழ் படிவம் **GSTR-7ல் சமர்ப்பிக்கப்படும்** மின்னணு முறையில் பொதுநுழைவாயில் மூலமாக படிவம் **GSTR-02A–**ன் பகுதி இ–ல், பிடித்தம் செய்யப்படுபவருக்கு கிடைக்கச் செய்திட வேண்டும். மற்றும் மேற்சொன்ன பிடித்தம் செய்யப்படுபவர் அவற்றை படிவம் **GSTR-**02ல் உள்ளடக்க வேண்டும்.

**(7)** பிரிவு 52ன் கீழ், மின்னணு வணிகம் இயக்குபவரால், படிவம் **GSTR-8ல் சமர்ப்பிக்கப்படும் ஆதாரத்திலிருந்து வசூலிக்கப்பட்ட வரி விவரங்களை** மின்னணு முறையில் பொதுநுழைவாயில் மூலமாக படிவம் **GSTR-02A–**ன் பகுதி இ–ல், தொடர்புடைய நபருக்கு கிடைக்கச் செய்திட வேண்டும். மற்றும் அத்தகைய நபர் அவற்றை படிவம் **GSTR-**02ல் உள்ளடக்க வேண்டும்.

**(8)** படிவம் **GSTR-02–**ல் சமர்ப்பிக்கப்படும் சரக்கு மற்றும் சேவை அல்லது இரண்டின் உட்புற வழங்குகைகள் தொடர்பான விவரங்கள் மற்றவற்றுடன் சேர்த்து பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்–

(a) பதிவு பெற்ற அல்லது பதிவு பெறாத நபர்களிடமிருந்து மாநிலங்களுக்கிடையேயான மற்றும் உள்மாநில அனைத்து வழங்குகைகளில் பெறப்பட்டவைகளின்விலைப்பட்டியல்வாரியான விவரங்கள் மற்றும்;

(b) இறக்குமதி செய்யப்பட்ட சரக்கு மற்றும் சேவைகள்; மற்றும்

(c) வழங்குநரிடமிருந்து பெறப்பட்ட பற்று அல்லது வரவுக் குறிப்புகள் ஏதேனுமிருப்பின் அவை.

**61. மாதாந்திர அறிக்கை சமர்ப்பிப்பதற்கான படிவமும், முறையும்**

**(1)** ஒருங்கிணைக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம், **2017**ல் பிரிவு **14**ல் குறிக்கப்பட்ட நபர் அல்லது உள்ளீடு வரி விநியோகிப்பவர் அல்லது ஒரு வரிவிதிக்கத்தக்க குடியிராத நபர் அல்லது பிரிவு **10** அல்லது **51**ன்கீழ் வரி செலுத்தும் நபர், நேர்விற்கேற்ப, பிரிவு **52**ன் கீழ், தவிர்த்து ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும் பிரிவு **39**ன் உட்பிரிவு **(1)**ல் குறிக்கப்பட்ட ஒரு அறிக்கையினை படிவம் **GSTR-3ல்** பொது நுழைவாயிலில் மின்னணு முறையில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ தாக்கல் செய்ய வேண்டும்.

**(2)** படிவம் GSTR-1, படிவம் GSTR-2 மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையிலும், மற்றும் முந்தைய வரி காலங்களின் மற்ற கடப்பாடுகளின் அடிப்படையிலும், துணை விதி**(1)**ன் கீழ், அறிக்கையின் பகுதி–அ மின்னணு முறையில் உருவாக்கப்பட வேண்டும்

**(3)** பிரிவு **49**ன் வரம்புரைகளுக்கு உட்பட்டு, துணை விதி **(1)**ன் அறிக்கை சமர்ப்பிக்கும் ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும், சட்டத்தின் அல்லது இந்த விதிகளின் கீழ் செலுத்தத்தக்க கடப்பாடுடைய வரி, வட்டி, தண்டத் தொகை, கட்டணம் அல்லது எந்தவொரு செலுத்தத்தக்க தொகையினையும் மின்னணு பணப்பேரேடு அல்லது மின்னணு வரவுப் பதிவேட்டில் பற்று வைப்பதன் மூலம் செலுத்த வேண்டும் மற்றும் அதன் விவரங்களை அறிக்கையின் பகுதி – ஆ–வின் படிவம் GSTR-3ல் உள்ளடக்க வேண்டும்.

**(4)** பிரிவு **49**ன் உட்பிரிவு **(6)**ன் வரம்புமுறைகளுக்கிணங்க மின்னணு பணப் பேரேட்டில் எஞ்சியிருக்கும் எந்தவொரு தொகையினையும் திருப்பிக் கொடுக்கக் கோரும் ஒரு பதிவு பெற்ற நபர், அத்தகைய திருப்பிக் கொடுக்கக் கோருதலை அறிக்கையின் பகுதி–ஆ–வின் படிவம் GSTR-3ல் கோரலாம். மற்றும் அத்தகைய அறிக்கை பிரிவு **54**ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பமாக கருதப்படல் வேண்டும்.

**(5)** பிரிவு **37**ன் கீழ் படிவம் GSTR-1 மற்றும் பிரிவு **38**ன் கீழ் படிவம் GSTR-2ல் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விவரங்களுக்கான கால வரையறை எங்கு நீட்டிக்கப்படுகிறதோ மற்றும் சூழ்நிலைகள் அவ்வாறு வேண்டுகிறதோ, ஆணையரால் அறிவிக்கப்படும் அத்தகைய

முறையில் அறிக்கையினை, படிவம் GSTR-3க்கு பதிலாக படிவம் GSTR-3B –ல் சமர்ப்பிக்கலாம்.

**62. இணக்கவரி செலுத்தும் வழங்குநர் சமர்ப்பிக்க வேண்டிய காலாண்டு அறிக்கையின் படிவமும், முறையும்.–**

(1) பிரிவு 10ன் கீழ் வரி செலுத்தும் எந்த ஒரு பதிவு பெற்ற நபரு;ம, படிவம் GSTR-4A–ல் உள்ளடக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில், எங்கு தேவைப்படுகிறதோ அங்கு விவரங்களை கூட்டிய, திருத்திய அல்லது நீக்கிய பிறகு, காலாண்டு அறிக்கையினை படிவம் GSTR-4–ல் பொது நுழைவாயிலில் மின்னணு முறையில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ தாக்கல் செய்ய வேண்டும்.

(2) துணை விதி (1)ன் அறிக்கை சமர்ப்பிக்கும் ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும், சட்டத்தின் அல்லது இந்த விதிகளின் கீழ் அவரால் செலுத்த கடப்பாடுடைய வரி, வட்டி, தண்டத் தொகை, கட்டணம் அல்லது எந்தவொரு செலுத்தத்தக்க தொகையினையும் மின்னணு பணப்பேரேட்டில் பற்று வைப்பதன் மூலம் செலுத்த வேண்டும்.

(3) துணை விதி (1)ன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் மற்றவற்றுடன் சேர்த்து பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்–

(a) பதிவு பெற்ற அல்லது பதிவு பெறாத நபர்களிடமிருந்து மாநிலங்களுக்கிடையேயான மற்றும் உள்மாநில அனைத்து வழங்குகைகளில் பெறப்பட்டவைகளின் விலைப்பட்டியல் வாரியான விவரங்கள் மற்றும்

(b) செய்யப்பட்ட வெளிப்புற வழங்குகை, தொகுக்கப்பட்ட விவரங்கள்.

(4) நிதியாண்டின் தொடக்கத்தில் பிரிவு 10ன் கீழ் வரி செலுத்த விருப்பம் தெரிவித்த ஒரு பதிவு பெற்ற நபர், வேண்டுறுத்தப்படும்போது, வெளிநோக்கிய வழங்கல்கள் மற்றும் உட்புற வழங்கல்கள் தொடர்பான விவரங்கள் மற்றும் எந்த காலத்திற்கு அந்நபர் அத்தகைய விவரங்களை விதி 59, விதி 60 மற்றும் விதி 61ன்கீழ் அறிக்கையில் சமர்ப்பிக்க கடப்பாடுடையவரோ மற்றும் அடுத்து வரும் நிதியாண்டின் செப்டம்பர் மாதத்திற்கான அறிக்கை சமர்ப்பிக்கும் காலம் வரையிலானஅறிக்கைகளை அல்லது முந்தைய நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிக்கும் காலம் இதில் எது முந்தையதோ அதற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

**விளக்கம்.–** இந்த துணை விதியின் நோக்கத்திற்காக, இணக்க வரிசெலுத்தும் திட்டத்திற்கு விருப்பம் தெரிவித்த காலத்திற்கு முன்னர் வழங்குநரிடமிருந்து பெறப்பட்ட விலைப்பட்டியல் அல்லது பற்றுக் குறிப்பின்மீது உள்ளீட்டு வரியினை துய்க்க தகுதியற்றவர் ஆவார் என அறிவிக்கப்படுகிறது.

(5) இணக்க வரிசெலுத்தும் திட்டத்திலிருந்து தாமாக தீர்மானித்தோ அல்லது உரிய அலுவலரின் ஆணையின்பேரிலோ திரும்பப் பெற வேண்டியிருக்கும் ஒரு பதிவு பெற்ற நபர், எங்கு வேண்டுறுத்தப்படுகிறதோ, பிரிவு 9ன் கீழ் வரி செலுத்த விருப்பம் தெரிவித்த காலத்திற்கு முந்தைய விவரங்களை படிவம் GSTR-4–ல், அடுத்து வரும் நிதியாண்டின் செப்டம்பர் முடியும் காலத்திற்கான காலாண்டு அறிக்கை சமர்ப்பிக்கும் காலம் வரையிலானஅ றிக்கைகளை அல்லது முந்தைய நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிக்கும் காலம் இதில் எது முந்தையதோ அதற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

**63. வரிவிதிக்கத்தக்க குடியிராத நபர் சமர்ப்பிக்க வேண்டிய படிவங்களும், முறைகளும்.–**

ஒவ்வொரு பதிவு பெற்ற வரிவிதிக்கத்தக்க குடியிராத நபரும், பொது நுழைவாயிலில் மின்னணு முறையில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ, வரிக்காலம் முடிவுற்ற இருபது நாட்களுக்குள், அல்லது பதிவிற்கான செல்லத்தக்க காலம் முடிவுற்ற ஏழு நாட்களுக்குள் இதில் எது முந்தையதோ அதற்குள், உட்புற அல்லது

வெளிநோக்கிய வழங்குகைகள் தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கையினை படிவம் GSTR-5ல் சமர்ப்பிப்பதுடன், சட்டத்தின் அல்லது இந்த விதிகளின் கீழ் அவரால் செலுத்த கடப்பாடுடைய வரி, வட்டி, தண்டத் தொகை, கட்டணம் அல்லது எந்தவொரு செலுத்தத்தக்க தொகையினையும் செலுத்த வேண்டும்.

**64. கணினிவழி தகவல்கள் மற்றும் தகவல் தள அணுகள் அல்லது தகவல் மீட்டுப் பெறும் பணிகளை வழங்கும் நபர் சமர்ப்பிக்க வேண்டிய படிவமும், முறையும்.–**

இந்தியாவுக்கு வெளியேயுள்ள ஓர் இடத்திலிருந்து இந்தியாவிலுள்ள பதிவு பெற்ற நபர் அல்லாத ஒரு நபருக்கு கணினிவழி தகவல்கள் மற்றும் தகவல் தள அணுகல் அல்லது தகவல் மீட்டுப் பெறும் பணிகளை வழங்கும் ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும் நாட்காட்டி மாதத்தின் அல்லது அதன் பகுதிக்கு பிந்தி வரும் மாதத்தின் இருபந்தைந்தாம் நாள் அல்லது அதற்கு முன்னதாக படிவம் GSTR-5A- ல் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

**65. உள்ளீடு சேவை விநியோகிப்பவர் சமர்ப்பிக்க வேண்டிய படிவமும், முறையும்.–**

ஒவ்வொரு **உள்ளீடு சேவை விநியோகிப்பாளரும்,** படிவம் GSTR-6A–ல் உள்ளடக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில், எங்கு வேண்டுறுத்தப்படுகிறதோ அங்கு விவரங்களை கூட்டிய, திருத்திய அல்லது நீக்கிய பிறகு, எந்த விலைப்பட்டியில் வரிவரவு பெறப்பட்டிருக்கிறதோ அதன் விவரங்ளும், பிரிவு **20**ன் கீழ் வழங்கப்பட்டவை ஆகிய விவரங்களுடன், ஒரு அறிக்கையினை படிவம் GSTR-6–ல் பொது நுழைவாயிலில் மின்னணு முறையில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ தாக்கல் செய்ய வேண்டும்.

**66. ஆதாரத்தில் வரிப் பிடித்தம் செய்ய வேண்டுறுத்தப்படுகிற நபர் சமர்ப்பிக்க வேண்டிய படிவமும், முறையும்.–**

**(1)** பிரிவு **51**ன் கீழ் **ஆதாரத்தில் வரிப் பிடித்தம் செய்ய வேண்டுறுத்தப்படுகிற ஒவ்வொரு நபரும்,** ஒரு அறிக்கையினை படிவம் GSTR-7–ல் பொது நுழைவாயிலில் மின்னணு முறையில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ தாக்கல் செய்ய வேண்டும்.

**(2)** உப விதி **(1)**ன் கீழ் வரிப் பிடித்தம் செய்பவர் சமர்ப்பித்த விவரங்களை படிவம் GSTR-7 சமர்ப்பித்த உரிய நாளுக்குப் பின்னர், ஒவ்வொரு வழங்குநருக்கும் , படிவம் **GSTR-2Aன்** மற்றும் படிவம் GSTR-4Aல் பகுதி இ–ல் மின்னணு முறையில் கிடைக்கச் செய்திட வேண்டும்.

**(3)** பிரிவு **51**ன் உட்பிரிவு **(3)**ல் குறிப்பிட்டுள்ள சான்றிதழை, உபவிதி **(1)**ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், மின்னணு முறையில் படிவம் GSTR-7**Aல்** பொது நுழைவாயிலில் பிடித்தம் செய்யப்படுபவருக்கு கிடைக்கச் செய்திட வேண்டும்.

**67. மின்னணு வணிகம் இயக்குபவர் மூலமாக மேற்கொள்ளப்பட்ட வழங்குகைகள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய படிவமும், முறையும்.–**

**(1)** பிரிவு **52**ன் கீழ் ஆதாரத்தில் வரி வசூல் செய்ய வேண்டுறுத்தப்படுகிற ஒவ்வொரு **மி**ன்னணு வணிகம் இயக்குபவரும், அத்தகைய இயக்குபவர் மூலமாக மேற்கொள்ளப்பட்ட வழங்குகைகள் மற்றும் பிரிவு **52**ன் உட்பிரிவு **(1)**ன் கீழ் வேண்டுறுத்தப்பட்டுள்ள வரியினை வசூல் தொகையினை உள்ளடக்கிய, ஒரு அறிக்கையினை படிவம் GSTR-8ல், பொது நுழைவாயிலில் மின்னணு முறையில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ தாக்கல் செய்ய வேண்டும்.

**(2)** துணை விதி **(1)**ன் கீழ் இயக்குபவரால் படிவம் GSTR-8ல் சமர்ப்பித்த உரிய நாளுக்குப் பின்னர், சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களை, ஒவ்வொரு வழங்குநருக்கும் மின்னணு முறையில் படிவம் **GSTR-2Aன்** பகுதி இ–வில், பொது நுழைவாயிலில் கிடைக்கச் செய்திட வேண்டும்.

**68. நமூனாக்களை தாக்கல் செய்யாதவர்களுக்கான அறிவிப்பு.–**

பிரிவு 39 அல்லது பிரிவு 44 அல்லது பிரிவு 45 அல்லது பிரிவு 52ன்கீழ் அறிக்கை தாக்கல் செய்ய தவறும் ஒரு பதிவு பெற்ற வணிகருக்கு மின்னணு முறையில் ஒரு அறிவிப்பினை படிவம் GSTR-3Aல் வழங்க வேண்டும்.

**69. உள்ளீட்டு வரி வரவு கோருதலை பொருத்துதல்.–**

பிரிவு 41ன் கீழ் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட, இறக்குமதி உள்ளிட்ட உட்புற வழங்குகைகளின்பேரில் கோரப்பட்ட உள்ளீட்டு வரி வரவு தொடர்பான பின்வரும் விவரங்களை படிவம் GSTR-3ல் அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டிய உரிய தேதிக்கு பின்னர் பிரிவு 42ன்கீழ் பொருத்த வேண்டும்–

(a) வழங்குநரின் சரக்கு மற்றும் சேவை வரி அடையாள எண்;

(b) பெற்றுக் கொள்பவரின் சரக்கு மற்றும் சேவை வரி அடையாள எண்;

(c) விலைப்பட்டி அல்லது பற்றுக் குறிப்பு எண்;

(d)விலைப்பட்டி அல்லது பற்றுக் குறிப்பு நாள் ; மற்றும்

(e) வரித் தொகை:

**வரம்புரை:** ஆனால், பிரிவு 37ன் கீழ் குறிக்கப்பட்ட படிவம் GSTR-1 அல்லது பிரிவு 38ன் கீழ் குறிக்கப்பட்ட படிவம் GSTR-2 சமர்ப்பிக்குதற்குரிய காலக் கெடுவினை நீட்டிக்கும்போதும், உள்ளீட்டு வரி வரவு கோருப்பட்டதை பொருத்தும் நாளையும் அதற்கிணங்க நீட்டிக்க வேண்டும்:

**மேலும் வரம்புரை:** மன்றத்தின் பரிந்துரையின்பேரில், ஆணையர் உத்திரவின் மூலமாக, அத்தகைய நாளினை அதில் குறிப்பிட்டு, உள்ளீட்டு வரி வரவு கோரப்பட்டதை பொருத்தும் நாளை நீட்டிக்கலாம்.

**விளக்கம்.–** இந்த விதியின் நோக்கங்களுக்காக, அறிவிக்கப்படுகிறதாவது–

(i) படிவம் GSTR-2ல் உள்ளீட்டு வரி வரவு கோரப்பட்டுள்ள விலைப்பட்டியல் அல்லது பற்றுக் குறிப்பு, படிவம் GSTR-2Aன் அடிப்படையில் பெற்றுக் கொள்பவரால் திருத்தமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பின், தொடர்புடைய வழங்குநர் ஒரு செல்லத்தக்க அறிக்கையினை சமர்ப்பித்திருக்கும்நேர்வில் பொருந்துகிறதாக கருதுதல் வேண்டும்.

(ii) அத்தகைய விலைப்பட்டியல் அல்லது பற்றுக் குறிப்பின் மீது தொடர்புடைய வழங்குநர் செலுத்தியிருக்கிற வெளியீட்டு வழங்கு தொகைக்கு ஈடாக அல்லது குறைத்து கோரப்பட்ட உள்ளீட்டு வரி வரவுக்கு பொருந்துகிறதாக கருதுதல் வேண்டும்.

**70. உள்ளீட்டு வரி வரவினை இறுதியாக ஏற்றலும் மற்றும் அதற்கான தகவல் அளிப்பும்.–**

**(1)** பிரிவு 42ன் உட்பிரிவு (2)ல் குறிக்கப்பட்டுள்ள, எந்த ஒரு வரிக் காலத்திற்குமான உள்ளீடு வரி வரவு கோரிக்கையின் இறுதி ஏற்பு, மின்னணு முறையில், படிவம் GST MIS-1ல் பொது நுழைவாயிலில் அத்தகைய கோரிக்கையை விடுக்கும் பதிவு பெற்ற நபருக்கு கிடைக்கச் செய்திட வேண்டும்.

**(2)** பொருத்தமற்றதாக தகவல் தெரிவிக்கப்பட்ட எந்த ஒரு வரிக் காலத்திற்குமான உள்ளீடு வரி வரவு கோரிக்கையும் ஆனால் வழங்குநராலோ அல்லது பெற்றுக் கொள்பவராலோ மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கு பிறகு பொருந்துவது கண்டறியப்பட்டால், அதனை இறுதி ஏற்பு செய்ய வேண்டும் மற்றும் மின்னணு முறையில், படிவம் GST MIS-1ல் பொது நுழைவாயிலில் அத்தகைய கோரிக்கையை விடுக்கும் பதிவு பெற்ற நபருக்கு கிடைக்கச் செய்திட வேண்டும்.

**71. உள்ளீடு வரி வரவு கோரிக்கையில் முரண்பாட்டை தெரிவித்தலும் மற்றும் திருத்துதலும் மற்றும் உள்ளீடு வரி வரவு கோரிக்கையை திருப்புதலும்.–**

**(1)** பிரிவு **42**ன் உட்பிரிவு **(3)**ன் கீழ், வெளிநோக்கிய வரி கடப்பாடு குறைப்புக் கோரிக்கையின் எந்த ஒரு முரண்பாட்டையும், அத்தகைய முரண்பாடு தொடர்கிறதன் காரணமாக மேற்சொன்ன பிரிவின் உட்பிரிவு **(5)**ன் கீழ் சேர்க்கப்பட்ட வெளிநோக்கிய வரி கடப்பாட்டு விபரங்களையும், அத்தகைய கோரிக்கை விடுக்கும் பெற்றுக் கொள்பவருக்கு மின்னணு முறையில் படிவம் GST MIS-1லும், வழங்குநருக்கு மின்னணு முறையில் படிவம் GST MIS-2லும், பொருத்துதல் மேற்கொண்ட மாதத்தின் கடைசி நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொது நுழை வாயிலில் கிடைக்கச் செய்ய வேண்டும்.

**(2)** துணை விதி **(1)** ன் கீழ் எந்த ஒரு முரண்பாடும் கிடைக்கச் செய்யப்பெற்ற ஒரு வழங்குநர், முரண்பாடு கிடைக்கச் செய்யப்பெற்ற மாதத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய வெளிநோக்கிய வழங்குகைகள் தொடர்பான அறிக்கையில் தகுந்த திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

**(3)** துணை விதி **(1)** ன் கீழ் எந்த ஒரு முரண்பாடும் கிடைக்கச் செய்யப்பெற்ற ஒரு பெற்றுக் கொள்பவர், முரண்பாடு கிடைக்கச் செய்யப்பெற்ற மாதத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய உள்ளீடு வழங்குகைகள் தொடர்பான அறிக்கையில் தகுந்த திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

**(4)** துணை விதி **(2)** அல்லது துணை விதி **(3)**ன் கீழ் எங்கு முரண்பாடு திருத்தம் செய்யப்படவில்லையோ அங்கு, கிடைக்கச் செய்யப்பெற்ற ஒரு பெற்றுக் கொள்பவர், எந்த மாதத்தில் முரண்பாடு கிடைக்கச் செய்யப்பெற்றதோ அதற்கு அடுத்த மாதத்திற்கு படிவம் GSTR-3ல் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கையில் வெளிநோக்கிய வரிக் கடப்பாட்டுடன் முரண்பாடு அளவிற்கான ஒரு தொகையை சேர்க்க வேண்டும்.

**விளக்கம்.–** இந்த விதியின் நோக்கங்களுக்காக, இங்கு அறிவிக்கப்படுவதாவது .-

(i) ஒரு வழங்குநரால் திருத்தம் என்பதன் பொருள், பெற்றுக் கொள்பவரால் அறிவிக்கப்பட்ட ஒத்திசைவான உள்ளீடு வழங்குகைகளுக்கு பொருந்துமாறு அவருடைய செல்லுந்தன்மையுடைய அறிக்கையின் வெளிப்புற வழங்குகைகளின் விவரங்களில் சேர்ப்பதோ அல்லது திருத்துவதோ என்பதாகும் ;

(ii) ஒரு பெற்றுக்கொள்பவரால் திருத்தம் என்பதன் பொருள், வழங்குநரால் அறிவிக்கப்பட்ட ஒத்திசைவான வெளிநோக்கிய வழங்குகைகளுக்கு பொருந்துமாறு அவருடைய செல்லுந்தன்மையுடைய அறிக்கையின் உட்புற வழங்குகைகளின் விவரங்களில் சேர்ப்பதோ அல்லது திருத்துவதோ என்பதாகும்.

**72. ஒரே விலைப்பட்டியின்பேரில் ஒரு முறைக்குமேல் உள்ளீடு வரி வரவு கோருதல்.–**

இரட்டிப்பில் கோரப்பட்ட உள்புற வழங்குகைகளின் விவரங்கள் படிவம் GST MIS-1ல் பதிவு பெற்ற நபருக்கு பொது நுழை வாயிலில் மின்னணு முறையில் தகவல் தெரிவிக்க வேண்டும்.

**73. வெளிநோக்கிய வரிக் கடப்பாடு குறைப்புக் கோரிக்கையை பொருத்துதல்.–**

வெளிநோக்கிய வரிக் கடப்பாடு குறைப்புக் கோரிக்கை தொடர்பான கீழ்க்கண்ட விவங்களை படிவம் GSTR-3ல் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய உரிய நாளுக்கு பின்னர், பிரிவு **43**ன்படி பொருத்திப் பார்க்க வேண்டும், அதாவது:–

(a)) வழங்குநரின் சரக்கு மற்றும் சேவை வரி அடையாள எண்;

(b) பெற்றுக் கொள்பவரின் சரக்கு மற்றும் சேவை வரிஅடையாள எண்;

(c) வரவுக் குறிப்பு எண்;

(d) வரவுக் குறிப்பு நாள்; மற்றும்

(e) வரித் தொகை:

**வரம்புரை:** ஆனால், பிரிவு 37ன் கீழ் குறிக்கப்பட்ட படிவம் GSTR-1 அல்லது பிரிவு 38ன் கீழ் குறிக்கப்பட்ட படிவம் GSTR-2 சமர்ப்பிக்குதற்குரிய காலக் கெடுவினை நீட்டிக்கும்போதும், வெளிநோக்கிய வரி கடப்பாடு குறைப்பு கோரிக்கையினை பொருத்தும் நாளையும் அதற்கிணங்க நீட்டிக்க வேண்டும்:

**மேலும் வரம்புரை:** மன்றத்தின் பரிந்துரையின்பேரில், ஆணையர் உத்திரவின் மூலமாக, அத்தகைய நாளினை அதில் குறிப்பிட்டு, வெளிநோக்கிய வரி கடப்பாடு குறைப்பு கோரிக்கையினை பொருத்தும் நாளை நீட்டிக்கலாம்.

**விளக்கம்.–** இந்த விதியின் நோக்கங்களுக்காக, இங்கு அறிவிக்கப்படுவதாவது–

(i) படிவம் GSTR-1ல் வரவுக் குறிப்பு பெற்றதன்பேரில் கோரப்பட்ட வெளிநோக்கிய வரி கடப்பாடு குறைப்பினை, அதனை தொடர்புடைய பெற்றுக் கொள்பவரால் படிவம் GSTR-2ல் திருத்தமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டு, பெற்றுக் கொள்பவர் ஒரு செல்லுந்தன்மையுடைய அறிக்கையினை சமர்ப்பித்திருக்கும்நேர்வில், அது பொருந்துகிறதாக கருதுதல் வேண்டும்.

(ii) எங்கு குறைப்புக் கோரிக்கையின் அளவிற்கேற்ப சமமாகவோ அல்லது குறைப்புக் கோரிக்கையினை ஏற்ற அல்லது அத்தகைய வரவுக்குறிப்பின் மீது தொடர்புடைய பெற்றுக் கொள்பவரால், அவருடைய செல்லுந்தன்மையுடைய அறிக்கையில் செலுத்தப்பட்ட தொகையினை, வெளிநோக்கிய வரி கடப்பாடு தொகை குறைப்புக்கு பொருந்துகிறதாக கருதுதல் வேண்டும்.

## 74. வெளிநோக்கிய வரி கடப்பாடு குறைப்புக் கோரிக்கையினை இறுதி ஏற்பு செய்தலும் மற்றும் அதனை தகவல் தெரிவித்தலும்

(1) வெளிநோக்கிய வரிக் கடப்பாடு குறைப்புக் கோரிக்கையினை, பிரிவு 43ன் உட் பிரிவு (2)ன் கீழ் குறிக்கப்பட்ட இறுதி ஏற்பு விவரத்தினை, படிவம் GST MIS-1ல் அத்தகைய கோரிக்கை விடுக்கும் நபருக்கு பொது நுழை வாயிலில் மின்னணு முறையில் கிடைக்கச் செய்ய வேண்டும்.

(2) எந்த ஒரு வரிக் காலத்திற்கும் கோரப்பட்ட வெளிநோக்கிய வரி கடப்பாடு குறைப்பு பொருந்தவில்லை என தகவல் தெரிவிக்கப்பட்டு, ஆனால் வழங்குநர் அல்லது பெற்றுக் கொள்பவரால் திருத்தப்பட்ட பின்னர் பொருந்துகிறதாக கண்டறியப்பட்டு இறுதியாக ஏற்கப்பட்ட விவரம் படிவம் GST MIS-1ல் அத்தகைய கோரிக்கை விடுக்கும் நபருக்கு பொது நுழை வாயிலில் மின்னணு முறையில் கிடைக்கச் செய்ய வேண்டும்.

## 75. வெளிநோக்கிய வரி கடப்பாடு குறைப்புக் கோரிக்கையின் முரண்பாட்டை தெரிவித்தலும் மற்றும் திருத்துதலும் மற்றும் குறைப்புக் கோரிக்கையை திருப்புதலும்.–

(1) பிரிவு 43ன் உட்பிரிவு (3)ன் கீழ், வெளிநோக்கிய வரி கடப்பாடு குறைப்புக் கோரிக்கையின் எந்த ஒரு முரண்பாட்டையும், அத்தகைய முரண்பாடு தொடர்கிறதன் காரணமாக மேற்சொன்ன பிரிவின் உட்பிரிவு (5)ன் கீழ் சேர்க்கப்பட்ட வெளிநோக்கிய வரி கடப்பாட்டு விபரங்களையும், அத்தகைய கோரிக்கை விடுக்கும் பதிவு பெற்ற நபருக்கு மின்னணு முறையில் படிவம் GST MIS-1லும், பெற்றுக் கொள்பவருக்கு மின்னணு முறையில் படிவம் GST MIS-2லும், பொருத்துதல் மேற்கொண்ட மாதத்தின் கடைசி நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொது நுழை வாயிலில் கிடைக்கச் செய்ய வேண்டும்.

**(2)** துணை விதி **(1)** ன் கீழ் எந்த ஒரு முரண்பாடும் கிடைக்கச் செய்யப்பெற்ற ஒரு வழங்குநர், முரண்பாடு விவரங்கள் கிடைக்கச் செய்யப்பெற்ற மாதத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய வெளிநோக்கிய வழங்குகைகள் தொடர்பான அறிக்கையில் தகுந்த திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

**(3)** துணை விதி **(1)** ன் கீழ் எந்த ஒரு முரண்பாடும் கிடைக்கச் செய்யப்பெற்ற ஒரு பெற்றுக் கொள்பவர், முரண்பாடு விவரங்கள் கிடைக்கச் செய்யப்பெற்ற மாதத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய உள்ளீடு வழங்குகைகள் தொடர்பான அறிக்கையில் தகுந்த திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

**(4)** துணை விதி **(2)** அல்லது துணை விதி **(3)**ன் கீழ் எங்கு முரண்பாடு திருத்தம் செய்யப்படவில்லையோ அங்கு, முரண்பாடு விவரங்கள் கிடைக்கச் செய்யப்பெற்ற ஒரு வழங்குநர், எந்த மாதத்தில் முரண்பாடு விவரங்கள் கிடைக்கச் செய்யப்பெற்றதோ அதற்கு அடுத்த மாதத்திற்கு வெளிநோக்கிய வரிக் கடப்பாட்டுடன் முரண்பாடு அளவிற்கான ஒரு தொகையை சேர்த்து அதனை மின்னணு கடப்பாடு பதிவேட்டில் பற்று வைத்து, அதனை படிவம் GSTR-3ல் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கையில் காணச் செய்திட வேண்டும்.

**விளக்கம்.–** இந்த விதியின் நோக்கங்களுக்காக, இங்கு அறிவிக்கப்படுவதாவது–

(i) ஒரு வழங்குநரால் திருத்தம் என்பதன் பொருள், பெற்றுக் கொள்பவரால் அறிவிக்கப்பட்ட ஒத்திசைவான உள்ளீடு வழங்குகைகளுக்கு பொருந்துமாறு அவருடைய செல்லுந்தன்மையுடைய அறிக்கையின் வெளிப்புற வழங்குகைகளின் விவரங்களில் சேர்ப்பதோ அல்லது திருத்துவதோ என்பதாகும்;

(ii) ஒரு பெற்றுக்கொள்பவரால் திருத்தம் என்பதன் பொருள், வழங்குநரால் அறிவிக்கப்பட்ட ஒத்திசைவான வெளிநோக்கிய வழங்குகைகளுக்கு பொருந்துமாறு அவருடைய செல்லுந்தன்மையுடைய அறிக்கையின் உட்புற வழங்குகைகளின் விவரங்களில் சேர்ப்பதோ அல்லது திருத்துவதோ என்பதாகும்.

**76. ஒருமுறைக்குமேல் கோரப்படும் வெளிநோக்கிய வரி கடப்பாடு குறைப்பு.–**

இரட்டிப்பில் கோரப்பட்ட வெளிநோக்கிய வரி கடப்பாடு குறைப்பு விவரங்கள் படிவம் GST MIS-1ல் பதிவு பெற்ற நபருக்கு பொது நுழை வாயிலில் மின்னணு முறையில் தகவல் தெரிவிக்க வேண்டும்.

**77. திருப்புகைகளை திரும்பக்கோருகையில் பெறப்பட்ட வட்டியினை திருப்பிக் கொடுத்தல்.–**

பிரிவு **42**ன் உட்பிரிவு **(9)** மற்றும் பிரிவு **43**ன் உட்பிரிவு **(9)**ன் கீழ் திருப்பிக் கொடுக்க வேண்டிய வட்டியினை பதிவு பெற்ற நபர் அவரால் படிவம் GSTR-3ல் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் கோர வேண்டும் மற்றும் அது அவரது மின்னணு பணப்பேரேட்டில் படிவம் GST PMT-05ல் வரவு வைக்கப்பட வேண்டும் மற்றும் வரவு வைக்கப்பட்ட தொகை அவரது எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய கடப்பாடுள்ள வட்டியை செலுத்துவதற்காக கிடைக்கச் செய்ய வேண்டும் அல்லது வரிவிதிக்கத்தக்க நபர் அந்த தொகையை பிரிவு **54**ன் கீழ் திருப்பிக் கொடுக்க கோரலாம்.

**78. மின்னணு வணிகம் இயக்குபவர் சமர்ப்பித்த விவரங்களை வழங்குநர் சமர்ப்பித்த விவரங்களுடன் பொருத்திப் பார்த்தல்.–**

மின்னணு வணிகம் இயக்குபவர் மூலமாக மேற்கொள்ளப்பட்ட வழங்குகைகள் தொடர்பான படிவம் GSTR-8ல் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் பின்வரும் விவரங்களை, படிவம் GSTR-1ல் வழங்குநரால் சமர்ப்பிக்கப்படும் ஒத்திசைவான விவரங்களுடன் பொருத்திப் பார்க்க வேண்டும்,

(a) வழங்குகை செய்யப்பட்ட இடம் உள்ள மாநிலம்; மற்றும்

(b) நிகர வரிவிதிக்கத்தக்க மதிப்பு:

**வரம்புரை** ஆனால், பிரிவு **37**ன் கீழ் குறிக்கப்பட்ட படிவம் GSTR-1 சமர்ப்பிக்குதற்குரிய காலக் கெடுவினை நீட்டிக்கும்போதும், மேற்குறிப்பிட்ட விவரங்களை பொருந்தும் நாளையும் அதற்கிணங்க நீட்டிக்க வேண்டும்:

**மேலும் வரம்புரை:** மன்றத்தின் பரிந்துரையின்பேரில், ஆணையர் உத்திரவின் மூலமாக, அத்தகைய நாளினை அதில் குறிப்பிட்டு, பொருந்தும் நாளை நீட்டிக்கலாம்.

**79. மின்னணு வணிகம் இயக்குபவர் மற்றும் வழங்குநபர் சமர்ப்பித்த விவரங்களின் முரண்பாட்டை தெரிவித்தலும் மற்றும் திருத்துதலும்.-**

(1) இயக்குபவர் சமர்ப்பித்த விவரங்களுக்கும் வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களுக்கும் உள்ள எந்த ஒரு முரண்பாட்டையும், வழங்குநருக்கு படிவம் GST MIS-3லும், மின்னணு வணிகம் இயக்குபவருக்கு படிவம் GST MIS-4லும், மின்னணு முறையில் பொருத்துதல் மேற்கொண்ட மாதத்தின் கடைசி நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொது நுழை வாயிலில் கிடைக்கச் செய்ய வேண்டும்.

(2) துணை விதி (1) ன் கீழ் எந்த ஒரு முரண்பாடும் கிடைக்கச் செய்யப்பெற்ற ஒரு வழங்குநர், முரண்பாடு விவரங்கள் கிடைக்கச் செய்யப்பெற்ற மாதத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய வெளிநோக்கிய வழங்குகைகள் தொடர்பான அறிக்கையில் தகுந்த திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

(3) துணை விதி (1) ன் கீழ் எந்த ஒரு முரண்பாடும் கிடைக்கச் செய்யப்பெற்ற ஒரு மின்னணு வணிகம் இயக்குபவர், முரண்பாடு விவரங்கள் கிடைக்கச் செய்யப்பெற்ற மாதத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய வெளிநோக்கிய வழங்குகைகள் தொடர்பான அறிக்கையில் தகுந்த திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

(4) துணை விதி (2) அல்லது துணை விதி (3)ன் கீழ் எங்கு முரண்பாடு திருத்தம் செய்யப்படவில்லையோ அங்கு, முரண்பாடு விவரங்கள் கிடைக்கச் செய்யப்பெற்ற ஒரு வழங்குநர், எந்த மாதத்தில் முரண்பாடு விவரங்கள் கிடைக்கச் செய்யப்பெற்றதோ அதற்கு அடுத்த மாதத்திற்கு வெளிநோக்கிய வரிக் கடப்பாட்டுடன் முரண்பாடு அளவிற்கான ஒரு தொகையை சேர்த்து அதனை மின்னணு கடப்பாடு பதிவேட்டில் பற்று வைத்து, அதனை படிவம் GSTR-3ல் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கையில் காணச் செய்திட வேண்டும். மற்றும் பொதுநுழைவு வாயிலில் படிவம் GST MIS-3ல் வெளிநோக்கிய வரிக் கடப்பாட்டுடன் அவ்வாறு சேர்க்கப்பட்டதையும் மற்றும் அதன்மீது செலுத்தத்தக்க வட்டித்தொகையையும் மின்னணு முறையில் வழங்குநருக்கு கிடைக்கச் செய்திட வேண்டும்.

**80. ஆண்டு அறிக்கை.–**

(1) உள்ளீடு சேவை விநியோகிப்பவர் தவிர்த்த எந்த ஒரு பதிவு பெற்ற நபரும், பிரிவு **51** அல்லது பிரிவு **52**ன் கீழ் வரி செலுத்தும் நபர், ஒரு தற்காலிக வரி செலுத்துத்தக்க நபர் மற்றும் ஒரு குடியிராத நபர் பிரிவு **44**ன் உட்பிரிவு **(1)**ல் குறிக்கப்பட்ட ஒரு ஆண்டு அறிக்கையினை படிவம் **GSTR-9**–ல் பொது நுழைவாயிலில் மின்னணு முறையில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ தாக்கல் செய்ய வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், பிரிவு **10**ன் கீழ் வரி செலுத்தும் நபர் படிவம் **GSTR-9A**–ல் ஆண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

(2) பிரிவு **52**ன் கீழ் ஆதாரத்தில் வரி வசூலிக்க வேண்டுறுத்தப்படுகிற ஒவ்வொரு மின்னணு வணிகம் இயக்குபவரும் மேற்சொன்ன பிரிவின் உட்பிரிவு**(5)**ன் கீழ் குறிக்கப்பட்டுள்ள ஆண்டு அறிக்கையினை படிவம் **GSTR-9B**–ல் சமர்ப்பிக்க வேண்டும்.

**(3)** ஒரு நிதியாண்டில் ரூபாய் இரண்டு கோடிக்கு மேல் ஒட்டுமொத்த வழங்குதொகை உள்ள ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும் அவரது கணக்குகளை பிரிவு **35**ன் உட்பிரிவு **(5)**ல் குறிக்கப்பட்டவாறு தணிக்கை செய்து கொள்ள வேண்டும் மற்றும் படிவம் **GSTR-9C**–ல் அவர் ஒரு தணிக்கைசெய்யப்பட்ட ஆண்டு கணக்குகளின் நகல் மற்றும் சான்றிடப்பட்ட ஒத்திசைவு அறிக்கையினை பொது நுழைவாயிலில் மின்னணு முறையில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ தாக்கல் செய்ய வேண்டும்.

**81. இறுதி அறிக்கை.-**

பிரிவு **45**ன் கீழ் இறுதி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுறுத்தப்படுகிற ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும், அத்தனைகய அறிக்கையினை படிவம் **GSTR-10**–ல் பொது நுழைவாயிலில் மின்னணு முறையில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

**82. தனித்த அடையாள எண் கொண்ட நபர்களின் உள்ளீடு வழங்குகைகளின் விவரங்கள்:–**

**(1)** உள்ளீடு வழங்குகைகளின்பேரில் செலுத்தப்பட்ட வரித்தொகையினை திருப்பிக்கொடுக்க கோரும், தனித்த அடையாள எண் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரும், அத்தகைய வரிவிதிக்கத்தக்க சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வழங்குகைகளின் விவரங்களை, அவ்வாறு திருப்பிக் கொடுக்கக் கோரும் விண்ணபத்துடன், படிவம் **GSTR-11**–ல் பொது நுழைவாயிலில் மின்னணு முறையில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ சமர்ப்பிக்க செய்ய வேண்டும்.

**(2)** செலுத்தப்பட்ட வரித்தொகையினை திருப்பிக்கொடுக்க கோரும் நோக்கமல்லாத காரணங்களுக்காக, தனித்த அடையாள எண் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரும், வரிவிதிக்கத்தக்க சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் உட்புற வழங்குகைகளின் விவரங்களை, அ, படிவம் **GSTR-11**–ல் பொது நுழைவாயிலில் மின்னணு முறையில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ சமர்ப்பிக்க செய்ய வேண்டும்.

**83. சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநர் தொடர்பான வரம்புரைகள்.-**

**(1)** **சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநராக பெயர் பதிவு செய்யும் கீழ்க்கண்ட எந்த ஒரு நபரும் படிவம் GST PCT-01**–ல் பொது நுழைவாயிலில் மின்னணு முறையில், நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்படும் உதவி மையங்கள் மூலமாகவோ **ஒரு விண்ணபப்பம் செய்யலாம்,**

(i) இந்தியக் குடிமகனாக இருப்பவர்;

(ii) புத்தி சுவாதீனமுள்ள நபர்;

(iii) நொடித்துப் போனவரான தீர்ப்பளிக்கப்படாதவர்;

(iv) தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்படாதவர்;

மற்றும் கீழ்க்கண்ட வரைமுறைகளை பூர்த்தி செய்பவர், அதாவது:-

(a) இரண்டாண்டுகளுக்குக் குறையாத கால அளவிற்கு, அரசின்கீழ் அவர் பணியாற்றியபோது, அரசிதழ் பதிவு பெற்ற தொகுதி–B அதிகாரியின் படிநிலைக்குக் குறையாத பதவியில், எந்த ஒரு மாநில அரசின் வணிகவரித்துறையில் அல்லது மத்திய கலால் மற்றும் சுங்கத்துறை வாரியத்தில் மற்றும் இந்திய அரசின் வருவாய்த் துறையில், பணியாற்றி ஓய்வு பெற்றி அலுவலராக இருக்கின்றவர்; அல்லது

(b) நடப்பிலுள்ள சட்டத்தின்கீழ் ஐந்து ஆண்டுகளுக்கு குறையாக காலத்திற்கு விற்பனைவரி தொழிலாற்றுநராக பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கிற அல்லது வரி அறிக்கை தயாரிப்பவராக உள்ளவர்;

(c) அவர் கீழ்க்கண்டவற்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்;

(i) தற்போது நடப்பிலுள்ள எந்த ஒரு சட்டத்தின் கீழும் நிறுவப்பட்டுள்ள எந்த ஒரு இந்திய பல்கலைக்கழகத்திலுமிருந்து வணிகவியல், சட்டம், உயர்நிலை தணிக்கையியல் உள்ளிட்ட வங்கியியல் அல்லது வணிக நிருவாகம் அல்லது வணிக மேலாண்மையில் அல்லது அதற்கு சமமான தேர்வில் பட்டம் கொண்ட ஒரு இளநிலை பட்டதாரி அல்லது முதுநிலை பட்டதாரி; அல்லது

(ii) கூறு (i)ல் கூறப்பட்ட பட்டத்திற்கான தேர்வு நிகரானது என்று எந்த ஒரு இந்திய பல்கலைக்கழகத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு அயல் பல்கலைக்கழகத்தின் பட்டத்திற்கான தேர்வு; அல்லது

(iii) இந்த நோக்கத்திற்காக, மன்றத்தின் பரிந்துரையின்பேரில், அரசால் அறிவிக்கப்படும் எந்து ஒரு ஏனைய தேர்வும், அல்லது

(iv) கீழ்க்கண்ட தேர்வுகள் ஏதாவதொன்றில் தேர்ச்சி–

(a) இந்திய பட்டயக் கணக்கர் நிலையத்தின் இறுதித் தேர்வு; அல்லது

(b) இந்திய விலை மதிப்பீட்டுக் கணக்கர் நிலையத்தின் இறுதித் தேர்வு; அல்லது

(c) இந்திய நிறுவன செயலர்கள் நிலையத்தின் இறுதித் தேர்வு.

**(2)** உட்பிரிவு **(1)**ல் குறிக்கப்பட்ட விண்ணப்பத்தினைப் பெற்றதன்பேரில், இதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அவசியமானதென அவர் கருதும் அத்தகைய விசாரணையை மேற்கொண்டபின், விண்ணபதாரரை சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநராக பெயர் பதிவு செய்து மற்றும் அதன் விளைவாக ஒரு சான்றிதழை படிவம் **GST PCT-02**–ல் வழங்கலாம் அல்லது விண்ணப்பதாரரின் விண்ணப்பம் சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநராக பெயர் பதிவு செய்து கொள்வதற்கு தகுதியற்றது என கண்டறியப்பட்டால் நிராகரிக்கலாம்.

**(3)** துணை விதி **(2)** ன் செய்யப்பட்ட பெயர் பதிவு அது நீக்கப்படும் காலம்வரை செல்லத்தக்கதாகும்:

**வரம்புரை:** ஆனால், எந்த ஒரு நபரும், மன்றத்தின் பரிந்துரையின் பேரில், ஆணையரால் அறிவிக்கப்படும் அத்தகைய அதிகார அமைப்பால் அத்தகை காலங்களில் நடத்தப்பெறும் அத்தகைய தேர்வில் தேர்ச்சி பெறாத வரை சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநராக பெயர் பதிவு செய்து கொள்வதற்கு தகுதியற்றவராகிறார்.

**மேலும் வரம்புரை:** உட்பிரிவு **(1)**ன் கூறு **(c)**ல் உள்ள வரம்புரைகளுக்கு பொருந்துகிற எந்த ஒரு நபரும் நியமன நாளிலிருந்து ஒரு ஆண்டுக்குள் அத்தகைய தேர்வில் தேர்ச்சி பெறாதவரை பெயர் பதிவு செய்ய தகுதியற்றவராகிறாார்.

**(4)** சட்டத்தின் எந்த ஒரு நடவடிக்கையிலும், தவறான நடவடிக்கை புரிந்த குற்றவாளி என கண்டறியப்பட்ட எந்த ஒரு சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநரையும், உரிய அலுவலர், படிவம் **GST PCT-03**–ல் அத்தகைய தவறான நடவடிக்கைக்காக விளக்கம் கோரும் ஒரு அறிவிப்பினை அவருக்கு அளிக்கலாம் மற்றும் அவருக்கு முறையான கேட்புரை வாய்ப்பு வழங்கிய பின், படிவம் **GST PCT-04**–ல் அவர் இதுமுதற்கொண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநராக பணியாற்றுவதலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுகிறார் என்ற கட்டளையை ஆணையிடலாம்.

**(5)** துணைவிதி **(4)**ன்கீழ் ஆணை பிறப்பிக்கப்பட்ட எந்த ஒரு நபரும், அத்தகைய ஆணை பிறப்பிக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள், அத்தகைய ஆணையை எதிர்த்து ஆணையரிடம் முறையீடு செய்யலாம்.

**(6)** எந்த ஒரு பதிவு பெற்ற நபரும், அவருடைய விருப்பத்தின் பேரில், பொது நுழைவு வாயிலில் படிவம் **GST PCT-05ல் ஒரு** சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநருக்கும்

அதிகாரமளிக்கலாம் அல்லது எந்த ஒரு காலத்திலும், அத்தகைய அதிகாரத்தினை படிவம் **GST PCT-05ல் திரும்பப் பெறலாம் மற்றும் அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட** சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநர் மேற்சொன்ன அதிகாரத்தில் குறிக்கப்பட்ட அத்தகைய பணிகளை **அதிகாரம் அளிக்கப்பட்ட காலத்தில்** மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

(7) ஒரு பதிவு பெற்ற நபர் சமர்ப்பிக்க வேண்டுறுத்தப்படுகிற ஒரு அறிக்கை, அவரால் அதிகாரமளிக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநரால் எங்கு சமர்ப்பிக்கப்படுகிறதோ, அங்கு பதிவு பெற்ற நபருக்கு ஒரு மின்னஞ்சல் அல்லது குறுந்தகவல் மூலமாக உறுதிசெய்வதை நாட வேண்டும் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை பொது நுழைவு வாயிலில் கிடைக்கச் செய்ய வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், பதிவு பெற்ற நபர் உறுதி செய்வதற்கான வேண்டுகோளுக்கு, அத்தகைய அறிக்கை சமர்ப்பிப்பதற்கு கடைசி நாள் வரை மறுமொழி கூறாத நேர்வில், அதனை சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினை அவர் உறுதி செய்ததாகவே கருதுதல் வேண்டும்.

(8) ஒரு சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநர் பின்வரும் அனைத்து அல்லது எந்த ஒரு நடவடிக்கையினையும் ஒரு பதிவு பெற்ற நபர் சார்பாக, அவ்வாறு அவருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருப்பின், மேற்கொள்ளலாம்—

(a) உள்புற மற்றும் வெளிநோக்கிய வழங்குகைகள் பற்றிய விவரங்கள் சமர்ப்பித்தல்;

(b) மாதாந்திர, காலாண்டு, ஆண்டு அல்லது இறுதி அறிக்கையினை சமர்ப்பித்தல்;

(c) மின்னணு பணப் பேரேட்டில் வரவு வைப்பதற்காக வைப்பீடு மேற்கொள்ளுதல்;

(d) திருப்பிக் கொடுக்கும் கோரிக்கையை தாக்கல் செய்தல் மற்றும்; மற்றும்

(e) பதிவு நீக்கம் அல்லது திருத்தம் செய்வதற்கான ஒரு விண்ணப்பத்தினை தாக்கல் செய்தல்:

**வரம்புரை:** ஆனால், ஒரு பதிவு பெற்ற நபரால் அதிகமாரளிக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநரால் பதிவு நீக்கம் அல்லது திருத்தம் செய்வதற்கான ஒரு விண்ணப்பம் அல்லது திருப்பிக் கொடுக்கும் கோரிக்கைக்கான எந்த ஒரு விண்ணப்பமும் சமர்ப்பிக்க்கப்படுகிறதோ அதை, பதிவு பெற்ற நபரிடம் உறுதிசெய்வதை நாட வேண்டும் மற்றும் மேற்சொன்ன தொழிலாற்றுநரால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினை பதிவு பெற்ற நபருக்கு பொது நுழைவு வாயிலில் கிடைக்கச் செய்ய வேண்டும். மற்றும் அத்தகைய விண்ணப்பத்தின் பேரில் பதிவு பெற்ற நபர் அதற்கான அவருடைய ஒப்புகையை வழங்கும்வரை நடவடிக்கையேதும் எடுக்கக் கூடாது.

(9) சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநர் மூலமாக தனது அறிக்கையை சமர்ப்பிக்க விரும்பும் எந்த ஒரு பதிவு பெற்ற நபரும் –

(a) படிவம் **GST PCT-05ல் எந்த ஒரு** சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநருக்கும் தனது அறிக்கையினை தயாரிக்க மற்றும் சமர்ப்பிப்பதற்கான ஒப்புகையை வழங்க வேண்டும். மற்றும்

(b) சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநர் தயாரித்த அறிக்கையினை சமர்ப்பிப்பதை உறுதி செய்யும் முன், அறிக்கையின் குறிப்பிடப்பட்ட விவரங்கள் உண்மையானது மற்றும் சரியானது என்பதை உறுதி செய்ய வேண்டும்.

(10) சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநர் –

(a) அறிக்கைகளை தகுந்த ஊக்கத்துடன் தயார் செய்தல் வேண்டும்; மற்றும்

(b) அவரால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளில் மின்னணு முறையில் கையொப்பம் பதிக்க வேண்டும் அல்லது மின்னணு முறையில் அவரது அறிமுக ஆவணங்களுடன் சரிபார்க்க வேண்டும்.

**(11)** வேறொரு மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தில் பெயர் பதிவு செய்த ஒரு சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநரை துணை விதி **(8)**ன் குறிக்கப்பட்ட நோக்கங்களுக்காக மாநிலத்தில்/ யூனியன் பிரதேசத்தில் பெயர் பதிவு செய்யப்பட்டவராக நடத்தப்பட வேண்டும்.

**84. வருகை தரும் நோக்கங்களுக்கான வரையறைகள்.–**

**(1)** எந்த ஒரு அதிகார அமைப்பு முன்பும், இந்தச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கை தொடர்பாகவும், எந்த ஒரு பதிவு பெற்ற அல்லது பதிவு பெறாத நபரின் சார்பாகவும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநராக, அவர் விதி **83**ன் கீழ் பெயர்ப் பதிவு செய்யப்படாதவரை வருகை தரக் கூடாது.

**(2)** எந்த ஒரு பதிவு பெற்ற அல்லது பதிவு பெறாத நபரின் சார்பாக, எந்த ஒரு அதிகார அமைப்பு முன்பும், இந்தச் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கை தொடர்பாகவும், வருகை தரும் ஒரு சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தொழிலாற்றுநர், வேண்டுறுத்தப்படும்போது, அத்தகைய நபர் படிவம் **GST PCT-05ல்** வழங்கிய அதிகாரமளிப்பு ஆவணத்தின் நகலை காண்பிக்க வேண்டும்.

## அத்தியாயம் IX

## வரி செலுத்துதல்

**85. மின்னணு கடப்பாடு பதிவேடு.–**

**(1)** ஒவ்வொரு நபரும் செலுத்த வேண்டிய வரி, வட்டி, தண்டத்தொகை, காலதாமத கட்டணம் மற்றும் பிற தொகைகளுக்கு பொது நுழைவாயிலில், பிரிவு **49** உட்பிரிவு **7–**ன் கீழ் குறிப்பிடப்பட்ட GST PMT–01 என்ற படிவத்தில் பராமரிக்கப்படும். சொல்லப்பட்ட அப்பதிவேட்டில் அந்த நபர் செலுத்த வேண்டிய தொகைகள் பற்று வைக்கப்படும்.

**(2)** ஒரு நபரின் மின்னணு கடப்பாடு பதிவேட்டில் கீழ்க்கண்ட பற்று வைக்கப்படும்.
(a) சொல்லப்பட்ட நபரின் மாதாந்திர விவர அறிக்கையின் படி செலுத்த வேண்டிய வரி, வட்டி அல்லது தாமத கட்டணம் அல்லது செலுத்த வேண்டிய பிற தொகை;
(b) உரிய அதிகாரியின் ஆணை மூலமாக நிர்ணயிக்கப்பட்ட அல்லது சொல்லப்பட்ட நபரால் உறுதி செய்யப்பட்ட வரி, வட்டி தாமத கட்டணம் அல்லது பிற தொகைகள்;
(c) பிரிவு **42** அல்லது **43** அல்லது **50** ன் படி ஒத்திசைவின் விளைவாக, செலுத்த வேண்டிய வரி மற்றும் வட்டி;
(d) அவ்வப்பொழுது சேரும் எந்தவொரு வட்டியும் .

**(3)** பிரிவு **49**க்கு உட்பட்டு ஒவ்வொரு பதிவு பெற்ற நபரால் அறிவிக்கையின் படி கடப்பாடுக்காக செலுத்தப்பட்ட தொகை விதி **86**ன் படி பராமரிக்கப்படும் மின்னணு வரவு பதிவேட்டில் அல்லது விதி **87**ன் படி பராமரிக்கப்படும் மின்னணு பண பதிவேட்டில் பற்று வைக்கப்பட்டு மின்னணு கடப்பாடு பதிவேட்டில் உரிய வரவு வைக்கப்படும்.

**(4)** பிரிவு **51**ன்படி பிடித்தம் செய்யப்பட்ட தொகை அல்லது பிரிவு **52**ன் படி வசூல் செய்யப்பட்ட தொகை அல்லது எதிரிடை கட்டணமாக செலுத்த வேண்டிய தொகை அல்லது பிரிவு **10**ன் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகை அல்லது வரி, வட்டி, தண்டத் தொகை கட்டணம் அல்லது பிற தொகைகள் விதி **87**ன் படி பராமரிக்கப்படும் மின்னணு பணபதிவேட்டில் பற்று வைக்கப்பட்டு மின்னணு கடப்பாடு பதிவேட்டில் வரவு வைத்து பராமரிக்கப்படும்.

**(5)** மின்னணு கடப்பாடு பதிவேட்டில் கேட்புக்காக பற்று வைக்கப்பட்ட தொகையை, மேல்முறையீட்டு ஆணையம் அல்லது மேல் முறையீட்டு தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றம்

வழங்கிய நிவாரண அளவுக்கான தொகை குறைக்கப்பட்டு, அது மின்னணு பண பதிவேட்டில் வரவு வைக்கப்படும்.

(6) அறிவிப்பு அல்லது ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரி வட்டி மற்றும் தண்டத்தொகை, ஒரு வரிவிதிக்கத்தக்க நபர் செலுத்தும் நேர்வில் விதிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட வேண்டிய தண்டத் தொகை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ குறைக்கப்படும் மற்றும் மின்னணு கடப்பாடு பதிவேட்டில் உரிய வரவு வைக்கப்படும்.

(7) பதிவுபெற்ற நபர் தனது மின்னணு கடப்பாடு பதிவேட்டில் காணப்பெறும் குறைபாடுகளை, GST PMT–04 என்ற படிவத்தில் பொது நுழைவாயில் மூலமாக அப்பொருள் தொடர்பான அதிகார வரம்பு செலுத்தும அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும்.

**86. மின்னணு வரவு பதிவேடு**

(1) உள்ளீட்டு வரி வரவு பெற தகுதியுடைய ஒவ்வொரு பதிவு பெற்ற நபருக்கும் GST PMT–02 என்ற படிவத்தில் பொது நுழைவாயில் மின்னணு வரவு பதிவேடு பராமரிக்கப்படும். ஒவ்வொரு உள்ளீட்டு வரி வரவு கோரிக்கையும் வரவு வைக்கப்படும்.

(2) பிரிவு 49ன் படி எந்த கடப்பாட்டையும் விடுவிக்கும் அளவிற்கு, மின்னணு வரவுப் பதிவேடு பற்று வைக்கப்படும்.

(3) பிரிவு 54ன் படி துய்யப்பட்டதை உள்ளீட்டு வரி வரவாக திருப்புத் தொகையாக கோரும் அளவிற்கு, மின்னணு வரவு பதிவேடு பற்று வைக்கப்படும்.

(4) திருப்புத் தொகையாக கோரும் கோரிக்கை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ தள்ளுபடி செய்யப்பட்டால் துணை விதி 3ன் படி பற்று வைக்கப்பட்ட தொகை தள்ளுபடி செய்யப்பட்ட அளவிற்கு, உரிய அலுவரால் GST PMT–03 என்ற படிவத்தில் ஆணை வழங்கி மின்னணு வரவு பதிவேட்டில் மறுபடிவும் வரவு வைக்கப்படும்.

(5) இவ்விதிகளில் வரையறை செய்யப்பட்டவை தவிர்த்து மின்னணு வரவு பதிவேட்டால் எந்த சூழ்நிலையிலும் நேரடியாக வரவு வைக்கப்பட மாட்டாது.

(6) பதிவு பெற்ற நபர் மின்னணு வரவு பதிவேட்டால் காணப்பெறும் குறைபாடுகளை GST PMT–04 என்ற படிவத்தில் பொது நுழைவாயில் மூலமாக அப்பொருள் தொடர்பான அதிகார வரம்பு செலுத்தும் அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும்.

விளக்கம் .– இவ்விதியின் நோக்கத்திற்காக, மேல் முறையீடு இறுதியாக தள்ளுபடி செய்யப்பட்டால் அல்லது மனுதாரர் எழுத்து மூலமாக மேல்முறையீடு தாக்கல் செய்யமாட்டேன் என உறுதிமொழி அளித்தால், திருப்பிக் கொடுப்பு தள்ளுபடி செய்யட்டதாக கருதப்படும்.

**87. மின்னணு பணப்பதிவேடு.-**

(1) வரி, வட்டி, தண்டத்தொகை, தாமத கட்டணம் அல்லது பிற எந்த தொகையும் செலுத்த கடப்பாடுடைய, எந்த நபருக்கும் பிரிவு 49 உட்பிரிவு 1ன் படி GST PMT –05 என்ற படிவத்தில் பொது நுழைவாயிலில் மின்னணு பணப் பதிவேடு பராமரிக்கப்படும் அதில் தொகை செலுத்தும் போது வரவு வைத்தும் மற்றும் அதிலிருந்து வரி வட்டி தண்டத்தொகை, தாமத கட்டணம் அல்லது பிற தொகை செலுத்துகை செய்யும்போது பற்று வைத்தும் பராமரிக்கப்படும்.

(2) பொது நுழைவாயில் GST PMT –06 என்ற படிவத்தில் செலுத்து சீட்டு, எந்தவொரு நபர் அல்லது அந்த நபரின் சார்பாக உருவாக்கி, அதில் வரி, வட்டி, தண்டத்தொகை அல்லது பிற எந்த தொகையாக வரவு வைக்க வேண்டிய விபரம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(3) துணை விதி 2ன் கீழ் வரவு கீழ்க்கண்ட வழிமுறையில் வைக்கலாம், அதாவது:-

(i) அங்கீகரிக்கப்பட்ட இணைய வங்கி சேவை மூலமாக;

(ii) அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் கடன் மற்றும் பற்று அட்டை மூலமாக;

**(iii)** எந்தவொரு வங்கியின் மூலம் தேசிய மின்னணு நிதி மாற்றம் (NEFT) அல்லது அசல் நேர மொத்த தீர்வு (RTGS) ; அல்லது

**(iv)** ஒவ்வொரு செலுத்து சீட்டு அல்லது வரி காலத்திற்கு ரூ.10000/– மிகைப்படாது அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் பணம் பெறும் மேடையில் பணம் காசோலை அல்லது வரைவு ஓலை மூலமாக:

வரம்புரை: ஆனால், வங்கி பணம் பெறும் மேடையில் ஒரு செலுத்துச் சீட்டு மூலம் செலுத்துகைக்கான ரூ.10000/– என்கிற கட்டுப்பாடு கீழ்க்கண்டவைகளுக்கு பொருந்தாது–

(a) அரசு துறை அல்லது ஆணையரால் அறிவிக்கப்பட்ட நபரின் எந்தவொரு வைப்புத் தொகைக்கும்;

(b) பதிவு பெற்ற அல்லது பதிவு பெறாத நபரிடமிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க அதில் அசையும் மற்றும் அசையா சொத்துகளில் விற்பனை மற்றும் பற்றுகை நடவடிக்கையும் அடங்கும், அதிகாரம் அளிக்கப்பட்ட உரிய அலுவலர் அல்லது எந்தவொரு அலுவலர்;

(c) எந்தவொரு விசாரணை அல்லது செயலாக்க நடவடிக்கையின்போது, உரிய அலுவலரால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு அலுவலரால் வசூலிக்கப்பட்ட பணம், காசோலை அல்லது வரைவு ஓலை அல்லது எந்தவொரு தற்காலிக வைப்புத் தொகை:

மேலும் வரம்புரையாக, பொது நுழைவாயிலில் GST PMT –06 என்ற படிவத்தில் உருவாக்கப்பட்ட செலுத்து சீட்டு செல்லத்தக்க காலம் 15 தினங்கள்.

விளக்கம்.– செலுத்து சீட்டு வாயிலாக, செலுத்தப்படும் தொகைக்கு தரகு ஏதாவது செலுத்த வேண்டியிருந்தால் அதை செலுத்துகை செய்யும் நபரே ஏற்க வேண்டும்.

**(4)** பதிவு பெறாத நபர் பொது நுழைவாயிலில் தற்காலிக அடையாள எண்ணை பெற்று அதன் அடிப்படையில் செலுத்துகை செய்ய வேண்டும்.

**(5)** வங்கி மூலமாக NEFT அல்லது (RTGS) முறையாக செலுத்துகை செய்யப்பட்டால் பொது நுழைவாயிலில் செலுத்து சீட்டு உடன் உரிமைக் கட்டளை பெற்று அதனை செலுத்துகை செய்யப்படும் வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும்:

வரம்புரை: ஆனால், உரிமை கட்டளை பொது நுழைவாயிலில் பெற்ற 15 நாட்கள் வரை செல்லத்தக்கதாக இருக்கும்.

**(6)** அதிகாரமளிக்கப்பட்ட வங்கியில் பராமரிக்கப்படும் அரசு கணக்கில் வரவு வெற்றிகரமாக வைக்கப்பட்ட பிறகு செலுத்து சீட்டு அடையாள எண் (CIN) வசூலிக்கும் வங்கியில் உருவாக்கப்படும். ஆதை செலுத்து சீட்டில் குறிப்பிட வேண்டும்.

**(7)** செலுத்து சீட்டு அடையாள எண் (CIN) கிடைக்கப்பெற்றவுடன் செலுத்தப்பட்ட தொகை பொது நுழைவாயிலில் பராமரிக்கப்படும் மின்னணு பணப் பதிவேட்டில் வரவு வைக்கப்பட்டு பொது நுழைவாயில் மூலம் ரசீது கிடைக்கபெறும்.

**(8)** செலுத்து சீட்டு அடையாள எண் (CIN) உருவாக்கப்படாமல் அல்லது உருவாக்கப்பட்டு பொது நுழைவாயிலில் அனுப்பப்படாமல், உரிய நபரின் அல்லது அவரது சார்பாக செலுத்துகை செய்த நபரின் வங்கி கணக்கில் பற்று வைக்கப்பட்டால், அந்த நபர் மின்னணு வழியாக GST PMT –07 என்ற படிவத்தில் பொது நுழைவாயில் மூலமாகவோ அல்லது எந்த மின்னணு நுழைவாயில் வழியாக செலுத்துகை மேற்கொள்ளப்பட்டதோ அதற்கு முறையீடு செய்யலாம்.

**(9)** பிரிவு 51ன் படி பிடித்தம் செய்யப்பட்ட அல்லது பிரிவு 52ன் படி வசூல் செய்யப்பட்ட தொகையை, GSTR –02 என்ற படிவத்தில் எந்த பதிவு பெற்ற வரி விதிக்கத்தக்க நபரிடமிருந்த பிடித்தம் செய்யப்பட்டதோ அல்லது வசூல் செய்யப்பட்டதோ, அவர் கோரினால்,

அந்த தொகை விதி–87 வரையறையின்படி அந்நபரின் மின்னணு பண பதிவேட்டில் வரவு வைக்கப்படும்.

(10) மின்னணு பண பதிவேட்டின் தொகை, திருப்பிக் கோரும் நேர்வில், மின்னணு பண பதிவேட்டில் திருப்பி கோரியத் தொகை பற்று வைக்கப்படும்.

(11) கோரிய திருப்பிக் கொடுப்பு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தள்ளுபடி செய்யப்பட்டால் துணை விதி (10)ன் படி பற்று வைக்கப்பட்டத் தொகை திருப்பிக் கொடுப்பு தள்ளுபடி செய்யப்பட்ட அளவுக்கு உரிய அலுவலரால் GST PMT –03 என்ற படிவத்தில் ஆணை வழங்கப்பட்டு மறுபடியும் மின்னணு பணப் பதிவேட்டில் வரவு வைக்கப்படும்.

(12) ஒரு பதிவு பெற்ற நபர், தனது மின்னணு பணப் பதிவேட்டில் குறைபாடுகள் இருக்க கண்டால் அதை GST PMT–04 என்ற படிவத்தில் அப் பொருள் தொடர்பாக ஆட்சி வரம்பு பெற்ற உரிய அலுவலருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

விளக்கம் 1.– மேல் முறையீடு இறுதியாக தள்ளுபடி செய்யப்பட்டால், திருப்பிக் கொடுப்பு தள்ளுபடி செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

விளக்கம் 2.– – இவ்விதியில் நோக்கத்திற்காக, மேல் முறையீடு இறுதியாக தள்ளுபடி செய்யப்பட்டால் அல்லது மனுதாரர் எழுத்து மூலமாக மேல்முறையீடு தாக்கல் செய்யமாட்டேன் என உறுதிமொழி அளித்தால், திருப்பிக் கொடுப்பு தள்ளுபடி செய்யட்டதாக கருதப்படும்.

**88. ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் அடையாள எண்.-**

(1) மின்னணு வரவு பதிவேடு, அல்லது பணப்பதிவேட்டால் வைக்கப்படும் ஒவ்வொரு வரவு அல்லது பற்றுக்கு ஒரு தனித்தன்மை வாய்ந்த அடையாள எண் பொது நுழைவாயில் வழியாக உருவாக்கப்படும்.

(2) ஒரு கடப்பாட்டை விடுவிக்கும் போது தனித்தன்மை வாய்ந்த அடையாள எண் மின்னணு கடப்பாடு பதிவேட்டால் தொடர்பான பதிவில் குறிப்பிடப்படும்.

(3) மின்னணு கடப்பாடு பதிவேட்டில் வைக்கப்படும் ஒவ்வொரு வரவுக்கு பொது நுழைவாயிலில் தனித்தன்மை வாய்ந்த அடையாள எண், துணை விதி 2ல் உட்படக்கூடிய பதிவுகளை தவிர்த்து மற்றவைக்கு உருவாக்கப்படும்.

## <u>அத்தியாயம் X</u>
## <u>திருப்பிக் கொடுப்பு</u>

**89. வரி, வட்டி, தண்டத்தொகை, கட்டணம் அல்லது பிற தொகை திருப்ப கோரும் விண்ணப்பம்.–**

(1) பிரிவு 55ன் கீழ் அறிவிக்கை வழங்கப்பட்ட நபர்கள் தவிர வரி, வட்டி, தண்டத்தொகை கட்டணம் அல்லது பிற தொகையும் திருப்பி கொடுக்கக் கோரும் நபர் எவரும், இந்தியாவிற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த வரியினை திரும்ப கோருதல் நீங்கலாக, GST RFD-01, என்ற படிவத்தில் மின்னணு மூலமாக பொது நுழைவாயிலில் நேரடியாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்பட்ட சேவை மையம் மூலமாகவோ தாக்கல் செய்யலாம்:

வரம்புரை: ஆனால், பிரிவு 49 உட்பிரிவு 6ன் படி மின்னணு பண பேரேட்டில் மீதத்தொகை எதனையும் உரிய வரி காலத்தில் GSTR-3, அல்லது GSTR-4 அல்லது GSTR-7 என்ற படிவங்களில் இதில் எது பொருத்தமோ அதை தாக்கல் செய்யும் அறிவிக்கை வாயிலாக கோரலாம்:

மேலும் வரம்புரை: சிறப்பு பொருளாதார மண்டலங்களில் உள்ள நிறுவனத்திற்கு அல்லது சிறப்பு பொருளாதார மண்டல மேம்பாட்டாளருக்கு வழங்குகை மேற்கொண்ட நேர்வுகளில் திருப்பிக் கொடுப்பு விண்ணப்பங்கள் கீழ்க்கண்டவாறு தாக்கல் செய்ய வேண்டும்–

(a) வழங்கல் சிறப்பு பொருளாதார மண்டலத்தின் அங்கீகாரம் அளிக்கப்பட்ட பணிக்கானது என குறிப்பிடப்பட்ட மண்டல அலுவலர் முழுமையாக ஒப்புதல் வழங்கப்பட்ட பிறகே, சரக்கு வழங்கல் மேற்கொண்ட வழங்குநர் திருப்பி கோரும் விண்ணப்பத்தை தாக்கல் செய்ய வேண்டும்;

(b) அவ்வழங்கலில் சிறப்பு பொருளாதார மண்டலத்தின் அங்கீகாரம் அளிக்கப்பட்ட பணிக்காக பெறப்பட்டது என உரிய சான்றுடன், குறிப்பிடப்பட்ட மண்டல அலுவலர் ஒப்புதல் வழங்கப்பட்ட பிறகே, சேவை வழங்கல் மேற்கொண்ட வழங்குநர் திருப்பி கோரும் விண்ணப்பத்தை தாக்கல் செய்ய வேண்டும்:

மேலும் வரம்புரையாக: நிகர்நிலை ஏற்றுமதியாக கருதப்பட்ட வழங்கலில், வழங்கலை பெற்றுக்கொண்டவர் விண்ணப்பம் தாக்கல் செய்ய வேண்டும்:

மேலும் வரம்புரை: பிரிவு 27இன் கீழ் முன் வரியாக செலுத்தப்பட்ட தொகையை திருப்பி கோரும் விண்ணப்பதாரர் செலுத்த வேண்டிய வரியை நேர் செய்த பிறகு, தேவைப்படும் கடைசி அறிக்கையிலோ அல்லது கடைசி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின்னரோ தொகையை கோருதல் வேண்டும்.

2. விண்ணப்பதாரருக்கு தொகை திருப்பிக் கொடுக்க வேண்டியது என உறுதி செய்ய துணை விதி (1)இன் படி தாக்கல் செய்யப்படும் விண்ணப்பம், படிவம் GST RFD-01- உடன் சேர்த்து அளிக்கவும் வேண்டிய சான்றுகள் முறையே:-

(a) உரிய அலுவலர் அல்லது மேல்முறையீட்டு அமைப்பு அல்லது மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அல்லது நீதி மன்றத்தின் ஆணைகள் வாயிலாக எழக்கூடிய திருப்பி கொடுப்பதற்கான ஆணை எண் மற்றும் அதன் நகல் அல்லது பிரிவு 107 உட்பிரிவு (6) மற்றும் பிரிவு 112 உட்பிரிவு (8)இன் திரும்ப செலுத்த வேண்டியதாக குறிப்பிடப்பட்டுள்ள செலுத்து தொகை எண்.

(b) ஏற்றுமதி தொடர்பான திருப்பி கொடுப்புக்கு கப்பல் பயண பட்டியல்கள் அல்லது ஏற்றுமதி பட்டியல்கள் மற்றும் உரிய ஏற்றுமதி விலைப்பட்டியல்களின் எண்கள் மற்றும் தேதி ஆகியவை அடங்கிய விவரப்பட்டி;

(c) சேவை ஏற்றுமதி தொடர்பான திருப்பிக் கொடுப்புக்கு, விலைப்பட்டியல் எண் மற்றும் தேதி மற்றும் உரிய வங்கியில் செலுத்துகை பெறப்பட்ட சான்று அல்லது அயல்நாட்டு உட்புற செலுத்துகை சான்று இவற்றில் எவை, பொருந்துமோ அவை அடங்கிய விவரப்பட்டி;

(d) சிறப்பு பொருளாதார மண்டலத்திலுள்ள நிறுவனம் அல்லது சிறப்பு பொருளாதார மண்டல மேம்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட சரக்கு வழங்கலில் விலைப்பட்டியல் விதி–46இல் குறித்துரைக்கப்பட்ட விலைப்பட்டியல் எண் மற்றும் தேதியுடன், உட்பிரிவு (1)இன் மூன்றாவது வரம்புரையில் குறிக்கப்பட்ட ஒப்புதல் பெறப்பட்ட ஆதாரம் ஆகியவை அடங்கிய விவரப்பட்டி;

(e) சிறப்பு பொருளாதார மண்டலத்திலுள்ள நிறுவனம் அல்லது சிறப்பு பொருளாதார மண்டல மேம்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட சேவை வழங்கலில் திரும்பச் செலுத்துகை இருக்கும் நேர்வில் விலைப்பட்டியல் எண் மற்றும் தேதி, உட்பிரிவு (1)–இன் இரண்டாவது வரம்புரையில் குறிக்கப்பட்ட ஒப்புதல் பெறப்பட்ட ஆதாரம் மற்றும் செலுத்துகை விவரத்துடன், பெறுநரால், 2005 ஆம் ஆண்டு சிறப்பு பொருளாதார மண்டலச் சட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட பணிக்காக வழங்குநரால் வழங்கப்பட்ட வழங்கல் என்பதற்கான ஆதாரம் ஆகியவை அடங்கிய விவரப்பட்டி;

(f) சிறப்பு பொருளாதார மண்டல நிறுவனம் அல்லது சிறப்பு பொருளாதார மண்டல மேம்பாட்டாளர்களுக்கு சரக்கு அல்லது சேவை வழங்கலில், திருப்பி கொடுப்பு வரக்கூடிய நேர்வில், சிறப்பு பொருளாதார மண்டலங்களின் நிறுவனம் அல்லது சிறப்பு பொருளாதார மேம்பாட்டாளர்கள் சரக்கு அல்லது சேவை அல்லது இவையிரண்டின் வழங்கல் மீது செலுத்திய வரியை, உள்ளீட்டு வரி வரவாக துய்க்கவில்லை என்ற உறுதி மொழி;

(g) ஏற்றுமதி செய்யப்பட்டதாக கருதப்படுபவை தொடர்பான திருப்பி கொடுப்பு இருக்கும் நேர்வில், இது தொடர்பாக அறிவிக்கையிடப்பட்ட, விலைப்பட்டியல் எண் மற்றும் தேதியுடன் கூடிய பிற ஆதாரங்கள்;

(h) உள்ளீடுகள் மீதான வரி விகிதமானது (வரி விகிதம் ஒன்றுமில்லாத அல்லது விலக்களிக்கப்பட்ட வழங்குகை தவிர) பிற வெளியீட்டு வழங்குகை மீதான வரி விகிதத்தை விட அதிகமாக இருக்கும் காரணமாக வரவு திரண்டிருக்கிறவிடத்து, அந்த துய்க்கப்படாத உள்ளீட்டு வரிவரவை 54 ஆம் பிரிவின், உட்பிரிவு (3)இன் படி திருப்பி கொடுக்க வேண்டிய நேர்வில், வரிக்காலத்தில் பெறப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட விலைப்பட்டியல் எண் மற்றும் தேதி அடங்கிய விவரப்பட்டி;

(i) திருப்பி கொடுப்பு தற்காலிக, வரி விதிப்பை இறுதி செய்யும் நேர்வில், திருப்புத் தொகை வழங்கவேண்டும் எனில் இறுதி வரி விதிப்பின் இறுதி ஆணை எண் மற்றும் ஆணை நகல்;

(j) உள்மாநில வழங்கலாக கருதப்பட்டு பின் அவை மாநிலங்களுக்கு இடையிலான வழங்கல் என தீர்மானிக்கப்பட்ட இனங்களில், அவ்வழங்கலில் அடங்கிய விவரப்பட்டி;

(k) அதிகமாக செலுத்திய வரியை திருப்பி கோரும் இனங்களில் அதன் விவரங்கள் அடங்கிய விவரப்பட்டி;

(l) கோரப்பட்ட, திருப்பிக் கொடுப்பு ரூபாய் இரண்டு லட்சத்தை தாண்டாத நேர்வில் வரி, வட்டி மற்றும் பிற தொகைகள் பிற நபர் எவருக்கும் சென்றடையவில்லை என்பதற்கான உறுதிமொழி;

வரம்புரை: ஆனால், அத்தகைய உறுதிமொழி பிரவு 54இன் உட்பிரிவு (8)இன் கூறு (a) அல்லது கூறு (b) அல்லது கூறு (c) அல்லது கூறு (d) ஆகிய இனங்களுக்கு தேவைப்படாது;

(m) திருப்பி கொடுப்பு ரூபாய் இரண்டு லட்சத்திற்கு அதிகமாக இருக்கும், நேர்வில், பட்டய கணக்கர் அல்லது விலை மதிப்பீட்டு கணக்கர் அவர்களால் வரி, வட்டி மற்றும் பிற தொகையின் நிகழ்வு பிற நபர் எவருக்கும் சென்றடையவில்லை என்பதற்கான GST RFD-01 என்ற படிவங்களின் இணைப்பு –2இன்படி வழங்கப்பட்ட சான்று:

வரம்புரை: ஆனால், அத்தகைய உறுதிமொழி பிரிவு 54இன் உட்பிரிவு (8)இன் கூறு (a) அல்லது கூறு (b) அல்லது கூறு (c) அல்லது கூறு (d) ஆகிய இனங்களுக்கு தேவைப்படாது;

விளக்கம்:– இவ் விதியின் நோக்கத்திற்காக-

(i) பிரிவு 54இன் உட்பிரிவு 8இன் கூறு (c)இல் குறிக்கப்பட்ட திருப்பி கொடுப்பில் விலைப்பட்டியல் என்பது பிரிவு 31இன் படியுள்ள விலைப்பட்டியல் என்பதைக் குறிக்கும்;
(ii) வரித்தொகை பெறுநரிடமிருந்து மீட்கப்படுகின்றபோது, வரி நிகழ்வு நுகர்வோர் வரையில் சென்று அடைந்ததாகக் கருதப்படும்.

(3) உள்ளீட்டு வரிவரவை திருப்பி கொடுக்கக் கோரும் இனங்களில் மின்னணு வரவு பதிவேடுகளில் திருப்பி கோரும் அளவிற்கான உள்ளீட்டு வரி வரவு பற்று வைக்கப்படும்.

(4) ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம் 2017, (மத்திய சட்டம் 13/2017) பிரிவு 16 உட்பிரிவு (3)இன் படி பிணையம் அல்லது உறுதி மொழி கடிதம் பெற்று வரி கட்டாமல், பூஜ்ய விகித சரக்கு அல்லது சேவை அல்லது இவையிரண்டின் வழங்கல்களில், திருப்பி கொடுப்பு கீழ்க்கண்ட சூத்திரப்படி கணக்கிட்டு வழங்கப்பட வேண்டும்.

திருப்பி கொடுப்பு = (பூஜ்ய விகித சரக்கு வழங்குகை தொகை + பூஜ்ய விகித சேவை வழங்குகை தொகை) x நிகர உள்ளீட்டு வரி வரவு / சரி செய்யப்பட்ட மொத்த வழங்குககை தொகை.

இதில்–

(A) ''திருப்பி கொடுப்பு'' என்பது உச்சபட்சம் என்று கொள்ளக்கூடிய திருப்பி கொடுப்பு;

(B) ''நிகர உள்ளீட்டு வரி வரவு'' என்பது உரிய காலத்திற்கான துய்க்கப்பட்ட உள்ளீடு மற்றும் உள்ளீட்டு சேவைகள், மீதான உள்ளீட்டு வரி வரவு;

(C) ''பூஜ்ய விகித சரக்கு வழங்குகை தொகை'' என்பது உரிய காலத்திற்கான வரி செலுத்தாமல் பிணையம் அல்லது உறுதி மொழி கடிதம் பெற்று பூஜ்ய விகித சரக்கு வழங்குகை தொகை;

(D) பூஜ்ய விகித சேவை வழங்குகை தொகை என்பது உரிய காலத்திற்கான வரி செலுத்தாமல், பிணையம் அல்லது உறுதி மொழி கடிதம் பெற்று, கீழ்க்கண்ட முறைப்படி கணக்கிடப்படும் பூஜ்ய விகித சேவை வழங்குகை தொகை, அதாவது:–

உரிய காலத்திற்கான பூஜ்ய விகித சேவை வழங்குகை தொடர்பாக பெறப்பட்ட செலுத்துகை மற்றும் பூஜ்ய விகித சேவை வழங்குகைக்காக, முன்பணமாக உரிய காரலத்திற்கு முன்பாக பெறப்பட்ட செலுத்துகையின் கூட்டுத் தொகையில், உரிய காலத்தில் பூஜ்ய விகித வழங்கல் செய்யப்படாமல் முன்பணமாக பெறப்பட்ட செலுத்துகையை குறைத்து பூஜ்ய விகித வழங்குகை தொகை கணக்கிடப்படும்;

(E) ''சரி செய்யப்பட்ட மொத்த வழங்குகை தொகை'' என்பது பிரிவு (2) உட்பிரிவு 112இல் விளக்கப்பட்ட மாநிலத்தின் உரிய காலத்திற்கான வழங்குகை தொகை அல்லது மத்திய நேரடி ஆட்சிப்பகுதி வழங்ககை தொகையில், பூஜ்ய வரி வழங்குகை நீங்களாக வரி விலக்கு அளிக்கப்பட்ட வழங்குகை தொகையை கழித்து கணக்கிடப்படும்;

(F) ''காலம்'' என்பது கோரிக்கை தாக்கல் செய்யப்படும் காலத்தைக் குறிக்கும்:-

(5) தலைகீழ் அமைப்பின் காரணமாக திருப்பி கொடுப்புகள் இனங்களில், உள்ளீட்டு வரி வரவுகள் பின்வரும் சூத்திரத்தின்படி வழங்கப்பட வேண்டும்.

அதிகபட்ச திருப்பி கொடுப்புகள் தொகை = {(சரக்கு வழங்களின் தலைகீழ் வழங்கல் தொகை மதிப்பு) x நிகர உள்ளீட்டு வரி வரவு ÷ சரி செய்யப்பட்ட மொத்த வழங்கல் தொகை} - சரக்கு வழங்களின் தலைகீழ் வழங்கல் தொகையில் செலுத்த வேண்டிய வரி

விளக்கம்.- இந்த துணை விதியின் நோக்கங்களுக்காக, "நிகர உள்ளீட்டு வரி வரவு" மற்றும் "சரி செய்யப்பட்ட மொத்த வழங்கல் தொகை" என்ற சொற்றொடர்கள் துணை விதி (4)–இன் குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளினை உடையதாகும்.

**90. ஒப்புகை சீட்டு**

(1) மின்னணு பண பதிவேட்டின்படி மீதத்தொகையை திருப்பி கொடுப்பு வழங்க விண்ணப்பித்த இனத்தில், GST RFD-02 என்ற படிவங்களில் பொது வலைவாயிலின் வழியாக ஒப்புகை, விண்ணப்பம் பெறப்பட்ட தேதி மற்றும் பிரிவு 54–ன் உட்பிரிவு 7–இல் குறிப்பிடப்பட்டுள்ள கால கணக்கீடு, அந்த விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து செய்யப்படும் என்பதை குறிப்பிட்டு வழங்கப்படும்.

(2) மின்னணு பண பதிவேட்டின் படி திருப்பிக் கொடுப்பு நீங்கலாக பிற திருப்பிக் கொடுப்புகளுக்கான விண்ணப்பம், உரிய அலுவலருக்கு அனுப்பப்பட்டு, பெறப்பட்ட தினத்திலிருந்து 15 தினங்களுக்குள் விதி 89இன் துணை விதி (2), (3) மற்றும் (4)இன் படி முழுமையாக உள்ளனவா என சரிபார்க்கப்பட்டு, GST RFD-02 என்ற படிவங்களில் பொது

வலைவாயில் வழியாக ஒப்புகை, விண்ணப்பம் பெறப்பட்ட தேதி மற்றும் பிரிவு **54**இன் உட்பிரிவு **7**இல் குறிப்பிடப்பட்ட கால கணக்கிடு, அந்த விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து செய்யப்படும் என்பதை குறிப்பிட்டு வழங்கப்படும்.

**(3)** உரிய அலுவலரால் கண்டறியப்படும் குறைப்பாடுகள் விண்ணப்பதாரருக்கு GST RFD-03 என்ற படிவங்களில் பொது வலைவாயில் வழியாக குறைபாடுகளை நிவர்த்தி செய்து புதிய திருப்பிக் கொடுப்பு விண்ணப்பம் தாக்கல் செய்ய அறிவுறுத்த வேண்டும்.

**(4)** குறைபாடுகள் GST RFD-03 என்ற படிவங்களில் **2017** ஆம் ஆண்டுமைய சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தின்படி தெரிவிக்கப்பட்டல், அதில் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகள் துணை விதி **3–**ன் கீழாகவும், தெரிவிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

**91. தற்காலிக திருப்பிக் கொடுப்பு வழங்குவது**

**(1)** பிரிவு **54**இன் உட்பிரிவு **6**இன் கீழ் வழங்கப்படும் தற்காலிக திருப்பு கொடுப்பு கோரும் நபர் ஒருவரின் மீது கடந்த **5** வருடங்களுக்குள் இச்சட்டத்தின் கீழோ அல்லது நடப்பு சட்டத்தின் கீழோ ரூ.**250** இலட்சத்திற்கு மேல் வரி ஏய்ப்பு செய்த குற்றத்திற்காக வழக்கு தொடரப்படாமல் இருக்கும் நிபந்தனைக்கு உட்பட்டு வழங்கப்படும்.

**(2)** உரிய அலுவலர், பிரிவு **54**இன் உட்பிரிவு **6–**இன் கீழ் துணை விதி **(1)** ன் கீழ் கோரப்பட்ட திருப்புத்தொகையை, கோரிக்கை மற்றும் அதன் ஆதாரத்தை ஆய்வு செய்து, விண்ணப்பதாரருக்கு தொகையை வழங்க முகாந்திரம் உள்ளது என மன நிறைவு கொள்ளும் நேர்வில், GST RFD–04 என்ற படிவத்தில் திருப்பி கொடுப்பதற்கான தற்காலிக அடிப்படையில் ஆணையை விதி**–90**இன், துணை விதி**(1)** அல்லது **(2)** இன்படி ஒப்புதல் வழங்கிய தேதியிலிருந்து 7 நாட்களுக்கு மிகாத காலத்திற்குள் வழங்க வேண்டும்.

**(3)** துணை விதி **(2)** இன் கீழ் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்ட தொகைக்கு, GST RFD–05 படிவத்தில் உரிய அலுவலர் செலுத்துகை சீட்டு வழங்க வேண்டும், மேலும் அவை, மனுதாரர்களால் பதிவு செய்யும்போது பெறப்பட்ட விவரங்களில் மற்றும் திருப்பி கொடுப்பு கேட்டு விண்ணப்பங்களில் குறிப்பிட்டுள்ள வங்கி கணக்கில் மின்னணு முறையில் வரவு வைக்கப்படும்.

**92. திருப்பி கொடுக்க ஆணை வழங்குதல்**

**(1)** உரிய அலுவலர், விண்ணப்பத்தை ஆராய்ந்து பிரிவு **54**இன் உட்பிரிவு **5**இன் படி விண்ணப்பதாரருக்கு திருப்பிக் கொடுக்க உரியது மற்றும் செலுத்தப்பட வேண்டும் என மனநிறைவு அடைந்தால், அவர் GST RFD**–06** என்ற படிவத்தில் திருப்பிக் கொடுக்க ஒப்புதல் வழங்கி ஆணை வழங்குவார். அவ்வாணையில் பிரிவு **54**இன் உட்பிரிவு **6**இன் படி தற்காலிக திருப்பி கொடுப்பு ஏதேனும் வழங்கப்பட்டு இருந்தால் அல்லது இச்சட்டம் அல்லது எந்தவொரு நடப்பு சட்டத்தின் படி ஏதாவது ஒரு தொகை செலுத்த வேண்டி நிலுவையிருந்தால், அவற்றிற்கு திருப்பி கொடுப்பை ஈடாகச் சரிசெய்து மற்றும் மீதமுள்ள திருப்பி கொடுப்புத் தொகையை குறிப்பிட வேண்டும்:

வரம்புரை: ஆனால், திருப்பி கொடுப்பு முழுமையாக, இச்சட்டம் அல்லது எந்தவொரு நடப்பு சட்டத்தின் படி செலுத்த வேண்டிய எந்த ஒரு தொகைக்கும் ஈடாக சரி செய்யப்பட்டுருந்தால், அந்த விபரத்தை தெரிவித்து GST RFD**–07** என்ற படிவத்தில் ஆணை வழங்க வேண்டும்.

**(2)** பிரிவு **54**இன் உட்பிரிவு **(10)** மற்றும் **(11)**இன் படி திருப்பிக் கொடுப்பு, உரிய அலுவலர் அல்லது ஆணையரால் நிறுத்தி வைக்கப்படும் நேர்வில் GST RFD**–07** என்ற படிவத்தின் பிரிவு B**–**இல் நிறுத்தி வைத்தற்கான காரணம் தெரிவித்து ஆணை வழங்க வேண்டும்.

**(3)** உரிய அலுவலர், மனநிறைவடையும் நேர்வில், எழுத்து மூலம் பதிவு செய்து, மனுதாரருக்கு திருப்பிக் கொடுப்பை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்க மறுத்து அல்லது கொடுக்க

மறுத்து அறிவிக்கையை GST RFD-08 என்ற படிவத்தில் விண்ணப்பதாரருக்கு வழங்க வேண்டும். விண்ணப்பதாரருக்கு அறிவிக்கை பெற்ற 15 நாட்களுக்குள் உரிய பதிலை GST RFD-09 என்ற படிவத்தில் வழங்க அறிவுறுத்த வேண்டும். பின்னர் அவரது பதிலை கருத்தில் கொண்டு, திருப்பி கொடுப்புகை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒப்புதல் செய்து அல்லது தள்ளுபடியோ செய்து GST RFD–06 என்ற படிவத்தில் ஆணை வழங்க வேண்டும். அவ்வாணை மனுதாரருக்கு மின்னனு வாயிலாக கிடைக்கப்பெறும். திருப்பி கொடுப்பு அனுமதித்த அளவிற்கு, துணை விதி (1)இல் உள்ள வரையறைகள் தேவையான மாற்றங்களுடன் பொருந்தும்:

வரம்புரை.- எந்தவொரு மனுதாரருக்கும், அவர் தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பினை வழங்காமல் தள்ளுபடி செய்யக்கூடாது.

(4) உரிய அலுவலர் துணை விதி 1 மற்றும் 2–ன் படி திருப்பி கொடுக்க வேண்டியத் தொகை, பிரிவு 54–இன் பிரிவு 8–இன் படி மனுதாரருக்கு வழங்க வேண்டியது என மனநிறைவு அடைவாராயின் அவர் GST RFD–06 என்ற படிவத்தில் ஆணை மற்றும் GST RFD-05 என்ற படிவத்தில் செலுத்துகை குறிப்பு ஆகியவற்றை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட தொகை மனுதாரர் பதிவு செய்யும் விபரங்களில் மற்றும் திருப்பிக்கோரும் விண்ணப்பத்தில் குறிக்கப்பட்டுள்ள வங்கி கணக்கில் மின்னனு முறை வாயிலாக வரவு வைக்கப்படும்.

(5) உரிய அலுவலர் துணை விதி 1 மற்றும் 2–இன் படி திருப்பி கொடுக்க வேண்டிய தொகை பிரிவு 54–இன் துணை பிரிவு 8–இன் படி மனுதாரருக்கு வழங்க வேண்டியதில்லை என மனநிறைவு கொண்டால், அவர் GST RED-06 என்ற படிவத்தில் ஆணை வழங்கி, GST RFD-05 என்ற படிவத்தில் குறிப்பு வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட தொகை நுகர்வோர் நல நிதியத்தில் வரவு வைக்கப்பட வேண்டும்.

**93. தள்ளுபடி செய்யப்பட்ட திருப்பி கொடுப்பு கோரிக்கை தொகையை வரவு வைத்தல்.-**

(1) விதி 90 –இன் துணை விதி 3–இன் படி குறைபாடுகள் தெரிவிக்கப்பட்ட நேர்வில், விதி 89 துணை விதி–3–இன் படி மின்னணு வரவு பதிவேட்டில் பற்று வைக்கப்பட்டத் தொகை, மீண்டும் வரவு வைக்கப்படும்.

(2) விதி 92–இன் கீழ் திருப்பிக்கொடுக்கக் கோரியத்தொகை முழுவதுமாக அல்லது பகுதியாக தள்ளுபடி செய்யப்பட்ட அளவிற்கு பற்று, GST PMT–03 என்ற படிவத்தில் ஆணை வழங்கி மீண்டும் மின்னணு வரவு பதிவேட்டில் வரவு வைக்கப்பட வேண்டும்.

விளக்கம்.- இவ்விதியின் நோக்கத்திற்காக, மேல் முறையீடு இறுதியாக தள்ளுபடி செய்யப்பட்டால் அல்லது மனுதாரர் உரிய அலுவலரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்யமாட்டேன் என உறுதிமொழி அளித்தால், திருப்பிக் கொடுப்பு தள்ளுபடி செய்யட்டதாக கருதப்படும்.

**94. தாமதமாக திருப்பி கொடுத்ததன் மீது வட்டி வழங்கும் ஆணை.-**

பிரிவு 56–இன் படி , மனுதாரருக்கு உரிய வட்டி, கொடுக்க வேண்டியுள்ளதோ, உரிய அலுவலர் அதற்கான ஆணையை GST RFD–05 படிவத்தில் செலுத்துகை குறிப்புடன் தாமதமான திருப்பிக் கொடுப்பு தொகை, வட்டி வழங்கப்பட வேண்டிய தாமத நாள், வட்டி விகிதம், மற்றும் வட்டித் தொகை ஆகியவற்றை குறிப்பிட்டு வழங்க வேண்டும். அத்தகைய வட்டித் தொகை, மனுதாரால் பதிவு செய்யும்போது பெறப்பட்ட விபரங்களில் மற்றும் திருப்பிக்கோரும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கி கணக்கில் மின்னணு முறையில் வரவு வைக்கப்படும்.

**95. சில நபர்களுக்கு வரித்தொகை திருப்பி கொடுப்புதல்:**

(1) பிரிவு 55–இல் அறிவிக்கை செய்யப்பட்ட நபரின், உட்புற வழங்கலில் செலுத்திய வரியை GST RFD –10 என்ற படிவத்தில் ஒவ்வொரு காலாண்டும் மின்னனு முறையில் பொது வலைவாயில்

முதன்மையானவர் வாயிலாகவோ தாமாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்பட்ட சேவை மையம் மூலமாகவோ, தொடர்புடைய வழங்குனரால் GSTR–1 என்ற படிவத்தில் அளிக்கப்பட்ட வெளிபுற வழங்கலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட GSTR-11 என்ற படிவத்தில் சரக்கு அல்லது சேவை அல்லது இவை இரண்டின் உட்புற வழங்கையில் விபரப்பட்டியலுடன் சேர்த்து விண்ணப்பிக்க வேண்டும்.

(2) விண்ணப்பம் பெற்றதற்கான ஒப்புகை GST RFD–02 படிவத்தில் வழங்கப்படும்.

(3) விண்ணப்பதாரருக்கு திருப்பி கொடுப்பு வழங்கப்படுவதற்கு, உரிய நேர்வுகள்.

(a) உட்புற வழங்கலின் சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவையிரண்டினையும் பதிவு பெற்ற நபரிடமிருந்து ஒவ்வொரு வரி விலை பட்டியலுக்கு எதிராக பெறுதல் மற்றும் ஒரு விலைப்பட்டியலின் கீழ் வரும் வழங்கலின் விலை, வரி செலுத்துகை தவிர்த்து ரூ.5000/– அதிகமாக இருக்கும் நேர்வில்;

(b) விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் GSTIN அல்லது UIN ஆகியவை, விலை பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் நேர்வில்;

(c) அறிவிக்கை மூலம் குறிப்பிடபட்ட வேறு சில கட்டுபாடுகள் அல்லது நிபந்தனைகளை நிறைவு செய்யும் நேர்வில்;

(4) விதி 92–இன் வரையறைகள் தேவைப்படும் மாறுதல்களுடன் இவ்விதியின் கீழ் திருப்புத் தொகை ஒப்புதலுக்கு மற்றும் செலுத்துகைக்கும் பொருந்தும்.

(5) ஒரு உடன்படிக்கையில் அல்லது பிற சர்வதேச ஒப்பந்தத்தில் குடியரசு தலைவர் அல்லது இந்திய அரசு, கட்சிக்காராக இருந்து அதில் வெளிப்படுத்தப்பட்ட ஏற்பாடு, இவ்விதியின் வரையறைக்கு முரணாக உள்ள நேர்வில், அந்த உடன்படிக்கை அல்லது பிற சர்வதேச ஒப்பந்தமே மேலானதாகும்.

**96. இந்தியாவிற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகள் மீது செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த வரி திருப்பி கொடுப்புகள்.-**

(1) ஏற்றுமதியாளரால் தாக்கல் செய்யப்பட்ட ஏற்றுமதி பட்டியினை ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகள் மீது செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த வரியினை திருப்பி கொடுப்புகள் கோரிக்கைக்கான மனுவாக கருதப்படும் மற்றும் அவ்வாறான மனு பின்வரும் நேர்வுகளில் தாக்கல் செய்யப்பட்டதாக கருதப்படும் நேர்வுகள்:-

(a) ஏற்றுமதி சரக்குகளை கொண்டு செல்லும் போக்குவரத்திற்கு பொறுப்பு வகிக்கும் நபர், ஏற்றுமதி பட்டி அல்லது கப்பல் பட்டியின் எண் மற்றும் தேதிகளை உள்ளடக்கிய ஏற்றுமதி விளக்க அறிவிப்பு அல்லது அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்; மற்றும்

(b) GSTR–3 படிவத்தில் செல்லத்தக்க விவர அறிக்கையினை மனுதாரர் அளித்திருக்க வேண்டும்;

(2) GSTR–1 ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுமதி தொடர்பான விலைப்பட்டியல் விவரங்கள் பொது வலைவாயில் மூலம் சுங்கத்துறையால் ஏற்படுத்தப்பட்ட கணினி அமைப்பிற்கு மாற்றப்படும். ஏற்றுமதி விலைப்பட்டியலுக்குண்டான சரக்குகள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதற்கான உறுதியாக்கம் பொது வலைவாயிலுக்கு சொல்லப்பட்ட கணினி அமைப்பு மூலம் மின்னணு முறையில் அனுப்பப்படும்.

**(3)** செல்லத்தக்க GSTR–3 படிவத்தினை சமர்ப்பித்தது தொடர்பான தகவலினை பொது வலைவாயிலிருந்து பெற்றவுடன், திருப்பி கொடுப்பிற்கான கோரிக்கையினை சுங்க துறையால் ஏற்படுத்தப்பட்ட கணினி அமைப்பு ஆராய்ந்து ஒவ்வொரு கப்பல் பட்டி அல்லது ஏற்றுமதி பட்டி மீது செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த வரிக்கு சமமான தொகையினை பதிவு குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் சுங்கத் துறைக்கு தெரிவிக்கப்பட்டுள்ள மனுதாரரின் வங்கி கணக்கில் மின்னணு முறை வாயிலாக வரவு வைக்கப்படும்.

**(4)** திருப்பி கொடுப்புகள் கோரிக்கைகள் பின்வரும் நேர்வுகளில் நிறுத்தி வைக்கப்படும்.

(a) பிரிவு **54**–இன் உட்பிரிவு **(10)** அல்லது **(11)**–இன் வரையரைகளுக்கிணங்க திருப்பி தொகை கோரப்பட்ட நபருக்கு திருப்பி கொடுப்புகள் செலுத்துவதை நிறுத்தி வைக்க எல்லைக்குட்பட்ட மத்திய வரி, மாநில வரி, அல்லது யூனியன் பிரதேச வரி ஆணையரிடமிருந்து ஒரு வேண்டுகோள் பெறப்பட்டிருப்பின், அல்லது

(b) **1962**–ஆம் ஆண்டு சுங்கவரிச் சட்டத்தின் வரையரைகளை மீறி சரக்குகள் ஏற்றுமதியாகியிருக்கிறது என சுங்க துறையின் உரிய அலுவலர் முடிவு செய்யும் போது.

**(5)** துணை விதி **(4)**–இன் கூறு **(a)**–இன் வரையரைகளுக்கிணங்க திருப்பி கொடுப்புகள் நிறுத்திவைத்தால், மனுதாரருக்கு மற்றும் எல்லைக்குட்பட்ட மத்திய வரி, மாநில வரி அல்லது மத்திய நேரடி ஆட்சிப் பகுதி வரி ஆணையர்களுக்கு சூழ்நிலைக்கேற்ப, சுங்கவரி ஆணையத்தின், ஒருங்கிணைந்த வரியின் உரிய அலுவலர் அறிவிக்க வேண்டும் மற்றும் அந்த அறிவிப்பின் நகலினை பொது வலைவாயிலுக்கு அனுப்புதல் வேண்டும்.

**(6)** துணை விதி **(5)**–இன் கீழான அறிவிப்பினை அனுப்பியவுடன் மத்திய வரி அல்லது மாநில வரி அல்லது மத்திய நேரடி ஆட்சிப் பகுதி வரியின் உரிய அலுவலர் GST RFD–07 படிவத்தில் பகுதி B–வில் ஆணை ஒன்றை பிறப்பிக்க வேண்டும்.

**(7)** துணை விதி **(4)**–இன் உட்கூறு **(a)**இன் கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட திருப்பு கொடுப்பிற்கான தொகையினை மனுதாரர் பெறுவதற்கு உரிமையுடையவரானால், சம்பந்தப்பட்ட எல்லைக்குட்பட்ட மத்திய வரி, மாநில வரி அல்லது மத்திய நேரடி ஆட்சிப்பகுதி வரி, அலுவலர் சூழ்நிலைக்கேற்ப, GST RFD–06 படிவத்தில் ஒரு ஆணை பிறப்பித்த பிறகு தொகையினை திருப்பி கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

**(8)** அறிவிக்கை செய்யப்படும் அவ்வகையான சரக்குகள் பூட்டானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டால், பூட்டான் அரசாங்கத்திற்கு மைய அரசு, ஒருங்கிணைந்த வரியினை திருப்பி கொடுப்பு செய்யும் மற்றும் பூட்டான் அரசாங்கத்திற்கு அவ்வாறு திருப்பி கொடுப்பு செய்யப்பட்டிருந்ததால், ஏற்றுமதியாளருக்கு ஒருங்கிணைந்த வரியினை திருப்பி கொடுப்புகள் அளிக்கப்படக்கூடாது.

**97. நுகர்வோர் நல நிதியம்.-**

**(1)** விதி **92**–இன் துணை விதி **(5)**–இன் கீழ் அனைத்து வரவுகளும் நுகர்வோர் நல நிதியத்தில் வைக்கப்பட வேண்டும்.

**(2)** நிதியத்தில் வரவு வைக்கப்பட்ட எந்த தொகையும், உரிய அலுவலர், மேல்முறையீடு அமைப்பு மேல்முறையீட்டு தீர்பாயம் அல்லது நீதிமன்றம் ஆகியவையின் ஆணை அல்லது வழகாட்டுதல் படி எந்தவொரு கோருவருக்கு வழங்க வேண்டிய இடத்து அது நிதியத்திலிருந்து வழங்கப்படும்.

**(3)** பிரிவு **58**–இன் உட்பிரிவு**(1)**இன் கீழ், நுகர்வோர் நல நிதியத்தின், எந்த தொகையும் பயன்படுத்தப்படும் போது, நுகர்வோர் நல நிதியத்தின் கணக்கில் பற்று வைக்கப்படும் எந்த கணக்கிற்கு மாற்றப்படுகிறதோ அதில் வரவு வைக்கப்படும்.

(4) மாநில அரசு ஒரு ஆணை மூலமாக தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர் செயலாளர், மற்றும் தேவை எனக் கருதும் பிற உறுப்பினர்களை கொண்ட ஒரு நிலைக் குழுவை ஏற்படுத்த வேண்டும் மற்றும் அந்த குழு நுகர்வோர் நல நிதியத்தின் வரவு வைக்கப்பட்ட தொகையை உரியவாறு பயன்படுத்த பரிந்துரைகளைச் செய்ய வேண்டும்.

(5) தேவைப்படும் போதும் குழு சட்டப்படி நடத்தப்பட வேண்டும், ஆனால் மூன்று மாதங்களுக்கு மிகாமல் கூட்டப்பட வேண்டும்.

(6) மைய அல்லது மாநில அரசு நுகர்வோர் நல நிதியத்திலிருந்து எந்தவொரு நடப்பில் உள்ள சட்டத்தின் படி அல்லது நிறுவன சட்டம், 2013 (மத்திய சட்டம் 18/2013) படி அல்லது பதியப்பட்டு மூன்று ஆண்டுகள் நுகர்வோர் நல நடவடிக்கையில் ஈடுப்பட்டுள்ள எந்தவொரு நிறுவனம் அல்லது அமைப்பு, கிராம, மண்டல அல்லது சமதி நிலையில் நுகர்வோர் கூட்டுறவு குறிப்பாக பெண்கள் மற்றும் பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியினர் நலனுக்கானவையை உள்ளடக்கிய அல்லது பொதுமக்கள் நுகர்வு பொருட்களின் தரவரிசைகள் இந்திய தரக்கட்டுப்பாட்டால் சிபாரிசு செய்யப்பட்ட 5 ஆண்டுகள் சாத்தியமான மற்றும் பயன்தரக்கூடிய ஆராய்ச்சி நடவடிக்கையை செய்து வரும் அல்லது செய்யப்பட்டுள்ள, தொழில் தகராறு சட்டம் 1947 (மத்திய சட்டம் 14/1947)– இன் படி வரையறுக்கப்பட்ட எந்தவொரு தொழிற்சாலையும் கொடை வழங்க விண்ணப்பிக்கலாம்.

வரம்புரை: ஆனால், நுகர்வோர் தகராறுக்காக புகார்தாரர் செய்த சட்ட செலவுகளை, இறுதி ஆணைக்கு பிறகு சட்ட செலவு செய்ததை திருப்பக் கோரி விண்ணப்பிக்கலாம்.

(7) நுகர்வோர் நலநிதியம் கோரும் அனைத்து விண்ணப்பங்களும் உறுப்பினர் செயலருக்கு மட்டுமே விண்ணப்பதாரரால் அளிக்கப்பட வேண்டும். அதனை ஆவண விவரங்கள் அடிப்படையில் தீர விசாரித்து, அது குறித்த உறுப்பினர் செயலரின் பரிந்துரைகள் இருந்தாலன்றி குழு ஒரு விண்ணப்பத்தை பரிசீலிக்கக் கூடாது.

(8) குழுவிற்கு கீழ்க்கண்ட அதிகாரங்களாவன:

(a) குழுவின் முன்போ அல்லது அதனால் அதிகாரம் அளிக்கப்பட்ட அரசு அலுவலர் முன்போ, மனுதாரரின் கட்டுப்பட்டிலுள்ள புத்தகம், கணக்குகள், கருவிகள் மற்றும் பொருட்கள் மதிப்பீடு செய்ய தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தல்;

(b) அதிகாரம் அளிக்கப்பட்ட மைய அரசு அலுவலர்கள் அல்லது தேவைக்கு ஏற்றபடி மாநில அரசு அலுவலரால் நுகர்வோர் நலனுக்கான நடவடிக்கை எடுக்க வளாகத்தில் நுழையவும் ஆய்வு செய்யவும் அனுமதிக்க வேண்டும் என மனுதாரரிடம் அறிவுறுத்தலாம்;

(C) நல்கைகளை உரிய முறையில் பயன்படுத்தியதை உறுதிசெய்ய, மனுதாரரின் தணிக்கை செய்யப்பட்ட கணக்கை பெறுதல்;

(d) மனுதாரர் சார்பில் தவறிழைக்கும் அல்லது உரிய தகவல்களை மறைத்த போது, ஒரே தவணையில் குழுவால் வழங்கப்பட்ட நல்கையை திருப்பி செலுத்த கோரலாம் மற்றும் சட்டத்தின் கீழ் வழக்குக்குப் பதிவு செய்யலாம்;

(e) மனுதாரரிடமிருந்து எந்தவொரு தொகையையும் சட்ட வரையரையின்படி வசூல் செய்யலாம்;

(f) எந்தவொரு மனுதாரரையோ அல்லது வகையினரையோ நல்கையை உரிய முறையில் பயன்படுத்தப்பட்டதை சுட்டிக்காட்ட கால முறை அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தல்.

(g) குழு முன் வைக்கப்பட்ட உண்மையல்லா அல்லது துல்லியமற்ற விவரங்களை கொண்ட, மனுவை நிராகரித்தல்:-

(h) நிதியை தவறுதலாக பயன்படுத்தாமையை உறுதி செய்து, மனுதாரரின் நிதி நிலைமை, உபயோகப்படுத்தும் நடவடிக்கை நோக்கம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, குறைந்தபட்ச நல்கையை வழங்க பரிந்துரைக்கலாம்;

(i) நுகர்வோர் நல நிதியத்தின் நிதியை ஆதாயமான மற்றும் பாதுகாப்பான இடத்தில் முதலீடு செய்ய பரிந்துரைத்தல்:-

(J) நுகர்வோர் நல நடவடிக்கையில் மனுதாரர் ஈடுபடும் கால அளவை தளர்வு செய்ததல்.

(k) நுகர்வோர் நல நிதியத்தினை மேலாண்மை நிருவாகம் மற்றும் தணிக்கை செய்ய வழிகாட்டிக் குறிப்புகள் ஏற்படுத்துதல்.

**(9)** மைய நுகர்வோர் பாதுகாப்பு குழுமம் மற்றும் இந்திய தர கட்டுப்பாட்டு மையம், சரக்கு மற்றும் சேவை வரி மன்றத்திற்கு நுகர்வோர் நல நிதியத்தின் நிதியை செலவு செய்ய திட்டங்கள் அல்லது கருத்துருக்கள் தொடர்பான வழி முறைகளை பரிந்துரைத்தல் வேண்டும்.

## <u>அத்தியாயம் XI</u>
## <u>வரி மதிப்பீடு மற்றும் தணிக்கை</u>

**98. தற்காலிக வரி மதிப்பீடு.–**

**(1)** **60–**ஆம் பிரிவின் **(1)–**ஆம் உட்பிரிவின் கீழுள்ள வழிவகைகளின்படி தற்காலிகமான அடிப்படையில் வரி செலுத்துவதற்கு கேட்டுக் கொள்ளும் ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும், GST ASMT **–01** படிவத்துடன் அவருடைய வேண்டுகோளுக்கு ஆதாரமான ஆவணங்களும், பொது வலைவாயில் மூலமாக மின்னணு முறையில் தானாகவோ அல்லது ஆணையரால் அறிவிக்கை செய்யப்படும் மையம் மூலமாகவோ ஒரு மனுவினை சமர்ப்பிக்க வேண்டும்.

**(2)** துணை விதி **(1)–**இன் கீழ் மனு பெறப்பட்டவுடன், உரிய அலுவலர், பதிவு பெற்ற நபரை நேரில் ஆஜராக அல்லது அவரின் வேண்டுகோளுக்கு ஆதாரமான கூடுதல் தகவல்கள் அல்லது ஆவணங்களை சமர்ப்பிக்க அறிவுறுத்தும் அறிவிப்பை GST ASMT **–02** படிவத்தில் வழங்கலாம். மனுதாரர் பதிலினை GST ASMT **–03** படிவத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

**(3)** உரிய அலுவலர், மனுவினை நிராகரிப்பதற்கான காரணத்தை குறிப்பிட்டு நிராகரித்தோ அல்லது மதிப்பு அல்லது விகிதம் அல்லது இரண்டின் அடிப்படையில் தற்காலிக வரி மதிப்பீடு செய்யப்பட வேண்டியது மற்றும் நிறைவேற்றக்கூடிய பிணைப்பிற்கான தொகை மற்றும் பிணைப்பில் குறிப்பிடப்பட்ட தொகைக்கு **25** விழுக்காட்டிற்கு மிகாமல் பிணையம் சமர்ப்பிக்க வேண்டியது ஆகியவைகளை குறிப்பிட்டு தற்காலிக அடிப்படையில் வரி செலுத்த அனுமதித்து GST ASMT **–04** படிவத்தில் ஒரு ஆணை வழங்க வேண்டும்.

**(4)** **60–**ஆம் பிரிவின் **(2)** –ஆம் உட்பிரிவின் வழிவகைகளின்படி, பதிவு பெற்ற நபர், GST ASMT **–05** படிவத்தில் பிணைப்பினை துணை விதி **(3)** ன் கீழ் தீர்மானிக்கப்பட்ட தொகைக்கு வங்கிப் பொறுப்புறுதி வடிவத்திலான பிணையத்துடன் செயல்படுத்த வேண்டும்:

**வரம்புரை.–** ஆனால், மைய/மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் உரிய அலுவலருக்கு சமர்ப்பிக்கப்பட்ட பிணையம், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட பிணையமாக, கருதப்படும்.

**விளக்கம்:** இந்த விதியின் நோக்கத்திற்காக, ''தொகை'' எனும் சொற்றொடர், ஒருங்கிணைக்கப்பட்ட வரி, மைய வரி, மாநில வரி அல்லது மத்திய நேரடி ஆட்சிப்பகுதி வரி மற்றும் அவ்வாறான நடவடிக்கைக்கு செலுத்தக்கூடிய மேல் வரி ஆகிய தொகையினை உள்ளடக்கியதாகும்.

(5) 60–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின் கீழ் வரி மதிப்பீட்டினை இறுதி செய்வதற்காக தேவைப்படும் தகவல்கள் மற்றும் பதிவுரைகள் கோரி GST ASMT –06 படிவத்தில், உரிய அலுவலர், ஒரு அறிவிப்பு வழங்க வேண்டும் மற்றும் பதிவு பெற்ற நபர் செலுத்த வேண்டிய தொகை அல்லது திருப்பு கொடுப்பு தொகை, ஏதேனும் இருப்பின், அதனை குறிப்பிட்டு, GST ASMT –07 படிவத்தில் இறுதி வரி மதிப்பீடு ஆணை ஒன்றை, வழங்க வேண்டும்.

(6) துணை விதி (5)–இன் கீழ் ஆணை வழங்கப்பட்ட பிறகு, துணை விதி (4)–இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட பிணையத்தை விடுவிக்க, GST ASMT –08 படிவத்தில் ஒரு மனுவினை மனுதாரர் தாக்கல் செய்யலாம்.

(7) துணை விதி (6)–இன் கீழ் மனு பெறப்பட்ட தேதியிலிருந்து ஏழு வேலை நாட்களுக்குள், துணை விதி (5)–ல் குறிப்பிட்ட தொகையினை மனுதாரர் செலுத்திவிட்டார் என்று உறுதி செய்த பிறகு, துணை விதி (4)–இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட பிணையத்தை உரிய அலுவலர் விடுவித்து GST ASMT –09 படிவத்தில் ஒரு ஆணை வழங்க வேண்டும்.

**99. அறிக்கைகள் கூர்ந்தாய்வு செய்தல்.-**

(1) பதிவு பெற்ற நபரால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதாவது அறிக்கை கூர்ந்தாய்விற்கு தேர்ந்தெடுக்கப்பட்டால், உரிய அலுவலர், அவரிடமுள்ள தகவல்கள் கொண்டு 61–ஆம் பிரிவின் வழிவகைகளின்பட கூர்ந்தாய்வு செய்தல் வேண்டும். அதில் ஏதாவது முரண்பாடுகள் கண்டறியப்பட்டால், அவ்வாறான முரண்பாட்டை மேற்கண்ட நபருக்கு தெரிவித்து GST ASMT –10 படிவத்தில் ஒரு அறிவிப்பு வழங்கி அதில் குறிப்பிடப்படும் கால அளவிற்குள் அந்த அறிவிப்பு சார்வு செய்த நாளிலிருந்து 30 நாட்களுக்கு மிகாமல், அவரது விளக்கத்தினை கோரலாம். மேலும் அவ்வாறான முரண்பாடு தொடர்பான வரித்தொகை, வட்டி மற்றும் செலுத்தக்கூடிய வேறு ஏதேனும் தொகை ஆகியவைகளை அதில் அறுதியிடப்பட்டிருக்க வேண்டும்.

(2) துணை விதி (1)–இன் கீழ் வழங்கப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட முரண்பாட்டினை, பதிவு பெற்ற நபர் ஏற்றுக் கொண்டு வரி, வட்டி மற்றும் அவ்வாறான முரண்பாட்டினால் எழும் வேறு ஏதேனும் தொகையினை செலுத்தி மற்றும் அதனை தெரிவித்து அல்லது முரண்பாட்டிற்கான விளக்கத்தினை GST ASMT –11 படிவத்தில் உரிய அலுவலருக்கு சமர்ப்பிக்கலாம்.

(3) துணை விதி (2)–இன் கீழ் அளிக்கப்பட்ட தகவல் அல்லது வரிவிதிப்பிற்குட்பட்ட நபரால் அளிக்கப்பட்ட விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தால், அதனை உரிய அலுவலர், பதிவு பெற்ற நபருக்கு GST ASMT –12 படிவத்தில் தெரிவிக்க வேண்டும்.

**100. சில இனங்களில் வரி மதிப்பீடு.-**

(1) 62–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட வரி மதிப்பீட்டு ஆணையினை GST ASMT –13 படிவத்தில் வழங்க வேண்டும்.

(2) 63–ஆம் பிரிவின் வழிவகைகளின்படி உரிய அலுவலர், பதிவு பெறாத வரிவிதிப்பிற்குட்பட்ட நபருக்கு, நியாயமான முறையில் ஆய்வு செய்யும் அடிப்படையில் வரி மதிப்பீடு செய்ய கருதப்படுவதற்கான காரணங்களை குறிப்பிட்டு GST ASMT –14 படிவத்தில் ஒரு அறிவிப்பு வழங்க வேண்டும் மற்றும் அவரின் பதில் ஏதேனும் இருப்பின் அதனை தருவதற்கு அந்நபருக்கு 15 நாட்கள் கால அவகாசம் கொடுத்த பிறகு GST ASMT –15 படிவத்தில் ஒரு ஆணை வழங்க வேண்டும்.

(3) 64–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் கீழ் சுருக்குமுறை வரி மதிப்பீட்டு ஆணையினை GST ASMT –16 படிவத்தில் வழங்க வேண்டும்.

(4) 64–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட நபர், சுருக்குமுறை வரி மதிப்பீட்டு ஆணையினை திரும்ப பெறக் கோரும் மனுவினை GST ASMT –17 படிவத்தில் தாக்கல் செய்யலாம்.

(5) 64–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின் கீழ், திரும்ப பெறுதல் ஆணை அல்லது நேர்விற்கேற்ப, மனுவினை மறுப்பு செய்து GST ASMT –18 படிவத்தில் வழங்க வேண்டும்.

**101. தணிக்கை.-**

(1) 65–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் கீழ் தணிக்கை நடத்தப்படவேண்டிய காலம் ஒரு நிதி ஆண்டு அல்லது அதன் பன்மடங்காக இருத்தல் வேண்டும்.

(2) 65–ஆம் பிரிவின் வழிவகைகளுக்குட்பட்டு ஒரு பதிவு பெற்ற நபரிடம் தணிக்கை மேற்கொள்ள முடிவெடுத்தால், உரிய அலுவலர், மேற்சொன்ன பிரிவின் (3)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் ஒரு அறிவிப்பினை GST ADT –01 படிவத்தில் வழங்க வேண்டும்.

(3) பதிவு பெற்ற நபரின், பதிவுருக்கள் மற்றும் கணக்கு புத்தகங்களை தணிக்கை செய்யப்படுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட உரிய அலுவலர், அருடன் சேர்ந்து சென்றுள்ள அலுவலர்கள் மற்றும் அலுவலர்களின் குழுவின் உதவியுடன், ஆவணங்களின் அடிப்படையில் வைத்துவரப்படும் கணக்கு புத்தகங்களை இச்சட்டத்தின் கீழ் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் கீழ் அளிக்கப்பட்ட அறிக்கைகள் மற்றும் விவர அறிக்கைகள், வழங்குகை தொகையின் பிழையின்மை, வரிவிலக்கு மற்றும் கழித்தல் கோரப்பட்டது, சரக்குகள் மற்றும் சேவைகள் அல்லது இரண்டின் மீது விதிக்கப்பட்ட வரி விகிதம், உள்ளீட்டு வரி வரவு பெறப்பட்டது மற்றும் பயன்படுத்தப்பட்டது, திருப்பிக் கொடுப்புகள் கோரப்பட்டது, மற்றும் பிற தொடர்புடைய சிக்கல் ஆகியவைகள் சரிபார்க்கப்பட வேண்டும் மற்றும் குறித்துரையை அவருடைய தணிக்கை குறிப்பில் பதிவு செய்ய வேண்டும்.

(4) தணிக்கையின் கூர்ந்த கவனிப்பினால் முரண்பாடுகள் ஏதேனும் கண்டறியப்பட்டால், அதனை பதிவு பெற்ற நபருக்கு, உரிய அலுவலர் தெரிவிக்க வேண்டும். மேற்சொன், நபர் தனது பதிலினை தாக்கல் செய்து மற்றும் அளிக்கப்பட்ட பதிலினை கருதிப்பார்த்த பிறகு உரிய அலுவலர் தணிக்கையின் முடிவுகளை இறுதி செய்ய வேண்டும்.

(5) 65–ஆம் பிரிவின் (6)–ம் உட்பிரிவின் வழிவகைகளின்படி, தணிக்கை முடியும் தருவாயில், உரிய அலுவலர், தணிக்கையில் கண்டறிந்தவைகளை பதிவு பெற்ற நபருக்கு GST ADT –02 படிவத்தில் தெரிவிக்க வேண்டும்.

**102. சிறப்பு தணிக்கை.-**

(1) பிரிவு 66–ன் கீழ் சிறப்பு தணிக்கை நடத்த வேண்டிய நேர்வில், மேற்சொன்ன பிரிவில் குறிப்பிடப்பட்ட அலுவலர், பதிவு பெற்ற நபருக்கு, அவருடைய பதிவுருக்களை குறிப்பிட்ட பட்டயக் கணக்கர் அல்லது விலை மதிப்பீட்டுக் கணக்கர் மூலம் தணிக்கை செய்து அதனை வழங்கவேண்டும் என்ற ஒரு ஆணையினை GST ADT –03 படிவத்தில் வழங்க வேண்டும்.

(2) சிறப்பு தணிக்கை முடியும் தருவாயில், சிறப்பு தணிக்கையின் கண்டறிதல்களை பதிவு பெற்ற நபருக்கு GST ADT –04 படிவத்தில் தெரிவிக்க வேண்டும்.

## <u>அத்தியாயம் XII</u>
## <u>முன்னதாகத் தீர்மானித்தல்</u>

**103. முன்னதாக தீர்மானிக்கும் அமைப்பின், உறுப்பினரின் நியமனம் மற்றும் தகுதிகள்.-**

மைய அரசு மற்றும் மாநில அரசு, இணை ஆணையர் நிலையிலான ஒரு அலுவலரை முன்னதாக தீர்மானிக்கும் அமைப்பின் உறுப்பினராக நியமிக்க வேண்டும்.

**104. முன்னதாக தீர்மானிக்கும் அமைப்பிற்கு விண்ணப்பிக்கும் முறை மற்றும் படிவம்.-**

(1) பிரிவு 97ன் உட்பிரிவு (1) ன் கீழ் முன்னதாக தீர்மானம் பெற GST ARA–01 என்ற படிவத்தில் பொது வலைவாயிலில் விண்ணப்பிக்க வேண்டும. அவ்விண்ணப்பத்துடன் ரூ.5000/– ஐ பிரிவு 49ல் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் செலுத்தப்பட வேண்டும்.

(2) துணை விதி (1)–இல் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் அனைத்து ஆவணங்களுடன் விதி 26–இல் குறிப்பிடப்பட்ட முறையில் ஒப்பமிடப்பட வேண்டும்.

**105. முன்னதாக தீர்மானிக்கும் அமைப்பின் ஆணையின் சான்று அளிக்கப்பட்ட நகல்கள்:**

முன்னதாக தீர்மானிக்கும் அமைப்பால் வழங்கப்பட்ட ஆணையின் நகல் முன்னதாக தீர்மானிக்கும் அமைப்பின் ஆணையத்தின் உண்மை நகல் என்று அதன் ஏதேனும் ஒரு உறுப்பினர் சான்றளிக்க வேண்டும்.

**106. முன்னதாக தீர்மானிக்கும் அமைப்பின் ஆணை மீது மேல்முறையீட்டுக்கான வழிமுறை மற்றும் படிவம்.-**

(1). பிரிவு 98–இன் உட்பிரிவு 6–இன் கீழ் முன்னதாக தீர்மானிக்கும் அமைப்பின் ஆணை மீது மேல் முறையீடு GST ARA–02 என்ற படிவத்தில் பொது வலைவாயில் வழியாக மனுதாரரால் செய்யப்பட வேண்டும் மற்றும் அவ்விண்ணப்பத்துடன் ரூ.10,000/–ஐ பிரிவு 49–இல் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் செலுத்த வேண்டும்.

(2) பிரிவு 98 உட்பிரிவு 6–இன் கீழ் முன்னதாக தீர்மானிக்கும் அமைப்பின் ஆணை மீது உரிய அலுவலர் அல்லது பிரிவு 100–இல் குறிப்பிடப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலருக்கு GST ARA–03 என்ற படிவத்தில் பொது வலைவாயில் வழியாக மேல்முறையீடு செய்ய வேண்டும். இவ்வாறு, செய்யப்படும் மேல் முறையீட்டுக்கு கட்டணம் கிடையாது.

(3) துணை விதி (1) அல்லது (2)ல் குறிப்பிடப்பட்ட மேல்முறையீடு குறிப்பிட்டவாறு அனைத்து தொடர்புடைய ஆவணங்களுடன் சேர்த்து சரிபார்க்கப்பட்டு கீழ்க்கண்டவர்களால் ஒப்பமிடப்பட வேண்டும்.

(a) உரிய அல்லது அதிகாரமுறை அலுவலராக இருக்குமிடத்தில், ஒரு அலுவலரால் எழுத்து மூலமாக அங்கீகரிக்கப்பட்ட அந்த அலுவலர்; மற்றும்

(b) மனுதாரராக இருக்கும் நேர்வில் விதி 26–இல் குறிப்பிடப்பட்டுள்ள முறையில்

**107. முன்னதாக தீர்மானிக்கும் அமைப்பின் மேல்முறையீட்டு அமைப்பால் வழங்கப்பட்ட ஆணையின் நகல்களுக்கு சான்றளித்தல்.-**

சட்டப் பிரிவு 101–இன் உட்பிரிவு (4)–இல் உள்ள வரம்புரைகளுக்கு தக்கவாறு, முன்னதாக தீர்மானிக்கும் அமைப்பின் மேல்முறையீட்டு அமைப்பால் வழங்கப்படும் ஆணையின் நகல் உறுப்பினர் ஒருவரால் ஒப்பமிடப்பட்டு கீழ்க்கண்டவர்களுக்கு அனுப்பப்படும்.

(a) மனுதாரர் மற்றும் மேல்முறையீட்டாளர்;
(b) மைய மற்றும் மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தின் வரி விதிப்பு தொடர்புடைய அதிகாரி;

(c) மைய மற்றும் மாநிலத்தின் அல்லது யூனியன் பிரதேசத்தின் வரிவிதிப்பு அதிகார வரம்புடைய அலுவலர்; மற்றும்

(d) அதிகாரி.

## அத்தியாயம் XIII
## மேல்முறையீடு மற்றும் மறு சீராய்வு

### 108. மேல்முறையீட்டு அதிகாரிக்கு செய்யப்படும் மேல்முறையீடு

(1) பிரிவு 107–இன் உட்பிரிவு 1–இன் கீழ் மேல்முறையீட்டு அதிகாரிக்கு GST APL–01 என்ற படிவத்தில் தொடர்புடைய ஆவணங்களுடன், மின்னணு முறையில் அல்லது ஆணையர் தெரிவித்த முறையிலோ மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட வேண்டும் மற்றும் மனுதாரருக்கு உடனடியாக தற்காலிக ஒப்புதல் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

(2) மேல் முறையீட்டு காரணம் மற்றும் சரிபார்ப்பு GST APL–01 என்ற படிவத்தில் விதி 26–இல் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் ஒப்பமிடப்படவேண்டும்.

(3) மேல்முறையீட்டுக்கு உட்படுத்தப்பட்ட ஆணை அல்லது தீர்ப்பின் சான்றளிக்கப்பட்ட நகல், துணை விதி (1)–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். GST APL–02 என்ற படிவத்தில் மேல் முறையீட்டு எண்ணை குறிப்பிட்டு மேல்முறையீட்டு அதிகாரி அல்லது அவரால் இதன் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை வழங்கப்பட வேண்டும்:

வரம்புரை.– ஆனால், மேல்முறையீடு GST APL–01, படிவத்தில் தாக்கல் செய்யப்பட்ட 7 நாட்களுக்குள் சான்று அளிக்கப்பட்ட தீர்ப்பு அல்லது ஆணை சமர்ப்பிக்கப்பட்டால், மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதியே தற்காலிக ஒப்புதல் வழங்கிய தேதியாகும் மற்றும் மேற்சொன்ன நகல் 7 நாட்களுக்கு பின்னர் சமர்ப்பிக்கப்பட்டால், மேல் முறையீட்டு தேதி என்பது அந்த நகல் சமர்ப்பிக்கப்பட்ட தேதியாகும்.

விளக்கம்.- மேல் முறையீட்டு எண் குறிப்பிட்டு வழங்கப்பட்டு, அதனை இறுதி ஒப்புதல் வழங்கிய பின்னரே, மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதாக கருதப்படும்.

### 109. மேல் முறையீட்டு அதிகாரிக்கு விண்ணப்பித்தல்.-

(1) பிரிவு 107–இன் உட்பிரிவு (2)–இன் கீழ் மேல் முறையீட்டு அதிகாரிக்கு GST APL–03 என்ற படிவத்துடன் தொடர்புடைய ஆவணங்களுடன் மின்னணு முறையிலோ அல்லது ஆணையரால் அறிவிக்கப்பட்ட முறையிலோ மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

(2) மேல் முறையீட்டுக்கு உட்படுத்தப்பட்ட ஆணை அல்லது தீர்ப்பின் சான்றளிக்கப்பட்ட நகல், துணை விதி (1)ன் கீழ் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேல் முறையீட்டு எண் மேல்முறையீட்டு அதிகாரி அல்லது அவரால் இதன் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் வழங்கப்படும்.

### 110. மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு செய்யப்படும் மேல் முறையீடு

(1) பிரிவு 112–இன் உட்பிரிவு 1–இன் கீழ் மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் மேல் முறையீடு GST APL–05 என்ற படிவத்தில் தொடர்புடைய ஆவணங்களுடன் மின்னணு முறையில் அல்லது பதிவாளர் அவர்களால் அறிவிக்கப்பட்ட முறையில் பொது வலைவாயில் வாயிலாக தாக்கல் செய்யப்பட வேண்டும் மற்றும் தற்காலிக ஒப்புதல் மனுதாரருக்கு உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

(2) பிரிவு 112–இன் உட்பிரிவு 5–இன் கீழ் குறுக்கு விசாரணையில் விவரக் குறிப்பு GST APL–06, படிவத்தில் மின்னணு முறையில் அல்லது பதிவாளரால் அறிவிக்கப்பட்ட முறையில் தாக்கல் செய்யப்படும்.

**(3)** மேல் முறையீடு மற்றும், குறுக்கு விசாரணை விவரக் குறிப்பு, விதி **26–**இல், குறிப்பிடப்பட்ட முறையில் ஒப்பமிடப்பட வேண்டும்.

**(4)** துணை விதி **5–**இல் குறிப்பிடப்பட்ட கட்டணத்துடன் சான்று அளிக்கப்பட்ட தீர்ப்பு அல்லது ஆணை, துணை விதி **(1)–**இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டுத் தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மற்றும் மேல் முறையீட்டு எண்ணை குறிப்பிட்டு GST APL–02 என்ற படிவத்தில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

வரம்புரை: ஆனால், சான்று அளிக்கப்பட்ட தீர்ப்பு அல்லது ஆணை GST APL–05 படிவம் தாக்கல் செய்யப்பட்ட 7 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டால், மேல் முறையீடு தற்காலிக ஒப்புதல் வழங்கிய தேதியில் தாக்கல் செய்யப்பட்டதாக கருதப்படும் மற்றும் சொல்லப்பட்ட நகல், 7 நாட்களுக்கு பிறகு சமர்ப்பிக்கப்பட்டால், அந்த நகல் சமர்ப்பிக்கப்பட்ட தேதி மேல்முறையீடு செய்யப்பட்ட தேதியாக எடுத்துக்கொள்ளப்படும்.

விளக்கம்.– மேல் முறையீட்டு எண் குறிப்பிடப்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கிய பின்னரே, மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டதாக கருதப்படும்.

**(5)** மேல்முறையீடு அல்லது மேல் முறையீட்டு மீட்டளிப்பு கட்டணம், மேல் முறையீட்டுக்கு உட்படுத்தப்பட்ட ஆணையில் நிர்ணயிக்கப்பட்ட வரி அல்லது உள்ளீட்டு வரி வரவு அல்லது வரி வேறுபாடுகள் அல்லது உள்ளீட்டு வரி வரவு அல்லது அபராதத் தொகை, கட்டணம் அல்லது தண்டத்தொகை ஒவ்வொரு ரூ.**1** லட்சத்திற்கும் ரூ.**1000** மாக அதிகபட்சமாக ரூ.**25000/–**க்கு உட்பட்டு கணக்கிடப்படும்.

**(6)** பிரிவு **112–**இன் உட்பிரிவு **10–**இல் குறிப்பிடப்பட்ட தவறுகளை திருத்தம் செய்ய அளிக்கப்படும் விண்ணப்பத்திற்கு கட்டணம் ஏதுமில்லை.

**111. மேல் முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பம்.-**

**(1)** பிரிவு **112–**இன் உட்பிரிவு **3–**இன் கீழ் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பம் மின்னணு முறையில் அல்லது பிற முறையில் GST APL–07 என்ற படிவத்துடன் உரிய தொடர்புடைய ஆவணங்களுடன் பொது வலைவாயிலில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

**(2)** உட்பிரிவு **(1)–**இன் கீழ் மேல்முறையீட்டுக்காக தாக்கல் செய்யப்படும் விண்ணப்பத் தேதியிலிருந்து, மேல்முறையீட்டுக்கு உட்படுத்தப்பட்ட சான்றளிக்கப்பட்ட ஆணை அல்லது தீர்ப்பு நகல் 7 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பதிவாளரால் மேல் முறையீட்டு எண் உருவாக்கப்படும்.

**112. மேல் முறையீட்டு அதிகார அமைப்பு அல்லது தீர்ப்பாயத்தின் முன் கூடுதல் ஆதாரம் தாக்கல் செய்தல்.-**

**(1)** கீழ்க்கண்ட சூழ்நிலைகளை தவிர்த்து மனு தாரர் மேல்முறையீட்டு அதிகாரி அல்லது மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன், தீர்ப்பு அளிக்கும் அதிகாரி முன்பு செய்முறையின்போது தாக்கல் செய்த ஆதாரங்களை தவிர்த்து எந்தவொரு ஆதாரத்தையும் வாய்மொழியாகவோஅல்லது ஆவணமாகவோ தாக்கல் செய்யக் கூடாது.

(a) தீர்ப்பு அளிக்கும் அதிகாரி அல்லது நேர்வுக்கு ஏற்ப மேல் முறையீட்டு அதிகாரி, ஏற்றுக்கொள்ள வேண்டிய ஆதாரத்தை ஏற்க மறுத்த போது; அல்லது

(b) தீர்ப்பளிக்கும் அதிகாரி அல்லது மேல் முறையீட்டு அதிகாரியால் நேர்வுக்கு ஏற்ப கோரப்பட்ட ஆதாரத்தை தாக்கல் செய்ய மனுதாரர் போதுமான காரணத்தினால் தடுக்கப்பட்ட போது; அல்லது

(c) தீர்ப்பளிக்கும் அதிகாரி அல்லது மேல் முறையீட்டு அதிகாரியின் முன்பு நேர்வுக்கு ஏற்ப மேல் முறையீட்டுக்கான காரணங்களுக்காக தொடர்புடைய எந்தவொரு ஆதாரத்தையும் தாக்கல் செய்ய மனுதாரர் தகுந்த காரணத்தினால் தடுக்கப்பட்டபோது; அல்லது

(d) தீர்ப்பளிக்கும் அதிகாரி அல்லது மேல் முறையீடு அதிகாரி மனுதாரருக்கு நேர்வுக்காக மேல் முறையீட்டு காரணங்களுக்கு போதிய ஆதாரம் அளிக்க உரிய வாய்ப்பு வழங்காமல் ஆணை வழங்கப்பட்டிருப்பின்;

**(2)** மேல் முறையீட்டு அதிகாரி அல்லது மேல்முறையீட்டு தீர்ப்பாயம் ஏற்று கொண்டதற்கு எழுத்து மூலம் காரணங்களை தெரிவித்தாலொழிய, துணை விதி **(1)–**இன் கீழ் எந்தவொரு ஆதாரத்தையும் ஏற்று கொள்ளப்பட மாட்டாது.

**(3)** மேல் முறையீட்டு அதிகாரி அல்லது மேல் முறையீட்டு தீர்ப்பாயம், தீர்ப்பளிக்கும் அதிகாரி அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிக்கு கீழ்க்கண்ட நியாயமான வாய்ப்பு வழங்காமல், துணைவிதி**(1)–**இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட எந்தவொரு ஆதாரத்தையும் ஏற்று கொள்ளக் கூடாது-

(a) மனுதாரர் தாக்கல் செய்த ஆதாரம் அல்லது ஆவணங்களை ஆய்வு செய்ய அல்லது எந்தவொரு சாட்சியினையும் குறுக்கு விசாரணை செய்ய; அல்லது

(b) மனுதாரர், துணை விதி **(1)–**இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ஆதாரத்தை மறுத்து எந்தவொரு ஆதாரம் அல்லது சாட்சியத்தை தாக்கல் செய்ய

**(4)** இவ்விதியில் சொல்லப்பட்ட ஏதும், மேல்முறையீட்டு அதிகாரி அல்லது மேல் முறையீட்டு தீர்ப்பாயம், வழக்கை முடிக்க எந்தவொரு ஆவணம் அல்லது சாட்சியத்தை தாக்கல் செய்ய அறிவுறுத்தும் அதிகாரத்தை பாதிக்காது.

**113. மேல்முறையீட்டு அதிகாரி அல்லது தீர்ப்பாயத்தின் ஆணை.–**

**(1)** மேல்முறையீட்டு அதிகாரி, பிரிவு **107–**இன் உட்பிரிவு **11–**இன் கீழ் வழங்கும் ஆணையுடன் GST APL–04 என்ற படிவத்தில் இறுதியாக உறுதி செய்யப்பட்ட கேட்புத் தொகையை குறிப்பிட்டு ஆணையின் சுருக்கத்தை வழங்க வேண்டும்.

**(2)** அதிகாரமுள்ள அலுவலர் GST APL–04 என்ற படிவத்தில் மேல் முறையீட்டு தீர்ப்பாயம் இறுதியாக உறுதி செய்த கேட்புத்தொகையை குறிப்பிட்டு விவரப்பட்டி வழங்க வேண்டும்.

**114. உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு.–**

**(1)** பிரிவு **117–**இன் உட்பிரிவு **(1)–**இன் கீழ் உயர் நீதிமன்ற மேல்முறையீடு GST APL–08 என்ற படிவத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

**(2)** மேல் முறையீட்டுக்கான காரணம் மற்றும் சரிபார்ப்பு GST APL–08 என்ற படிவத்தில் உள்ளவாறு விதி **26–**இல் குறிப்பிட்ட முறையில் ஒப்பமிடப்படும்.

**115. நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட கேட்புத்தொகை.-**

அதிகாரமுள்ள அலுவலர் GST APL–04 என்ற படிவத்தில் உயர்நீதி மன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தினால் இறுதியாக உறுதி செய்யப்பட்ட கேட்புத் தெகையை குறிப்பிட்டு நேர்வுக்கு ஏற்ப விவரப்பட்டி வழங்க வேண்டும்.

**116. அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் தவறான நடத்தைக்காக தகுதியிழப்பு செய்வது.-**

பிரிவு 116–இன் உட்பிரிவு (2)–இன் கூறு (b) அல்லது (c) யில் குறிப்பிட்டவர்கள் தவிர்த்து, பிற அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி எந்தவொரு செயல்முறையின் கீழ் தவறான நடத்தையுடைய குற்றவாளி என விசாரணையில் தெரியவந்தால், ஆணையர் அவருக்கு கேட்டு அறியும் வாய்ப்பை கொடுத்து, அவரை அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக ஆஜர் ஆகுவதிலிருந்து தகுதியிழப்புச் செய்யலாம்.

## அத்தியாயம் XIV
## மாறுதலுக்கான வழிவகைகள்

**117. எந்தவொரு நடப்பு சட்டத்தின் கீழ் முன் கொணரப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட நாளில் உள்ள இருப்பு சரக்கின் மீதுள்ளவரி அல்லது தீர்வை முன்னெடுத்தல்.-**

(1) பிரிவு 140–இன் படி உள்ளீட்டு வரிவரவு எடுக்க உரிமையுடைய ஒவ்வொரு பதிவு பெற்ற நபரும் GST TRAN–1 என்ற படிவத்தில், நியமிக்கப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்குள் பொது வலைவாயிலில் மின்னணு மூலம் கையெழுத்திட்ட உறுதி மொழியை, சொல்லப்பட்ட பிரிவின்படி அவருக்கு உரிமையுடைய உள்ளீட்டு வரி வரவை குறிப்பிட்டு சமர்ப்பிக்க வேண்டும்:

வரம்புரை: ஆனால், ஆணையர் மன்றத்தின் பரிந்துரையின் பேரில் 90 நாட்களை மேலும் 90 நாட்களுக்கு மிகாமல் நீட்டிக்கலாம்.

மேலும் வரம்புரை: பிரிவு 140–இன் உட்பிரிவு 1–இன் படியான கோரிக்கை, விண்ணபத்தில் கீழ்கண்டவற்றை தனியாக குறிப்பிட வேண்டும்–

(i) மத்திய விற்பனை வரி சட்டம் 1956–ன் பிரிவு 3, பிரிவு 5–இன் உட்பிரிவு (3) பிரிவு 6, பிரிவு 6A மற்றும் பிரிவு 8–இன் உட்பிரிவு (8)–இன் கீழ் விண்ணபதாரரால் கோரிய தொகை மற்றும்

(ii) மேலே குறிப்பிட்ட துணை கூறு (i)–இல் கோரிய கோரிக்கைக்கு ஆதாரவாக மத்திய வரி (பதிவு மற்றும் விற்று வரவு) விதிகள் 1957–இல் விதி 12–இல் குறிப்பிடப்பட்ட மனுதாரரால் பெறப்பட்ட உறுதிமொழி படிவம் C மற்றும் F மற்றும் சான்றிதழ் படிவம் E, H அல்லது I–யின் வரிசை எண் மற்றும் தொகை,

(2) துணை விதி (1) –இன் கீழ் ஒவ்வொரு உறுதிமொழியிலும்

(a) அமைக்கப்பட்ட தேதியில், பிரிவு 140–இன் உட்பிரிவின் 2–இன் கீழ் கோரப்படும் நேர்வுகளில், ஒவ்வொரு முதலீட்டுப் சரக்குகளின் கீழ்கண்ட விபரம் தனித்தனியாக தெரிவிக்கப்பட வேண்டும்.

(i) வரி அல்லது தீர்வுத்தொகை, ஒவ்வொரு நடப்பு சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட தேதி வரை, உள்ளீட்டு வரி வரவாக பயன்படுத்தப்பட்ட அல்லது துய்க்கப்பட்ட ; மற்றும்

(ii) வரி அல்லது தீர்வுத்தொகை, ஒவ்வொரு நடப்பு சட்டத்தின்படி, அனுமதிக்கப்பட்ட தேதி வரை, உள்ளீட்டு வரி வரவாக பயன்படுத்த வேண்டிய அல்லது துய்க்க வேண்டிய;

(b) அனுமதிக்கப்பட்ட தேதியில், பிரிவு 140–இன் உட்பிரிவு 8 அல்லது உட்பிரிவு 4–இன் உட்கூறு (b)–இல் அல்லது அதன் வரம்புரை அல்லது உட்பிரிவு 3–இன்படி கோரப்படும் நேர்வுகளில், இருப்பு சரக்கு விபரங்களை தனியாக தெரிவிக்க வேண்டும்.

(c) பிரிவு 140–இன் உட்பிரிவு (5)–இன்படி கோரப்படும் நேர்வுகளில் கீழ்கண்ட விபரங்கள் தெரிவிக்க வேண்டும், அதாவது:-

(i) வழங்குநரின் பெயர், விலைப்பட்டியல் அல்லது நடப்பு சட்டத்தின்படி உள்ள எந்த ஆவணத்தின் அடிப்படையில் உள்ளீட்டு வரி வரவு அனுமதிக்கப்படுகிறதோ, அதன் வரிசை எண் மற்றும் தேதி;

(ii) விவரிப்பு மற்றும் சரக்கு அல்லது சேவையின் மதிப்பு;

(iii) சரக்காக இருக்கும் நேர்வில் அதன் அளவு மற்றும் அதன் அலகு அல்லது அலகு அளவு குறியீடு;

(iv) தகுதியுடைய வரிகள் அல்லது தீர்வைகள் அல்லது நேர்வுக்கு ஏற்ப மதிப்பு கூட்டு வரி (அல்லது நுழைவு வரி) வழங்குநரால் சரக்குகள் அல்லது சேவைகள் தொடர்பாக விதிக்கப்பட்டது; மற்றும்

(v) சரக்கு அல்லது சேவை பெறுநரின் ஆவணத்தில் பதியுடப்பட்ட சரக்கினைப் பெற்ற தேதி

(3) GST TRAN–1 என்ற படிவத்தில் குறிப்பிடப்பட்ட வரி வரவுகள், பொது வலைவாயிலில் GST PMT–2 என்ற படிவத்தில் பராமரிக்கப்படும் மின்னணு வரவுப் பதிவேட்டில் வரவு வைக்கப்படும்

(4) (a)

(i) ஒரு பதிவு பெற்ற நபர், மாநிலத்தில் முதல் விற்பனையில் வரி செலுத்தப்பட்டு, மாநிலத்தின் மறு விற்பனையின் மீது வரிக்கு உட்படாத சரக்குகளில் இருப்பு வைத்திருந்தால், அனுமதிக்கப்பட்ட தேதி அன்று உள்ள சரக்கின் இருப்பின் மீது, பிரிவு 140–இன் உட்பிரிவு 3–இன் வரம்புரையின் படி உள்ளீட்டு வரி வரவு பயன்படுத்த அவரிடம் மதிப்பு கூட்டு வரி செலுத்துகை தொடர்பாக ஆவணம் ஏதும் வைத்திருக்கவில்லை எனில் அனுமதிக்கப்படும்.

(ii) அந்த சரக்கு மீது நியமிக்கப்பட்ட தேதிக்கு பிறகு வழங்குகைக்கு பொருந்தக் கூடிய மாநில வரியில், அச்சரக்கு 9 விழுக்காடு அல்லது அதற்கு மேல் மாநில வரிக்கு உட்படும் போது, 60 விழுக்காடு வரவு மற்ற சரக்குகளுக்கு 40 விழுக்காடு வரவு அனுமதிக்கப்படும் மற்றும் அவ்வழங்கலின் மீது செலுத்துகை செய்யப்பட வேண்டிய மாநில வரி செலுத்தப்பட்ட பிறகு வரவு வைக்கப்படும்:

வரம்புரை : ஆனால், அச்சரக்கின் மீது ஒருங்கிணைந்த வரி செலுத்தப்பட்ட இனங்களில், அவ்வரியில் 30 விழுக்காடு மற்றும் 20 விழுக்காடு முறையே வரி வரவுத் தொகையாக அனுமதிக்கப்படும்.

(iii) இந்த திட்டம் அனுமதிக்கப்பட்ட தேதியிலிருந்து 6 வரிக்காலங்களுக்கு கிடைக்கப்பெறும்

(b) கீழ்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கு உட்பட்டு மாநில வரி வரவு அனுமதிக்கப்படும், அதாவது:-

(i) அத்தகைய சரக்குகள் 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் முழுமையாக வரிவிலக்கு அளிக்கப்படாமல் இருக்க வேண்டும்.

(ii) பதிவு பெற்ற நபரிடம், அச்சரக்கை கொள்முதல் செய்யப்பட்டதற்கான ஆவணம் இருக்க வேண்டும்

(iii) இத்திட்டத்தை அனுபவிக்கும், ஒரு பதிவு பெற்ற நபர், சரக்கு இருப்பை விதி 1–இன் துணை விதி (2)–இன் கூறு (b) –யில் தெரிவித்ததோடு, GST TRAN-2 என்ற படிவத்தில், ஆறு மாத வரி காலத்தில்,

இத்திட்டம் அமலில் இருக்கும் ஒவ்வொரு வரி கால முடிவிலும், அச்சரக்கு அவ்வரிகாலத்தில் வழங்குகை செய்யப்பட்ட விபரத்தை தெரிவிக்க வேண்டும்.

(iv) GST PMT–2 என்ற படிவத்தில் பொழு வலைழவாயிலில் பராமரிக்கப்படும் மின்னணு வரவு பதிவேட்டில் அனுமதிக்கப்பட்ட வரி வரவுத்தொகை வரவு வைக்க அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(v) பதிவு பெற்ற நபரால் சுலபமாக காணக்கூடிய வகையில் வரி வரவு பெற்ற சரக்கின் இருப்பை, பராமரிக்க வேண்டும்.

**118. பிரிவு 142இன் உட்பிரிவு 11–இன் உட்கூறு (C)–இன்படி வழங்கப்பட வேண்டிய உறுதி மொழி.-**

பிரிவு 142–இன் உட்பிரிவு, 11–இன் கூறு (c)–இல் வகைமுறைகள் எந்தவொரு நபருக்கு பொருந்துமோ, அவர், நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னால் மதிப்பு கூட்டு வரி அல்லது சேவை வரி செலுத்தி நியமிக்கப்பட்ட தேதிக்கு பிறகு வழங்குகை செய்யப்பட்டு இருந்து, அதற்கு உள்ளீட்டு வரி வரவு அனுமதிக்கப்பட்ட நேர்வில் அமைக்கப்பட்ட தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் GST TRAN–1 என்ற படிவத்தில் மின்னணு முறையில் உறுதி மொழியை சமர்ப்பிக்க வேண்டும்.

**119. முதன்மையாளர் மற்றும் முகவர் வைத்திருக்கும் சரக்கு இருப்பு உறுதிமொழி.-**

பிரிவு 142–இன் உட்பிரிவு 14–இன் வகைமுறைகள் எந்தவொரு நபருக்கு பொருந்துமோ, அவர் அமைக்கப்பட்ட தேதியிலிருந்து 90 நாட்களுக்குள், GST TRAN–1 என்ற படிவத்தில், உள்ளீடுகள், பாதி முடிவடைந்த அல்லது முடிவடைந்த சரக்குகள் அனுமதிக்கப்பட்ட தேதியன்று இருப்பின் விவரத்திற்கு உறுதிமொழி சமர்ப்பிக்க வேண்டும்.

**120. ஒப்புதல் பெறும் அடிப்படையில் அனுப்பப்பட்ட சரக்கின் விபரம்.-**

பிரிவு 142இன் உட்பிரிவு 12–இன் வகைமுறைகள் எந்தவொரு நபருக்கு பொருந்துமோ, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் GST TRAN–1 என்ற படிவத்தில், ஒப்புதல் பெறும் அடிப்படையில் நடப்பு சட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட சரக்கின் விபரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**121. தவறுதலாக பயன்படுத்திய உள்ளீட்டு வரி வசூலை திரும்ப பெறுதல்**

விதி 117–இன் துணை விதி 3இன் கீழ் வரவு வைக்கப்பட்ட தொகையை, சரிபார்க்கலாம் மற்றும் முழுவதுமாக அல்லது பகுதியாக தவறுதலாக பயன்படுத்திய உள்ளீட்டு வரி வரவுக்கு பிரிவு 73 அல்லது நேர்வுக்கு ஏற்ப பிரிவு 74–இன்படி செயல்முறை நடவடிக்கை தொடரலாம்.

## அத்தியாயம் XV
## இலாப நோக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகள்

**122. அதிகார அமைப்பினை அமைத்தல்.-**

இவ்வதிகார அமைப்பு, மன்றத்தால் நியமிக்கப்பட்ட கீழ்க்கண்டவர்களை உறுப்பினர்களாக கொண்டிருக்கும்.-

(a) இந்திய அரசின் செயலர் பதவிக்கு இணையான பதவியை வகித்த அல்லது வகித்துவரும் ஒருவர் தலைவராகவும்; மற்றும்

(b) மாநில வரி அல்லது மத்திய வரி ஆணையர்களாக உள்ள அல்லது இருந்த அல்லது நடப்பிலுள்ள சட்டத்தின் கீழ் அதற்கு இணையான பதவி வகித்த நான்கு தொழில்நுட்ப உறுப்பினர்களும்.

**123. நிலைக்குழு மற்றும் பிரித்தறியும் குழு அமைத்தல்.-**

**(1)** மன்றம், இலாப நோக்கத்திற்கு எதிரான நடவடிக்கையினை கண்காணிக்கும், பொருட்டு மாநில அரசு மற்றும் மத்திய அரசால் முன்மொழியப்படும் அலுவலர்களைக் கொண்ட ஒரு நிலைக்குழுவினை அமைக்கலாம்.

**(2)** ஒரு மாநில அளவிலான பிரித்து ஆய்வு செய்யும் குழுவினை ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில அரசுகளால் அமைக்கப்பட வேண்டும். அது கீழ்க்கண்டவர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும்.

(a) ஆணையரால் முன்மொழியப்படும் மாநில அரசின் ஒரு அலுவலர்; மற்றும்

(b) தலைமை ஆணையரால் முன்மொழியப்படும் ஒரு மத்திய அரசு அலுவலர்

**124. அதிகார அமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம், ஊதியம், படிகள் மற்றும் பணிக்கான பிற வரையறை மற்றும் கட்டுப்பாடுகள்.—**

**(1)** அதிகார அமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை, மன்றத்தால் இந்த நோக்கத்திற்காக அமைக்கப்பெறும் தேர்வுக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் மத்திய அரசு நியமிக்க வேண்டும்.

**(2)** தலைவருக்கு மாத ஊதியம் ரூ.**2,25,000/—** (நிர்ணயிக்கப்பட்டது) நிலையானது மற்றும் பிற படிகள் மற்றும் அதே ஊதியம் கொண்ட பதவிகளைப் பெற்றிருக்கிற மத்திய அரசு அலுவலருக்கு அனுமதிக்கத்தக்க பயன்கள்:

வரம்புரை: ஆனால், எங்கு ஒரு ஓய்வு பெற்ற அலுவலர் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுகிறரோ, அவருக்கு மாத ஊதியமாக ரூ. **2,25,000/—** வழங்கப்பட வேண்டும். இத்தொகையில் அவருடைய ஓய்வூதியம் குறைக்கப்பட வேண்டும்.

**(3)** தொழில்நுட்ப உறுப்பினர் மாத ஊதியமாக ரூ.**2,05,400/—** (நிர்ணயிக்கப்பட்டது) வழங்க வேண்டும் மற்றும் அதே ஊதியம் கொண்ட பிரிவு 'A' பதவிவகிக்கிற மத்திய அரசு அலுவலருக்கு அனுமதிக்கத்தக்க படிகளை பெற தகுதியானவர்.

வரம்புரை: ஆனால், எங்கு ஒரு ஓய்வு பெற்ற அலுவலர் தொழில் நுட்ப உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ அவருக்கு மாத ஊதியமாக ரூ. **2,05,400/—** வழங்கப்பட வேண்டும். இத்தொகையில் அவருடைய ஓய்வூதியம் குறைக்கப்பட வேண்டும்.

**(4)** தலைவர் அவர் பதவியேற்ற தினத்திலிருந்த இரண்டு ஆண்டு காலத்திற்கு அல்லது அவர் அறுபத்தைந்து வயதை அடையும் காலம் வரையிலோ, இதில் எது முந்தையதோ அதுவரை பதவி வகிக்க வேண்டும். மற்றும் அவர் மறு நியமனத்திற்கு தகுதியுடையவராவார்:

வரம்புரை : ஆனால், எந்தவொரு நபர் அறுபத்திரண்டு வயதை அடைகிறாரோ அவரை தலைவராக தேர்ந்தெடுக்கக் கூடாது.

**(5)** தொழில்நுட்ப உறுப்பினர் அவர் பதவியேற்ற தினத்திலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்கு அல்லது அவர் அறுபத்தைந்து வயதை அடையும் காலம் வரையிலோ, இதில் எது முந்தையதோ அதுவரை பதவி வகிக்க வேண்டும். மற்றும் அவர் மறு நியமனத்திற்கு தகுதியுடையவராவார்:

வரம்புரை: ஆனால், எந்தவொரு நபர் அறுபத்திரண்டு வயதை அடைந்தவரோ அவரை தொழில்நுட்ப உறுப்பினராக தேர்ந்தெடுக்கக் கூடாது.

**125. அதிகார அமைப்பின் செயலர்.-** வாரியத்தின்கீழ் பணியாற்றும் பாதுகாப்பு கூடுதல் தலைமை இயக்குநர் அதிகார மன்றத்தின் செயலராக இருத்தல் வேண்டும்.

**126. ஆராய்ச்சிமுறை மற்றும் நடைமுறைகளை தீர்மானிக்கும் அதிகாரம்.-**

அதிகார மன்றம், அத்தகைய சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின வழங்குகையாலும் குறைக்கப்பட்ட வரிவிகிதத்தை அல்லது உள்ளீட்டு வரிவரவு பயனை, பெறுபவருக்கு அதற்கு ஈடான வகையில் விலையால் குறைத்து பதிவுபெற்ற நபர் வழங்குகின்றாரா என முடிவு செய்வதற்கான ஆராய்ச்சி முறை மற்றும் நடைமுறைகளை தீர்மானிக்கலாம்.

**127. அதிகார அமைப்பின் கடமைகள்.-** அதிகார அமைப்பின் கடமைகளாவன.-

(i) எந்தவொரு சரக்குகள் அல்லது சேவைகளின் மீதான குறைக்கப்பட்ட வரிவிகிதமும் அல்லது உள்ளீட்டு வரிவரவின் பயனினை பெறுபவருக்கு அதற்கு ஈடான வகையில் குறைக்கப்பட்ட விலையில் வழங்கப்பட்டுள்ளதா என தீர்மானிக்க;

(ii) சரக்குகள் மற்றும் சேவைகளின் மீது குறைக்கப்பட்ட வரிவிகிதத்தின் பயனை அல்லது உள்ளீட்டு வரிவரவின் பயனை அதற்கு ஈடான வகையில் விலையில் குறைத்துபெறுபவருக்கு அளிக்காத பதிவு பெற்ற நபரை இனம் கண்டறிய;

(iii) கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்க வேண்டும்,

(a) விலையைக் குறைக்க;

(b) ஈடாக குறைக்கப்படாத விலைக்கு சமமான ஒரு தொகையினை அத்தகைய உயர் தொகை வசூலித்த தேதிமுதல் அது திருப்பி வழங்கப்படும் நாள் வரை அல்லது திருப்பி வழங்கப்படாத தொகையினை வசூலிக்கும் காலம் வரைக்கும் பதினெட்டு சதவிகித வட்டியுடன் பெறுபவருக்கு திரும்ப வழங்கப்பட வேண்டும். ஒருவேளை தகுதியான நபர் தொகையினை திரும்பப் பெறக்கோராத நேர்வில் அல்லது அவரை கண்டறிய இயலாத நேர்வுகளில் பிரிவு 57ல் குறிக்கப்பட்ட நிதியத்தில் வைப்பீடு செய்யலாம்;

(c) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களை விதித்தல் ; மற்றும்

(d) சட்டத்தின் கீழான பதிவினை ரத்து செய்தல்

**128. நிலைக்குழு மற்றும் பிரித்தறியும் குழு விண்ணப்பங்களை பரிசீலித்தல்.-**

(1) தேர்வுக்குழு அதனால் குறித்துரைக்கப்படும் அத்தகைய முறை மற்றும் அத்தகைய படிவத்தில் ஒரு ஆணையர் அல்லது எந்தவொரு பிற நபர் அல்லது அக்கறையுள்ள நபரிடமிருந்து எழுத்துப்பூர்வமாக விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் சரக்குகள்அல்லது சேவைகளின் வரிக்குறைப்பின் பயன் அல்லது உள்ளீட்டு வரிவரவின் பயன் பெறுபவருக்கு அதற்கு ஈடான வகையில் விலையில் குறைக்கப்படவில்லை என கோரும் விண்ணப்பதாரரின் கோரிக்கைக்கு முகாந்திரம் உள்ளதா, மேலும் அதற்கு உதவும் வகையில் விண்ணப்பத்தில் போதிய அளவு மற்றும் சரியான அளவில் ஆதாரம் அளிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

(2) விருப்பமுள்ள நபர்களிடமிருந்து உள்மாநில விவகாரங்கள் தொடர்பாக பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும் முதலில் மாநில அளவிலான பிரித்தறியும் குழு பரிசீலிக்க வேண்டும் மற்றும் பிரித்தறியும் குழு, வழங்குநர் சட்டப்பிரிவு 171இன் வரம்புரைகளுக்கு முரணாக செயல்பட்டுள்ளனர்

என்பது மனம் நியைவுறும் வண்ணம் கண்டறிந்த பின்னர் நிலைக்குழுபின் மேல்நடவடிக்கைக்காக தன்னுடைய பரிந்துரைகளுடன் விண்ணப்பத்தினை அனுப்பி வைக்க வேண்டும்.

**129. நடவடிக்கைகளை தொடங்குதல் மற்றும் செயல்படுத்துதல்.-**

(1) வழங்குநர் சரக்குகள் அல்லது சேவைகளின்மீது குறைக்கப்பட்ட வரிவிகிதத்தின் பலனை அல்லது உள்ளீட்டு வரிவரவின் பயனை பெறுபவருக்கு அதற்கு ஈடான வகையில் குறைக்கப்பட்ட விலையில் வழங்கப்படவில்லை என்பதற்கான முகாந்திரம் உள்ள ஆதாரம் உள்ளதென நிலைக்குழு மனநிறைவடைந்தால் அதனை பாதுகாப்பு தலைமை இயக்குநருக்கு விரிவான புலன்விசாரணை செய்வதன் பொருட்டு அனுப்பி வைக்க வேண்டும்.

(2) பாதுகாப்பு தலைமை இயக்குநர் புலன் விசாரணை நடத்தி, சரக்குகள் அல்லது சேவைகளின் மீதான குறைக்கப்பட்ட வரியின் பலன் அல்லது உள்ளீட்டு வரிவரவின் பலனை, அதற்கு ஈடாக குறைக்கப்பட்ட விலையின் வாயிலாக பெறுபவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை தீர்மானிக்க தேவைப்படும் ஆதாரங்களை திரட்ட வேண்டும்.

(3) பாதுகாப்பு தலைமை இயக்குநர், புலன் விசாரணையை தொடங்கும் முன்னர், கீழ்க்கண்ட தகவல்களும் உள்ளடக்கிய ஒரு அறிவிக்கையை கற்றவையுடன் சேர்த்து, தொடர்புடைய நபர்களுக்கு வழங்க வேண்டும், அதாவது:-

(a) எதன்பொருட்டு நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதோ அத்தகைய சரக்குகள் அல்லது சேவைகளின் விவரங்கள்:-

(b) குற்றச்சாட்டு எழுப்புவதற்கான ஆதாரமாக உள்ள உண்மை விவரங்கள் பற்றிய சுருக்கமான அறிக்கை; மற்றும்

(c) நடவடிக்கைகள் தொடர்பான விவரங்கள் பெற்றிருக்கக்கூடிய தொடர்புடைய நபரின் அல்லது பிற நபர்கள் வழங்கக்கூடிய பதிலுரைகளை அனுமதிக்கப்பட்ட கால அளவு.

(4) பாதுகாப்பிற்கான தலைமை இயக்குநர் இந்நேர்வின் நியாயமான விசாரணைக்கு தேவையெனக் கருதும் பிற நபர்களுக்கும் அறிவிப்புகளை வழங்கலாம்.

(5) நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும் நபர்களுக்கு தொடர்புள்ள ஒருவர் தம்மிடம் அளித்த ஆதாரங்களை பிற தொடர்புடைய நபர்களுக்கு பாதுகாப்பு தலைமை இயக்குநர் கிடைக்குமாறு, செய்தல் வேண்டும்.

(6) பாதுகாப்பு தலைமை இயக்குநர் நிலைக்குழுவிடமிருந்து கடிதம் பெற்ற மூன்று மாதங்களுக்குள் புலன் விசாரணையை முடிக்க வேண்டும் அல்லது நிலைக்குழுவால் எழுத்துப்பூர்வமான காரணங்களோடு அனுமதிக்கப்படுகிற, மேலும் மூன்று மாதங்களுக்கு மிகாமல் நீட்டிக்கப்படுகிற அத்தகைய காலத்திற்குள் விசாரணையை முடிக்க வேண்டும். புலன் விசாரணை முடிவுற்ற பின்னர் அதிகார அமைப்பிற்கு தொடர்புடைய ஆவணங்களுடன் சேர்த்து இறுதி முடிவுடன் கூடிய ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

**130. தகவலின் காப்புத் தன்மை.-**

(1) விதி 129இன் துணைவிதிகள் (3) மற்றும் (5) மற்றும் விதி 133இன் துணைவிதி (2)இல் என்ன சொல்லப்பட்டிருந்த போதிலும், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005இன் (மத்திய சட்டம் 22/2005) பிரவு 11இன் வழிவகைகள் தேவையான மாற்றங்களுடன் இரகசியமாக வழங்கப்பட்ட தகவலை வெளிப்படுத்துதலுக்கு அப்படியே தகுந்தவாறு பொருந்தும்.

(2) பாதுகாப்பு தலைமை இயக்குநர் இரகசியத்தின் அடிப்படையில் தகவல் அளிக்கும் பிரிவினரிடம் அதன் பேரிலான காப்புத்தன்மையின் ஒரு சுருக்கத்தினை வழங்க அறிவுறுத்தலாம். மேலும்

அத்தகைய தகவல் அளிக்கும் பிரிவு அத்தகைய தகவலினை சுருக்கி அளிக்க இயலாது என கருதினால், பாதுகாப்பு தன்மை இயக்குநர் அத்தகைய பிரிவினை ஏன் சுருக்கிய விவரங்களை சமர்ப்பிக்க இயலாது என்பதற்கான காரணங்கள் அடங்கிய ஒரு அறிக்கையினை சமர்ப்பிக்கலாம்.

**131. ஏனைய நிறுவனங்கள் அல்லது சட்டப்பூர்வமான அதிகார அமைப்புகளுடன் ஒத்துழைப்பு.-**

பாதுகாப்பு தலைமை இயக்குநர் தனது கடமைகளை நிறைவேற்றுவதன் பொருட்டு பிற நிறுவனம் அல்லது சட்டப்பூர்வமான அதிகார அமைப்பின் கருத்துக்கள் என கருதுகிறாரோ, அப்போது அவர் அதனை வழங்குமாறு கோரலாம்.

**132. சாட்சியம் அளிக்கவும், ஆவணங்கள் சமர்ப்பிக்கவும் நபர்களை வரவழைப்பதற்கான ஆணையரின் அதிகாரம்.-**

(1) பாதுகாப்பு தலைமை இயக்குநர், அல்லது அவரால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலர் சாட்சியமளிக்கவோ அல்லது ஒரு ஆவணத்தை சமர்ப்பிக்கவோ அல்லது சட்டப் பிரிவு 70—இன் கீழ் எந்தவொரு பொருளுக்காகவோ ஒருவருடைய வருகை தேவையெனக் கருதும் நேர்வில், எந்தவொரு வர ஆணையரிடம் அதிகாரத்தினை பயன்படுத்தும் தகுந்த அலுவலர் என கருதப்படும்.

மேலும் அவர், சிவில் சட்டம் 1908 (மத்திய சட்டம் 5/1908)இன் வரம்புரைகளின்டி ஒரு சிவில் நீதிமன்றத்திற்கு வகுக்கப்பட்டுள்ள வரையறைகளின் முறையில் விசாரணை நடத்தும் அதிகாரம் படைத்தவராவார்.

(2) துணைவிதி (1)இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு விசாரணையும் இந்திய தண்டனைச் சட்டம் (மத்திய சட்டம் 45/1860)ன் பிரிவுகள் 193 மற்றும் 228இல் கண்டுள்ள நீதிமன்ற நடவடிக்கைகள் போன்று கருதப்படும்.

**133. அதிகார அமைப்பின் ஆணை.-**

(1) பாதுகாப்பு தலைமை இயக்குநரிடமிருந்து அறிக்கை பெற்ற மூன்று மாதங்களுக்குள் ஒரு பதிவுபெற்ற நபர், சரக்குகள் அல்லது சேவைகள் மீதான வரி விகிதக் குறைப்பின் பலனை அல்லது உள்ளீட்டு வரி வரவின் பலனை பெறுபவருக்கு அதற்கு ஈடான வகையில் விலைக் குறைப்பின் மூலமாக வழங்கியுள்ளார்களா என்பதை தீர்மானித்தல் வேண்டும்.

(2) அக்குறைபாடு உள்ளதாக கூறும் பிரிவினர் கேட்புரை கோரி எழுத்துப்பூர்வமாக வேண்டுகோள் விடுக்கின்ற நேர்வில், அவர்களுக்கு கேட்புரை வழங்குவதற்கான வாய்ப்பினை அதிகார அமைப்பு வழங்க வேண்டும்.

(3) ஒரு பதிவுபெற்ற நபர், சரக்குகள் அல்லது சேவைகள் இவற்றின் மீதான வரிக்குறைப்பின் பலனை அல்லது உள்ளீட்டு வரி வரவின் பலனை அதற்கு ஈடான வகையில் விலைக் குறிப்பின் மூலம் பெறுபவருக்கு வழங்கவில்லை என்று அதிகார அமைப்பு தீர்மானிக்கும் நேர்வில் அதிகார அமைப்பு கீழ்க்கண்டவாறு ஆணையிடலாம்-

(a) விலையைக் குறைக்க

(b) ஈடாக குறைக்கப்படாத விலைக்கு சமமான ஒரு தொகையை அத்தகைய அதிகமான தொகை வசூலித்த தேதிமுதல் அது திருப்பி வழங்கப்படும் நாள் வரை அல்லது திருப்பி வழங்கப்படாத தொகையினை வசூலிக்கும் காலம் வரைக்கும் பதினெட்டு சதவிகித வட்டியுடன் பெறுபவருக்கு திரும்ப வழங்க வேண்டும். ஒருவேளை தகுதியான நபர் தொகையினை திரும்பப் பெற கோராத நேர்வில் அல்லது அவரை கண்டறிய இயலாத நேர்வுகளில் பிரிவு 57இல் குறிக்கப்பட்ட நிதியத்தில் வைப்பீடு செய்ய வேண்டும்;

(c) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களை விதித்தல்; மற்றும்

(d) சட்டத்தின் கீழான பதிவினை ரத்து செய்தல்.

**134. பெரும்பான்மையாக எடுக்கப்பட வேண்டிய முடிவு.-**

அதிகார அமைப்பின் உறுப்பினரிடையே எந்தவொரு பொருளின்மீதும் கருத்து வேறுபாடு இருப்பின், அப்பொருளை பெரும்பான்மையோரின் கருத்துக்கிணங்க முடிவெடுக்க வேண்டும்.

**135. பதிவுபெற்ற நபர் உடன்படுதல்.-**

இந்த விதிகளின்கீழ் அதிகார அமைப்பினால் பிறப்பிக்கப்படும் எந்தவொரு ஆணைக்கும் பதிவுபெற்ற நபர் உடனடியாக உடன்பட வேண்டும். தவறினால் நேர்விற்கேற்ப ஒருங்கிணைக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவைகள் வரிச்சட்டம் அல்லது மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் அல்லது யூனியன் பிரதேச சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் அல்லது தொடர்புடைய மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் பிரிவுகளின்படி தொகையினை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**136. ஆணையினை கண்காணித்தல்.-**

அதிகார அமைப்பு, மாநில வரி, மத்திய வரி அல்லது யூனியன் பிரதேச வரியின் எந்தவொரு அதிகார அமைப்பினையும், அதனால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினை அமல்படுத்துவதை கண்காணிக்க அறிவுறுத்தலாம்.

**137. அதிகார அமைப்பின் காலம் .-**

மன்றம் வேறுவகையாக பரிந்துரைத்தாலன்றி, அதிகார அமைப்பின் தலைவர் அவர் பொறுப்பேற்றுக்கொண்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவுற்ற உடன் அதிகார அமைப்பு முடிவிற்கு வர வேண்டும்.

விளக்கம்: இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக,

(a) ‘‘அதிகார அமைப்பு’’ என்பது விதி 122இன் கீழ் உருவாக்கப்பட்ட இலாப நோக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கான தேசிய அதிகார அமைப்பு என பொருள்படும்.

(b) ‘‘குழு’’ என்பது இந்த விதிகளின் விதி 123 துணைவிதி (1)இன் கீழ் உள்ள வரையறைகளின்படி மன்றத்தால் அமைக்கப்பட்ட இலாப நோக்க நடவடிக்கைக்கு எதிரான நிலைக்குழு என பொருள்படும்;

(c) ‘‘விருப்பமுள்ள நபர்’’ என்பது -

a. நடைமுறையில் உள்ள சரக்கு அல்லது சேவைகளை வழங்குபவர்; மற்றும்

b. நடைமுறையில் உள்ள சரக்கு அல்லது சேவைகளைப் பெறுபவர்;

(d) ‘‘பிரித்தறியும் குழு’’ என்பது இந்த விதிகளின் விதி 123இன் துணைவிதி (2)ல் உள்ள வரையறைகளின்படி அமைக்கப்பட்ட மாநில அளவிலான பிரித்தறியும் குழு.

## அத்தியாயம் XVI
## மின்னணு வழிப்பட்டிக்கான விதிகள்

**138. மின்னணு வழிப்பட்டி விதிகள்.-**

மின்னணு வழிப்பட்டிக்கான மென் பொருள் அமைப்பு, மன்றத்தால் ஒப்புதல் வழங்கப்படும் வரை, அரசு, வாகனத்தில் சரக்கு எடுத்துச் செல்லும் பொறுப்புடைய நபர், சரக்கை கொண்டுசெல்லும் போதோ அல்லது போக்குவரத்துக்காக சேமிக்கப்பட்டிருக்கும்போதோ எடுத்து செல்ல வேண்டிய ஆவணங்களை குறிப்பிட்டு அறிவிக்கைளை வெளியிடலாம்.

## படிவம் சமசேவ CMP – 01 / FORM GST CMP – 01

*[காண்க விதி 3(1) ]*

### பிரிவு 10–இன் கீழ் (இணக்க வரிவிதிப்பு) வரி செலுத்துவதற்கான அறிவிப்பு

### (நியமிக்கப்பட்ட நாளில் நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் பதிவு பெற்று இடம் பெயரும் நபர்களுக்கு மட்டும்)

| | | | |
|---|---|---|---|
| 1. | சமசேவஅ எண்/ தற்காலிக அடையாள எண்(ID)<br>GSTIN | | |
| 2. | சட்டபூர்வ பெயர் | | |
| 3. | வணிகப் பெயர் ( ஏதேனுமிருப்பின்) | | |
| 4. | முதன்மை வியாபார இடத்தின் முகவரி | | |
| 5. | பதிவு பெற்ற நபரின் வகை<br>< கீழே இருப்பனவற்றிலிருந்து தேர்ந்தெடு> | | |
| | (i) அரசால் அறிவிக்கப்பட்ட அத்தனை சரக்குகளின் உற்பத்தியாளர் தவிர்த்த உற்பத்தியாளர்கள் | ☐ | |
| | (ii) அட்டவணை–II-இல் , பத்தி–6–இல் , உட்பிரிவு (b)–இல் குறிப்பிடப்பட்டுள்ள | ☐ | |
| | (iii) இணக்க வரிவிதிப்புக்குத் தகுதியான இதர பிற வழங்குநர்கள் | ☐ | |
| 6. | எந்த நிதியாண்டிலிருந்து இணக்கத் திட்டத்திற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டது | 2017-18 | |
| 7. | செயல் எல்லை | மையம் | மாநிலம் |
| 8. | <u>உறுதிமொழி</u><br>____________________ஆகிய நான் பிரிவு 10–இன் கீழ் வரி செலுத்துவதற்காக குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை மேலே சொல்லப்பட்ட வணிகம் பின்பற்றும் என இதன்மூலம் உறுதியளிக்கிறேன். | | |
| 9. | <u>உறுதிபடுத்தல்</u><br>____________________ஆகிய நான் இதன்மூலம், மேலே கொடுக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் தெரிந்த வகையில் உண்மை மற்றும் சரியானது எனவும் விடுதல்கள் மற்றும் மறைத்தல்கள் ஏதுமில்லை எனவும் உளமாற உறுதியளிக்கிறேன்.<br><br>அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுபவரின் கையொப்பம் | | |

## படிவம் சமசேவ CMP – 02 / FORM GST CMP – 02

*[காண்க விதி 3(2) ]*

### பிரிவு 10–இன் கீழ் (இணக்க வரிவிதிப்பு) வரி செலுத்த அறிவிப்பு

### (சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நபர்களுக்காக)

| | | |
|---|---|---|
| 1. சமசேவஅ எண் GSTIN | | |
| 2. சட்டபூர்வ பெயர் | | |
| 3. வணிகப் பெயர் (ஏதேனுமிருப்பின்) | | |
| 4. முதன்மை வியாபர இடத்தின் முகவரி | | |
| 5. பதிவு பெற்ற நபரின் வகை | | |
| (1) அரசால் அறிவிக்கப்பட்ட அத்தனை சரக்குகளின் உற்பத்தியாளர் தவிர்த்த | | ☐ |
| (2) அட்டவணை–2–இல், பத்தி–6–இல், உட்பிரிவு (b)–இல் குறிப்பிடப்பட்டுள்ள | | ☐ |
| (3) இணக்க வரிவிதிப்புக்குத் தகுதியான இதர பிற வழங்குநர்கள் | | ☐ |
| 6. எந்த நிதியாண்டிலிருந்து இணக்கத் திட்டத்திற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டது | | |
| 7. செயல் எல்லை | மையம் | மாநிலம் |

8. <u>உறுதிமொழி</u>

_______________________________________ஆகிய நான் பிரிவு 10–ன் கீழ் வரி செலுத்துவதற்காக குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை மேலே சொல்லப்பட்ட வணிகம் பின்பற்றும் என நான் இதன்மூலம் உறுதியளிக்கிறேன்.

9. <u>உறுதிபடுத்தல்</u>

_______________________________________ஆகிய நான் இதன்மூலம் மேலே கொடுக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் எனது நுண்ணறிவிற்கும், நம்பிக்கைக்கும் தெரிந்த வகையில் உண்மை மற்றும் சரியானது எனவும் விடுதல்கள் மற்றும் மறைத்தல்கள் ஏதுமில்லை எனவும் உளமாற உறுதியளிக்கிறேன்.

அதிகாரமளிக்கப்பட்ட

கையொப்பமிடுபவரின் கையொப்பம்

இடம்: அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுபவரின் பெயர்

தேதி: பதவி / தகுதி நிலை

## படிவம் சமசேவ CMP – 03 / FORM GST CMP – 03

*[காண்க விதி 3(4)]*

இணக்க வரிவிதிப்புக்கு விருப்பம் தெரிவிக்கப்பட்ட தேதியில் உள்ள இருப்பு விபரங்களுக்கான தகவல்

(அனுமதிக்கப்பட்ட நாளில் நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் பதிவு பெற்று இடம்பெயரும் வணிகர்களுக்கு மட்டும்)

| | | |
|---|---|---|
| 1. சமசேவஅ எண் GSTIN | | |
| 2. சட்டபூர்வ பெயர் | | |
| 3. வணிகப் பெயர் (ஏதேனுமிருப்பின்) | | |
| 4. முதன்மை வியாபார இடத்தின் முகவரி | | |
| 5. பிரிவு 10–இன் கீழ் வரி செலுத்த தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் விவரங்கள் | 1. விண்ணப்பப் குறிப்பு வரிசை எண்(ARN) | |
| 6. செயல் எல்லை | மையம் | மாநிலம் |

7. நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் பதிவுபெற்ற நபரிடமிருந்து பெறப்பட்ட கொள்முதலின் இருப்பு

| வ.எண். | சமசேவஅ (GSTIN) எண்/வஅ (TIN)எண் | வழங்கு–நரின் பெயர் | பட்டியல்/விலைப் பட்டியல் எண் | தேதி | இருப்பின் விலை மதிப்பு | மகூவ (VAT) | மைய ஆயம்(Central Excise) | சேவை வரி (பொருந்தினால்) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | |

**8.** நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் பதிவு பெறாத நபரிடமிருந்து செய்யப்பட்ட கொள்முதலின் இருப்பு

| வ.எண். | பதிவு பெறாத நபரின் பெயர் | முகவரி | பட்டியல்/ விலைப் பட்டியல் எண் | தேதி | இருப்பின் விலை மதிப்பு | மகூவ (VAT) | மைய ஆயம்(Central Excise) | சேவை வரி (பொருந்தினால்) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | |

| **9.** வரி செலுத்திய விவரங்கள் | விவரிப்பு | மையவரி | மாநிலவரி / ம.நே.ஆ.ப. வரி |
|---|---|---|---|
| | தொகை | | |
| | பற்று பதிவு எண் | | |

10. <u>உறுதிப்படுத்தல்</u>

______________________________ஆகிய நான் இதன்மூலம் மேலே கொடுக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் எனது நுண்ணறிவிற்கும், நம்பிக்கைக்கும் தெரிந்த வகையில் உண்மை மற்றும் சரியானது எனவும் விடுதல்கள் மற்றும் மறைத்தல்கள் ஏதுமில்லை எனவும் உளமாற உறுதியளிக்கிறேன்.

அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரின் கையொப்பம்

இடம்: அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரின் பெயர்

தேதி: பதவி / தகுதி நிலை

**படிவம் சமசேவ சிஎம்பி – 04 / FORM GST CMP – 04**

*( 6(2)–ஆம் விதியை காண்க)*

**இணக்க வரிவிதிப்பினை திரும்பப் பெறுவதற்கான அறிவிப்பு/விண்ணப்பம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. சமசேவஅ எண் / தற்காலிக அடையாள எண்(ID) | | | | |
| 2. சட்டபூர்வ பெயர் | | | | |
| 3. வணிகப் பெயர் (ஏதேனுமிருப்பின்) | | | | |
| 4. முதன்மை வியாபார இடத்தின் முகவரி | | | | |
| 5. பதிவு பெற்ற நபரின் வகை | | | | |
| (1) அரசால் அறிவிக்கப்பட்ட அந்த சரக்குகளின் உற்பத்தியாளர் தவிர்த்த | ☐ | | | |
| (2) அட்டவணை–2, பத்தி–6, இனம் (ஆ)–ல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப் பொருட்களை தயார் செய்யும் வழங்குநர்கள் | ☐ | | | |
| (3) இணக்க வரிவிதிப்புக்குத் தகுதியான இதர பிற வழங்குநர்கள் | ☐ | | | |
| 6. வணிகத்தின் தன்மை | | | | |
| 7. இணக்க திட்டத்திலிருந்து திரும்ப பெறுதலுக்கு எந்த தேதியிலிருந்து | நாநா | மாமா | வவவவ | |
| 8. ஆட்சி எல்லை | மத்திய | | மாநிலம் | |
| 9. இணக்க திட்டத்திலிருந்து திரும்ப பெறுவதற்கானக் காரணம் | | | | |

<u>சரிபார்த்தல்</u>

மேலே கொடுக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் எனது நுண்ணறிவிற்கும், நம்பிக்கைக்கும் தெரிந்த வகையில் உண்மை மற்றும் சரியானது எனவும் விடுதல்கள் மற்றும் மறைத்தல்கள் ஏதுமில்லை எனவும் இதன் மூலம் நான் ________________________________ உளமாற உறுதியளிக்கிறேன்.

அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரின் கை

குறிப்பு–எந்த தேதியிலிருந்து இணக்கத்திற்கான விருப்பமானது திரும்ப பெறப்படுகிறதோ அதற்கு முந்தைய தேதியில் இருக்கக்கூடிய சரக்கிற்கு உள்ளீட்டு வரிவரவினைத் துய்ப்பதற்காக இருப்புப் பட்டியலினை சமசேவ ஐடிசி–01–ல் தனியாக அளிக்கலாம்.

## படிவம் சமசேவ சிஎம்பி – 05 / FORM GST CMP – 05

*(6(4) -ஆம் விதியை காண்க)*

குறிப்பு எண் நாள்

பெறுநர்

சமசேவஅ எண்

பெயர்

முகவரி

பிரிவு 10–ன் கீழ் வரி செலுத்தும் விருப்பத்தினை மறுப்பதற்கான தாக்கீது/அறிவிப்பு

என் கவனத்திற்கு வந்த தகவலின் அடிப்படைகளில் சட்டத்தின் பிரிவு 10–ன் கீழ் இணக்கதிட்டத்தினை துய்க்கும் போது அவசியமான நிபந்தனைகளையும் வரையறைகளையும் தாங்கள் மீறியதாகத் தோன்றுகிறது. ஆகையால், பின்வரும் காரணங்களுக்காக அந்த பிரிவின் கீழ் கூறப்பட்ட வரி செலுத்துவதற்கான தங்களின் விருப்பத்தினை மறுக்க இதன் மூலம் நான் முன்மொழிகிறேன்:–

1.

2.

3.

இந்த தாக்கீது சார்வு செய்த நாளிளிலிருந்து 15 வேலை நாட்களுக்குள் இந்த தாக்கீதிற்கான/அறிவிப்புக்கான பதிலை அளிக்குமாறு தாங்கள் இதன் மூலம் கட்டளையிடப்படுகிறது.

கீழே கையொப்பமிட்டவர் முன்பாக தேதே/மாமா/வவ தேதியில் மம/நிநி மணிக்கு தோன்றுமாறு/ஆஜராகுமாறு கட்டளையிடப்படுகிறது. நிபந்தனை தேதிக்குள் தாங்கள் பதில் அளிக்க தவறினாலோ அல்லது குறித்த தேதி மற்றும் நேரத்தில் நேரடி கேட்புரைக்கு தோன்ற தவறினாலோ, இருக்கின்ற ஆவணங்கள் மற்றும் தகுதி அடிப்படையில் இந்த நேர்வில் ஒருதலைப்பட்சமாக முடிவு செய்யப்படும்.

இடம்
நாள்

கையொப்பம்
உரிய அலுவலரின் பெயர்
பதவி
ஆட்சி எல்லை

## படிவம் சமசேவ சிஎம்பி – 06 / FORM GST CMP – 06

*(6(5)–ஆம் விதியைக் காண்க)*

**காரணம் கேட்டும் தாக்கீதிற்கான பதில்**

| | |
|---|---|
| 1. . சமசேவஅ.எண் | |
| 2. காரணம் கேட்கும் குறிப்பாணையின் விவரங்கள் | குறிப்பு எண் |
| 3. சட்டபூர்வ பெயர் | |
| 4. வணிகப் பெயர் (ஏதேனுமிருப்பின்) | |
| 5. முதன்மை வியாபார இடத்தின் முகவரி | |
| 6. தாக்கீதிற்கான பதில் | |
| 7. பதிவேற்றப்பட்ட ஆவணங்களின் பட்டியல் | |
| 8. சரிபார்த்தல் | மேலே கொடுக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் எனது நுண்ணறிவிற்கும், நம்பிக்கைக்கும் தெரிந்த வகையில் உண்மை மற்றும் சரியானது எனவும் விடுதல்கள் மற்றும் மறைத்தல்கள் ஏதுமில்லை எனவும் இதன்மூலம் நான் ____________________ உளமாற உறுதியளிக்கிறேன். |

<u>குறிப்பு–</u>

1. **500 v**ழுத்துக்களுக்கு மிகுதியாக பதில் இருக்கக்கூடாது. அப்போது அது 500 எழுத்துருக்களுக்கு மிகுந்து இருக்கும் நிகழ்வில் அதனை தனியாக பதிவேற்ற வேண்டும்.

2. ஆதரவான ஆவணங்கள் இருந்தால் அதை பிடிஎப் (PDF)-ல் பதிவேற்றம் செய்யலாம்.

## படிவம் சமசேவ சிஎம்பி – 07 / FORM GST CMP – 07

*(6(5)–ஆம் விதியைக் காண்க)*

குறிப்பு எண் நாள்

பெறுநர்

சமசேவஅ எண்

பெயர்

முகவரி

விண்ணப்பக்குறிப்பு எண்(ARN)

**காரணம் கேட்டும் குறிப்பாணைக்கான பதிலினை ஏற்றுக்கொள்ளுதல் / நிராகரித்தலுக்கான ஆணை**

குறிப்பு எண்__________தேதியில் காண்பதில் வழங்கப்பட்ட காரணம் கேட்கும் குறிப்பாணைக்கு எதிர்வினையால் _____________தேதியில் தாக்கல் செய்யப்பட்ட தங்களுடைய பதில் குறித்தது இது. தங்களின் பதில் ஆய்வு செய்யப்பட்டது, மேலும் அது திருப்திகரமாக உள்ளதாக கண்டறியப்பட்டது. ஆகையால் இணக்கத் திட்டத்தின் கீழ் வரிசெலுத்தும் தங்கள் விருப்பத்தினைத் தொடரலாம். கூறப்பட்ட காரணம் கேட்கும் தாக்கீதின் நிலை நீக்கப்பட்டது.

அல்லது

குறிப்பு எண்________தேதியில் காண்பதில் வழங்கப்பட்ட காரணம் கேட்கும் குறிப்பாணைக்கு எதிர்வினையால்_________தேதியில் தாக்கல் செய்யப்பட்ட தங்களுடைய பதில் குறித்தது இது. தங்களின் பதில் ஆய்வு செய்யப்பட்டது, மேலும் அது திருப்திகரமாக இல்லை என கண்டறியப்பட்டது. ஆகையினால் கீழ்க்கண்ட காரணங்களுக்காக இணக்கத் திட்டத்தின் கீழ் வரிசெலுத்தும் தங்கள் விருப்பமானது செயலுக்குவரும் ________________முதல் இதன்மூலம் மறுக்கப்படுகிறது.

< உரை>

அல்லது

€காரணம் கேட்கும் குறிப்பாணைக்கு தாங்கள் எந்தவிதமான பதிலும் தாக்கல் செய்யவில்லை.
€கேட்புரைக்காக தீர்மானிக்கப்பட்ட நாளில் தாங்கள் தோன்றவில்லை .

ஆகையினால் கீழ்க்கண்ட காரணங்களுக்காக இணக்கத் திட்டத்தின் கீழ் வரிசெலுத்தும் தங்கள் விருப்பமானது செயலுக்குவரும்_____முதல் இதன்மூலம் மறுக்கப்படுகிறது

< உரை>

இடம்
நாள்

கையொப்பம்
உரிய அலுவலரின் பெயர்
பதவி
ஆட்சி எல்லை

## படிவம் சமசேவ ஆர்இஜி–01 / FORM GST REG-01

*(8 (1)–ஆம் விதியை காண்க)*

### பதிவிற்கான விண்ணப்பம்

**(வசிப்பிடமில்லா வரி விதிக்கத்தக்க ஒரு நபர் பிரிவு 51 – இன் கீழ் ஆதாரத்தின் மீது வரி பிடித்தம் செய்ய தேவைப்படும் ஒரு நபர் மற்றும் பிரிவு 52–ன் கீழ் ஆதாரத்தின் மீது வரி வசூலிக்கத் தேவைப்படும் ஒரு நபர் மற்றும் 2017–ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம், பிரிவு – 14ல் குறிப்பிடப்பட்டுள்ள, நிகழ்நிலை தகவல்களை வழங்குகின்ற ஒரு நபர் மற்றும் தகவல் தளஅணுகள் அல்லது தகவல் மீட்பு சேவைகளை இந்தியாவிற்கு வெளியிடத்திலிருந்து, நிகழ்நிலையில் பெறும் வரிவிதிப்பிற்குட்படாதவர் தவிர்த்து)**

### பகுதி–அ

மாநிலம் / ம.அ.நே.ஆ.ப மாவட்டம்

| | | |
|---|---|---|
| (i) | வணிகத்தின் சட்டப்பூர்வ பெயர்<br>(நிரந்தர கணக்கு எண்ணில் குறிப்பிட்டுள்ளவாறு) | |
| (ii) | நிரந்தர கணக்கு எண் :<br>(வணிகத்தின் நிரந்தர கணக்கு எண்ணை பதியவும் ;<br>உரிமையாளர் வணிகமாக இருக்கும் நேர்வில், தனியாளரின் நிரந்தர கணக்கு எண்) | |
| (iii) | மின்னஞ்சல் முகவரி : | |
| (iv) | கைப்பேசி எண் : | |

குறிப்பு : பகுதி – ஆ பூர்த்தி செய்ய தொடர்வதற்கு முன்பு மேலே சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் நிகழ்நிலை சரிபார்ப்புக்கு உட்பட்டது. விண்ணப்பத்தினை தாக்கல் செய்யும் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர் அவருடைய கைப்பேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி அளிக்க வேண்டும்.

### பகுதி –ஆ

| | | | |
|---|---|---|---|
| 1. | வர்த்தகப் பெயர்,<br>(ஏதேனுமிருப்பின்) | | |
| 2. | வணிகத்தின் அமைப்பு (பொருத்தமானதை தேர்ந்தெடுக்கவும்) | | |

| | | | |
|---|---|---|---|
| (i) உரிமையாளர் வணிகம் | | (ii) கூட்டாண்மை | |
| (iii) இந்து கூட்டுக் குடும்பம் | | (iv) வரம்பிற்குட்பட்ட தனியார் நிறுவனம் | |
| (v) பொதுத்துறை நிறுவனம் | | (vi) சங்கம் / மன்றம் / அறக்கட்டளை/தனி நபர்களின் குழுமம் | |
| (vii) அரசுத் துறை | | (vii) பொதுத் துறை நிறுவனம் | |
| (ix) வரம்பிற்குட்படாத நிறுவனம் | | (x) வரம்பிற்குட்பட்ட பொறுப்புரிமை கூட்டாண்மை | |
| (xi) உள்ளாட்சி அதிகாரம் | | (xii) சட்டமுறை அமைப்புக் குழு | |
| (xiii) வெளிநாட்டு வரம்பிற்குட்பட்ட பொறுப்புரிமை கூட்டாண்மை | | (xiv) பதிவு பெற்ற வெளிநாட்டு நிறுவனம் (இந்தியாவில்) | |
| (xv) மற்றவைகள் (தயவு செய்து குறிப்பிடவும்) | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | மாநிலத்தின் பெயர் | | மாவட்டம் | |

| | | | |
|---|---|---|---|
| 4. | ஆட்சி எல்லை | மாநிலம் | மத்திய |
| | | பகுதி, வட்டம், பிரிவு, அலகு, முதலியன, மற்றவை (குறிப்பிடுக) | |

| | | |
|---|---|---|
| 5. | இணக்கத்திற்கான விருப்பம் | ☐ ஆம் ☐ இல்லை |
| 6. | இணக்கத்திற்கான உறுதி மொழி<br>☐ இணக்க திட்டத்தின் கீழ் வரி செலுத்த விரும்பிய மேலே குறிப்பிட்டுள்ள வணிகமானது சட்டம்<br>அல்லது விதிகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளை பின்பற்றும் என்று<br>இதன் மூலம் நான் உறுதியளிக்கிறேன். | |

| | |
|---|---|
| 6.1 பதிவு பெற்ற நபரின் வகை < தேர்வு பெட்டியில் குறியீடு செய்யவும் > | |
| (i) உற்பத்தியாளர்கள், அந்த அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டு அதற்கு விருப்பத்தேர்வு கிடைக்கப் பெறாத அத்தகைய சரக்குகளின் உற்பத்தியாளர்கள் தவிர்த்து. | |
| (ii) அட்டவணை–II இல் பத்தி **6**–இல் இனம் (ஆ)–இல் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கலை தேவைப்பொருட்களை தயார் செய்யும் வழங்குநர்கள் | |
| (iii) இணக்க விதிப்புக்கு தகுதியுள்ள இன்னபிற வழங்குநர்கள் | |

| | | | |
|---|---|---|---|
| 7. | வணிகம் துவங்கப்பட்ட நாள் | தேதே/மாமா/வவவவ | |
| 8. | பதிவிற்குரிய பொறுப்பு எந்த தேதியிலிருந்து எழுகிறது. | தேதே/மாமா/வவவவ | |
| 9. | தற்செயல் வரி விதிப்புக்குட்பட்ட நபராக பதிவிற்கு விண்ணப்பிக்கின்றீரா **?** | ☐ ஆம் | ☐ இல்லை |
| 10. | வரிசை எண்.**9**–இல் ‘‘ஆம்’’ தேர்வு செய்தால், அதற்காக பதிவு தேவைப்படும் கால அளவு | முதல்<br>தேதே/மாமா/வவவவ | வரை<br>தேதே/மாமா/வவவவ |
| 11. | வரிசை எண்.**9**–இல் ‘‘ஆம்’’ தேர்வு செய்தால், பதிவிற்கான காலத்தில் உத்தேச வழங்கல் மற்றும் உத்தேச நிகர செலுத்த வேண்டிய வரி. | | |

| வ.எண். | வரி வகை | வியாபாரத் தொகை (ரூ.) | நிகர செலுத்த வேண்டிய வரி (ரூ.) |
|---|---|---|---|
| (i) | ஒருங்கிணைந்த வரி | | |
| (ii) | மத்திய வரி | | |
| (iii) | மாநில வரி | | |
| (iv) | ம.அ.நே.ஆ.ப. வரி | | |
| (v) | மேல் வரி | | |
| | மொத்தம் | | |
| | செலுத்திய விவரங்கள் | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | செலுத்து சீட்டு அடையாள எண் | | நாள் | | தொகை | |

| | | | |
|---|---|---|---|
| 12. | சி.பொ.ம. அலகு (SEZ Unit) பதிவிற்கு விண்ணப்பிக்கின்றீரா ? | ☐ ஆம் | ☐ இல்லை |
| | (i) சிறப்பு பொருளாதார மண்டலத்தின் பெயரை தேர்ந்தெடுக்கவும் | | |
| | (ii) அனுமதி ஆணை எண் மற்றும் ஆணை தேதி | | |
| | (iii) அனுமதிக்கும் அதிகாரியின் பதவி | | |
| 13. | சிறப்பு பொருளாதார மண்டல மேம்பாட்டாளர் பதிவிற்கு விண்ணப்பிக்கின்றீரா ? | ☐ ஆம் | ☐ இல்லை |
| | (i) சிறப்பு பொருளாதார மண்டல மேம்பாட்டாளர் பெயரைத் தேர்ந்தெடுக்கவும் | | |
| | (ii) அங்கீகார ஆணை எண் மற்றும் ஆணையின் தேதி | | |
| | (iii) அங்கீகரிக்கும் அதிகாரியின் பதவி | | |
| 14. | பதிவு பெறுவதற்கான காரணம் | | |

| | | |
|---|---|---|
| | (i) வரம்பு நிலை மீறுதல் | (viii) இணைத்தல் / இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பதிவு பெற்ற நபர்களை ஒருங்கிணைத்தல் |
| | (ii) மாநிலங்களுக்கிடையான வழங்கல் | (ix) உள்ளீட்டு சேவை பகிர்ந்தளிப்பவர் |
| | (iii) பிரிவு 9 (3) அல்லது 9 (4)–இன் கீழ் சரக்குகள் அல்லது சேவைகளை பெறுவதால் வரி செலுத்த வேண்டிய பொறுப்பு | (x) பிரிவு 9 (5)–ன் கீழ் வரி செலுத்த பொறுப்புடைய நபர் |
| | (iv) வணிக மாற்றம், வணிக உரிமையாளர் மாற்றம் உட்பட (மாற்றப்பட்டவர் பதிவு பெறாத நிறுவனமாக இருந்தால்) | (xi) மின்வர்த்தக வலைவாயில் மூலம் வழங்கல் மேற்கொள்ளும் வரி விதிக்கத்தக்க நபர் |
| | (v) உரிமையாளரின் மரணம் (வாரிசுதாரர் பதிவு பெறாத நிறுவனமாக இருந்தால்) | (xii) தன் விருப்ப அடிப்படையில் |
| | (vi) பிரித்தல் | (xiii)மற்றொரு வரி விதிக்கத்தக்க நபர்(கள்) சார்பாக சரக்குகள் மற்றும் /அல்லது சேவைகள் வழங்கும் நபர்கள் |
| | (vii) வணிகஅமைப்பில் மாற்றங்கள் | (xiv) மற்றவைகள் (மேலே அடங்காதவை) – குறிப்பிடுக |

| | |
|---|---|
| 15. | நடைமுறையில் உள்ள பதிவுகளை பொருந்தும் இடங்களில் தெரிவிக்கவும் |

| | |
|---|---|
| மதிப்புக் கூட்டு வரியின் கீழ் பதிவு எண் | |
| மத்திய விற்பனை வரி பதிவு எண் | |
| நுழைவு வரி பதிவு எண் | |
| கேளிக்கை வரி பதிவு எண் | |
| உணவகம் மற்றும் ஆடம்பர வரி பதிவு எண் | |
| மத்திய ஆயத்துறை பதிவு எண் | |
| சேவை வரி பதிவு எண் | |
| பெருநிறுவன அடையாள எண் / வெளிநாட்டு நிறுவன பதிவு எண் | |
| வரம்பிற்குட்பட்ட பொறுப்புரிமை கூட்டாண்மை அடையாள எண் / வெளி நாட்டு வரம்பிற்குட்பட்ட பொறுப்புரிமை கூட்டாண்மை அடையாள எண் | |
| இறக்குமதியாளர் / ஏற்றுமதியாளர் குறியீடு எண் | |
| மருத்துவ மற்றும் ஒப்பனை முன்னேற்பாடு (கலால் வரி ) சட்டத்தின் கீழ் பதிவு எண் | |
| கடைகள் மற்றும் நிறுவனச் சட்டத்தின் கீழ் பதிவு எண் | |
| தற்காலிக ID, ஏதேனும் இருப்பின் | |
| மற்றவை (தயவு செய்து குறிப்பிடுக) | |

| | |
|---|---|
| 16. | (அ) வணிகத்தின் முதன்மை இடத்தின் முகவரி |
| கட்டட எண்/ அடுக்கக வீட்டு எண் | தளத்தின் எண் |
| வளாகம் /கட்டிடத்தின் பெயர் | சாலை/ தெரு |
| மாநகரம் / நகரம் / இடம் / கிராமம் | மாவட்டம் |
| வட்டம் / வட்டாரம் | |
| மாநிலம் | அகுஎ(PIN CODE)குறியீடு |
| அட்ச ரேகை | தீர்க்க ரேகை |
| (ஆ) தகவல் தொடர்பு | |

| | | | | |
|---|---|---|---|---|
| அலுவலக மின்னஞ்சல் முகவரி | | அலுவலக தொலைபேசி எண் | STD | |
| கைப்பேசி எண் | | அலுவலக தொலை நகல் எண் | FAX | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) வளாகத்தின் இயல்பு | | | | | |
| உரிமையுடைய | குத்தகை | வாடகை | ஒப்புதல் | பகிர்ந்தது | மற்றவை (குறிப்பிடுக) |
| (ஈ) மேற்குறிப்பிட்ட வளாகத்தில் நடத்தப்படுகின்ற வணிக நடவடிக்கையின் தன்மை (தயவுசெய்து பொருத்தமானதை குறியீடுக) | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொழிற்சாலை / உற்பத்தி | ☐ | மொத்த வணிகம் | ☐ | சில்லறை வணிகம் | ☐ |
| கிடங்கு / பண்டக சாலை | ☐ | பிணைக்குட்பட்ட கிடங்கு | ☐ | சேவைகள் வழங்குதல் | ☐ |
| அலுவலகம் / விற்பனை அலுவலகம் | ☐ | குத்தகை வணிகம் | ☐ | சரக்குகள் அல்லது சேவைகள் பெறுபவர் | ☐ |
| ஏசாஅ (EOU)/மெதொபூ (STP)/மிவதொபூ(EHTP) | ☐ | ஒப்பந்த பணி | ☐ | ஏற்றுமதி | ☐ |
| இறக்குமதி | ☐ | மற்றவை (குறிப்பிடுக) | ☐ | | |
| 17. வங்கி கணக்கு (கள்) விவரங்கள் | | | | | |
| வணிகம் நடத்துவதற்கு விண்ணப்பதாரரால் பராமரிக்கப்படும் வங்கி கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (10 வங்கி கணக்குகள் வரை அறிவிக்கப்பட வேண்டும்) | | | | | |

வங்கி கணக்கு விவரம் - 1

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கணக்கு எண் | | | | | | | | | | | | | | | |
| கணக்கின் வகை | | | | | | | இநிஅகு (IFSC) | | | | | | | | |
| வங்கி பெயர் | | | | | | | | | | | | | | | |
| கிளை முகவரி | கணினியில் தானாக தோன்றும் (திருத்தக் கூடிய முறை) | | | | | | | | | | | | | | |

குறிப்பு : கணக்குகளை மேலும் சேர்க்க.......

18. வணிகத்தால் வழங்கப்படும் சரக்குகளின் விவரங்கள்

| முதன்மையான 5 சரக்குகளை தயவு செய்து குறிப்பிடவும் | | |
|---|---|---|
| வ.எண் | சரக்குகளின் விவரிப்பு | ஒ.பெ.மு. (HSN) குறியீடு (நான்கு இலக்கம்) |
| (i) | | |
| (ii) | | |
| ... | | |
| (v) | | |

19. வணிகத்தில் வழங்கப்படும் சேவைகளின் t|tu';fs;

| முதன்மையான 5 சேவைகளை தயவு செய்து குறிப்பிடவும் | | |
|---|---|---|
| வ.எண் | சேவைகளின் விவரிப்பு | ஒபெமு (HSN) குறியீடு (நான்கு இலக்கம்) |
| (i) | | |
| (ii) | | |
| ... | | |
| (v) | | |

**20.** வணிகத்தின் கூடுதல் இடம் (ங்களின்) விவரங்கள்

| | |
|---|---|
| கூடுதல் இடங்களின் எண்ணிக்கை | |

வளாகம் **–1**

(அ) வணிகத்தின் கூடுதல் இடத்தின் விவரங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கட்டிட எண்/ வீட்டு எண் | தளத்தின் எண் | | | | | | |
| கட்டிடத்தின் / இடத்தின் பெயர் | சாலை/ தெரு | | | | | | |
| மாநகரம் / நகரம் / இடம் / கிராமம் | மாவட்டம் | | | | | | |
| வட்டம் / வட்டாரம் | | | | | | | |
| மாநிலம் | அ கு எ (PIN) குறியீடு | | | | | | |
| அட்ச ரேகை | தீர்க்க ரேகை | | | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) தகவல் தொடர்பு | | | | |
| அலுவலக மின்னஞ்சல் முகவரி | | அலுவலக தொலைபேசி எண் | STD | |
| கைப்பேசி எண் | | அலுவலக தொலை நகல் எண் | FAX | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) வளாகத்தின் இயல்பு | | | | | |
| உரிமையுடைய | குத்தகை | வாடகை | ஒப்புதல் | பகிர்ந்தது | மற்றவை (குறிப்பிடுக) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) மேற்குறிப்பிட்ட வளாகத்தில் நடத்தப்படுகின்ற வணிக நடவடிக்கையின் தன்மை (பொருத்தமானதை தயவு செய்து குறியிடுக) | | | | | |
| தொழிற்சாலை / உற்பத்தி | | மொத்த வணிகம் | | சில்லறை வணிகம் | |
| கிடங்கு / பண்டக சாலை | | பிணைக்குட்பட்ட கிடங்கு | | சேவைகள் வழங்குதல் | |
| அலுவலகம் / விற்பனை அலுவலகம் | | குத்தகை வணிகம் | | சரக்குகள் அல்லது சேவைகள் பெறுவர் | |
| EOU/ST/EHTP | | ஒப்பந்த பணி | | ஏற்றுமதி | |
| இறக்குமதி | | மற்றவை (குறிப்பிடுக) | | | |

**21.** உரிமையாளர் / அனைத்து பங்குதாரர் / கர்த்தா / நிர்வாக இயக்குநர்கள் மற்றும் முழு நேர இயக்குநர்/ கழகங்களின் நிர்வாக குழுவின் உறுப்பினர்கள் / அறங்காவலர் வாரியம் இதரவற்றின்விவரங்கள்

| விவரங்கள் | முதல் பெயர் | இடை பெயர் | கடைசி பெயர் |
|---|---|---|---|
| பெயர் | | | |
| புகைப்படம் | | | |

| | | | |
|---|---|---|---|
| தந்தை பெயர் | | | |
| பிறந்த நாள் | தேதே/மாமா/வவவவ | பாலினம் | <ஆண், பெண், மற்றவர்> |
| கைப்பேசி எண் | | மின்னஞ்சல் முகவரி | |
| தொலைபேசி எண் STD உடன் | | | |
| பதவி / தகுதி நிலை | | இயக்குநர் அடையாள எண் (ஏதேனும் இருப்பின்) | |
| நிரந்தர கணக்கு எண் | | ஆதார் எண் | |
| நீங்கள் இந்திய குடிமகனா ? | ஆம் / இல்லை | கடவுச் சீட்டின் எண் (அயல் நாட்டினராக இருக்கும் நேர்வில்) | |
| குடியிருப்பு முகவரி | | | |
| கட்டிட எண் / வீட்டு எண் | | தளத்தின் எண் | |
| கட்டிடத்தின் / இடத்தின் பெயர் | | சாலை /தெரு | |
| மாநகரம் / நகரம்/ இடம் / கிராமம் | | மாவட்டம் | |
| வட்டம் /வட்டாரம் | | | |
| மாநிலம் | | அ கு எ (PIN) குறியீடு | |
| நாடு (அயல் நாட்டினராக இருக்கும் நேர்வில் மட்டும்) | | ZIP குறியீடு | |

**22.** அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரின் விவரங்கள்

முதன்மை அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரருக்கான தேர்வு பெட்டி

கையொப்பதாரர் **1–**க்கான விவரங்கள்

| விவரங்கள் | முதல் பெயர் | இடை பெயர் | கடைசி பெயர் |
|---|---|---|---|
| பெயர் | | | |
| புகைப்படம் | | | |
| தந்தை பெயர் | | | |
| பிறந்த தேதி | தேதே/மாமா/வவவவ | பாலினம் | <ஆண், பெண், மற்றவர்> |

| | | | |
|---|---|---|---|
| கைப்பேசி எண் | | மின்னஞ்சல் முகவரி | |
| தொலைபேசி எண் STD உடன் | | | |
| பதவி / தகுதி நிலை | | இயக்குநர் அடையாள எண் (ஏதேனும் இருப்பின்) | |
| நிரந்தர கணக்கு எண் | | ஆதார் எண் | |
| நீங்கள் இந்திய குடிமகனா ? | ஆம் / இல்லை | கடவுச் சீட்டின் எண் (அயல் நாட்டினராக இருக்கும் நேர்வில்) | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியாவில் குடியிருப்பு முகவரி | | | | | | | |
| கட்டிட எண் /வீட்டு எண் | | தளத்தின் எண் | | | | | |
| கட்டிடத்தின் / வளாகத்தின் பெயர் | | சாலை/ தெரு | | | | | |
| வட்டம் /வட்டாரம் | | | | | | | |
| மாநகரம் / நகரம்/ இடம் / கிராமம் | | மாவட்டம் | | | | | |
| மாநிலம் | | அ கு எ (PIN) குறியீடு | | | | | |

**23.** அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் விவரங்கள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் சேர்க்கை அடையாளம், ஏதேனுமிருப்பின் | | | |
| பெயர் சேர்க்கை அடையாளம் இல்லாதிருந்தால் கீழ்க்காணும் விபரங்களை அளிக்கவும் | | | |
| நிரந்தர கணக்கு எண் : | | | |
| ஆதார், நிரந்தர கணக்கு எண் இல்லையெனில் | | | |
| | முதல் பெயர் | இடை பெயர் | கடைசி பெயர் |
| நபரின் பெயர் | | | |
| பதவி /தகுதி நிலை | | | |

<table>
<tr><td>கைப்பேசி எண்</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>மின்னஞ்சல் முகவரி</td><td colspan="11"></td></tr>
<tr><td>தொலைபேசி எண்<br>STD உடன்</td><td colspan="5"></td><td colspan="5">தொலை நகல் எண்<br>STD உடன்</td><td></td></tr>
</table>

**24.** குறிப்பிட்ட தகவலை தெரிவிக்கவும்

தொழில் வரி சேர்க்கை குறியீடு (EC) எண்

தொழில் வரி பதிவுச் சான்றிதழ் (RC) எண்

மாநில கலால்வரி உரிமம் எண் மற்றும் கலால்வரி உரிமம் வைத்திருக்கும் நபரின் பெயர்

(அ) களம் **–1**

(ஆ) களம் **–2**

(இ) ........

(ஈ) ........

(உ) களம் –n

**25.** ஆவணங்கள் பதிவேற்றம்

படிவத்தில் கள மதிப்புகளின்படி **(** விதி எண் - **8**ஐ காண்க **)** பதிவேற்றத்திற்கு தேவைப்படும் ஆவணங்களின் தனிப்பயனாக்கப்பட்ட பட்டியல் **.**

**26.** ஒப்புதல்

நான், ஆதார் எண் வைத்திருப்பவர் சார்பாக < படிவத்தில் கொடுக்கப்பட்டு முன்பே பூர்த்தி செய்யப்பட்ட ஆதார் எண் அடிப்படையில் > என்னுடைய விவரங்களை UIDAI அமைப்பிலிருந்து நம்பகத்தன்மை நோக்கத்திற்காக ''சரக்கு மற்றும் சேவை வரி இணைய அமைப்பு'' பெறுவதற்கு இசைவளிக்கிறேன். ஆதார் வைத்திருப்பவரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு மட்டுமே அடையாள தகவல்கள் பயன்படுத்தப்படும் என்றும், மைய அடையாள தரவு களஞ்சியத்துடன் நம்பகத்தன்மை நோக்கத்திற்காக மட்டுமே பகிர்ந்துக் கொள்ளப்படும் என்றும் ''சரக்கு மற்றும் சேவை வரி இணைய அமைப்பு'' எனக்கு தெரிவித்துள்ளது.

27. சரிபார்த்தல் (அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரரால்)

மேலே கொடுக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் எனது நுண்ணறிவிற்கும், நம்பிக்கைக்கும் தெரிந்த வகையில் உண்மையானது மற்றும் சரியானது எனவும், விடுதல்கள் மற்றும் மறைத்தல்கள் ஏதுமில்லை என்பதை உளமாற அறிவிக்கின்றேன்.

கையொப்பம்

அதிகாரமளிக்கப்பட்டடகையொப்பதாரரின் பெயர்

இடம்

பதவி /தகுதி நிலை

நாள்

**பதிவேற்றப்பட வேண்டிய ஆவணங்களின் பட்டியல்**

| | |
|---|---|
| 1. | புகைப்படம் (விண்ணப்ப படிவத்தில் எங்கெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளதோ)<br>(அ) உரிமையாளர் வணிகம் – உரிமையாளர்<br>(ஆ) கூட்டாண்மை நிறுவனம் / வரையறுக்கப்பட்ட பொறுப்புரிமை கூட்டாண்மை – நிர்வாகம் /அங்கீகரிக்கப்பட்ட / நியமிக்கப்பட்ட பங்குதாரர்கள் (அனைத்து பங்குதாரர்களின் தனி விவரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும், ஆனால் நிர்வாக பங்குதாரர் உள்ளடக்கிய 10 பங்குதாரர்களின் புகைப்படங்கள் மட்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).<br>(இ) இந்து கூட்டுக் குடும்பம் –கர்த்தா<br>(ஈ) நிறுவனம் – நிர்வாக இயக்குநர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நபர்<br>(உ) அறக்கட்டளை – நிர்வாக அறங்காவலர்<br>(ஊ) தனி நபர்களின் குழுமம் அல்லது தனியாளர்களின் அமைப்பு – நிர்வாக குழுவின் உறுப்பினர்கள் (அனைத்து உறுப்பினர்களின் தனி விவரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால் தலைவர் உள்ளடக்கிய 10 உறுப்பினர்களின் புகைப்படங்கள் மட்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)<br>(எ) உள்ளாட்சி அதிகாரம் – முதன்மை செயல் அலுவலர் அல்லது அவருக்கு நிகரானவர்<br>(ஏ) சட்டரீதியான அமைப்பு – முதன்மை செயல் அலுவலர் அல்லது அவருக்கு நிகரானவர்<br>(ஐ) மற்றவை –பொறுப்பிலுள்ள நபர் |
| 2. | வணிகத்தின் கட்டமைப்பு: கூட்டாண்மை நிறுவனமாக இருக்கும் நேர்வில் கூட்டாண்மை ஒப்பந்த பத்திரம், சங்கம், அறக்கட்டளை, மன்றம், அரசுத் துறை, தனிநபர்களின் குழுமம் அல்லது தனியாளர்களின் அமைப்பு. உள்ளாட்சி அதிகாரம், சட்டரீதியான அமைப்பு மற்றும் இதர நேர்வில் பதிவு சான்றிதழ் /கட்டமைப்பிற்கான ஆதாரம் இன்ன பிற. |

| | |
|---|---|
